T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XL NO: 4 and 5

FEB 5th and 7

1983

V2N, 31 N83

N83·40·445;1

135778

S.No 1401 ...
2656
COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
EGMORE MADRAS-8

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1983 பிப்ரவரி 5-தொகுதி XL எண் 4
**Saturday 5th February 1983 —Volume XL No. 4**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009
**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

விலை ரூ-3-15 காசுகள்] [Price Rs. 3–15 paise

S. No 1401

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள்— | 397—430 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்னை | —430 |
| (ஆ) வினாக்களுக்கான விடைகள் | 430—431 |
| (இ) திருச்செந்தூர் இடைத் தேர்தல் தேதி மாற்றம் | 450—451 |
| (ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள். | 451—453 |
| (உ) அவையிலுள்ள சர விளக்குகள் எரியாமை | —454 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து | —431 |
| 4. அறிக்கை அளித்தல்— | |
| விதி 107 (1)—ன் கீழ் திருத்த அறிக்கை | —435 |
| 5 கவன ஈர்ப்புகள்— | |
| (அ) சோத்துக்கண்ணிக்கு தனி பாடசாலை | 435—437 |
| (ஆ) கோவை மாவட்டத்தில் ஆலைகள் மூடல் | 437—438 |
| 6. அரசினர் சட்ட முன்வடிவு— | |
| பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983 | 448—449 |

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை விவாதம் (தொடர்ச்சி)

திரு. மா. சின்னராசு — 454—462
திரு. எம். ஆறுமுகம் — 462—467
திரு. கெ. சொக்கலிங்கம் — 467—471
திரு. எஸ். சிவராமன் — 472—477
திரு. ஏ. சாகுல் ஹமீது — 477—479
திரு. க. பாரமலை — 479—485
திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 485—492
திரு. சி. த. சிதம்பரம் — 492—497, 500, 502
திரு. இ. கணேசன் — 504—505
மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் — 497—498, 499—503
திரு. இ. கா. நல்லப்பன் — 505—509
திரு. ஜெ. எஸ். இராசு — 509—516

8 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— — 517



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1983 பிப்ரவரி 5,
தை 23, துந்துபி-திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''பல்லவை கற்றும் பயன் இலரே நல் அவையுள்
நன்கு செலச் சொல்லாதார்''

நல்ல அறிஞர்கள் கூடியுள்ள அவையில், அவர்கள் உள்ளத்தில் பதியும்படி சிறந்த பொருள்களைச் சொல்ல இயலாதவர்கள், அரிய நூல்கள் பலவற்றை கற்றவராயினும் அவர்களால் உலகுக்குப் பயன் இல்லாமல் போகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### கோவில்களில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம்

*வினா எண் 140—திரு. எஸ். இராசாராமன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. இரா தாமரைக்கனி, திரு. கு. ரமணி, திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்களில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு மின்சாரக் கட்டணத்தில் சலுகை காட்டப்படுகின்றனவா?

(ஆ) இல்லை எனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்; (அ) இல்லை.

(ஆ) மின்கட்டண ஆய்வுக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1-5-82 முதல் பொதுத்தொழுகையிடங்களுக்கு தனி மின் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோவில்களுக்கும், தர்மஸ்தாபனங்களுக்கும் தனி மின் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஊர்களிலே உள்ள

கோயில்களில் இன்றையதினம் மின்சார விளக்குகள் போடப் பட்டிருந்தும், அதற்குரிய கட்டணத்தைக் கூட கட்ட இயலாத நிலையில் உள்ள சூழ்நிலைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோயில்களுக்கு சலுகை அளிக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணத்தில் எந்தவித சலுகையும் கிடையாது.

திரு. பெ. சு. திருவேங்கடம்; பேரவைத் தலைவர் அவர்களே ஏற்கெனவே இதுபோன்ற கோவில்களுக்கும், தர்மஸ்தாபனங் களுக்கும் மின் கட்டணத்தில் சலுகை கொடுக்கப் பட்டிருந்ததே, அதை எப்பொழுது எடுத்தார்கள்? என்ன காரணம்? அதை மீண்டும் அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே. எற்கெனவே, கோயில்களுக்கு வீடுகளுக்கு விதிக்கப்படுகின்ற சட்டணம்தான் ஒரு காலத்தில் வசூலிக்கப்பட்டது. அதற்குப் பிறகு வணிக நிறுவனங்களுக்காக சற்று உயர்ந்தக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இப்போது இந்த இரண்டிற்கும் இடையில், ஒரு நியாயமான கட்டணம் பகுத்தறிவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக கோயில்களில் சிலவற்றில் நன்கொடை வழங்கும் சில பக்தர்கள், தங்களுடைய பயரில் உபயம் என்ற வகையில் கோயில்களின் கற்களில் பெயரை பதித்து, ஒரு நிலையான பெயரை ஏற்படுத்தி வருகிறார்கள். அதுபோல பராமரிக்க சற்று சிரமமான கோயில்களுக்கு பக்தர்களின் உள்ளம் குளிரும் வகையில் இலவசமாக மின்சாரம் கொடுத்து—அதை தமிழக அரசின் உபயம் என்கின்ற வகையில் ஏற்பாடு செய்து, நல்ல புண்ணியத்தை மின்சார இலாகா பெற்றுக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களை குளிர வைப்பது அரசின் வேலையல்ல. பாமரர்களை வாழ்விப்பதுதான் அரசினுடைய வேலை.

திரு. இரா. தாமரைக்கனி. பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதைகளில் சில பேர்கள் கோவிலைக் கட்டிக் கொண்டு போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடைஞ்சல் கொடுப்ப தோடு மட்டுமல்லாமல் அங்கேயே பக்கத்திலேயே குடியிருக்கவும் செய்கிறார்கள். அந்தக் கோயில்களுக்கெல்லாம் மின்சார இணைப்பு இருக்கிறது. ஆகவே பொது மக்களுக்கு இடைஞ்சல் என்கிற வகையில் இந்த நடைபாதை கோயில்களுக்கு இருக்கும் மின்சார இணைப்பை துண்டிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு இடைஞ்சலான இடங் களில் அப்படிப்பட்ட கோயில்களுக்கு மின்சார இணைப்பு இருக்குமேயானால், அதுபற்றிய புகார்கள் வருமேயானால் நிச்சயமாக அதை அரசு பரிசிலிக்கும்.

திரு கு. ரமணி: தலைவர் அவர்களே, கோயில்களுக்கு மின்சார விளக்கு என்பது அங்கேயிருக்கும்படியான கடவுள்கள் எல்லாம் விரும்பி கேட்டதினால் அமைக்கப்பட்டவை அல்ல அவை நாமாகவே போட்டவை தான். ஏனென்றால் முன்பெல்லாம் கோயில்களில் எண்ணெய் விளக்குகள் தான் எரிந்தன. அந்தப் பழக்கம் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வந்தது. ஆனால் தற்போது மின்சார விளக்குகள் எரிகின்றன. ஆனால் சில கோயில்களில் இந்த மின்சாரத்தை உபயோகித்து தீப அலங்காரங்களை மிக ஆடம்பரமாக செய்து வருகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட கோயில்களில் சற்று அதிகமான அளவில், நல்ல முறையில் கட்டணங்களை வசூலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதுதான் கோயில்களில் ஆடம்பரமான விளக்குகளை எரித்து விழாக்கள் நடத்துபவர்களை அரசு கேட்டுக் கொள்ளும் வேண்டுகோளாகும். கோயில்களுக்கு மின்சார விளக்குகள் தேவைதானா என்று கேட்டார்கள். கடவுள்கள் காட்டுமிராண்டி காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட, நாகரீக காலத்திற்கு அவர்களை அழைத்து வருவது நம்முடைய கடமையாகும்.

திரு.ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்கள் மின்சாரத்தை இவ்வளவு யூனிட்டு வரைதான் உபயோகப்படுத்த வேண்டும் என்று ஏதேனும் வரை முறைகள் செய்யப்பட்டுள்ளதா?

திரு என், எஸ். வி. சித்தன். தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது காட்டுமிராண்டி என்று....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களின் மனம் புண்படுமானால் அதை எடுத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பக்தர்களின் மனம் புண் படும் என்று திரு. சித்தன் அவர்கள் தவறுதலாகக் கருது கிறார்கள்.

திரு.ரா. உமாநாத். தலைவரவர்களே, நாகரீக காலத்தில்....

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, அது அவைக் குறிப்பில் இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காட்டுமிராண்டி காலம் என்றால் அப்போதே கடவுள் இருந்தது என்றுதான் அர்த்தம். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயிருந்து....

திரு. என். எஸ். வி. சித்தன். தலைவரவர்களே, காட்டுமிராண்டி என்று சொல்வது தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்கள் சொன்னது மாதிரி சரித்திரக் காலத்தைக் குறிப்பதற்காகத்தான் சொல்லப்பட்டதே தவிர, அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமிராண்டி காலத்திலேதான் கடவுள் வந்தார் என்பதாகக் கூறப்படுவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்போதே கடவுள் இருந்தார் என்றுதான் அர்த்தம். ஆகவே கடவுள் இருந்தார் என்று ஒத்துக்கொண்டிருக்கிறாரே தவிர கடவுள் இல்லை என்று சொல்லவில்லையே,

திரு. எஸ். ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, காட்டுமிராண்டி காலத்திலே இருந்து கடவுள் என்று சொல்கின்றபோது எங்களை மாதிரி பக்தர்களின் மனம் புண்படுகின்றது. கம்யூனிஸ்ட் கட்சிக்கு வேண்டுமானால் அது சரியாக இருக்கலாம். தெய்வ நம்பிக்கை உள்ள எங்களைப் போன்றவர்களால் அதை ஒத்துக்கொள்ள முடியாது. காட்டுமிராண்டி காலத்திலே தெய்வம் கண்டுபிடிக்கப்பட்டது என்று எந்தச் சரித்திரத்திலே சொல்லப்பட்டது என்பது குறித்து வெளியிலே பேசிக்கொள்ளட்டும். அவையில் இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனித வாழ்க்கையிலே காட்டுமிராண்டிகளாக மக்கள் வாழ்ந்தபோது இடியையும், மின்னலையும், நாகப்பாம்பையும் கடவுளாக வணங்கியது என்பது வரலாறு. இது தமிழர்களின் அந்தக் காலத்து வரலாறு என்பதை வரலாற்றுப் புத்தகங்களைப் படித்தால் தெரியும். ஆகவே அது தப்பில்லை.

...திரு. இல. பலராமன். தலைவரவர்களே, காட்டுமிராண்டி காலம் என்று சொன்னால்....



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதனை ஒரு விவாதமாக்க வேண்டாம். அண்ணா அவர்கள் அழகாகச் சொன்னார்கள். தமிழ்மொழி காட்டுமிராண்டி காலத்திலே இருந்து வந்த மொழி என்று பெரியார் அவர்கள் சொன்னார்கள் என்று அண்ணா சொன்னார்கள்- இதுதான் நாங்கள் பின்பற்றிய உதாரணம். எங்களுடைய தலைவர் உதாரணம் அதுதான். எனவே இப்போது தவறான எண்ணத்தில் அமைச்சர் அவர்கள் சொல்லவே இல்லை. அவர் காலத்தைச் சரித்திரத்தோடு ஒப்பிட்டுச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொன்னாரே தவிர இதிலே புண்படுத்துவதற்கு ஒன்றும் இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே. அவ்வாறு சொல்வது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனிதன் காட்டுமிராண்டியிலே இருந்து வந்தவன் என்று டார்வின் எழுதிவிட்டார்.

திரு எல். இளையபெருமாள்; தலைவரவர்களே, பெரியார் கொள்கையினை நான் பின்பற்றுகிறேன் என்று தாங்கள் அந்தச் இடத்தில் இருந்து செல்வது சரியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர். நான் அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்றுதான் சொன்னேன். பெரியார் மொழியினையும் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னபோது காட்டுமிராண்டி காலத்திலே இருந்து வந்த மொழி என்று குறிப்பிடுவதற்காகச் சொன்னார் என அண்ணா விளக்கம் கொடுத்தார் என்று நினைவு படுத்தினேன்.

(முற்பகல் 9-10)

திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே இதுபோன்ற கோவில்களுக்கு மின்சார உபயோகத்தில் ஏதேனும் வரைமுறை கொடுக்கப்பட்டுள்ளதா? வருமான அடிப்படையில் கோவில்களுக்கு மின்சாரம் குறைந்த விலையில் கொடுக்க அரசு மீண்டும் பரிசீலனைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டண வீதத்தை வகுக்கின்றபோது வருமானத்தை அடிப்படையாக வைத்து சலுகைகள் வழங்குவது எந்த இனத்திலேயும் இல்லை.

### Agricultural Pumpsets Waiting for Electricity Connection in Hosur

Q.No.141—THIRU T. VENKATAREDDY;— Will The Hon. the Minister for Electricity be pleased to state—

(a) How many agricultural Pumpsets are still waiting for Electricity connection at Hosur Taluk as on 28-2-1982; and

(b) The steps taken by the Government to provide the power connection to pump sets

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஒசூர் வட்டத்தில் விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு கோரி 1,161 விண்ணப்பங்கள் 1-2-83 வரை நிலுவையில் உள்ளன. இதில் தங்களது தயார் நிலையை தெரிவித்த 90 விவசாய விண்ணப்பத்தாரர்களும் அடங்குவர். இந்த தயார் நிலையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை 31-3-76க்கு முன் விண்ணப்பித்தவர்கள் ஆவர்.

(ஆ) விவசாய மின் விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான தடை நீக்கப்பட்ட பின் மேற்சொன்ன 90 தயார் நிலையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விவசாய மின் விசை ஏற்றங்களுக்கு சுமார் 6 மாத காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மின்சாரம் இல்லாமல் விவசாய பம்புசெட்டுகளை இயக்க முடியாத நிலையில் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், பம்புசெட்டுகளுக்கு 6 மாதம் ஒரு வருடம், 2 வருடம் என்ற கால அளவிலே கூட மின்சார இணைப்பு கொடுக்காத நிலைமை இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அவைகளுக்கு இப்போது முன்னுரிமை அளிக்கப்படுவதாக தெரிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே மின்இணைப்பு பெற்றவர்கள் பழைய பாக்கிகளை கொஞ்சம் கொஞ்சமாக கட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் கட்ட வில்லை என்ற காரணத்திற்காக மின் இணைப்பு துண்டிக்கப் படுகிற நிலைமை இருக்கிறது. வேலூர் அருகிலுள்ள குடியாத்தத் திலிருந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாக நேற்று கூட ஒரு தந்தி வந்து இருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி தொடர்ந்து விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச.இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துண்டிப்பு விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை, மற்றபடி விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பதில் தமிழகம் மிகுந்த அக்கறை காட்டி இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு 9 லட்சத்து 50 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுத்துள்ளோம். இந்த ஆண்டு 31-3-76 க்கு முன்னாலே வந்த மனுக்களுக்கு மின்சார இணைப்பு வழங்கவேண்டும் என்று முடிவு எடுத்தோம். ஆனால் தற்போது மின் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்ட காரணத்தால் இந்த ஆண்டு தற்காலிகமாக புதிய இணைப்புகள் நிறுத்தப் பட்டிருக்கின்றன.



திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு துண்டிப்பு பற்றி ஒரு தந்தி வந்து இருக்கிறது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் இப்போது வேண்டாம் வினா எண் 142

## 1982 ஜூன் மாதம் முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ள மின்கட்டண விகிதங்கள்.

*வினா எண்.142— திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1982 ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதா?

(ஆ) வீடுகளில்,வியாபார ஸ்தலங்களில், காரியாலயங்களில் விளக்கெரிக்க கட்டண உயர்வு எவ்வளவு? தொழிற்சாலைகளில் எவ்வளவு?

(இ) இக்கட்டண உயர்வால் மின் வாரியத்திற்கு வருடத்தில் எவ்வளவு அதிக வருமானம் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ச.இராமச்சந்திரன்: (அ) 1982 மே மாதம் முதல் தேதியிலிருந்து சில வகை பயனீட்டாளர்களுக்கு மின் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டது.

(ஆ) வீடுகளுக்கு மின்கட்டண உயர்வு இல்லை. வியாபார ஸ்தலங்கள், காரியாலயங்கள் முதலியவைகளுக்கு விளக்கெரிக்க 4 காசுகள் உயர்வு.

உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு உச்சத் தேவையில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5-ம் யூனிட் கட்டணத்தில் 5 முதல் 20 காசுகள் வரையிலும் குறைவழுத்தத் தொழிற்சாலைகளுக்கு யூனிட் கட்டணத்தில் 14 காசுகளும் உயர்வாகும்.

(இ) இக்கட்டண உயர்வால் மின் வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 57 கோடி ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வெட்டினால் சிறு தொழில்கள் மிகவும் மோசமான நிலைக்கு வந்து அன்றாடம் தொழில் நடைபெறாமல் நடைமுறையில் பாங்கியிலிருந்து கடன் வாங்க முடியாது அழிந்து போகக்கூடிய நிலைமை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு கட்டண உயர்வு போன முறை 14 காசு என்று உயர்த்தியதைக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி உயர்வுகளின் அடிப்படையில் இந்த 14 காசு உயர்வு குறைவு அழுத்த மின்சாரத்திற்கு அதிகப்படுத்தியிருப்பதை தற்போது ஏற்பட்டுள்ள மின்பற்றாக் குறையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. கடந்த 4 ஆண்டு காலமாக எந்தவித மின் வெட்டுக்கும் அவர்கள் ஆளாகவில்லை.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, மறுபடியும் அரசினுடைய ஆலோசனையில் மின் கட்டணத்தை உயர்த்துவது என்ற நிலை இருந்து வருவதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். இந்தநிலை கைவிடப்பட்டு சாதாரண வீடுகளுக்கும், சிறுகடைகள் டெய்லரிங் கடைகள், சைக்கிள் ரிப்பேர் கடைகள் இந்த இடங்களுக்கு எல்லாம் கூட அதிகப்படியான கட்டணத்தை வைத்திருக்கிறார்கள்—சிறு தொழில்கள் இவைகளுக்கு எல்லாம் மின்சாரக் கட்டணத்தை மேலும் உயர்த்த மாட்டோம் என்று அமைச்சர் அவர்கள் உறுதிமொழி தருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே உயர்த்தியதில்கூட வீடுகளுக்குக் கிடையாது விவசாயத்திற்குக் கிடையாது, காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்க்கும் கிடையாது. ஏற்கெனவே உயர்த்தியதில் இவைகளுக்கு இப்போது உயர்வு கிடையாது. இனிமேல் உயர்த்தப்படும்போது என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது வீடுகளுக்கு மின்கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் வழக்கறிஞர்கள், டாக்டர்கள் போன்றவர்கள் தங்களுடைய வீடுகளிலே தொழில்களை நடத்திக்கொண்டிருப்பார்களானால் அவர்களுக்கு மின்கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியிருந்தால் அது தவிர்க்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, வீடுகளுக்கு உயர்த்தப்படவில்லை என்று சொன்னேன். தொழில்களுக்கு அல்ல.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் பெரிய மாளிகைகளில் 'ஆல் பர்ப்பஸ்' என்ற முறையிலே பயன்படுத்தப்படுகின்ற மோட்டார்களுக்கும் மின்விளக்குகளுக்கும் பல்வேறு காரியங்களுக்கும் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு குறைந்த கட்டணத்தைத்தான் கட்டுகிறார்கள். ஆகவே தரம் பார்த்து அதிகக் கட்டணம் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏகபோகத்தொழில்கள், பெருந்தொழில்கள் என்று வரிசைப்படுத்தி அவர்களுக்கு கட்டணத்தை ஏற்றி சாதாரண மக்களுக்கு ஏற்றாமல் இருக்கின்ற நடைமுறையைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, முன்பு மாளிகைவாசிகளுக்கு மலிவுக் கட்டணம் இருந்தது இப்போது அறவே ரத்துசெய்யப்பட்டுவிட்டது. பெரும் தொழில்களுக்கு சலுகைகள் தற்போது அறவே ரத்து செய்யப்பட்டுள்ளது.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்: குறைந்த பட்சம் சிறு தொழில்கள்—10, 15 எச். பி. மோட்டார்களை வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள், கடன் வாங்கி தொழிலை நடத்தக்கூடியவர்கள்— நடத்தக்கூடியவர்களுக்கு எல்லாம் இப்போது உயர்த்தவேண்டுமென்று சொல்லப்படுகிற கட்டணத்திலிருந்து அரசு விதிவிலக்கு அளிக்குமா? பெரிய தொழில்களுக்கு உயர்த்துவதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இனி முடிவு எடுக்கப் போகிறோம் என்பதை இப்போதே எப்படித் தெரிவிக்க முடியும்?

**திரு. தி. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மின்வாரியத்தில் இதுவரை ஆண்டுவாரியாக எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது? இந்த மின்கட்டண உயர்வால் மட்டுமே அதை ஈடுகட்டிவிட முடியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மின்வாரியம் பேரிழப்புக்கு ஆளாகியிருக்கிறது. மின்கட்டண உயர்வினால் அதை ஈடுகட்டிவிட முடியும் என்று அரசு கருதவில்லை. ஏனென்றால் மின்வாரியத்திற்காக வாங்கப்படுகிற பல பொருட்களின் விலை மத்திய அரசால் மிகப் பெரிய அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள், டாக்டர்கள் தனியாக கன்சல்டிங் ரூம் வைத்திருந்தால் அவைகளுக்கு மின் கட்டணம் உயர்த்துவதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால் வக்கீல்கள், டாக்டர்கள் என்று வீடுகளிலே போர்டுகளைப் போட்டுக் கொண்டிருக்கின்றவர்களுக்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறதே, அதைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தொழில் அலுவலகங்கள் என்ற முறையில் அவை வருமென்று கருதுகிறேன். ஏனென்றால் ''டொமஸ்டிக் பர்ப்பஸ்'' என்பதற்கு உண்டு. இதுபோன்ற அலுவலகங்கள் வைத்திருப்பார்கள் என்றால் ஆபீஸ் என்ற நிலை வந்துவிடுகிறது, ஆகவே கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**தீப்பெட்டிகளுக்கு விதிக்கப்படும் எக்சைஸ் தீர்வை.**

***வினா எண். 143.**—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையில் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுக்கு (கார்டு போர்டில் தயாரிக்கப்படுவது) எக்சைஸ் தீர்வையை மத்திய அரசு உயர்த்தியதை குறைக்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி: ஆம்.

(முற்பகல் 9-20.)

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில்களால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுக்கு மத்திய அரசு உயர்த்திய எக்சைஸ் தீர்வையை குறைப்பதற்கு நமது மாநில சர்க்கார் கோரிக்கை விடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல் இருக்கிறார்கள். இப்போது எவ்வளவு எக்சைஸ் தீர்வை இருக்கிறது? அதை எவ்வளவு குறைப்பதற்கு மாநில அரசு மத்திய அரசிற்கு எழுதியுள்ளது? அது எப்போது முதல் அமலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீக்குச்சிகள் அடங்கிய அட்டைப்பெட்டிகளுக்கு 1-3-82-ல் புதியதாக அதிக அளவு ஆயத்தீர்வை விதித்திருக்கிறார்கள். வெளிப்பக்கம் அட்டையுள்ள தீப்பெட்டிகளுக்கு ரூ. 5.14; உள்பக்கம் அட்டையால் செய்யப்பட்ட தீப்பெட்டிகளுக்கு ரூ. 5.26; தீப்பெட்டிகள் உள்பக்கம், வெளிப்பக்கம் ஆகிய இரண்டு பக்கங்களிலும் அட்டையால் தயாரிக்கப்பட்டவைகளுக்கு ரூ. 4.90 ஆயத்தீர்வை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனை கூட்டுறவுத் துறையில் இருக்கிற தீப்பெட்டித் தொழில் கூடங்களுக்கு குறைக்கவேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறது. ரூ. 2.60 ஆக அதனை குறைக்க வேண்டுமென்று மத்திய அரசிற்கு தமிழக அரசு வற்புறுத்தி எழுதியிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறுதொழில்களால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுக்கு அதனுடைய வளர்ச்சியை கருதி மாநில அரசு வேறு ஏதேனும் சலுகைகள் அளித்திருக்கிறதா? தீப்பெட்டித் தொழிலில் பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகையை அதிகம் அளிக்க அரசிற்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான வசதிகளை தமிழக அரசு செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்விகேட்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**விரைவில் வளரும் மரங்களை நடுவதற்கான திட்டம்.**

***வினா எண். 144**—திரு. ஏ. சி. சண்முகம்: திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77 வரவு செலவு திட்டத்தில் விரைவில் வளரும் மரங்களை நடுவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் கைவிடப்பட்டது என்று கூறுவது சரியல்ல. விரைவில் வளரும் மரங்களை நடுதல் என்ற திட்டத்தின் பெயர் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் "மரக்கூழ் உற்பத்தித் தோட்டங்களுக்கான திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1976-77-இல் மரக்கூழ் உற்பத்தித் தோட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 25.08 இலட்சத்தில் ரூ. 21.97 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படக் கூடிய வகையில் கடந்த ஆண்டு, இந்த ஆண்டு, எதிர் வருகிற நிதியாண்டில் அதிகத் தொகை ஒதுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 1977-78-ல் ரூ. 31.38 லட்சம்; 1978-79-ல் ரூ. 27.76 லட்சம்; 1979-80-ல் ரூ. 26.31 லட்சம்; 1980-81-ல் ரூ. 30.84 லட்சம்; 1981-82-ல் ரூ. 36.03 லட்சம்; 1982-83-ல் கூட ரூ. 43.76 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரம் நடுகிற காலத்தில் காடுகளானாலும் சரி, சாலை ஓரங்கள் ஆனாலும் சரி, பின்னால் பலன் தரக்கூடிய புளிய மரங்களைப் போன்ற மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரம் நடுகிற திட்டத்திலே பல்வேறு தலைப்பின் கீழ் நடுகிறார்கள். இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி விரைவிலே வளர்கிற மரங்களை நடுகிற திட்டத்தைப் பற்றியாகும். அதைத்தான் மரக்கூழ் தயாரிக்கிற தோட்டங்களுக்கான திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். பல்வேறு திட்டங்களில் வருகிறபோது நீண்டகாலம் பலன் தரக்கூடிய புளியமாமும் வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிராமப்புறங்களில் ஏராளமான புறம் போக்கு நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. அரசு அவைகளை கையகப்படுத்தி மரங்களை வளர்க்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலங்களில் எல்லாம் மரங்கள் வளர்க்கிற திட்டம் தான் சமுதாய காடு வளர்க்கிற திட்டம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இது வரையில் எத்தனை கோடி கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் கன்றுகளை நட்டு வருகிறோம். இன்னொரு பக்கம் மரங்களை வெட்டிச் செல்கிற நிலைமை இருக்கிறதே, இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தனியாக ஒரு கேள்வி கேட்கப்பட்டால் விவரமாகப் பதில் தர முடியும்.

கல்லணையில் சுற்றுலா தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 145.—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கல்லணையில் கட்டப்படவிருக்கும் சுற்றுலா தங்கும் விடுதியின் தொடக்கப்பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) இத் திட்டத்திற்கு அரசின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) கல்லணை மாவட்ட உலாத்தலமாக மேம்படுத்தப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அங்கே ரூ. 1.54 இலட்சத்தில் உணவுக்



கூடத்துடன் இணைந்த துயில்க விடுதி கட்ட மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து திட்ட அறிக்கை பெறப்பட்டு, இப்போது நம் மேல் நடவடிக்கையில் உள்ளது. சுற்றுலா தங்கும் விடுதி கட்டுவது பற்றி தேவையக்கேற்பவும் நிதிவசதிகள் கிடைத்த பின்னும் யோசிக்கப்படும்.

நாங்குநேரி தாலுகா அரசர்பத்து பகுதியில் பயிர்களை அழிக்கும் காட்டு யானைகளை தடுக்கும் திட்டம்.

*வினா எண். 146.—திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகா மஞ்சுவிளை ஊரில் உள்ள அரசர்பத்து பகுதியில் விவசாயிகளின் பயிர்களை அழிக்கும் காட்டு யானைகளை தடுக்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) இப்படி பாதிக்கப்படுகிற பகுதிகளில் பயிர்க் காப்பீடு திட்டம் ஒன்றை மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இப்படி பயிர்களை அழிக்கக்கூடியவை யானைகள் மட்டுமல்லாது குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலையோரத்தில் உள்ள பயிர்கள் யாவற்றையும் காட்டுப் பன்றிகள் அதேபோல் குரங்குகள் மற்றும் காட்டில் வாழக்கூடிய மற்ற மிருகங்கள் அழித்துக்கொண்டிருக்கின்றன. எனவே அந்தப் பயிர்களைப் பாதுகாக்க அரசு விசேஷ நடவடிக்கைகள் ஏதாவது எடுக்குமா? மேலும் அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசே நிவாரணம் அளிக்க ஏதாவது உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இப்படி வன விலங்குகள் அல்லது வேறு மிருகங்கள் மூலம் ஏற்படும் நஷ்டத்திற்கு அவ்வப்போது விவசாயிகளிடமிருந்து வருகிற விண்ணப்பங்களைப் பரிசீலித்து தனியாக முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் பொதுவாக ஒரு கொள்கை முடிவாக எடுக்கப்பெற்று இப்படிப் பட்ட பயிர்கள் பாழாகிற நேரத்தில் அதில் பாதிக்கப்பட்டோருக்கு காப்பீட்டுத் தொகை வழங்குகிற ஒரு திட்டத்தைப் பற்றி இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனோடு அதிகாரிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : இப்போது யானைகள் மட்டுமல்லாது காட்டு மிருகங்கள் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. ஆதலால் மிருகங்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு காட்டுப் பகுதிகளில் உள்ள நிலங்களையெல்லாம்—விவசாய நிலங்களையெல்லாம் அரசே ஆர்ஜிதம் செய்து எடுத்து அந்தப் பகுதிகளில் மேற்கொண்டு மிருகங்கள் அதிக அளவில் வளருவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தக் காட்டு விலங்குகள் பயிர்களை நாசமாக்குகிறபோது உதவி பெறும் அந்த விவசாயிகள் தற்போது மாவட்ட வனத்துறை அதிகாரிகளை அணுகி சர்டிபிக்கேட் வாங்கவும் பிறகு வருவாய்த் துறை அதிகாரிகளை அணுகி சர்டிபிக்கேட் வாங்கவும் வேண்டிய நிலை இருப்பதன் காரணமாக செலவு அதிகமாகிறது. அதனால் அவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை எளிது படுத்தினால் அந்த விவசாயிகளை பாதுகாக்க முடியும். குறிப்பாக ரூ. 500-க்கு அழிவு ஏற்பட்டிருக்கிறது என்றால் செலவே ரூ. 500 ஆகிறது என்ற நிலைமை காரணமாக அவர்களுக்கு நிவாரணமே கிடைக்காமல் போய் விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு ரா. கிருஷ்ணன் : ஆகவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் எளியமுறையில் உதவித் தொகை பெற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நிகழ்ந்து விட்ட அந்தச் சம்பவங்களின் தொடர்பாக நஷ்டயீடு கோருகிறவர்களைப் பற்றிய விவரங்களை முழுமையாக தெரிந்து கொண்டாலன்றி அரசாங்கம் அவர்களுக்கு உதவுவதில் சிக்கல்கள் ஏற்படலாம். அதற்காகத்தான் இப்படிப்பட்ட நடைமுறைகள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை நிறைவேற்ற, எந்த அளவிற்கு அவர்களின் சிரமங்களைக் குறைக்க முடியுமோ அதுபற்றிய பரிசீலனையை அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் மூலம் தனி வியாபாரிகளுக்கு விற்கப்படும் பூச்சி மருந்துகள், உரங்கள்.

*வினா எண். 147.—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் மூலம் பூச்சி மருந்துகள், உரங்கள் தனி வியாபாரிகளுக்கு (Private Dealers) விற்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் வரும் ஆண்டுகளில் நேரிடையாக பூச்சி மருந்துகள், உரங்கள் விற்கப்படுமா?

(இ) மதுராந்தகம் தாய் நிறுவனத்தில் பூச்சி மருந்துகள் மற்றும் உரங்கள் தனியாருக்கு எவ்வளவு சென்ற ஆண்டு விற்கப் பட்டது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஏற்கனவே விற்பனை நிலையங்கள் மூலமாக விற்கப் பட்டு வருவது போல் வரும் ஆண்டுகளிலும் விற்கப்படும்.

(இ) பூச்சி மருந்துகள், BHC 10 துகள்கள் 136 மெ. டன்னும், DD 25% E. C. 280 லிட்டரும், MALATAX 68% E. C. 280 லிட்டரும், 266 மெ. டன் உரங்களும் தனி வியாபாரி களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை பருவ காலத்திலே இதைப்போன்ற உரங்கள், பூச்சி மருந்துகள் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதை அரசு அறியுமா? அதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அவ்வாறு புகார் வரவில்லை. வந்தால், நடவடிக்கை எடுக்க லாம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பூச்சி மருந்துகளின் விலை குறுகிய காலத்தில் அதிகமாக ஏற்றப்பட்டிருக்கிறது. எனவே, விவசாயிகள் அதிக விலைக்கு இவைகள் விற்கப்படுவதாகக் கருதுவதோடு அல்லாமல், தனிப் பட்ட முறையில் இவை அதிக விலைக்கு விற்கப்படுவதாக மக்கள் மத்தியிலேயும் கருத்து நிலவி வருவதை அரசு அறியுமா? எனவே, அதைக் குறைக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பு அற்றது. ஆனால், நிலைமையை அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் தரமாக இல்லாததன் காரணமாக, பயிர்கள் பாதுகாக்கப்படுவதற்குப் பதிலாக, பூச்சிகளே அந்த மருந்துகளை சாப்பிட்டுவிட்டு, கொழுத்துப்போய், அந்த பூச்சிகளே பயிர்களை மிக விரைவாக அழிப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, அந்தப் பூச்சி மருந்துகளை பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, முன்வரும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகளை விவசாயிகளுக்குக் கொடுப்பதிலே ஒரு பிரிவினருக்கு மானிய விலையில் கொடுப்பதினால், ஏராளமான தவறுகள் நடைபெறுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதனால் எல்லாப் பூச்சி மருந்துகளையும், எல்லா விவசாயிகளுக்கும் எந்த அளவில் மானிய விலையில் கொடுக்க முடியுமோ அந்த அளவில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எல்லா விவசாயிகளுக்கும், எல்லா பூச்சி மருந்துகளையும் அவ்வாறு தர இயலாது. சிறு விவசாயிகளுக்கு, வறட்சிப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு என்ற வகையில் முறைப்படுத்தி, எந்தெந்த திட்டத்திற்கு மானியம் இருக்கிறதோ, அந்தந்த திட்டத்தின் மூலம் நாம் செயல் படுத்த முடியும்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, பூச்சி மருந்தில் டீ.டீ.டி. 25% விற்பனை செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். உலகில் பல பகுதிகளில், அதனுடைய ரெசிடியூவல் எபெக்ட் அதாவது விஷத் தன்மை இருப்பதால், மக்களுக்கும், மற்ற ஜீவ ஜந்துக்களுக்கும் அது ஆபத்தை விளைவிக்கின்ற காரணத்தினால், அது தடை செய்யப்பட்டிருப்பது உண்மையா? அப்படியிருந்தால், அந்த இங்கு மட்டும் அனுமதிக்க காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போடவேண்டும்.



### உப்புத்தண்ணீர்ப் பாசனத்தில் விளையும் நெல் ரகங்கள்

*வினா எண் 148—திரு. எம். சின்னசாமி:— மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்புத்தண்ணீர் பாசனத்தில் விளையும் நெல் பயிர் ரகத்தினை டில்லி மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருப்பது அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் கா காளிமுத்து: தாமோதர், தாசல், ஜெட்டு ஆகிய மூன்று நெல் ரகங்கள், உப்புத் தண்ணீர் பாசனத்தில் விளையும் ரகங்களாக மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரக நெல்லை நம் மாநிலத்திலே பயிர் செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நேரடியாக அந்த ரக நெல்லை நாம் பயிர் செய்ய இயலாது. இவை குறைந்த மகசூலைக் கொடுக்கக் கூடியவை; சாயுந்தன்மை கொண்டவை; குறைந்த தூர்களே கொடுக்கும் தன்மை வாய்ந்தவை. ஆகவே, ஐ.ஆர்.20 இரகத்துடன் கருச்சேர்க்கையில் இணைத்து, டி.என்.எ.யூ.17005 என்ற புதிய ஒட்டு இரக நெல்லை நாம் பயன்படுத்துகிறோம்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பெரும்பகுதி புன்செய் விவசாயம். வறட்சி நிறைந்த பகுதியாக, தண்ணீர் இல்லாத காரணத்தினால், இப்படிப்பட்ட பகுதிகளிலே பயிரிட புதிய விதையைக் கண்டுபிடித்து, குறைந்த தண்ணீரில் அதிக விளைச்சலைப் பெறுவதற்கான ஆராய்ச்சி நடைபெறுகிறதா? அப்படிப்பட்ட விதைகள் ஏதாகிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த வகையில் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது ஐ.ஆர்.50 என்ற நெல்லை நாம் பரிந்துரை செய்கிறோம்.

### கோவைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி.

*வினா எண் 149—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைப் பல்கலைக்கழகம், பசுமை புரட்சியில் கிராமப்புற வளர்ச்சி பற்றி ஆராய்ச்சியை துவக்கியுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

(இ) அதற்கு அரசு அளிக்கும் மான்யம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பசுமைப் புரட்சியின் விளைவுகள் பற்றிய ஆய்வு ஒன்றை வடாற்காடு மாவட்டத்தில் கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடைகாணும் பொருட்டு துவங்கியுள்ளது:—

(1) பசுமைப் புரட்சி, பல்வேறுஉற்பத்தித் துறைகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியுள்ளது?

(2) உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு வளர்ச்சிக்கு அது எந்த அளவிற்கு வழி செய்கிறது?

(3) பஞ்சாப் மாநிலத்தோடு ஒப்பிட்டால் தமிழக பசுமைப் புரட்சியின் பயன் கூடுதலா? குறைவா? அதற்கான காரணங்கள் யாவை?

(4) பசுமைப் புரட்சியின் முழுப் பலனையும் அடைய என்ன புதிய முயற்சிகள், கொள்கைகள் தேவை?

(இ) அரசு அளிக்கும் மானியம் எதுவும் இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே வட ஆற்காடு மாவட்டத்திலே அந்த ஆராய்ச்சி நடத்தப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலே எந்தெந்தப் பகுதியிலே அந்த ஆராய்ச்சி நடத்தப்படுகிறது? அதனுடைய முடிவு எப்பொழுது அரசுக்குக் கிடைக்கும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் என்கின்ற வகையில்தான் குறிப்பு இருக்கிறது இது ı-11-1981 ல் தொடங்கியுள்ளது. 30 மாதங்கள் நடக்கும். 30–4–1984ல் இது முடியும்.

திரு.பெ. சு, திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியை நடத்துகின்ற அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கின்ற விவசாயிகளையும் சந்தித்து, இந்த ஆராய்ச்சிக்காக, அவர்களுடைய அனுபவத்தையும் கேட்டு அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதிலே 800 குடும்பங்கள், 600 பண்ணைகள், 100 தொழிற்சாலைகளிலிருந்து 16 ஆய்வாளர்கள் மூலம் விவரம் சேகரிக்கப்படும் என்று இருக்கிறது. ஆகவே, விவசாயிகளிடத்திலேயிருந்தும் இந்த விவரம் பெறப்படும்.



## காட்பாடி இரயில்வே சந்திப்பில் சித்தூர் நெடுஞ்சாலையின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 150—திரு.இல. பலராமன்:—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், காட்பாடி இரயில்வே சந்திப்பில் சித்தூர் நெடுஞ்சாலையின் குறுக்கே புதியதாக மேம்பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இத் திட்டம் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இப்பாலம் கட்டப்படவேண்டிய இட அமைப்பு வரைப்படம், இரயில்வே துறையினருக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையினரின் மதிப்பீடு கிடைத்தவுடன் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு.இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரெயில்வே துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; அவர்களது அங்கீகாரம் பெற்றப் பின்னால் கட்டப்படும் என்று கூறினார்கள். இதற்கு ஏதாவது காலவரம்பு கூறமுடியுமா? விரைவாகப் பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு என்ன முயற்சியை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1980–81 ஆவது ஆண்டு, அப்பொழுதிருந்த விலைவாசியில் ரூ.126 இலட்சம் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்காக வைப்புத்தொகை, ரூ.48 இலட்சம் இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். சென்ட்டேஜ் என்கிற முறையில் ரூ. 96,000 1981 ஆவது ஆண்டிலே செலுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஆகக்கூடிய காலதாமதம் எல்லாம் மத்திய அரசின் மூலமாகத்தான் ஏற்படுகின்றதே தவிர, ரெயில்வே துறையின் மூலமாகத்தான் இவைகள் செய்யப்பட வேண்டிய நிலைமைகள் இருக்கிற காரணத்த ல்தான் கால தாமதம்.

திரு·இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரெயில்வே துறையினால் மத்திய அரசாங்கத்தினால்—தான் இவ்வளவு காலதாமதம் என்று கூறினார்கள். மாநில அரசு இதற்குக் கட்ட வேண்டிய தொகையைப் பற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த சென்டேஜ் தொகை கட்டவில்லையென்பதுதான் காலதாமதத்திற்குக் காரணம் என்று ரெயில்வே துறை கூறுகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே உண்மை அல்ல. பணம், 1981லேயே கட்டப்பட்டிருக்கிறது ஆகவே, இரயில்வே துறைதான் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, மாநில அரசு அல்ல.

திரு ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ரெயில்வே துறையில் மேம்பாலங்கள் கட்டுவதற்கு காட்பாடி மற்றும் வாணியம்பாடி, மச்சக்குப்பம், ஆம்பூர் போன்ற பகுதிகளில் எல்லாம் மேம்பாலங்கள் கட்டுவதற்குத் திட்டங்கள் அனுப்பப்பட்டு பல ஆண்டுகளாக மத்திய அரசிடம் தேங்கிக் கிடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு நேராகச் சென்றாவது அனுமதியை வாங்கி வந்து உடனடியாகக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நாங்கள் டெல்லிக்குச் சென்று, ஏற்கனவே, பல்வேறு அமைச்சர்கள் மத்தியிலே இந்தப் பிரச்னைகளை எல்லாம் எடுத்துச் சொன்னோம். உடனடியாக மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டும். பல்வேறு நிலைகளில் போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இடைஞ்சலாக இருக்கும் வகையில், இங்கே மத்திய அரசு போடக்கூடிய தண்டவாளங்கள் இருந்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தக் குறுக்கீடுகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்று சொன்னால், உடனடியாக மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். ஆனால், அவர்கள் கொடுத்த விதிமுறை, 1 இலட்சம் ஹெவி வெஹிகல்ஸ்ஸாவது ஓடவேண்டும் என்பது. 1 இலட்சம் ஹெவி வெஹிகல்ஸ் என்று நிர்ணயித்தால், மேம்பாலங்கள் கட்டமுடியாது; ஆகவே, குறைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். ஆகவே, 50,000 வெஹிகல்ஸ் என்கிற முறையிலே அது குறைக்கப்பட்டிருக்கிறது, ஆனாலும், 50,000-க்கு மேற்பட்ட நிலையிலுள்ள, பல்வேறு இடங்களில் மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. ஆனாலும்கூட ரெயில்வே துறையினர் கேட்டால் சொல்கிறார்கள், இது லோ பிரையாரிட்டி என்று சொல்லி, தள்ளிவிடக்கூடிய முயற்சியிலேதான் ஈடுபடுகிறார்கள். ஆகவே, இங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் நண்பர்களை நான் கேட்டுக் கொள்வது, உடனடியாக மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால், தயவுசெய்து, நீங்கள் நேரடியாக, ஏதாவது தொடர்பு வைத்துக்கொண்டு, உடனடியாகக் கேட்டுப் பார்த்து வாங்கிக் கொடுத்தால், கட்டுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

திரு.என். ஏ. பூங்காவனம்: இது என்னுடைய தொகுதி பற்றியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தொகுதி என்றுச் சொன்னால், நீங்கள் அல்லவா மூலக் கேள்வி போட்டிருக்க வேண்டும்.



திரு.என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியை இந்த மன்றத்தில் நான் 3 முறை முன்னால் எழுப்பி இருக்கிறேன். வளர்ச்சிமன்றக் கூட்டத்திலேயும் பல முறை கேட்டிருக்கிறேன். 15 நாட்களுக்கு முன்னால் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எந்த வழியாகப் பாலம் அமைக்க வேண்டுமென்று கூட நேரில் பார்வையிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, ரூ 96,000 கட்ட வேண்டுமென்று அவர்கள் கேட்ட நேரத்தில், நான் வற்புறுத்தி, அதைக் கட்டியும் இருக்கிறார்கள். ரெயில்வே சம்பந்தப்பட்ட துறை இந்த நாள் வரையிலும் அனுமதி கொடுக்கவில்லையென்பது தான் உண்மை. அதனால்தான் அந்தப் பாலம் கட்டுவது நிற்கிறது என்பதும் உண்மை. அந்த அனுமதியைப் பெறுவதற்காக அமைச்சர் அவர்கள் மேலும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் நண்பர் பலராமன் அவர்களானாலும் சரி, எங்கள் கட்சித் தலைவர்கள் மூலமாக வேண்டுமென்று சொன்னால் கூட, நாங்கள் ரெயில்வே போர்டினரைச் சந்தித்துப் பார்ப்பதற்கு முயற்சிக்கிறோம். அதற்கு வேண்டிய முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு வேண்டுகோள்.

### இளையான்குடி தாலூக்காவிலுள்ள குருச்சி உள்கடை, கருங்கன்னியேந்தல் கண்மாய்

*வினா எண். 151—திரு. செ. சிவசாமி:—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு முகவை மாவட்டம், இளையான்குடி தாலூகா, குருச்சி உள்கடை, கருங்கன்னியேந்தல், கண்மாயில் ரூ.20,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டிருந்த கலுங்கு உடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில் மீண்டும் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) துரித நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முடிவிற்குள் வேலை முடிக்கப்பட்டு இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் விடப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கருங்கன்னி யேந்தல் கண்மாய் 20,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலுங்கு ஆகும். இது உடைந்து நீண்ட நாட்களாக ஆகிறது. அந்தக் கலுங்கு கட்டப்பட்ட இடம் தனியாருக்குச் சொந்தம் என்பதால் உடைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடம் தனியாருக்குச் சொந்தமானதா? அல்லது அந்த இடம் அரசுச் சொந்தமான புறம்போக்கில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தனியாருக்குச் சொந்தம் என்ற முறையிலே குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனால் கலுங்கு உடைந்திருக்கிறது என்று குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டு துரித நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு வரும் மார்ச் மாதத்திற்கு முன்னால் வேலைகள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வேலை முடிக்கப்பட்டவுடன் இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் விடப்படும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியாருக்குச் சொந்தமான நிலமாக இருந்தால் மீண்டும் உடைக்கப்படும் நிலைமை ஏற்படும். எனவே, அதைத் தடுக்கின்ற முறையில் அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே உடைக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. சிவசாமி அவர்கள் சொல்வதைப் பார்த்தால் யார் உடைக்கிறார்களென்பதும் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தால் என்னிடத்தில் இரகசியமாக யார் உடைக்கிறார்கள் என்று தெரிவித்துவிட்டால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இயக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய குறிப்பிலேயே இருக்கிறது இவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்பட்ட கலுங்கு உடைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி உடைத்தவர்களின் பேரில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அந்தக் கலுங்கை உடைப்பதற்கான காரணம் என்ன? சர்க்காருடைய இடமாக இல்லாமல் தனிப்பட்டவர்களுடைய இடத்தில் அரசாங்கப் பணத்தைக் கொண்டு தனியாருடைய இருந்தால் கலுங்கை ஏன் கட்டினோம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது உடைக்கப்பட்டது என்பதைக் காட்டிலும் உடைந்து போயிருக்கிறது என்ற குறிப்புகள்தான் என்னிடத்திலே இருக்கின்றன. தனியார் யாராவது உடைத்திருக்கிறார்களா என்பதற்கான



குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. ஆகவே, உடைந்து போய் இருக்கும் கலுங்கை மீண்டும் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் இதுபோன்ற நிலைமைகளை யாரேனும் உருவாக்கினார்கள் என்றால் அதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

## ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள டிராக்டர்கள்

* வினா எண் 152—திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள டிராக்டர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) செயல்படாமல் இருக்கும் டிராக்டர்களை செயல்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஊராட்சி ஒன்றியங்களில் 328 டிராக்டர்கள் உள்ளன.

(ஆ) செயல்படாமலிருக்கும் டிராக்டர்களை பணிமனைக்கு அனுப்பி பழுது பார்த்த பின்னர் அவைகள் மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. மேலும் செயல்படாமலிருக்கும் சில டிராக்டர்களை அதிக தொகை கொடுத்தும் பழுதுபார்த்தாலும் அவைகளை இலாபம் ஈட்டித் தரத் தக்க வகையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்த டிராக்டர்களை ஏலமிடுவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையிலே உள்ளன.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்து விட்ட அல்லது வேலை செய்ய இயலாத அந்த டிராக்டர்களை ஏலத்திற்கு விடும் பொழுது, வாங்கப்பட்ட காலத்திலேயிருந்து அந்த டிராக்டர்கள் எத்தனை ஆண்டுகள் வேலை செய்திருக்கின்றன, அதன் நிலைமைகள் என்ன என்பதை பரிசீலனை செய்வதோடு, அந்த வேலையிலே அக்கறையில்லாத சில டிரைவர்கள் அந்த டிராக்டர்களை கன்டெம் செய்ய வேண்டுமென்று சொல்வதால் ஏலத்திற்கு விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து பிறகு ஏலத்திற்கு விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே. அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து விட்டுத்தான் ஏலம் விடலாம் என்ற நிலைமைகளை எடுத்துள்ளோம்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஒன்றியங்களிலுள்ள டிராக்டர்கள் பழுதடைந்திருப்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். எத்தனை ஒன்றியங்களில் எத்தனை டிராக்டர்கள் பழுதடைந்திருக்கின்றன? அந்த டிராக்டர்களில் உபயோகமற்ற நிலையில், ரிப்பேர் செய்தாலும் வேலைக்கு உதவாது என்ற நிலையில் உள்ள டிராக்டர்களைப் பற்றிப் பரிசீலனை செய்து அவைகளை ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்குமா என்று கூறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இருக்கின்ற 328 டிராக்டர்களில் 159 டிராக்டர்கள் ஈடுபடுத்தக் கூடிய நிலையிலே இருக்கின்றன. 169 டிராக்டர்கள் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. ஆகவேதான் இந்த முடிவை எடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற டிராக்டர்கள் பாதிக்கு மேல் பழுதடைந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். பல ஒன்றியங்களிலே பல மாதங்களாக—உதாரணமாக திருமங்கலம் ஒன்றியத்தில் கூட—இப்படிப்பட்ட நிலை இருக்கின்றது. நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வது எல்லாம், இவைகளை எல்லாம் விரைவிலே விற்றுவிட்டால் அரசாங்கத்திற்கு நிச்சய மாக லாபம் கிடைக்கும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி பொதுப் படையாக இருக்க வேண்டுமே தவிர, திருமங்கலம் ஒன்றியம் போன்ற குறிப்பிட்ட ஒன்றியங்களைப் பற்றி எல்லாம் கேட்கக் கூடாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இவைகளை வெகுவிரைவாக விற்றுவிட்டு வேறு பல புதிய டிராக்டர்களை வாங்கி பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் இவைகள் எல்லாம் நீண்ட நாட்களாகப் பழுது அடைந்திருப்பதால் இவைகளை ஓட்டுகின்றவர்களும், சுத்தம் செய்கின்றவர்களும் வேலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, புதிதாக வாங்குவதைக் காட்டிலும், இப்போது இருக்கின்ற பழுதடைந்த டிராக்டர்களை ஏலம் விடுகிறோம். ஆனால் நல்ல நிலையில் உள்ள 159 டிராக்டர்களை 'என்கோபெட்' நிறுவனத்திடம் கொடுத்து அவைகளின் மூலமாகக்கூட அவைகளை சேர்த்து இந்தப் பணிகளைச் செய்வதற்கு 'என்கோபட்'



இடத்திலே கொடுக்கலாம என்பதாகக்கூட செயற்குறிப்பிலே இருக்கிறது. அதற்குக் காரணம் இன்றைக்கு இந்த 'என்கோபட்' நிறுவனம் கூட இதே பணிகளைச் செய்துகொண்டு வருகிறது. வாடகைக்கு டிராக்டர்களைக் கொடுப்பது, விவசாயிகளுக்கு பல்வேறு நலன்களைச் செய்வது என்கின்ற அந்த சேவை மனப்பான்மையின் அடிப்படையிலே வேளாண்மைப் பொறியியல் கழகம் அந்தப் பணியினை செய்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இவைகளைக்கூட செய்யலாமா என்கிற பரிசீலனையில் இருந்து வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏர், மாடு வைத்து உழுதுகொண்டிருந்த விவசாயிகள் அது கட்டுப்படியாகவில்லை என்ற காரணத்தினால் இப்போது டிராக்டர்கள் மூலம் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் ஒவ்வொருவரும் சொந்தமாக டிராக்டர்களை வாங்க முடிவதில்லை. ஆகவே ஊராட்சி ஒன்றியங்கள், பொது நிறுவனங்கள் மார்க்கட்டிங் சொசைட்டிகளில் உள்ள டிராக்டர்களை சிறு விவசாயிகள் பயன்படுத்தி கொண்டு வருகிறார்கள். இதில் நஷ்டமோ, லாபமோ பார்க்கும் பிரச்சினையே இல்லை. இப்போதுள்ள 328 டிராக்டர்களில் 169 டிராக்டர்கள் ரிப்பேராகி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டு டிராக்டர்களை வைத்து, இருப்பதைப் பழுதுபார்த்து மேற்கொண்டு சிறு விவசாயிகளுக்கு உதவ நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எப்போதுமே ஒன்றியங்களின் மூலம் டிராக்டர்களை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மையோடு தான் செய்யப்பட்டது. நல்ல எண்ணத்தின் அடிப்படையில் லாப நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையோடு செய்யப்பட்டது. ஆனால் தனியார் நிறுவனங்கள் டிராக்டர்களை வாடகைக்கு விடுகிறார்கள். அவர்கள் ஒரு மணிக்கு எவ்வளவு சார்ஜ் செய்கிறார்களோ அதைக் காட்டிலும், ஒன்றியங்கள் அதிகமாக சார்ஜ் செய்யும் நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக தனியாரிடமிருந்துதான் டிராக்டர்களை விவசாயிகள் எடுத்துச் சென்றதன் காரணமாக, ஒன்றியங்களிலே இருந்த டிராக்டர்கள் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டிய நிலை இல்லாமல் போய் விட்டது. அதன் காரணமாக அவைகள் சரியாக வேலை செய்யாமல், பல ஆண்டுகளாக பல மாதங்களாக, 'ரஸ்ட்' ஏறி, துருப்பிடித்து பழுதடைந்த நிலை ஆகிவிட்டது. இவைகளை சரிப்படுத்துவதற்காகத்தான் அரசாங்கம் இந்த நிலை எடுத்து, பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகளை ஓரளவிற்குத்தான் அனுமதிக்க முடியும். எல்லோருக்கும் அனுமதிக்க முடியாது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பழுதடைந்த டிராக்டர்களைப் பற்றிச் சொன்னார்கள். தற்போது ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பல டிராக்டர்கள் பழுதடைந்து இருக்கின்றன. ஏற்கனவே வாங்கப் பட்ட டிராக்டர்களில் 'ஹார்ஸ்பவர்' குறைவாக இருப்பதால், உழுவதற்கு சில நேரங்களில் கடினமாக இருக்கின்றது. இப்படிப் பட்ட நிலை மாற்றப்படுமா? இப்போது சில ஒன்றியங்களிலே டிராக்டர்களே இல்லாத நிலை இருக்கின்றது அப்படிப்பட்ட ஒன்றியங்களிலே புதிதாக டிராக்டர்கள் வாங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். காரணம், இருக்கின்ற டிராக்டர்களை என்ன செய்வது என்ற நிலையைத்தான் இப்போது வாதித்துக் கொண்டிருக்கிறோம். புதிதாக வாங்கும் செயற் குறிப்பு அரசாங்கத்திலே இல்லை. இருக்கின்ற டிராக்டர்களை என்ன செய்வது என்பதை விவாதிக்கும் வாதத்தைத்தான் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

சென்னையிலுள்ள பொது மருத்துவமனை பல் பிரிவுப் பகுதி.

* வினா எண் 153—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் பல் பிரிவுப் பகுதியில் நாள் ஒன்றுக்கு எத்தனை நோயாளிகள் வருகின்றார்கள்?

(ஆ) அவர்களுக்கு போதுமான இடவசதியும், மருத்துவ சாதனங்கள் இல்லை என்பது அரசிற்கு தெரியுமா?

(இ) ஆம் என்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது?

(ஈ) பல் பிரிவிலுள்ள ஆபரேஷன் தியேட்டரில் ஏர் கண்டிசன் செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 600.

(ஆ), (இ) மற்றும் (ஈ) கூடுதல் இடவசதி செய்து தருவதற் குரிய செயற்குறிப்பு தல அலுவலகங்களின் ஆய்வில் உள்ளது. கூடுதல் கருவிகள் வாங்கிட நிதி வசதியைப் பொறுத்து அவ்வப் போது அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெனரல் ஆஸ்பத்திரி பல் பிரிவுப் பகுதியில் 600-க்கும் மேற்பட்டவர்கள் வருகின்றார்கள். அங்கே இடவசதி, மிகவும் நெருக்கடியாக இருக்கின்றது. ஒருவரை யொருவர் இடித்துக் கொண்டும், தள்ளிக்கொண்டும் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது ஆகையினாலே பக்கத்திலே இருக்கிற இடத்தை உடனடியாக அரசு எடுத்து கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட இலாகாவிடமிருந்து செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் விரைவிலே அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா? அதுமட்டுமல்லாமல், அந்த பல் பிரிவுப் பகுதிக்கு, அங்கே இருக்கின்ற ஆபரேசன் தியேட்டரில் அடிக்கடி மின்தடை வருகின்ற காரணத்தால், கண்டிப்பாக ஆபரேசன் தியேட்டரில் ஜெனரேட்டர் வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9–50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இரண்டு கேள்விகளை உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். முதலாவதாக கேட்டிருக்கக்கூடிய கேள்விக்கு சர்வன்ட்ஸ் குவார்ட்டர்ஸ், அங்கே 30 பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த சர்வன்ட்ஸ் குவார்ட்டர்சை அகற்றி அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து அந்த பல் மருத்துவமனையை நாம் விஸ்தரிக்கலாமா என்கிற ஒரு செயற் குறிப்பு, தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), டீன், பொது மருத்துவமனை, மற்றும் அரசாங்கத்திற்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே விரைவிலே ஒரு முடிவு எடுக்க இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அங்கே ஏற்கனவே ஆப்பரேசன் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. அம்மருத்துவமனை ஜெனரல் ஆஸ்பத்திரியோடு தொடர்புள்ள மருத்துவமனை. அங்கே, ஆப்பரேசனைப் பொறுத்தவரையிலும், 1979-லே 1,079 ஆப்பரேசனும், 1980-லே 1,195 ஆப்பரேசனும், 1981 லே 1307 ஆப்பரேசனும் அங்கே நடைபெற்று இருக்கின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆப்பரேசன் நல்ல முறையிலே நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்கவிரும்புவது, அங்கே ஆப்பரேசன் தியேட்டர்களிலே ஆப்பரேசன் நடைபெறும்போது, மின்தடை காரணமாக சில சமயங்களில் தடைபெறுகிறது, எனவே இந்தக் குறையைப் போக்குவதற்கு கண்டிப்பாக ஆப்பரேசன் தியேட்டர்களிலே ஜெனரேட்டர் வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆப்பரேசன் இரண்டு இடங்களில் நடைபெறுகின்றது. சாதாரண மைனர் ஆப்பரேசன்கள் அந்த மருத்துவக் கல்லூரியினுடைய ஆப்பரேசன் அறைகளிலே நடைபெறுகின்றன. அதுமட்டுமல்லாமல் ஜெனரல் ஆஸ்பத்திரியிலேயும், மேஜர் ஆப்பரேசன் நடைபெறுகின்றது. அங்கே ஜெனரேட்டர் இருக்கிறது. அங்கே கருவிகள் வாங்குவதற்காக அரசாங்கம் பணம் ஒதுக்கியிருக்கிறது. எனவே கருவிகள் இல்லை என்ற பிரச்னை இல்லை. 262 வகையான கருவிகள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் பார்ட்—2 ஸ்கீமில் அரசாங்கம் 5 லட்சம் ரூபாய் சாங்க்ஷன் செய்திருக்கிறது. அந்த பல் மருத்துவமனைக்காக கருவிகள் வாங்குவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில 3,04,000 ரூபாய் சேர் மவுன்ட்ர் யூனிட்டுக்கும், பாடி கான்டடுர் சேருக்கும், மற்றும் இதற்காக, லெட்டர் ஆப் இன்டென்ட் ஒப்பன் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

கருவிகள் ஏராளமாக வாங்கிக் கொண்டிருக்கிறோம். செலவு கூட ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்பு செலவழித்த பணத்தை விட 2 மடங்கு அதிகமாக செலவழித்துக் கொண்டிருக்கிறோம்.

Ortho—Clinic functioning in Taluk Head quarters Hospital.

* Q. No. 154—Thiru S. SEMMALAI:

Thiru M. CHINNARAJ: Will the Hon. the Minister for Health be please to State.

(a) the total number of Ortho-Clinics functioning in Taluk Head Quarters Hospital,

(b) is there any proposal to increase the same, and

(c) if so, the details there of.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) எலும்பு முறிவு சிகிச்சை விசேஷப் பிரிவுகள், மூன்று தாலுக்கா தலைமை மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 15 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் மற்றும் ஓர் தாலுக்கா அல்லாத மருத்துவமனையிலும் இப்பிரிவுகள் உள்ளன.

(ஆ) இந்த விசேடப் பிரிவை மேலும் விரிவுபடுத்த செயற்குறிப்பு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை. எனினும் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேலும் 4 இடங்களில் இவ்விசேடப் பிரிவை ஏற்படுத்த அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்படும்.

(இ) இவ்வினா எழ இடமில்லை.



திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகளுக்கு சிகிச்சை அளிக்கும் திட்டத்தின் கீழ் சில சிகிச்சை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட சிகிச்சை நிலையங்கள் இந்த ஆண்டு அரசு ஏதேனும் ஆரம்பிக்க முடிவு எடுத்து உள்ளதா? எந்தெந்த இடங்களில் அவைகளை ஆரம்பிக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவசர சிகிச்சையைப் பொறுத்தவரையில் 3 கட்டங்களாக, 3 ஸ்டேஜாக, நாம் பிரித்து இருக்கிறாம். ஏற்கனவே முதலாவது கட்டத்திலே 7 இடங்களிலும், 2வது கட்டத்திலே 7 இடங்களிலும், நான் இந்த மன்றத்திலே அறிவித்து இருக்கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய நிலையைக் கேள்விக்கு 3வது கட்டத்திலே 4 இடங்களிலே, பார்ட் டூவிலே 82-83ல் நாமக்கல், மேட்டூர் அணை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய இந்த 4 இடங்களில், 3வது கட்டமாக அவசர விபத்து சிகிச்சை துவங்க நாம் இந்த ஆண்டு இதற்கு ஆயத்தமாக இருக்கிறோம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவமனைகளில் அதிக அளவு நோயாளிகள் இருப்பதால், இடநெருக்கடி ஏற்படுகிறது. மேலும் இந்த எலும்பு முறிவு ஏற்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்கு 15 நாள், 20 நாள் என்று தங்கி இருக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இட நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இப்படி நீண்ட நாட்கள் தங்கியிருந்து சிகிச்சைப் பெறவேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அந்த எலும்பு முறிவுப் பிரிவுகளில் அதிகப் படுக்கை வசதி ஏற்படுத்தித் தரவும், எல்லா தாலுக்கா மருத்துவ மனைகளிலும் இந்த எலும்பு முறிவுப் பிரிவை ஏற்படுத்தித் தருவதற்கும் வருகின்ற நிதியாண்டிலேயே நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் படிப்படியாக நாம் இதைச் செய்து வருகிறோம். மிக முக்கியமாக, நெடுஞ்சாலைகளில் இருக்கும் தாலுக்கா மருத்துவமனைகளிலும், நெடுஞ்சாலைகளை ஒட்டிய தாலுக்கா மருத்துவமனைகளிலும்—மெஜஸ்டிக்காக இருக்கக்கூடிய அந்த மருத்துவமனைகளில்—நாம் படிப்படியாக இந்த எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தகவல்களைக் கொடுத்தார்கள். கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள

எலும்பு முறிவுப் பிரிவில் சில எலும்பு முறிவுச் சிகிச்சை செய்தற்கான கருவிகள் போதாது. அண்மையில் ஒரு பாங்க் அதிகாரி எலும்பு முறிவு ஏற்பட்டு அந்த மருத்துவமனைக்குச் சென்ற போது, அங்கே போதுமான கருவிகள் இல்லை என்று சொல்லப்பட்டதால், அவர் தனியார் மருத்துவமனைக்குச் சென்று, சுமார் ரூ. 4000 செலவு செய்து இருக்கிறார். இப்படிப்பட்ட நிலை ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருப்பதைத் தடுக்க அரசு முன்வருமா? நான் குறிப்பிட்ட விஷயத்தையும் பரிசீலித்து இப்படி அந்த அதிகாரியை தனியார் மருத்துவ மனைக்கு அனுப்பிய டாக்டர் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிப்பட்ட ஒரு குறையை இங்கே தெரிவித்தார்கள். அந்த விவரங்களை அவர் கொடுப்பாரானால் நிச்சயமாக நாம் அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவமனைகள், மற்றும் பல மாவட்ட மருத்துவ மனைகளில் மிகச் சிறப்பாக சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. தனியார் மருத்துவ மனைகளில் முயன்று பார்த்து, தம்மால் முடியாது என்று சொன்ன பல கேஸ்கள் கடைசி நேரத்தில் அரசு மருத்துவ மனைகளுக்கு எடுத்து வரப்பெற்று, அங்கே சிறப்பான வகையில் சிகிச்சை தரப்பட்டுள்ளன. இது உங்களுக்கும் தெரியும், இந்த நாட்டிற்கும் தெரியும். ஆனாலும் கூட சில நேரங்களில் நோயாளிகள் விரும்பி தனியார் மருத்துவ மனைக்குச் சென்று விடுகின்றனர். அவர்களை நாம் தடுக்க முடியாது. இன்னொன்றையும் நான் சொல்வேன். நாம் எவ்வளவுதான் வசதி செய்து கொடுத்தாலும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி பிரைவேட் நர்சிங் ஹோமிற்குச் சென்று விடுகின்றனர். எல்லா வகையிலும் சிறப்பாக மருத்துவ வசதி அளிக்கும் வகையில் கருவிகள் ஆங்காங்குள்ள மருத்துவமனைகளில் வாங்கி வைத்து இருக்கிறோம். இன்னும் கருவிகள் வாங்க வேண்டிய நிலையிருந்தாலும், அது நிதிநிலையின் காரணமாக உடனடியாகச் செய்ய முடிவது இல்லை. மாவட்ட மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் ஆகியவற்றில் நல்ல முறையில் சிகிச்சை கொடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறிய குறைபாட்டைக் குறித்து தனியாக எழுதிக் கொடுப்பாரானால், அரசு அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவைத்தம்பி** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலும்பு முறிவு சிகிச்சை அளிப்பதில் சித்த வைத்திய முறை (நாட்டு வைத்திய முறை) புகழ் பெற்று வருவது அமைச்சருக்குத் தெரியுமா? விலையுயர்ந்த கருவிகள் வாங்குவதோடு, இந்த சித்த வைத்திய முறையில் எலும்பு முறிவு வைத்தியர்களுக்கும் உற்சாகம் அளித்து அரசு மருத்துவ மனைகளில் அங்கீகாரம் அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் சொல்லும் அந்தக் கருத்தின் அடிப்படையில் 3 மாதத்திற்கு முன்பாக திருநெல்வேலியில் இருக்கும் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்டுள்ள சித்த வைத்திய மருத்துவமனையில் நல்ல பரம்பரை வைத்தியராக இருக்கும் ஒருவரை பழனியில் இருந்து நாம் அந்த இடத்திற்குச் சென்று வாரம் ஒரு முறை நிச்சயமாக வைத்தியம் செய்ய வேண்டும். அவர் அதிலே வெற்றி கண்டால் நாள் தோறும் அவர் சிகிச்சை செய்ய வாய்ப்பு தரப்படும் என்று 3 மாதத்திற்கு முன்பாக ஒரு ஆணையை நாம் பிறப்பித்து இருக்கிறோம்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் நேரம் அவையின் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சி. பழனி முத்து:** தலைவரவர்களே, வட்ட தலைமை மருத்துவமனைகளில் எலும்பு முறிவு பிரிவை அவசர சிகிச்சையைப் பொறுத்து மூன்றாவது கட்டத்தில் 4 இடங்களில் நியமிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். சேலம் மாவட்டம் ஆத்தூர் தலைமை மருத்துவமனையில் இந்த மூன்றாவது கட்டத்தில் ஒரு அவசர சிகிச்சைப் பிரிவை அவசர முக்கியத்துவத்தை ஒட்டி அமைக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே, மூன்றாவது கட்டத்தில் நாம் இப்போது நாமக்கல், மேட்டூர் அணை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய நான்கு இடங்களை அறிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆத்தூரில் ஒன்று அமைக்கப்படுமா என்று கேட்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தாலும், நெடுஞ்சாலைத் துறையினர் கொடுக்கின்ற புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு, அந்த இடங்களுக்கு முதலிடம் கொடுத்து அங்கே எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவைத் தொடங்குகிறோம். அந்த அடிப்படையிலே ஆத்தூர் வருமானால் அரசு அதை கவனிக்க தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, வட்ட தலைமை மையங்களில் இயங்கி வருகின்ற எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவுகள் பல இடங்களில் சரியாக இயங்கவில்லை. காரணம் அங்கே எக்ஸ்ரே பிரிவு இல்லை. இது இருந்தும் அது இல்லை என்பதால் சரியாக செயல்படவில்லை, அதனால்

எங்கெங்கே எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு இருக்கிறதோ அங்கெல்லாம் எக்ஸ்ரே யூனிட் இருக்கவேண்டும்; தேவையான எக்ஸ்ரே பிலிமும் ஸ்டாக் இருக்க வேண்டும். அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, ஒரு எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவை நாம் ஏற்படுத்த வேண்டுமென்றால் அங்கே எக்ஸ்ரே இருக்க வேண்டும்; எக்ஸ்ரே பிலிம் இருக்க வேண்டும்; ஆர்தோபீடிக் ஸ்பெஷலிஸ்ட் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றாகும்; அதன் இலக்கணம் அது. அந்த அடிப்படையில் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பராமரிப்புத் திறமையைப் பொறுத்திருக்கிறது. அதுவும் முன்பு இருந்ததைவிட இப்போது சீர்பட்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். நாம் பல இடங்களில் உள்ளே சென்று பார்த்திருக்கிறோம். தஞ்சாவூரில் நடைபெற்றது அவர்களுக்கும் தெரியும். அந்த வகையில் மிகத் தீவிரமாக நாம் செயல்பட்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ் நாட்டில் பல்வேறு அரசு போக்குவரத்துக் கழகங்களின் கீழ் இயங்கும் பேருந்துகள்.

*வினா எண். 155 திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இயங்கும் பல்வேறு அரசு போக்குவரத்து கழகங்களின் கீழ் இயங்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவைகளில் சென்ற இரண்டு ஆண்டுகளாக விடப்பட்ட புதிய பேருந்துகள் எத்தனை?

(இ) நகர்புறத்தில் எத்தனை? வெளியூரில் எத்தனை?

(ஈ) கிராமப்புறங்களில் புதிதாக விடப்பட்ட நகர்புற வழித்தடங்கள் பேருந்துகள் எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 31-12-1982 முடிய சுமார் 8, 116 பேருந்துகள் தமிழ்நாட்டில் இயங்கும் பல்வேறு அரசு போக்குவரத்துக் கழகங்களின்கீழ் இயக்கப்படுகின்றன.

(ஆ) இவற்றில் சென்ற இரண்டு ஆண்டுகளாக விடப்பட்ட புதிய பேருந்துகள் சுமார் 2,800 ஆகும்



(இ) நகர்புறத்தில் சுமார் 1745 பேருந்துகளும் வெளியூரில் சுமார் 1,055 பேருந்துகளும் விடப்பட்டன.

(ஈ) 481 பேருந்துகள் கிராமப்புறங்களில் புதிதாக தொடங்கியுள்ள நகர்புற வழித்தடங்களில் இயக்கப்பட்டன

## பழனியிலிருந்து பெங்களூருக்கு பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 156 திரு. என். பழனிவேல் மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பழனியிலிருந்து பெங்களூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துகழகத்தின் பேருந்து விடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) இத்தடம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் அமைந்திருப்பதால் இம்மாநில அரசுகளின் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இத்தடத்தை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, பழநியிலிருந்து பெங்களூருக்கு பேருந்து விட கர்நாடக அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டம் குடியாத்தத்திலிருந்து ஓசூருக்கு ஒரு பேருந்து செல்கிறது. அதை பெங்களூர் வரை நீட்டிக்க அரசு எற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே. அதற்கும் இதைப்போன்று ஒரு ஒப்பந்தம் தேவை. அதற்கு ஒப்பந்ததேதி அறிவிக்கப்படும் போது இதையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜி. மூர்த்தி: தலைவரவர்களே. வேலூரிலிருந்து பெங்களூருக்கு இப்போது புதிதாக இரண்டு, மூன்று பேருந்துகளை அரசு விட்டுக்கொண்டிருக்கிறது. அவை பேரணாம்பட்டு வழியாக பெங்களூருக்குச் சென்றால் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் மிச்சப்படும். அதே நேரத்தில் அதிகமான பயணிகள் பேரணாம்பட்டிலிருந்து பெங்களூருக்கு செல்கிறார்கள். ஆகவே. பயணிகள் வசதியை முன்னிட்டு பேரணாம்பட்டு வழியாக அந்த பேருந்துகளைவிட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த தூரம் இவைகளையெல்லாம் கணக்குப் போட்டுத்தான் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்கிறபடி குறைவான தூரமாக இருந்தால் அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 157,158 மற்றும் 159 ஆகியவை அமைச்சருடையவேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.
வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினை

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தமிழகத்தில் ஆர். எஸ். எஸ். பயிற்சி நடத்தக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கிறதே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பயிற்சிகளைப் பற்றியெல்லாம் முறைப்படி அவையில் கொண்டு வர வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டரில் அதுபற்றியெல்லாம் கேட்கக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : சபாநாயகருடைய கவனத்தை நேரிடையாக ஈர்க்கும் பொருட்டுத்தான், நான் அதை இங்கு எழுப்பினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்னைகளுக்கு எப்படி சபாநாயகருடைய கவனத்தைக் கவர்வது என்பதற்கு விதிகள் உள்ளன, புத்தகத்தை படியுங்கள். அதைப் படித்த பின்னர் கவரலாம் திடீர் திடீர் என்று கவரக் கூடாது.

### (ஆ) வினாக்களுக்கான விடைகள்

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களால் கேட்கப்பட்டவினாக்கள் எல்லாம், கேட்கப்பட்ட 49 நாட்களுக்குள் லிஸ்டிலே வரவேண்டும் என்கிற விதி இருக்கிறதே. ஆனால் நான் கேட்டு 42 மாதங்கள் ஆகி விட்டது. இதுவரையில் பதில் இல்லை. ஆகவே அந்த பதில்களை வாங்கிக் கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்விகள் என்ன என்று குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள், நான் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி பதிலைப் பெற்றுத் தருகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: கேள்வி எண்கள் 1,023, 1,024 சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டது போல் நான் அதை எழுதி அனுப்புகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அமைச்சர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வினாக்களை ஒத்தி வைக்கிறீர்கள். அப்படி ஒத்தி வைக்கப்பெறுகிறபோது மறுநாளே வரவேண்டும். ஆனால் என்னுடைய கேள்வி ஒத்தி வைக்கப்பட்டு 2,3 நாட்கள் ஆகின்றன. ஆனால் இன்னமும் அவைகள் அவையில் எடுக்கப் பெறவில்லை? அவைகள் எப்போது வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் அடுத்த தினம் இந்த அவைக்கு வரும்போது வரும்.

## 3. ஒத்தி வைப்புத் தீர்மானம்

### அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, கே. எம். தங்கமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்ட அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளாகி அதனால் 6 பேர் மரணமடைந்ததாலும், பலர் படுகாயமடைந்திருப்பதாலும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைகுறித்து விவாதிக்கப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது பஸ் விபத்து சம்பந்தமான பேருந்துமீதின் லாரி மோதியிருப்பதாகத்தான் நாங்கள் பேப்பரிலே பார்த்தோம். அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்தின் எதிரிலே வந்த லாரி அதன் மீது மோதியதின் விளைவாகத்தான் இந்த விபத்து நடந்து அங்கேயே 4 பேர்கள் மரணம் அடைந்தார்கள். 2 பேர் மருத்துவமனையிலே மரணம் அடைந்திருக்கிறார்கள் இப்படி விபத்துகள் அதிகரித்து வரும் இந்த நேரத்திலே இரவு நேரங்களிலே பேருந்துகளில் பயணம் செய்வதே பயங்கரமானதாக இருக்கிறது.

இதற்கு முக்கியமான காரணம் என்ன என்று பார்த்தால், எதிரிலே வரும் லாரிகளிலே இருக்கும் லைட்டுகள் மிக பிரைட்டாக அதிக லைட் வெளிச்சமாக இருப்பதே என்று சொல்கிறார்கள். தோழர் எம். கல்யாணசுந்தரனார் எம். பி. அவர்கள் சென்ற காரிலே ஏற்பட்ட விபத்துக்கும், இப்படி எதிரே ஓட்டி வந்த லாரியினுடைய லைட் வெளிச்சம் மிக அதிகமாக இருந்ததின் விளைவாகத்தான் காரை கட்டுப்படுத்த முடியாமல் போய் மோதியிருக்கிறார்கள் என்பதை நாங்கள் அந்த இடத்திலே சென்று பார்த்த பிறகு உணர்ந்தோம்.

எனவே இதுபோன்ற லாரிகளுடைய விளக்குகளின் வெளிச்சத்தை மற்றவர்களை பாதிக்காத அளவுக்கு, எதிரே வருபவர்களின் கண்கள் கூசாத அளவுக்கு மாற்றி அமைக்கும் படியாக வழிமுறைகளை பார்க்க வேண்டும். தவிர இரவுப் பேருந்துகள் செல்லும் பாதைகளில் லாரிகள் இரவு நேரங் களில் வரக்கூடாது என்று தனியாக ஒரு உத்தரவிட வேண்டும். ஏனெனில் இதுபோன்ற இடங்களில் சென்னையில் பல விபத்துகள் நடந்திருக்கின்றன. இன்று இந்த விபத்தின் விளைவாக 4 பேர்கள் அந்த இடத்திலேயே மரணம் அடைந்திருக்கிறார்கள், 2 பேர்கள் மருத்துவமனையிலே இறந் திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு 25,000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்கக்கூடிய ஒரு முறையை பரிசீலிக்க வேண்டும். மேலும் இந்த லாரிகளிலே இருக்கக்கூடிய பிரேக்குகள் ஹைட்ராலிக் பிரேக்காக இருந்தாலும் சரி, ஏர் பிரேக்காக இருந்தாலும் சரி, முறையாக ஒழுங்காக அவைகள் செயல்படும் வகையில் திருத்தியமைக்கப்பெற வேண்டும். மேலும் இது போன்ற விபத்துக்கள் வருங்காலங் களிலாவது தடுக்கப்பெற என்னென்ன முறைகள் கையாள வேண்டும் என்பது குறித்தும், நான் மேற்சொன்ன பிரச்னைகள் குறித்தும், இன்னும் பல கருத்துக்களையும் இது குறித்து விளக்கமாக விவாதிக்க வேண்டியிருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதனை விவாதிக்க எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

திரு. பி. ஈஸ்வ·மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விபத்துக்களில் பெரும்பகுதி லாரிகள் பஸ்ஸோடு மோதுவதால் தான் ஏற்படுகின் றது. அண்மையிலே கூட நமது சட்டமன்ற உறுப்பினர் திரு கேசவ ஆதித்தன் அவர்களின் காரில் மோதியது இதே மாதிரி ஒரு லாரி தான்.



திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் விபத்தில் காயமுற்றதும் லாரி மோதித்தான், இப்படி தொடர்ந்து லாரிகள் மோதுவதன் காரணத்தால்தான் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே இவற்றைப்பற்றியெல்லாம் அரசாங்கம் நேரடியாக கவனம் செலுத்தி கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து விரிவான முறையிலே விவாதிக்க வேண்டி இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிப்பதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கோயம்புத்தூர் வழித்தடத்தில் செல்லும் அண்ணா போக்குவரத்துக் கழக டி. எம். எல். 6524, கோயம்புத்தூரிலிருந்து 28-1-1983 அன்று காலை 8.30 க்கு புறப்பட்டு, சேலம் சென்று கொண்டிருந்தது. அப் பேருந்தில் மொத்தம் 60 பயணிகள் இருந்தனர் பேருந்து பெருமாநல்லூர் செங்கபள்ளி சாலையை நெருங்கிக் கொண் டிருந்தபோது யு. ஆர். டி. 65( என்ற பதிவெண்ணுள்ள சரக்குந்து எதிரில் வந்து கொண்டிருந்தது. சாலையின் இடது பக்கம் சீரான ஓட்டத்தில் கவனமாக ஓட்டப்பட்டுக் கொண் டிருந்த அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்தின் வலது பக்கத்தில் சரக்கு பேருந்து பலமாக மோதியதால், பேருந்தின் முன் பக்கத்தில் உள்ள பாதுகாப்புப் பகுதி முழுதும் நசுங்கி விட்டது. விபத்து நடந்த இடத்தின் இடதுபுறம் ஆழமான குழிகள் இருந்ததினால் பேருந்தின் ஓட்டுநர் மேலும் இடதுபுறமாக வண்டியை செலுத்த முடியவில்லை. விபத்து ஏற்பட்ட வேகத்தில் மேற்படி பள்ளமான பகுதியில் பேருந்து கீழே விழுந்து விட்டது. சரக்குந்து பேருந்தில் மோதிய வேகத்தில் இடது பக்கம் திரும்பி, விபத்து நடந்த இடத்திலிருந்து சுமார் 200 அடி ஓடி பள்ளத்தில் இறங்கி நின்று விட்டது. இவ்விபத்தில் சரக்குந்தின் முக்கிய அச்சு தனியாக கழன்று விட்டது. இவ் விபத்து ஏற்பட்ட பகுதி ஊத்துக்குளி காவல்துறை சரகத்தில் உள்ளது. விபத்துநடந்த சரக்குந்தில், ஓட்டுநர், துப்புரவாளர் மற்றும் இயந்திர வேலை பார்ப்பவர் ஆகிய மூவர் பயணம் செய்தனர் என்றும், சரக்குந்தினை சுமார் 18 வயதுடைய துப்புரவாளர் ஓட்டி வந்தார் என்றும் காவல் நிலைய தகவ·ன்படி தெரியவந்துள்ளது.

சரக்குந்து ஓட்டுநரான திரு. பாபுசிங், துப்புரவாளர் மற்றும் இயந்திர வேலை பார்ப்போர் ஆகிய மூவரும் ஊத்துக்குளி காவல் நிலையத்தில் காவலில் இருக்கிறார்கள். காவல் துறையினர் மேற்படி சரக்குந்தின் ஓட்டுநர் மீது இ. பி. கோ. 337, 338 மற்றும் 304 ஏ பிரிவுகளில் வழக்கு ஒன்று பதிவு செய்துள்ளனர்.

இரு ஆண்கள், இரு பெண்கள், பெண் குழந்தை ஒன்றும் மற்றும் ஓர் ஆண் குழந்தை ஆக மொத்தம் ஆறு பேர் விபத்தில் இறந்து விட்டனர். நால்வர் விபத்து நடந்த இடத்திலும் மற்றும் இருவர் அருகிலுள்ள திருப்பூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும்போதும் இறந்தனர்.

இறந்தவர்களில் ஒருவர் (ஆண் வயது 45) யார் என அடையாளம் தெரியவில்லை. இவரது சடலத்தினை மேற்கொண்டு பராமரிக்க முடியாத நிலையில் அரசு மருத்துவமனை டி. எம். ஓ அவர்களின் உத்தரவின்படி திருப்பூர் நகராட்சியே சடலத்தினை எரித்து விடுவதற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டு 3-2-83 அன்று அதற்கான ஏற்பாடுகளை செய்து விட்டது. மற்ற ஐவரது சடலங்களும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

மேலும் நடத்துநர் உட்பட 27 பேர் காயமுற்றனர். அவர்களில், ஈரோடு அரசு மருத்துவ மனையில் இருக்கும் திரு. கோவிந்தராஜன் என்பவர் நீங்கலாக மற்ற அனைவரும் தகுந்த சிகிச்சைக்கு பிறகு குணம் அடைந்து விட்டதால் வீட்டிற்கு அனுப்பப்பட்டு விட்டனர்.

விபத்து நடந்த செய்தி அறிந்ததும் ஜீவா போக்குவரத்துக் கழக ஈரோடு கிளை மேலாளரும், சேரன் போக்குவரத்துக் கழக திருப்பூர் கிளை மேலாளரும் தேவையான பணியாளர்களுடன் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, தேவையான உதவியினை செய்ததுடன் விபத்தில் சிக்கியவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல உதவினர். போக்குவரத்துக்கழக அதிகாரிகளும் பணியாளர்களும் அன்னார் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று விபத்து விபத்துக்குள்ளான நபர்களுக்குத் தக்க உதவியினைச் செய்தனர்.

ஊத்துக்குளி காவல் நிலைய அதிகாரிகள் இறந்தவர்களின் வாரிசுதாரர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு 1000 ரூபாய் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இந்தக் காரணங்களினால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



## 4. அறிக்கை அளித்தல்

### விதி 107 (1)ன்கீழ் திருத்த அறிக்கை

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20-3-82 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை வினா (புதிய எண். 582, பழைய எண். 10076) விற்குப் பதிலளிக்கையில் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் எழுப்பியதுணை வினாவிற்கு கீழ்கண்டவாறு பதிலளித்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் 25, 86, 200 ரூபாய்க்கு இப்போதுள்ள மதிப்பீட்டில் அழகுபடுத்துவதாக இருக்கிறது. அதில் ஒப்பன் ஏர் தியேட்டர் திறந்த வெளி திரை அரங்கத்திற்கு 3, 15, 000 ரூபாய் மதிப்பீட்டிலே செலவிடுவதாக இருக்கிறது.

மேற் கூறியவற்றிற்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு எனது பதிலை திருத்திக்கொள்ள விழைகிறேன்.

சீரணி அரங்கத்திலிருந்து வெளியே செல்ல மணலின் நிறத்தோடு பொருந்தும் நிறத்தில் சிமின்ட் கான்கிரிட் சாலை அமைப்பதற்கு ரூபாய் 1,10,000 க்கும், கடற்கரை மணற் பரப்பில் அழகிய வடிவமைப்புடன் கூடிய குப்பைத் தொட்டிகளை வைக்க ரூபாய் 8,500 க்கும் மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றத் திட்டங்களுக்குத் தேவையான மதிப்பீடுகள் இன்னும் கட்டிடத் தலைமை பொறியாளரிடமிருந்து வரவில்லை. திறந்தவெளி கலையரங்கம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. அதற்குப் பதிலாக சீரணி அரங்கத்திலேயே கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் கார்டூன் படக்காட்சிகளும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

## கவன ஈர்ப்புகள்

### (அ) சோத்துக்கண்ணிக்கு தனி பாடசாலை

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு கலசபாக்கம் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம் சோத்துக்கண்ணி கிராம மக்கள் தனியாக பாடசாலை கோரி, படிக்கும் பிள்ளைகளை நிறுத்தி விட்டதால், 6 மாத காலமாக, 100க்கு மேற்பட்ட குழந்தைகளின் கல்வியும் மதிய உணவும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

ஸ்ரீ இராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட், திருப்பூர்.

சுமார் 1,059 தொழிலாளர்கள் பணிபுரிந்த இந்த நூற்பாலை பொருளாதார நெருக்கடி காரணங்களை முன்னிட்டு இயங்காமல் உள்ளது. 25-7-1982 முதல் தொழிலாளர்கள் லே ஆப் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இப்பிரச்சனை பற்றி தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு நடந்த பேச்சுவார்த்தைகளில் நிர்வாகம் கலந்து கொள்ளவில்லை. நிறுவனத்தை மாற்றம் செய்யப்போவதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்கீழ் இந்த ஆலை நிர்வாகத்தை மேற்கொள்ள மைய அரசைக் கேட்டுக் கொள்ளலாமா என்பதை இந்த அரசு பரிசீலித்து வருகிறது.

ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர்.

சுமார் 707 தொழிலாளர்கள் பணிபுரிந்த இந்நிறுவனம் இராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரியல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், கோயம்புத்தூர் என்னும் கூட்டு நிறுவனத்தின் அலகாகும். தொழிலாளர்கள் 8-12-1981 முதல் லே-ஆப் செய்யப்பட்டுள்ளனர். இந்நிறுவனத்தை நிர்வகிக்க சென்னை உயர்நீதி மன்ற உத்தரவின்படி அபிஷியல் லிக்விடேடர் நியமிக்கப்பட்டுள்ளார். மாநிலஅரசு இந்நிறுவனத்திற்கு ரூ. 50 இலட்சத்திற்கு மேற்படாயல் உத்திரவாதம் அளித்துள்ளது. 4-9-1982 அன்று முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஆலையிலுள்ள 707 தொழிலாளர்களுக்கு தலா ரூ 200 வழங்க உத்திரவு இடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தை திறந்து மீண்டும் இயக்க அபிஷியல் லிக்விடேட்டர் முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், ஆணைப்புதூர்.

சுமார் 120 தொழிலாளர்களைக் கொண்ட இந்த ஆலையை போதுமான மின்சக்தி கிடைக்காததினால் முழுமையாக இயக்க முடியவில்லை என்று நிர்வாகம் கூறுகிறது. நிறுவனத்திற்கு உயர்மின்அழுத்த சக்தியை தமிழ்நாடு மின்வாரியம் கொடுப்பதற்கு சுமார் ரூ. 1,20,000 ஆகுமென்றும், ஏற்கனவே மின்வாரியத்திற்கு ரூ. 83,544 நிலுவையிலுள்ளதகவும்,



நிறுவனத்தில் நிதி நெருக்கடி காரணமாக இச்செலவை ஏற்க முடியவில்லை என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மேலும். மேற்கூறிய தொகையை மின்வாரியத்திற்கு 3 வருடங்களில் மாதத் தவணைகளாக செலுத்தவும் உயர்மின் சக்தி அழுத்தம் நிறுவனத்திற்கு கொடுக்கவும் நிர்வாகம் மின்வாரியத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. மேற்கொண்டு நிலைமை கண்காணிக்கப்படுகிறது.

பத்மா மில்ஸ், காளப்பட்டி.

150 தொழிலாளர்களைக் கொண்ட இந்த ஆலை இயங்காதது குறித்து எழுப்பப்பட்ட தொழிற் தகராறில் அரசு தனது 4-9-1981 நாளைய 1938 என்னுள்ள ஆணையில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்காதது பற்றிய பிரச்சனையை சென்னை, தொழில் நீதிமன்றத் தீர்ப்பிற்கு அனுப்பியது. சென்னை தொழில் நீதி மன்றம் தனது 3-5-1982 நாளைய தீர்ப்பில் தொழிலாளர்களுக்கு 25-2-1982 முதல் வேலையளிக்காத நிர்வாகத்தின் செயல் சட்டவிரோதமானதென்றும், தொழிலாளர்கள் 25-2-1981-லிருந்து ஆலையில் கதவடைப்பு நீக்கும் நாள் வரைக்கும் முழு ஊதியமும், 16-12-1980 முதல் 1½ மாதத்திற்கு நிலுவைச் சம்பளமும் பெற அருகதை உண்டு என்று உத்திரவு இட்டுள்ளது. இத்தீர்ப்பிற்கு பிறகும் நிர்வாகம் ஆலையைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்று தொழிற் சங்கங்கள் கொடுத்துள்ள புகார்கள் மீது கோவை தொழிலாளர்துறை துணை ஆணையர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை.

சுமார் 2000 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலையில் 1981-82 ஆண்டு போனஸ் பிரச்சனை மீது தொழிலாளர்கள் 14-11-1982 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். நிர்வாகம் 21-11-1982 முதல் நிறுவனத்தை கதவடைப்பு செய்துள்ளது. இப்பிரச்சனையில் தொழிலாளர் துறை ஆணையர் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோர் முன்பு பலமுறை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது. இதற்கிடையில் நிர்வாகம் தலைமை அலுவலகம் மற்றும் கொடைக்கானல், ஊட்டியிலுள்ள கிளை அலுவலகங்களில் முறையே 4-12-1982 மற்றும் 4-1-83 முதல் கதவடைப்பை நீக்கியுள்ளது. பிரச்சனையில் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற உள்ளது.

பிரிமியர் மில்ஸ் லிமிடெட், பூலாங்கிணர்.

இங்குள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 1,360 இந்நிறுவனத்திலுள்ள தொழிலாளர்கள் பதிலி மற்றும் அப்ரன்டீஸ் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுப்பது பற்றிய பிரச்சனை மீது 4-10-1982 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இப்பிரச்சனையில் தொழிலாளர் துறை தனித்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலசபாக்கம் தொகுதி, சேதுப்பட்டு ஒன்றியம் சோத்துக்கண்ணி கிராமத்தில் தனியாக பாடசாலை துவங்குவது குறித்து கருத்துருக்களோ பிள்ளைகளை 1 மாத காலமாக நிறுத்தி இருப்பது குறித்த தகவல்களோ இதுவரை கல்வித் துறையினரால் பெறப்படவில்லை. மேற்கண்ட கிராமத்தில் ஆரம்பப்பள்ளி துவங்குவதற்கான கோரிக்கை 1982-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஊர் பொதுமக்களால் அனுப்பப்பட்டுள்ளது. கோரிக்கை மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு உடனடியாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பள்ளி துவங்குவதற்கான கருத்துக்கள் பெறப்பட்டவுடன் சோத்துக்கண்ணி கிராமத்தில் புதிய ஆரம்பப்பள்ளி துவங்குவது குறித்து உடனடியாக பரிசீலனை செய்து ஆணை வழங்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த சோத்துக்கண்ணி கிராமம், நெடுவிளாபாக்கம் என்ற கிராமத்தில் தனியாருடைய மேனேஜ்மெண்டு பள்ளிகள் இருந்து வந்தன. அந்த பள்ளிகளை நானே முன்நின்று அந்த மேனேஜ்மெண்டார் கட்டிடம் கட்டித்தரமுடியாத அபாய சூழ்நிலை இருந்தன. அதனால் அரசுக்கு அந்த பள்ளியை எழுதி கொடுத்து விட்டார்கள். பிறகு 2 கிராமத்திற்கும் தனித்தனியாக பள்ளிகள் வேண்டும் என்று சொல்லிஇதைசோத்துக்கண்ணி கிராமத்தில் 100பிள்ளைகளை நிறுத்தி விட்டார்கள். நான் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் இதுபற்றி சொல்லியிருக்கிறேன். முதன்மை கல்வி அலுவலர், வட ஆற்காடு மாவட்டத்திற்கும் இந்த கோரிக்கை கொடுக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மாவட்ட கல்வி அதிகாரி அவர்களிடத்திலும் இந்த கோரிக்கை கொடுக்கப்பட்டது. இந்த பள்ளி இறுதி ஆண்டு வரையில் தனியாக வேண்டுமானால் இங்கே 2 வகுப்புகள், அங்கே 2 வகுப்புகள் வைக்கலாம் என்ற ஆலோசனையை கொடுத்தேன். ஆனால் கல்வி இலாகா எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு இந்த 2, 3 மாத காலத்திற்கு தனியாக இங்கே 2 வகுப்புகள் அங்கே 2 வகுப்புகள் வைத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு அடுத்த கல்வி துவக்க ஆண்டில் தனியாக பள்ளி ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். ஆகவே அதைப் பற்றி விசாரித்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நான் கூறிக்கொள்கிறேன்.



திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கல்வி இலாகா இந்த விவரம் சரியில்லை என்ற தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மாவட்ட கல்வி அதிகாரி, முதன்மை கல்வி அதிகாரி, இவர்களுக்கு எல்லாம் இந்த தகவல் தெரியுமே. இப்படிப்பட்ட தவறான தகவல் கொடுத்து இருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத்தரப்பட்ட தகவல் தவறானதாக இருக்குமானால் தரப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்றால் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் பேசுவது என்பது சரியான முறை ஆகாது. ஆகவே அங்கேயிருக்கின்ற மக்களிடம் கடிதம் போட்டு அதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் பேசுவது அல்லது கலெக்டர் இடத்திலே பெட்டிஷன் கொடுப்பது இவை எல்லாம் முறை அல்ல.

(ஆ) கோவை மாவட்டத்தில் ஆலைகள் மூடல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். மணிமாறன், எம். ஆறுமுகம், என். வி. பங்காருவேல், ஏ. டி. குலசேகர், அ. ரகுமான்கான், மா. சின்னராசு, கோவைத் தம்பி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் எஸ் ஆர். சி. மில், ஜோதி மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், காளப்பட்டி பத்மா மில், சிறுமுகை விஸ்கோ மற்றும் பிரிமியர் மில்ஸ் ஆகிய தொழிற்சாலைகள் பல மாதங்களாக மூடிக் கிடப்பதால், தொழிலாளர்கள் படும் இன்னல் குறித்த "அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆண்டுகளில் தவணையாக செலுத்துவதற்கு தமிழக அரசு அனுமதித்தால் இந்த ஆலையை நடத்துவதற்கு நிர்வாகம் தயாராக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே இந்த நிலையில் மின்சார பாக்கியை தவணை முறையில் செலுத்து வதற்கு தமிழக அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகம் ஒரு பெர்மனென்ட், பெரனியல் டிபால்ட்டர். ஏற்கனவே ஒரு லட்சத்து இருபது ஆயிரம் செலுத்த வேண்டும். மறுபடியும் வாரியத்திற்கு நிலுவை ரூ. 23,544 வைத்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் இவைகளை கணக்கில் எடுத்து தான் மின்சார வாரியம் ஒரு முடிவு எடுக்க வேண்டும். இவர்கள் கொடுக்காமலே இருந்து கொண்டு தவணை முறையைத் தாருங்கள் என்று கேட்டால், மின்சார வாரியம் ஒரு முடிவு எடுத்து, சரி, சரி நீங்கள் சொல்வது தான் சரி; அப்படியே கொடுக்கிறோம் என்று சொல்ல முடியாது. எனவே அவர்கள் கொடுக்க வேண்டிய வகையில் தந்திரமாக அந்த முறையில் கையாள வேண்டும். மின்சார வாரியத்தில் இருப்பவர்கள் திறமைசாலிகள் என்பதை நான் அறிவேன். நிலைமை சுமுகமாக முடியும் என்று நம்புகிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோவை மில்கள் சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசிய இரண்டு உறுப்பினர்களும் தெளிவாக கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். தமிழக அரசு பல்வேறு சட்டங்களை அவசரமாக கொண்டு வருகிற அதே நேரத்தில் இந்த மில்களை எடுப்பதற்கு உடனடியாக சட்டத்திலே என்ன வழிவகை இருக்கிறது என்று ஆராயுமா? கடந்த ஏழு ஆண்டு காலமாக அவர்கள் தொடர்ந்து வேலையில்லாமல், சம்பளம் இல்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதால் பொது நிதியிலிருந்தாவது, அல்லது முதலமைச்சர் அவர்களின் நிதியிலிருந்தாவது குறைந்தபட்சம் மாதந்தோறும் 200 ரூபாய் அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதாமாதம் ரூ. 200 என்று கொடுத்துக் கொண்டிருந்தால் முதலமைச்சர் நிதி என்ற ஒன்றே இல்லாமல் போய்விடும். எப்பொழுதாவது, one time payment ஆக ரூ. 200 கொடுப்பதுண்டு. அது பரிசிலனை செய்யக்கூடிய ஒன்றாகும். தவிரவும் முதலாளிகள் சண்டை போட்டுக்கொண்டு ஒழுங்காக நடத்தாமல் விட்டு விடுகிறார்கள் எனவே, அந்த மாதிரி நிலைமையில், அரசு கொஞ்சம் நிதானமாகத்தான் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. நிதானமாகப் பரிசீலனை செய்து காரியங்களைச் செய்யும்.



உடனடியாக, தேசியமயமாக்குவது என்றால், அதையும் பார்த்துச் செய்யவேண்டும். அதற்குள் கடன்கள் இருக்கின்றன. கடன்களை யார் ஏற்றுக்கொள்வது என்பதும் மிகவும் சிக்கலான பிரச்சனை. இருந்தாலும், தொழிலாளர்கள் படுகின்ற அவதியைப் பார்த்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நிரந்தரமாகக் கொடுக்க வேண்டுமென்று கோரவில்லை. ஆலையைத் திறந்து வேலை கொடுக்கிற வரையில் மட்டும் அந்த நிதியிலிருந்து கொடுக்குமா அரசு என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைகளை எல்லாம் ஆழமாகப் பரிசீலனை செய்யலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே பல ஆலைகள் மூடப்பட்டு, பல தொழிலாளர்கள் வேலை இழந்து இருக்கிறார்கள். சில இடங்களிலே சமரச பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அறிக்கையிலே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டதை நான் திரும்பவும் வலியுறுத்த விரும்புகிறேன். அமைச்சரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்பு கிறேன், இந்தத் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ்ஸாக இருந்தாலும், அதைப் போலவே, மற்றுமுள்ள பல்வேறு தொழிற்சாலைகளாக இருந்தாலும், அங்கேயிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, அந்தப் பிரச்னை செட்டில் ஆகிற வரையிலும், சம்பளமோ, மற்ற வருவாயோ, இல்லாமல் வறுமையிலே அவதிப்படுகிற நிலைமை இருக்கிற காரணத்தாலே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பலருக்குக் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். கோவையிலே யுள்ள ஜோதி மில்ஸ், தொழிலாளர்களுக்கு ரூ. 200 கொடுக் கிறோம் என்று சொல்கிறார்கள். அதைப் போலவே, தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ்ஸில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கும் கொடுக்கக்கூடாதா? அவர்களுக்குப் பொருந்துவது, இவர்களுக்குப் பொருந்தாதா? அவர்களுக்குப் நிதிநிலை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். கேட்டால் வேண்டியவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதற்காக, நமக்கு வைக்கிறோம், ஹெலிகாப்டர் வாங்குகிறோம். ரூ. 200 வீட்டு வாடகையை, ரூ. 200 ஆக உயர்த்திக் கொடுக்கிறோம். ஆகையினாலே, இவர்களுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி செய்வார்களா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

துணை ஆணையர் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டதில் உடன்பாடு ஏற்படாததினால் தனது சமரச முறிவு அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார். மேற்கொண்டு இப்பிரச்சனையில் தொழிலாளர் ஆணையர் இணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று அதைத் தொடர்ந்து தொழிலாளர் துணை இணை ஆணையர் 1-2-1983-ல் இருதரப்பினருக்கும் ஒரு அறிவுரை வழங்கியுள்ளார். இதன்படி தொழிலாளர்கள் 4-2-1983 முதல் வேலை நிறுத்தத்தை கைவிட்டு வேலைக்கு திரும்ப உள்ளார்கள்.

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, கடந்த 7 மாத காலமாக திருப்பூர் நகரத்தில் இருக்கும் எஸ். ஆர். சி. மில் மூடப்பட்டுக் கிடப்பதற்குண்டான காரண காரிய விளக்கங்கள் எல்லாம் இங்கே அறிக்கையாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிர்வாக நிலையில் இருக்கக் கூடியவர்கள் பலமுறைகள் டி.சி.எல். பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் வரவில்லை, ஏ.சி.எல். பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் வரவில்லை; அதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற உயர்திரு ஜெ.கே.கே. அங்கப்பச் செட்டியார் அவர்களை அழைத்தும் வராமல் போய் விட்டார். அவர் மட்டுமல்ல. அவருடைய பிரதிநிதியாக யாருமே கலந்து கொள்ளவில்லை. அதற்குப் பிறகு தொழிலாளர் நல இணை ஆணையர் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்று அழைத்தும்கூட அவர்கள் வரவில்லை. 1,100 தொழிலாளர்கள் கடந்த 7 மாத காலமாக பட்டினி கிடந்து காண்கிறார்கள் என்பதும் அவர்களுடைய குடும்பங்கள் வறுமைத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் குறித்து அரசு கவலைப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். அதைத்தான் இங்கே அறிக்கையாகத் தந்திருக்கிறார்கள். டி.சி.எல். பேச்சு வார்த்தையும், ஏ.சி.எல். பேச்சுவார்த்தையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் பேச்சுவார்த்தையிலும் — அழைப்புகளை ஏற்றுக் கொள்ளாத நிலையில் — கலந்து கொள்ளாத நிர்வாகத்தினர் மீது தகுந்த நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருவதோடு பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த மில்களை அரசே எடுத்துக் கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் சொன்னது முழுக்க முழுக்க உண்மை. எனவே அரசு அதைப் பற்றி — மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒரு பட்டிஷன், விண்ணப்பம் கொடுத்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் — எனவே அதைப்பற்றி அரசு ஆழமாகப் பரிசீலனை செய்து ஐ.டி.ஆர். I-D.R. ஆக்டைக்கூட இன்வோக் பண்ணலாமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. ஆர். மணிமாறன் : இடைக்காலமாக அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற முறையிலே முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு நிவாரண நிதி அளிக்க அரசு முன்வருமா ? அதைத் துரிதமாக செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி விண்ணப்பம் வந்தால் அதுவும் பரிதாபத்தோடு பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இருக்கிற எஸ்.ஆர்.சி. மில்ஸ், ஜோதி மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், காளப்பட்டி பத்மா மில், சிறுமுகை விஸ்கோஸ் மற்றும் பிரிமியர் மில்ஸ் ஆகிய மில்கள் கடந்த பல மாதங்களாக மூடப்பட்டு இருக்கிற சூழ்நிலையில், அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற விவரங்களில் ஜோதி மில்ஸ் 707 தொழிலாளர்கள், எஸ்.ஆர்.சி. மில் 1059 தொழிலாளர்கள் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் 130 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்.ஆர்.சி. மில் நிர்வாகத்தை தமிழக அரசு மேற்கொள்ள மைய அரசை கேட்டுக் கொள்ளலாமா என்பதை இந்த அரசு பரிசீலித்து வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஜோதி மில்ஸ் 707 தொழிலாளர்கள் 8-12-1981 முதல் லே-ஆப் செய்யப்பட்டு பட்டினி கிடந்து வருகிற இந்த நேரத்தில் அந்த நிறுவனத்தை நிர்வகிக்க அபிஷியல் லிக்விடேட்டர் நியமிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் பட்டினியால் வாடும் தொழிலாளர்களை காப்பாற்ற தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், ஜோதி மில்ஸ் ஆகியவற்றை தமிழ் நாடு அரசே எடுத்து நடத்தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஆர். ஆக்டை இன்வோக் பண்ணுவதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை. எனவே அதைத் தான் சொன்னேன். ஜோதி மில்லை பொறுத்தவரையில் அபிஷியல் லிக்விடேட்டர் போடப்பட்டிருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். அந்த 700 தொழிலாளர்களுக்கு 200 ரூபாய் வழங்க உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்லை பொறுத்தவரையில் அது என்னுடைய தொகுதியை சார்ந்தது. அங்கே மின்சார கட்டணம் மூன்று ஆண்டுகளில் தவணையாக செலுத்துவதற்கு அனுமதி வேண்டுமென்று நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மின்சார பாக்கியை மூன்று

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களும் பாட்டாவை உயர்த்திக் கொண்டதைச் சொல்ல மறந்துவிட்டார் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான். எந்த விஷயத்தில் எந்தப் பிரச்னையைப் பேசுவது என்பதெல்லாம் உங்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த அரசைப் பொறுத்தவரையில், each issue is considered on its merits. ஒவ்வொரு விஷயத்தையும் ஆழமாகக் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்வோம். அதிலே, பிரிமியர் மில்ஸ் பிரச்னை செட்டில் ஆகியிருக்கிறது. விஸ்கோஸ் செட்டில் ஆகக் கூடிய நிலையிலே தானே பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸைப் பற்றித்தான் சொன்னேன், ரூ. 1,20,000 அவர்களுக்கு உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை, ரூ. 23,000 தந்தாக வேண்டும் லிக்விடேட்டர் போட்டிருக்கிறோம், வேறு ஒரு மில்லுக்கு. அவர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். வழக்குமன்றத்திற்குப் போய் விடுகிறார்கள். அவைகளையெல்லாம் பார்த்து எது நல்லதோ, எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : மன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நடைமுறையில் உள்ள நிலைமைகளைச் சொல்கிறார்கள். நான் அதைப் பற்றி சொல்லவில்லை. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட மில்லிலே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள் அதேபோல், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் தொழிலாளர்களுக்கும் கொடுக்கக் கூடாதா? பிரச்னைகள் முடிகிற வரையிலும் என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொன்னேன். ஒரு மில்லைப் பற்றி வரும்போது, அதை உடனேயே திறக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறதா? அதிக நாட்கள் ஆகுமா? மூடி எத்தனை மாதம் ஆயிற்று? இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, அதற்குமேல் நிவாரண நிதியிலிருந்து தருகிறோம். பி.அன்ட்.சி. மில்லிலிருந்து ஒரு விண்ணப்பம் வந்தது. வந்த உடனே, ரூ. 26 இலட்சம் அள்ளிக் கொடுத்தோம். உங்களுக்குத் தெரியும், முதல்வராக இருப்பவர், வாரி, வாரி வழங்கிக் கொடுத்த வள்ளல் என்று. எனவே, பெட்டிஷன் வந்தவுடனே, வாரி வாரி வழங்குவது அல்ல. அதை ஸ்க்ரூட்டினைஸ் செய்து, பார்த்து, வாரி வழங்குவது என்பது இந்த அரசினுடைய கொள்கை. அது தொடர்ந்து நடைபெறும்.



திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியநாய்க்கன் பாளையம் ஜோதி மில்லைப் பொறுத்தவரையிலும், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள பிரச்னையாக இல்லை. முதலாளிகள் இரண்டு பிரிவினராக ஆகி, அவர்களுக்குள், கம்பெனி சட்டத்தில் இருக்கிற பங்குத் தகராறு காரணமாக, கடந்த ஓராண்டுக்கு மேலாக அந்த ஆலை மூடப்பட்டிருக்கிறது. இப்பொழுதிருக்கின்ற நிலைமையில், நேற்று முன் தினம் உயர்நீதிமன்றம் லிக்குடேட்டர் போட்டு, அந்த விண்ணப்பத்தின்பேரில் அரசாங்கத்தின் கியாரண்டியோடு அரசின் சார்பில் இரண்டு இயக்குநர்களோடு இந்த நிர்வாகத்தை நடத்தலாம் என்று உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, அந்த உத்தரவை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு உடனடியாக மேலும் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை பெற வழியில்லாமல் லிக்குடேட்டருக்கு உதவிபுரியும் வகையில் இரண்டு இயக்குநர்களை நியமித்து இந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்றமுறை நான் கோவைக்குச் சென்றிருந்தபொழுது நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் வழக்கு மன்றத்திற்குப் போவதை நிறுத்தி வைத்துவிட்டு மில்லை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தாருங்கள் என்று சொன்னேன். நேற்று முன்தினம் தீர்ப்பு வந்திருப்பதாகச் சொன்னார்கள். மில்லை நடத்துவதற்கு அஃபிஷியல் லிக்குடேட்டர் தன்னால் முடிந்த எல்லா முயற்சிகளையும் எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற நல்ல நிலையில் இலாபகரமாக ஓடிக்கொண்டிருக்கின்ற நூற்பாலைகள் அல்லது வேறு இன்டஸ்ட்ரிகள் கம்பெனிச் சட்ட ஷரத்துக்களைப் பயன்படுத்தி நிர்வாகத்திலே பங்கு கொண்டு இருக்கின்ற இயக்குநர் அதை நிறுத்திவிடலாம், அல்லது கலைத்து விடலாம் என்ற வகையில் அந்தக் கம்பெனி சட்ட ஷரத்துக்கள் சாதகமாக இருக்கின்றன. அந்த நிலைமை நீடிக்காத வகையில், அண்மையில் சுப்ரீம்கோர்ட் தொழிலாளர்கள் கம்பெனிச் சட்டத்திலே வரவில்லை என்றாலும், வழக்கிலே அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள், அவர்களையும் கட்சி சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு ப்ரொகிரசிவ் ஜட்ஜ்மெண்டைக் கொடுத்திருக்கிறது. ஆகவே அதே வகையில் கம்பெனிச் சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் தொழிற்சாலைகளை மூடிவிடாமல் இருப்பதற்கு அல்லது கம்பெனிச் சட்டத்தைப் பயன்படுத்தி அந்த ஆலைகளை அல்லது இன்டஸ்ட்ரிகளைக் கலைக்கும் முயற்சியைத் தடுக்கும் வகையில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசுக்கு நமது அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட திட்டங்களைத் திருத்துவதற்கு இங்கே ஒரு குழு மாநில அரசால் அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே திறமை மிக்க நண்பர் திரு. உமாநாத் போன்றவர்களெல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குழு இதைப்பற்றிப் பரிசீலனை செய்து பரிந்துரையை வழங்குமென்று நான் கருதுகிறேன். அப்படி அவர்கள் செய்யவில்லை என்றால் இந்த அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கெமிகல் பேக்டரிக்குச் சமமான ஒரு புகழ் மிக்க ரயான் பேக்டரி கோவை மாவட்டத்தில் பல மாதங்களாக மூடப்பட்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அந்த பேக்டரியை வடநாட்டு முதலாளி ஒருவர் வாங்கிய காரணத்தால் நடந்து முடிந்த ஆண்டைவிட இந்த ஆண்டு சுமார் 85 இலட்சம் ரூபாய் அதிகமாக இலாபம் பெற்றும் கூட, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய நியாயமான போனஸை வழங்காதது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இதனால் 30,000 தொழிலாளர்கள் — இதில் நேரடியாக 3,000 தொழிலாளர்கள் மற்றும் இந்தத் தொழிலை நம்பியிருக்கின்ற 27,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இவ்வளவு நடந்தும்கூட, பலமுறை தமிழக அரசு அழைத்துப் பேசியும் இன்னமும் வட இந்தியாவைச் சேர்ந்தவரை கொண்டு இயங்கும் அந்த நிர்வாகம் அரசுக்கோ, தொழிலாளர் களுக்கோ ஒத்துவராமல் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தத் தொழிலாளர்கள் மீது இரக்கம் கொண்டு, அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கான வழிவகைகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி கன்சிலியேஷன் ஆபீசர் எல்லாம் பேசிவிட்டார்கள். கோயம்புத்தூரில் உள்ள டி.சி.எல். லும் பேசினார். நானும் கோயம்புத்தூருக்குச் சென்ற நேரத்தில் அழைத்துப் பேசினேன். சென்னைக்கும் அழைத்துப் பேசினேன். அங்கே போனஸ்தான் தகராறு. போனஸ் கொடுக்க வேண்டுமென்று வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். விஸ்கோஸ் பற்றித்தான் உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். கன்சிலியேஷன் என்பது ஒரு தந்திரத்தைக் கையாண்டு எப்படி ஒப்பந்தத்தைக் கொண்டு வருவது என்பது ஒரு தனிக்கலை. இதையெல்லாம் பயன்படுத்திவிட்டு இரு சாராரும் ஒத்துக் கொள்ளும் வகையில் இந்த அரசு ஆலோசனை சொல்லியிருக்கிறது. 12 சங்கங்கள் இருக்கின்றன, அந்த 12 சங்கங் களையும் சேர்ந்தவர்கள் உட்கார்ந்து, அரசு சொன்ன ஆலோசனையை மனத்தில் வைத்து பரிசிலனை செய்து போனஸ்



பிரச்னைக்கு தீர்வு கண்டு தொழிற்சாலையை விரைவில் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய முன் வருவார்கள் என்று கருதுகிறேன். அரசு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் பேசியதை நீக்கும்படியாக உத்தரவிடுகிறேன். பிரச்சினைக் குள்ளே போகாமல் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கோவைத்தம்பி: துணைத் தலைவர் அவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் இப்படி எல்லாம் பேசக்கூடாது. இப்போது பேசியதையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன். உறுப்பினர்கள் கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.

திரு. கோவைத்தம்பி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில முதலாளிகள் குடும்பச் சண்டையின் காரணத்தினால் கோவை மாவட்டத்தில் பல்வேறு தொழிற்சாலைகளிலுள்ள பல்வேறு தொழிலாளர்கள் தொல்லைகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்களா? வட இந்தியாவில் இருந்து பெருமுதலாளிகள் தென்னாட்டில், தமிழ்நாட்டில் தொழிற்கூடங்களை விலைபேசி அதைப் பெற்று நிர்வாகம் நடத்துவதால் தொழிலாளர்கள் தொல்லைக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்த இரண்டு காரணங்களாலே ஜோதி மில்ஸ், விஸ்கோஸ் மில் தொழிற்சாலைகளில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். விஸ்கோசைப் பொறுத்தவரையில், It is a simple bonus issue. போனசுக்காகத்தான் போராட்டம். ஜோதி மில்லைப் பொருத்தவரை, It is an internal family feud. அது

** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

உண்மைதான். விஸ்கோஸ் போனஸ் பிரச்சினைக்கு எப்படி யாவது தீர்வுகாண வேண்டும் என்று நானே இரண்டு முறை பேசியிருக்கிறேன். அதிலே நல்ல சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு தொழிலாளர்கள் எல்லோரும் வேலைக்குத் திரும்ப வேண்டு மென்று எல்லோரும் விரும்புவோமாக.

## (6) அரசினர் சட்ட முன்வடிவு.

பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் இந்த மசோதா அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன். காரணம் இந்த மசோதா ஏற்கனவே இந்த மன்றத்தில் வந்து பச்சையப்பனுடைய அறநிலையத்தைப் பாதுகாப்பதற்கு என்று, இருந்த டிரஸ்ட்போர்டு கலைக்கப்பட்டு, அந்தச் சொத்துக்களை எல்லாம், மற்ற நிர்வாகத்தையும் பாதுகாக்கிறோம என்று சொல்லி, அதற்காக அரசாங்கமே மேற்கொண்டு ஒரு குழுவை போட்டது. அப்போதும் நாங்கள் எதிர்த்தோம். அப்போது நம்முடைய மந்திரி அவர்கள் சொன்னார்கள். பச்சையப்பன் கட்டிவைத்த நிறுவனம் பாழாகப் போய்விடும் போல் இருக்கிறது ஆகவே அரசாங்க அதிகாரிகள் போட்டு அதைக் கட்டிக் காத்து விடுகிறேன். அதற்கு 2 வருடம் போதும், மேற்கொண்டு போகாது, நிச்சயமாகச் சொல்கிறேன் என்று அப்போது சொன்னார். இப்போது என்ன சொல்லுகிறீர்கள். வழக்கமாக என்ன செய்வீர்களோ அதே மாதிரி, மேலும் ஓராண்டு நீட்டிப்பு என்று சொல்லுகிறீர்கள்.

இப்போது என்ன நிலைமை என்று கேட்டால் இந்தப் பொறுக்குக் குழுவிற்கு போட்டிருக்கிறார்கள் பாருங்கள், அவர்கள் செய்த தப்பைக் கண்டுபிடிப்பதற்கு இதற்கு ஒரு பொறுக்குக் குழுவைப் போட்டு அதற்கு ஒரு 5 ஆண்டு காலம் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிற நிலை இருக்கிறது. என்ன சீர்திருத்தி இருக்கிறீர்கள் ஒரே ஒரு சீர்திருத்தம் செய்திருக்கிறீர்கள். கம்பீரமாக பூந்தமல்லி நெடுஞ்சாலையிலே இருந்த அந்தக் கல்லூரியின் கேட்டை அடைத்து, அதாவது பெரியகேட்டை மூடி, சின்னகேட்டைப் போட்டு, ஜெயில் கேட்டு மாதிரி வைத்திருக்கிறீர்கள். மகத்தான சாதனை.





இந்தக் குழு இன்னொன்றையும் செய்திருக்கிறார்கள், என்ன அது? இந்த இரண்டு வருடம் யார் யார் அந்தக் குழுவிலே இருந்தார்களோ அதிலே இரண்டு பேர்கள் வேண்டாதவர்களைத் தூக்கி எறிந்துவிட்டு, வேண்டியவர்கள் 2 பேர்களைப் போட்டு விட்டார்கள். அந்தக் குழு செய்த மகத்தானத் திருப்பணி குழு உறுப்பினர் போய் புதிய உறுப்பினர்கள் வந்ததுதான். முதுகு வலிபோய் திருகு வலி வந்த கதையைப் போலத்தான் இருக்கிறதே தவிர, நிர்வாகத்தை சீர்திருத்துகிற, புனிதப் படுத்துகிற, செப்பனிடுகிற பணியாக இல்லை.... (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தக் கல்லூரிகள் ஒழுங்காக நடந்து கொண்டிருக்கின்றன. எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியாக அமைந்து இருக்கிற காரணத்தால் நல்ல முறையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்புக் குழுவினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது அந்தப் பொறுப்புக் குழு போட்டதால் ஏதோ தவறு நடைபெற்றிருக்குமோ என்ற அடிப்படையில் பிரச்சினையைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதுவும் நடைபெறவில்லை. நல்ல முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதற்காக அச்சப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (இ) திருச்செந்தூர் இடைத்தேர்தல் தேதி மாற்றம்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய தமிழ்நாட்டில் நடைபெற இருக்கின்ற திருச்செந்தூர் இடைத்தேர்தல் ஏற்கனவே இந்த மாதம் 27 ஆம் தேதி தேர்தல் என்று அறிவித்து இருந்தது. ஆனால் இன்றைக்கு காலையிலே பத்திரிகையிலே எல்லாம் மார்ச் 1 ஆம் தேதி என்று வந்திருக்கிறது. அது குறித்து சர்க்காருக்கு அதிகார பூர்வமான அறிவிப்பு தேர்தல் கமிஷனிடமிருந்து வந்திருக்கிறதா என்பதை நம்முடைய அவை முன்னவர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். ஏன் என்றால், இப்போது தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்று சொல்லி, அங்கே திருவிழா என்று சொல்லி, உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை. கோபாலசாமி அவர்கள் தேர்தல் கமிஷனுக்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு இன்றைக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. 3 நாளைக்கு முன்னாலே, தேர்தலை இன்னும் கொஞ்ச நாள் தள்ளி வைக்க வேண்டுமென்று அங்கேயிருக்கிற ஒரு நண்பர் எழுதியிருக்கிறார். காரணம் ஏற்கனவே முன்பெல்லாம் எலக்ட்ரிசிடியே 4 மணி நேரம்தான் இருக்கும். இப்போது 20 மணி நேரம் கரன்ட் வருகிறது. அதனாலே கிடைக்கிற இந்த சௌகரியம் தேர்தல் முடிந்துவிட்டால் இல்லாமல் போய்விடுமே, ஆகையினாலே தேர்தலை ஒத்திவைத்தால் நாங்கள் கரண்ட் கட் இல்லாமல் இருப்போமே என்று அந்த நண்பர் எழுதி இருக்கிறார்கள். ஆகவே அப்படி ஏதாவது சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா, அதைப்பற்றி அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்பதை நம்முடைய முன்னவர் அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்பதே, இங்கே அவையிலே நடைபெறுகின்ற சட்ட விதிகளில் ஒழுங்கீனமோ, அல்லது குறைபாடோ ஏற்பட்டால் அதை சுட்டிக்காட்டுவதற்குத்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எழுப்பி இருப்பதற்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆனால் வேறு ஏதேனும் முறையிலே அந்த விளக்கத்தை பெறுவதற்கு கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனாலும் பிரச்னையைக் கொண்டு வந்துவிட்டதன் காரணமாக, மாண்புமிகு தலைவர் அவர்களும் அதற்கு இடம் கொடுத்து விட்டதன் காரணமாக, இனிமேல் இதை முன் உதாரணமாகக் கொண்டு இப்படிப்பட்ட வினாக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பாமல் இருந்தால் நல்லது. ஆகவே, இந்த திருச்செந்தூர் தேர்தல் இந்த மாதம் 27 ஆம் தேதி வைத்துக்கொள்ளலாம் என்று தேர்தல் கமிஷன் ஒரு அறிவிப்பு கொடுத்தது. அதை



மாநில அரசும் ஏற்றுக்கொண்டது. இங்கே அதற்குப் பிறகு, 27 ஆம் தேதி திருவிழா நடைபெறுகிறது என்று ஒரு குறிப்பு தரப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் என்னிடத்திலே தெரிவித்தார்கள். அதற்குப்பிறகு நாங்கள் விசாரித்த பிறகு 27 ஆம் தேதி இரவு தெப்ப உற்சவம் நடைபெறுகிறது என்றும், பகலிலே ஒன்றும் இல்லை என்றும் ஒரு குறிப்பு மட்டும் வந்தது. அதற்குப் பிறகு அங்கே இருக்கிற அரசியல் கட்சி உறுப்பினர்களும் மற்றவர்களும் 21 ஆம் தேதியிலே இருந்து தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறுவதன் காரணமாகவும், மக்கள் பல்வேறு பகுதியிலே இருந்து 23, 24 ஆம் தேதிகளில் ஏராளமாக வருவதன் காரணமாககூட்டங்கள் கூடும் என்றும், தேர்தலிலே ஈடுபடுகின்ற கட்சிக்காரர்கள் எல்லாம் இறுதிக் கட்டத் தேர்தலிலே ஈடுபடுகின்றது அந்த 23, 24 ஆம் தேதிதான் என்றும் 25 ஆம் தேதி 5 மணியோடு தேர்தல் முடிந்துவிடுகிறது, 26 ஆம் தேதி ஓய்வு விடப்படுகிறது. ஆகவே இதைத் தள்ளி வைக்கப்படுவது நல்லது என்ற கருத்தை அரசியல் கட்சித் தலைவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் தெரிவித்ததற்கு இணங்க தேர்தல் கமிஷனுக்கு இந்த கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆகவே, தேர்தல் கமிஷனுக்கு நாம் தெரிவித்தபோதும், கொஞ்சம் அவகாசம் கொடுத்து, மார்ச் 3 ஆம் தேதி வைத்துக் கொள்ளலாம் என்றுதான் நாம் குறிப்பிட்டு இருந்தோம். ஆனால் தேர்தல் கமிஷன் கேரளாவிலே 1 ஆம தேதி அன்று என்று மாற்றி வைப்பதன் காரணமாக, தமிழகத்திலேயும் 1 ஆம் தேதி மாற்றி வைப்பது நல்லது என்ற குறிப்பு அரசுக்கு தெரிவித்ததன் காரணமாக மார்ச் 1 ஆம் தேதி மாற்றி வைத்திருக்கிறோம். அது எல்லோருக்கும் சௌகரியமா இருக்கும் என்ற அடிப்படையில்தான் வைக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்அறிவிப்புகள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரிமைப் பிரச்னை சம்பந்தமாக ஒரு நோட்டிஸ் கொடுத்து இருந்தேன் 3 ஆம் தேதி மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே சொன்ன சில பேச்சுவள் பேக்டஸ் சம்பந்தமாக சில விஷயங்களை சொன்னது தவறு என்ற வகையிலே சொல்லக்கூடாது என்ற வகையிலே வழக்கறிஞர்கள் சிலர் அறிக்கை விட்டிருக்கிறார்கள், அது சட்டசபையினுடைய உரிமையை மீறியது. சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யக்கூடிய கடமையிலிருந்து அது தடுக்கிறது என்று வகையிலே நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த உரிமைப் பிரச்னை என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு, உரிமைப் பிரச்சனையை எதற்காக கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்த காரணத்தால் நான் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சனை பற்றியும் (குறுக்கீடு)....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ஆரம்பித்து திருச்செந்தூர் தேர்தல் பற்றி துரைமுருகன் கேட்டார். அதைப்போன்று அவர்கள் விவரங்களைச் சொல்லி விட்டார்கள். நீங்கள் வேண்டுமானால் சொல்லுங்கள்.

(முற்பகல் 10.50)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, போலீஸ் உயர் அதிகாரி மோகன்தாஸ் அவர்கள் அதிகார துஷ்பிரயோகம் செய்து உறுப்பினர்களின் உரிமையை பாதிக்கும் வகையில் பேச்சை டேப் செய்தார் என்று ஒரு உரிமைப் பிரச்னை நான் கொடுத்து இருக்கிறேன். நாளைக்கு அதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'நாளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று கட்டளையிடுகின்ற வகையில் கூறக்கூடாது. உங்கள் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு நான் வரவில்லை.

திரு. ரா. உமாநாத் : எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தான் கேட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழுக்கு நீங்கள் விளக்கம் சொல்லி நான் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற அவசியம் இல்லை. நான் நிரம்பத் தமிழ் படித்து இருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஒரு திருத்தம்—அதை ஒரு 'ரிக்வெஸ்ட்டாகத்தான்' கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப நன்றி.

(குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்)

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் கூட ஒரு உரிமைப்பிரச்சனை கொடுத்து இருக்கிறேன். வறட்சி பற்றிய அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது சம்பந்தமாக ஆளுநர் உரையில் தவறான தகவல் இந்த அரசு தந்து இருக்கிறது என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சனை கொடுத்து இருக்கிறேன். அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

(கூச்சல், குழப்பம், குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரப்பெற்றுள்ள உரிமைப் பிரச்னைகள் என்னுடைய ஆய்வில் உள்ளன. என்னுடைய ஆய்வு முடிந்தபின் அது குறித்துத் தீர்மானிக்கப்படும்.



திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கான அடிப்படை நோக்கம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு உங்களிடமிருந்து விளக்கம் தெரிந்து கொண்டு நான் சபையை நடத்த வேண்டிய நிலையில் இல்லை. ஆகவே, இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக் கப்படவில்லை என்று திருப்பி அனுப்புகின்ற நேரத்தில், எந்தக் காரணத்தினால் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று எழுத்து மூலமாக அனுப்புவது வழக்கம். ஆனால் எந்தவிதமான காரணமும் சொல்லாமல், பேரவைத் தலைவர் அனுமதி மறுத் துள்ளார் என்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது சரிதானா என்பதைத்தான் அவர் அறியவிரும்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறைக்கு வந்தால், இதைப் பற்றி விளக்கமாகப் பேசலாம்.

திரு. கே. குப்புசாமி : தலைவர் அவர்களே, பிப்ரவரித் திங்கள் 2-ம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த சில கருத்துக்கள் மீது அதை மறுத்து 4-ஆம் நாள் சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள சில வழக்குறைஞர்கள் முதலமைச்சரின் பேச்சின்மீது தவறான ஒரு எண்ணத்தைத் தருகின்ற வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக் கிறார்கள். (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து நீங்கள் அளித் துள்ள உரிமைப் பிரச்னை குறித்துத்தானே சொல்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிபதிக்கு போலீஸ் பாதுகாப்பு நாங்கள் தான் கொடுத்து இருக்கிறோம் என்று நீதிபதிகளை மிரட்டுகின்ற வகையில் பேசி யிருக்கிறார். அவர் எப்படிப் பேசலாம். நாங்கள் அதற்கு பதில் சொல்லவேண்டாமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே போலீஸ் பாதுகாப்பு நீதிபதிகளுக்குத் தரப்படுகிறது என்று தான் பேசியிருக்கிறாரே தவிர 'இன்டைரக்ட்டாக' அவர்களை மிரட்டு கின்ற வகையிலோ, கொடுக்கக்கூடாது என்றோ முதலமைச்சர் அவர்கள் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தகைய பிரச்னைகள் குறித்து மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் வருகின்றபோது உறுப்பினர்கள் பேசினால், முதலமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெறமுடியும்.

(2) அவையிலுள்ள சரவிளக்குகள் எரியாமை.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகின்ற இந்த நேரத்திலேயே இந்த மன்றத்தில் முறைகேடு நடந்துகொண்டிருக்கிறது. அதுவும் உங்கள் கண் முன்னாலேயே அது நடக்கிறது. அதாவது, இந்த அவையிலுள்ள சர விளக்குகள் பல எரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை; உட்காருங்கள். இந்த மன்றத்தில் எரிகிற விளக்குகள் சாதாரண கண் பார்வை உள்ளவர்களுக்கு போதும். (சிரிப்பு).

7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை விவாதம் (தொடர்ச்சி).

திரு. மா. சின்னராசு: தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களினால் அளிக்கப்பட்டிருக்கிற மின்துறை நிதிநிலை அறிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் இங்கு மட்டுமல்லாமல் எங்கும் இந்த மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. தேவையான மின்சாரத்தை நம்மால் உற்பத்திச் செய்து கொடுக்க முடியவில்லை என்று உணர்ந்திருக்கிற நாம் அதற்கான காரணங் களை அறிகின்ற நேரத்தில் இப்போது இருக்கிற உற்பத்தியை வைத்துக் கொண்டு நமது அரசு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பிரச்சனையை தீர்க்கின்ற வகையில் நல்ல முறையில் நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நம்மால் மறுக்க முடியாது.

புனல் ஆதாரங்களிலிருந்து உற்பத்தியாகிற 50 சதவீதம் மின்சார உற்பத்தி குறைந்துவிட்ட பின்னால் மீதி இருக்கிற 50 சதவீதம் மின்சாரத்தை அனல் மின் நிலையங்களிலிருந்து தான் பெறவேண்டியிருக்கிறது. இந்த 50 சதவீத மின் உற்பத்தியை வைத்துக்கொண்டு அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வது என்பது எவ்வளவு தூரம் முடியும் என்பதை நாம் அனைவரும் உணருகிறோம். அந்த நிலையில் கூட இந்த மின்சாரத் துறையை நிர்வகித்துவருகின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மக்களுக்கு சவாலாக வந்திருக்கிற பிரச்னையை சமாளித்து வந்திருப்பதை நாம் பாராட்ட வேண்டும்.



இன்றைக்கு மத்திய அரசு 'உற்பத்தி ஆண்டு' என்று இந்த ஆண்டை அறிவித்திருக்கிறது. அறிவித்து, உற்பத்தியைப் பெருக்கி, நாட்டிலே பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்துவதை ஒரு பெரும் திட்டமாக வைத்திருக்கிறது. ஆக, உற்பத்தி என்றால் உணவு உற்பத்தி மட்டுமல்ல; தொழில் உற்பத்தியையும், அனைத்துப் பொருட்கள் உற்பத்தியையும் பெருக்க வேண்டு மென்பதை நாம் கருத்திற்கொண்டு, நமது திட்டத்தைச் செயல் படுத்த வேண்டுமென்பது மத்திய அரசின் கொள்கை. அதே கொள்கைதான் 20 அம்சத் திட்டத்தை நமக்கு வலியுறுத்தி, அவற்றை எல்லா மாநில அரசுகளும் நிறைவேற்றி வருகின்றனவா என்பதைக்கூட கண்காணித்து வருவதாக இங்கே பல உறுப்பி னர்கள், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆக, உற்பத்திக்கு நீர் ஆதாரம் வேண்டும். அதுமட்டுமல்லாமல் பல்வேறு உற்பத்திக் காரியங்களுக்கு மின்சாரம் வேண்டும். அந்த நிலை இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கிறதா என்றால் இல்லை. எனவே, மத்திய அரசு அவர்களுடைய கொள்கையை செயல்படுத்துகின்ற முறையிலே திட்டங்களைத் தீட்டியதாகத் தெரியவில்லை.

இன்றைக்கு புனல் மின்சாரத்தை உற்பத்திச் செய்ய அனைத்து நீர் ஆதாரங்களையும் பயன்படுத்திவிட்டது. இனி மேல் தமிழ்நாடு அனல் மின்சார உற்பத்தியைத்தான் நம்பி யிருக்க வேண்டியிருக்கிறது. அதுதான் நமக்கு ஓரே வழி என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்கு நாம் போடுகின்ற பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை.

அதேநேரத்தில் வடமாநிலங்களில் பல திட்டங்களை, பெரிய திட்டங்களை, ராட்சசத் திட்டங்களை ஏற்படுத்தி மின்சார உற்பத்திக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக் கிறது மத்திய அரசு. ஆனால் அனல் மின்சாரத்தைப் பெறு வதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற நிலையில் இருக்கிற தமிழகத்திற்கு உதவ மத்திய அரசு மறுக்கிறது. இங்கும் அதைப் போன்ற பெரிய திட்டங்களை நிறைவேற்றும் எண்ணம் மத்திய அரசுக்கு வரவேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

அந்த வகையில் மின்சாரத்தை மிக அதிக அளவில் பயன் படுத்தும் ஒரு மாவட்டம் நம்முடைய தமிழ்நாட்டில் கோவை மாவட்டம்தான். அந்த மாவட்டத்திற்கு தேவையான அளவுக்கு மின்சாரத்தை பெறமுடியாத இந்த நிலையில் அங்கே உடனடி யாக அனல் மின் நிலையங்களை நீண்ட கால திட்டமாக அல்ல, உடனடியாக—ஏற்படுத்த மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அனல் மின்சாரத்தை உற்பத்திச் செய்ய அதிக அளவில் செலவாவதற்கு முக்கியமான ஒரு காரணம் வட மாநிலங்களிலிருந்து நிலக்கரி கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதற்கு பல வழிகளில் செலவு அதிகமாகிறது. குறிப்பாக நிலக்கரியைக் கொண்டுவர போக்குவரத்துச் செலவு அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக மின்சார உற்பத்திச் செலவு கூடுதலாகிறது. இதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம்.

இந்த நேரத்தில் செலவைக் குறைக்கின்ற வகையில் என்னுடைய ஆலோசனையாக ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வெகுதூரத்தில் இருந்து நிலக்கரியைக் கொண்டு வந்து மின்சாரத்தை உற்பத்திச் செய்வதைவிட நிலக்கரி எங்கே கிடைக்கிறதோ அந்த மாநிலத்திலேயே அனல் மின் நிலையங்களை அமைத்து, அங்கிருந்து கம்பிகள் மூலம் மின்சாரத்தைக் கொண்டுவந்தால் சுலபமாக இருக்கும், செலவும் குறையும். நீண்டகாலமாக இந்த போக்குவரத்தில் ஏற்படுகிற செலவில், இரண்டு ஆண்டுகளுக்கு ஏற்படும் செலவுதான் இந்த கம்பிகள் மூலம் மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கு செலவு ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

(முற்பகல் 11.00)

ஆகவே, தேசியத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிற, நம்நாட்டு ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருக்கிற, நாம், தேசியத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு சிங்கரேனியிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ இருக்கிற அந்த நிலக்கரி உற்பத்தியாகிற இடத்தில் மின் நிலையத்தை அமைத்து அங்கேயிருந்து தமிழகத்திற்கு என்று மின்சாரத்தை தருவிப்பதற்கான முயற்சியை கூட மேற்கொள்வது நம்முடைய தேசியத்திற்கு தடையாக இருந்துவிட முடியாது.

ஆகவே, அந்த வகையில் நெய்வேலியில் இருக்கிற 3வது உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி ஆகிற அந்த மின்சாரத்தை 500 மெகாவாட்டை ஆந்திரத்திற்கு அதுவும் மத்திய அரசாங்கமே அந்த மின் நிலையத்திற்கான கம்பிகளையெல்லாம் அமைத்து, டிரான்ஸ்பார்மர்களை இணைத்துக், கொண்டு போக வேண்டும் என்ற திட்டம் இடப்படுகிறபோது, அதே முறையில் இங்கே உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கு கொடுத்து விட்டு, தேவையில்லாமல் இங்கேயிருந்து எடுத்துச் செல்கிற செலவைக்கூட குறைக்கலாம். அந்த வகையில் மத்திய அரசாங்கத்தின் அணுகுமுறை உற்பத்தியை மையமாகக் கொண்டு நாட்டினுடைய வளர்ச்சியை மையமாகக் கொண்டு—தமிழகத்தில் தான் தொழில் முனைவர்கள் அதிகம், தொழில் செய்ய முன் வருபவர்கள், எந்த ஒரு சவாலையும் ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் ஆலைகளை அமைத்துக் கொண்டு வருகிறார்கள்.



ஆகவே, அவர்களுடைய முயற்சியை குறைக்காமல், முயற்சிகளை மேற்கொள்வதே தவறு என்று கொள்ளாமல்—எங்கு முயற்சிகள் மேற்கொண்டாலும், அங்கே மின் உற்பத்திக்கான முயற்சிகளை மேற்கொண்டு, அவர்கள் தொழில் செய்யும் இடங்களிலேயே மின்சாரத்தையும் மற்ற சாதனங்களையும் வழங்குவதற்கு மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்வதுதான் நாடு அளவில் அக்கறை கொண்டவர்கள் பாராட்டுவதற்குரிய ஒரு திட்டமாக ஏற்றுக் கொள்வார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுறுத்த விரும்புகிறேன்.

அதேபோலத்தான் நீர்மின் விசைத் திட்டங்கள். இதில் இன்னும் இரண்டு பெரிய திட்டங்கள் தமிழகத்தில் செயல் படுத்தப்படாமல் பல காலம் பேசப்பட்ட திட்டங்கள் நிறை வேற்றப்படாமல் இருக்கின்றன. அதிலே பாண்டியாறு-பொன்னம்புழா நீர்மின்திட்டம் என்பது ஒன்று. அடுத்து ஒகேனக்கல் திட்டம். பாண்டியாறு - பொன்னம்புழா நீர்மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது ஒரு கால கட்டத்தில் துவக்கப்பட்டு, அதிலே என்ஜினியரிங் டிவிசன் போன்ற அமைப்புகள் கூட அமைக்கப்பட்டு, வேலைகள் துவங்கப்பட்டது என்று அங்கே ஒரு நிலைமை ஏற்பட்டது.

ஆனால் அந்த நீரை பயன்படுத்துகிற முறையில் அதற்கு பின்னால் அந்த பாண்டியாறு-பொன்னம்புழா நீரை பாசனத்திற்கு பயன்படுத்துகிற முறையில், தமிழக அரசும், தமிழக மக்களும் எடுத்துச் சொன்ன அந்த எதிர்ப்புகளின் காரணமாக, நீர்மின் திட்டமும் கைவிடப்பட்டு விட்டது. நீர்ப்பாசனத் திட்டமும் கைவிடப்பட்டு விட்டது. இது மக்களுக்கு ஒரு மிகப் பெரிய இழப்பாகும். குந்தா நீர் மின் திட்டத்தில் கிடைக்கக் கூடிய அந்த மின் உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதி அளவுக்கு கிடைக்கக்கூடிய அந்த பாண்டியாறு-பொன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றாமல் உள்ளது துரதிருஷ்டமே. அதை நிறைவேற்று வதற்கு நாம் மத்திய அரசாங்கத்தின் உதவிகளைத்தான் நிறைய அளவுக்கு எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

ஆகவே, பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்த நீர்மின் திட்டத்திற்கான ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்வதோடு, அந்த நீரை பாசனத்திற்குப் பயன் படுத்தவும் அனுமதி பெற்றால், கோவை மாவட்டத்தின் வறட்சியைப் போக்குவதற்கும், வேளாண்மைத் தொழிலிலும் நன்கு வளர்ச்சி அடைவதற்கு ஒரு நல்வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அதிலே குறைந்த அளவு நீரை பாசனத்திற்கு என்று எடுத்துக் கொண்டாலும்கூட, இந்த மின் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளுக்கு மத்திய அரசாங்கம் நமக்கு உதவவேண்டும்.

மற்ற இரண்டு மாநிலங்களிலும் ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் தற்போது காங்கிரஸ் அரசாங்கம் இல்லை என்றாலும் கூட, கேரளத்தில் காங்கிரஸ் அரசாங்கம் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் நிச்சயமாக இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்க உதவவேண்டும். பாண்டியாறு பொன்னம்புழா நீர் மின் உற்பத்தி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நமக்கு மத்திய அரசு உதவும் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல ஒகேனக்கல் நீர்மின் திட்டம். இந்த ஒகேனக்கல் திட்டம் கடந்த ஆண்டுகளில் அங்கே அரசியல் மாறுபாடுகளுக்கு ஏற்ப, ஆட்சியில் அரசியல் கட்சிகள் மாறுகிற நேரத்தில், அல்லது அந்தத் தலைவர்கள் மாறுகிற நேரத்தில் எல்லாம் ஒரு மாற்றத்தைப் பெற்று வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகவே அந்த நிலையில் இல்லாமல், அரசியல் கட்சிகள் அந்தந்த காலங்களில் எப்படி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும் கூட, நமது நாடு ஒன்று என்ற எண்ணம் உடையவர்கள், இந்த அரசியல் நிலைமைகளுக்கு அப்பாற்பட்டு, இதுபோன்ற பொருளாதார திட்டங்களுக்கு, ஜீவாதாரமான அடிப்படை திட்டங்களுக்கு குறுக்கே நிற்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட ஒரு குறுக்கீடு குறித்து, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சில தினங்களுக்கு முன்னால் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, அந்த பாரசரியங்களுக்கு அப்பாற்பட்டு நின்று, இந்த நாட்டினுடைய தேவையை பூர்த்தி செய்கிற திட்டம் என்ற வகையில், இந்த ஒகேனக்கல் திட்டத்தை நமக்கு குறைவற நிறைவேற்றுவதற்கான உதவிகளை மத்திய அரசாங்கம் தான் செய்து தர வேண்டும்.

ஆகவே, இந்தப் பொறுப்புகள் மத்திய அரசில் இருப்பதால், மத்திய அரசால் மிகப் பெரிய அளவில் செய்யக்கூடிய திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மாநிலங்களுக்கிடையே ஏற்படுத்துகின்ற கடமையையும் பெற்றிருக்கின்ற காரணத்தால் இந்த நேரத்தில் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாட்டின் ஒற்றுமையையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு இந்தத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு துணை புரியவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று இன்று மற்ற திட்டங்களை நிறைவேற்றுகின்ற மின்சார நிர்வாகம் அதாவது மின்சார இலாக்கா நல்ல திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. மற்ற மாநிலங்களில், சர்ப்ளஸ்—ஆக அதாவது உபரியாக மின்சாரத்தை வைத்துக்கொண்டிருக்கின்ற மாநிலங்கள் விவசாயத்திற்கு விதிக்கிற மின் கட்டணத்தை விட தமிழ்நாட்டிலே குறைவாக இருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே, விவசாயிகளுக்கென்று பல நேரங்களில் பேசுபவர்கள், விவசாயிகளுக்காக இந்த அரசு எந்த உதவியும் செய்யவில்லை, விவசாயிகளின் பிரச்சினை பற்றிக் கருத்தில் கொள்ளவில்லை என்ற குற்றம் சாட்டுபவர்கள்கூட



விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற மின்கட்டணம் இங்கே குறைவாக இருக்கின்றது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நமக்கிருக்கின்ற ஆதாரத்தை வைத்துக்கொண்டு நமக்கு எவ்வளவு தூரம் நட்டம் ஏற்பட்டாலும் விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்திற்கான கட்டணத்தைக் குறைத்து வைத்திருக்கிறோம் என்பதும் தொடர்ந்து அதே நிலையில் அவர்களுக்குக் கொடுத்து வருகிறோம் என்பதும் பாராட்டத் தக்கது. இது போற்றத்தக்கதொரு நல்ல முயற்சி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது எவ்வளவு தட்டுப்பாடு ஏற்பட்டாலும் மின்சாரத்தைப் பெறுவதிலே இடர்பாடுகள் இருந்தாலும் 6 மணி நேரமாவது மின்சாரம் கிடைக்கின்றதே என்ற வகையிலே ஒரு திருப்தி விவசாயிகளிடத்தில இருக்கின்றது. இருந்து வருகின்ற பிரச்சினைகளை அவர்கள் புரிந்துகொண்டு இந்த அளவுக்காவது மின்சாரம் கிடைக்கின்றதே என்ற நல்லெண்ணத்தினை பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, இன்று உற்பத்தியினைப் பெருக்கி வருகின்ற நேரத்திலே மின்சார வாரியத்தினைப் பொறுத்தவரையில் அதனுடைய நிர்வாகம்கூட ஓரளவுக்கு பெரும் செலவினை ஏற்படுத்துவதாக அதாவது அதனுடைய நிதிநிலை அறிக்கையில் பெருமளவு சம்பளத்தை உள்ளடக்கியதாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும் எனக்குத் தெரிந்த இரண்டு கருத்துக்களை நிர்வாகத்தில் ஏற்படுத்துவதற்குரிய ஆலோசனையாகக் கூற நான் விரும்புகிறேன்.

அதில் ஒன்று. இந்த மின்சார இலாக்காவிற்கு நாம் தொடர்ந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்கிறோம். இன்று நியமிக்கப்பட்டிருக்கின்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி மிகவும் திறமையானவர் என்பதில் ஐயமில்லை. அவருடைய நிர்வாகத் திறமையால் சீர்கேடுகளைக் களைந்து இது ஒரு நல்ல நிர்வாகம் என்ற நிலைமையினை அடையும் என்று நம்புகிறோம். ஆனால் அதே நேரத்தில் எல்லா நிலைகளிலும், எல்லா இடங்களிலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிப்பதன்மூலம் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியும் என்று நம்ப வாய்ப்பு இல்லை. பல இடங்களில் நாம் பார்க்கிறோம். ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் தாங்கள் சார்ந்திருக்கின்ற துறைகளில் எந்த ஒரு அனுபவத்தையும் பெறாமல் பிரச்சினைகளை அணுகுவதில், மக்களுடைய பிரச்சினைகளை அணுகுவதில் நல்ல எண்ணத்தைக் கொண்டவர்களாக இருப்பதில்லை என்பதை நாம் அனுபவப் பூர்வமாகப் பார்த்திருக்கிறோம். அந்த நிலைமை ஏற்படக் கூடாது. மத்திய அரசில்கூட அரசாங்கம் மாறுகின்றபோது பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் அரசு விலக்கப்பட்டு ஜனதா அரசு வந்தபோது பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், தங்கள் அரசின் கொள்கையினை நிறைவேற்றத்

கோவை மாவட்டத்தில் சிறுவாணி திட்டத்தின்மூலம், குடி நீருக்கு கொண்டுவரப்படுகிற குழாய்களை பயன்படுத்தி, அந்த நீரை பயன்படுத்தி, ஒரு சிறு மின் நிலையம் அமைக்கலாம் என்ற ஒரு கருத்து பல காலம் நிலவி வருகிறது. அதை பயன்படுத்தி ஒரு சிறிய மின் உற்பத்தி திட்டத்தை நிறைவேற்றினால் அருகில் இருக்கும் பகுதிகளுக்கு ஓரளவு மின்சாரம் உற்பத்தி செய்து கொடுக்கமுடியும் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்று பல புதிய திட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்தில் நாம் இருக்கிற ஆதாரங்களை பயன்படுத்துகிற நேரத்தில் மத்திய அரசினுடைய உதவி நிதி ஆதாரங்கள் நிறைந்த அளவு நமக்கு கிடைக்கவேண்டும். எல்லா மின் திட்டங்களுக்கும் கூடுதல் செலவை ஏற்றுக்கொள்கிற போது அது ஒரு புறம் நமக்குச் சேரும் இருந்தாலும் கடுமையான நிலையில் உற்பத்தியை கருத்தில் கொண்டு நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு இங்கே தொழில்கள் முன்னேற வேண்டும். அதற்கு அவர்கள் மத்திய அரசின் உதவிகளை நமக்கு மனம் உவந்து அளிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82—ஆம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக் களைச் சொல்ல கடமைப்பட்டுள்ளேன். இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கக்கூடியது, தற்போது மின்சார நெருக்கடி என்பது. அந்த நிலைக்கு யார் காரணம். இது இன்று ஏற்பட்ட நெருக்கடியா அல்லது தொடர்ந்து நெருக்கடிகள் நம்முடைய நாட்டில் இருந்து வருகிறதா என்பதை பரிசீலனையில் எடுத்துக்கொண்டால் மின்சார வெட்டு என்பது இன்று நேற்று அல்ல. கடந்த இருபது ஆண்டுக்காலமாக தமிழகத்திலே மின்சார வெட்டு தொடர்ந்து இருந்து வருகின்ற நெருக்கடியாக இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது, பருவ மழை தவறி விட்டது, பருவ மழை ஏமாற்றி விட்டது என்று சொல்லியிருக் கின்ற வாதம், சொத்தை வாதம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பருவ மழை தவறிவிட்டது, அதே நேரத்திலே பருவ மழை ஏமாற்றிவிட்டது என்று சொல்வது கடந்த இருபது ஆண்டுகாலமாக—மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். வி. தமிழகத்திலே அமைச்சராக இருந்த காலத்திலிருந்தே—தொடர்ந்து சொல்லப்படுகிற வாதம். இருபது ஆண்டுகாலமாக தமிழகத் திலே மின்சார வெட்டு தொடர்ந்து இருக்கக்கூடிய இந்த நேரத்திலே மின்சார வெட்டு எதிர்காலத்திலே வராமல் மின்



வெட்டைத் தவிர்க்கக்கூடிய நிலையை உருவாக்கிட வேண்டு மென்று தமிழக அரசும் சரி இதற்கு முன்னாலே இருந்த அரசும் சரி செய்யத் தவறியிருக்கிறார்கள் என்று நான் குற்றஞ்சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தொலை நோக்கோடு திட்டங்களைத் தீட்டக்கூடிய முறை இல்லாமல் வரக்கூடிய பிரச்சினைகளை அவ்வப்போது தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்திலே தான் செயல்பட்டு வருகிறார்கள். தமிழகத்தில் மின்வெட்டு என்பது வருடத்தில் 5 மாதகாலம் இருந்து வந்தது என்பதை நம்மால் மறுக்கமுடியாது. தொழில் முனைவர்களுக்கு 100 சதவீத மின்வெட்டும் டொமஸ்டிக் கன்ஸம்ப்ஷனுக்கு 30 சதவீத மின்வெட்டும் ஏற்பட்டிருக்கின்ற நிலையைக் கருத்தில் கொண்டு செய்யவேண்டிய காரியங்களை துரிதமாக துணிச்சலாக செய்ய தமிழக அரசு தவறிவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் மின்வாரியத்தினுடைய இன்எபிஷியன்ஸியின் காரணமாகவும் அங்கே உள்ள அதிகாரிகளின் மெத்தனப்போக்கு காரணமாகவும் தான் இன்றைக்கு மின்சார வெட்டு ஏற்பட்டு நெருக்கடி இருப்பதற்கு அடிப்படை காரணங்களாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போதே நான் தெரிவித்து இருக்கிறேன். மின்வாரியத் தலைவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதால், தொழில் வல்லுநராக இல்லாத ஒருவர் இருப்பதால் ஏற்படக்கூடிய சங்கடங்களை மனதிலே கொண்டு திறமையுடன் செயல்படக்கூடிய முறையிலே மாற்றியமைக்கவேண்டும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டு, 3 ஆண்டுகளிலே நான்கு அதிகாரிகளைப் போட்டு இருக்கிறார்கள். தொழில் வல்லுநர் இல்லாத ஒருவர் எப்படி செம்மையாக நடத்தமுடியும் என்பது எங்களுக்கு ஐயப்பாடாக இருக்கிறது. அதுவும் 3 ஆண்டுகளிலே நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி களை நியமித்து நிலைமை முன்னேறவில்லை, ஆகவே தொழில் வல்லுநர்களாக இருப்பவர்களை அங்கே நியமித்து மின்வாரியத்தை திறமையாக நடத்த செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் தேசிய மின் இணைப்பு, நேஷனல் பவர் கிரிட் நிறுவவேண்டுமென்று மத்திய அரசை எங்கள் கட்சியின் சார்பாக மட்டுமல்ல, அனைத்திந்திய அளவில் மின்சார சம்மேளனம் மூலமாக கேட்டுக்கொண்டும்கூட அன்றைய தினம் மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் இன்றைய தினம் ஒப்புக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நேஷனல் பவர் கிரிட் நிறுவுவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசும் இதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தக்கவர்கள் அல்ல என்று கருதப்பட்டு அவர்கள் மாற்றப் பட்டார்கள். அதேபோல் ஜனதா அரசு போய் மீண்டும் திருமதி இந்திரா காந்தி அவர்களின் காங்கிரஸ் அரசு ஆட்சிக்கு வந்த போது பல உயர்மட்ட ஐ.ஏ.எஸ் அதிகாரிகளின் மத்தியில் பல மாறுதல்களைச் செய்தார்கள். தற்சமயம் கூட பல மாறுதல் களை பிரதமர் அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே தங்களு டைய கொள்கையினை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக் கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மாற்றுவது என்பது ஜனநாயக விரோதப் போக்கு என்று அர்த்தமல்ல. அவர்களை மதிக்க வில்லை என்றும் அர்த்தமல்ல- அவ்வாறு சொல்கின்ற கருத்து நம்மை நாமே தாழ்வு படுத்துகின்ற ஒரு கருத்து என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாம் இன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பல டெக்னிக்ல் துறைகளுக்குப் பயன்படுத்துவதைப் போல் டெக்னிகல் துறையில் இருக்கின்ற இன்ஜீனியர் போன்றவர்களை தலைமைச் செயலகத் தின் பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்வதில்லை. பல மாநிலங் களில் இன்று டெக்னிகல் துறையினைச் சேர்ந்த இன்ஜீனியர் போன்றவர்கள் நிர்வாகத் திறமை பெற்றவர்களாக இருப்பவர்கள் ஜாயின்ட் செக்கரட்டரியாகவோ அல்லது செயலாளராகவோ, துணைச் செயலாளராகவோ இருந்து அந்தத் துறைகளைப் பற்றிய பிரச்சினைகள் அரசாங்கத்திற்கு வருகின்றபோது அங்கே டெக்னிகல் ப்ராப்ளம் என்று வருகின்றபோது தொழில் நுட்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து நல்ல முடிவினை விரைவிலே ஏற்படுத்து வதற்கு துணையாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அந்த முறை யினை இங்கே ஏற்படுத்தவேண்டும். இங்கே நிர்வாகத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தொழில் நுட்பத் துறையில் தலைமை ஏற்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

அதேபோல் இன்ஜீனியரிங் துறையிலும், மற்ற டெக்னிகல் துறை யின் இயக்குநரகங்களில் இருக்கிற அதிகாரிகளும் நமது செயலகத் தில் பதவி மேற்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தருவதற்கு முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். ஆக இப்படி முயற்சிகள் செய்கிறநேரத்தில் நிர்வாகத்தை மாற்றுகிறநேரத்தில் அந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிற, அந்தத் தொழிலை நிறைவேற்றுகிற ஊழியர்களின் ஆதரவு நிர்வாகத் திற்கு வேண்டும், அரசினுடைய கொள்கைகளுக்கும் திட்டங் களுக்கும் அவர்களுடைய ஆதரவு வேண்டும். ஒத்துழைப்பு தான் அவர்களுடைய கடமையாக இருக்கவேண்டும். அதை விடுத்து அதில் அவர்கள் ஒரு உட்கட்சி அரசியலை நடத்துவது, நிர்வாகத் தில் இருப்பவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் இருப்பது இவை எல்லாம் அந்த நிர்வாகத்தை சீர்குலைப்பது மட்டும் அல்ல அது ஒரு ஜனநாயக விரோத போக்காக அமையும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இன்று மின்துறையைப் பொறுத்த அளவில் நமது தமிழகத்தில் பல்வேறு கட்சிகள் தொழிற்சங்கங்களை அமைத்து கொண்டிருக் கின்றன. எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம் ஒரு கட்சியின் அடிப்படையில் தொழிற்சங்கங்களை அமைத்துக்கொள்கிறார்கள் அரசினுடைய திட்டங்கள் தாங்கள் சார்ந்து இருக்கிற கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமாக இருக்கும் என்று தங்கள் தலைவர்கள் கருதுவார்களானால் நிச்சயமாக அரசின் திட்டங் களை நிறைவேற்றுவதற்கு உதவ மாட்டார்கள். ஆகவே இன்று தி.மு.க.வைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் அதில் இருக்கிற உறுப்பினர்கள் அங்கே நிறைந்த அளவு இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தலைவர்கள் எப்போதும் இந்த அரசாங்கத்தினுடைய நல்ல திட்டங்களை நிறைவேற்றுவது கூட நாட்டுக்கு நல்லது அல்ல என்று பேசு கிறார்கள். அதே கருத்தைக் கொண்டிருக்கிறவர்கள் அந்த சங்கத்தில் இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு அவர்கள் உதவ மாட்டார்கள் என்பது ஒரு விதண்டாவதமாக இருக்க முடியாது. ஆகவே இன்று எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அந்த கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட தொழிற்சங்கங்களை அமைப்பது பற்றி நமது முதல்வர் அவர்கள் பல காலம் வலியுறுத்தியிருக் கிறார்கள். ஆகவே அந்த அரசியலுக்கு அப்பாற்பட்ட தொழிற் சங்கங்களை அங்கே நிறுவுவதற்கும் அரசியல் சார்புடைய தொழிற்சங்கங்களை அங்கிருந்து அகற்றுவதற்கும் ஒரு வழியைக் கண்டால் மின்சாரத் வாரியத்தைப் பொறுத்தவரையில் பல பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். அந்த வகையில் அந்த தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிக்கு சார்புடையவையாக இருந்து நமது நிர்வாக வளர்ச்சிக்கு தடையாக இருந்தால் அதை களைவதற்கு சட்டங் களை நாம் வகைப்படுத்த வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆக ஒருவர் ஒரு கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக நின்று அவர் தோற்றுப்போனால் மீண்டும் அவர் அரசு பணிக்கு வருவார் என்றால் அவர் தன்னுடைய அரசியல் எண்ணங்களை, கருத்துக்களை விட்டுவிட்டு இருக்கிற அரசாங்கத்திற்கு உதவியாக இருப்பார் என்று நாம் நம்ப முடியாது. ஆகவே அந்த வகையில் தான் பலயிடங்களிலும் அரசாங்கத்தினுடைய திட்டங்களுக்கும், கொள்கைகளுக்கும், அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என்று எண்ணுகிற நல்ல திட்டங்களுக்கும் இடையூறாக இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். இந்த முறையிலே அவர்கள் நிர்வாகத் திற்கு உதவியாக இல்லாத நேரத்தில் அந்த நிர்வாகத்தில் பணி புரிகிறவர்கள் எந்த மட்டத்தில் இருந்தாலும் சரி, அரசாங்க திட்டங்களுக்கு உதவாமல் செயல்படுகிற நேரத்தில் என்ன காரணமாக இருந்தாலும் அவர்களை கலைவதற்கு நமது அரசு தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின் விநியோகச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று தமிழக மின்துறை அமைச்சர் அவர்கள் 1978 ஆம் ஆண்டிலே தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே அதை அறிவித்தார்கள். அந்தச் சட்டத்திலே இருக்கின்ற ஓட்டைகளைக் களைந்து மின்சார விநியோகத்தை முறைப்படுத்த வேண்டுமென்ற முறையிலே சட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று 1978ஆம் ஆண்டு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த சட்டம் இதுவரையில் திருத்தப்படாமல், அதைத் திருத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

(முற்பகல் 11-20)

சீக்கிரம் அதை செய்து முடிப்பதற்கு முன்பாக அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதே நேரத்தில் நெய்வேலி அனல் மின்நிலையத்தை மத்திய அரசாங்கம் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டு தமிழக அரசை தொடர்ந்து மிரட்டி வருகிற நிலையை போக்கவேண்டும். சென்ற முறை எடுத்துச்சொல்வதைப் போல நெய்வேலி அனல் மின் நிலையத்தை மத்திய அரசாங்கம் மாநில அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மூன்றாவது அனல் மின் நிலையத்தின் திட்டத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டனவா? மத்திய அரசினுடைய அனுமதிக்காக அவற்றை அனுப்பிவிட்டார்களா என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. நெய்வேலி அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், முதல் திட்டமாக இருந்தாலும், அல்லது இப்போது ஆரம்பிக்கக்கூடிய மூன்றாவது திட்டமாக இருந்தாலும் அனைத்து திட்டங்களையும் தமிழக அரசிடமே மத்திய அரசு ஒப்படைக்க வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இருக்கிற மின் நெருக்கடி காரணமாக தொழிலாளர்கள் மட்டுமல்ல, விவசாயிகள் மட்டுமல்ல அனைத்து பகுதி மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு மோசமான நிலையில் இருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். அந்த நிலையில் 4,000 க்கும் அதிகமான சிறு சிறு தொழில்கள் அங்கே இருக்கின்றன. பஞ்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. மக்கள் விவசாயத்தை பெரிதும் நம்பியிருக்கிறார்கள். தமிழகத்தில் இரண்டாவது மிகப் பெரிய நகரமாக கோவை நகரம் இருக்கிற காரணத்தால் அங்கே உடனே ஒரு தெர்மல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் தெர்மல் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.



ஒரு நேரத்தில் கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டு வருவதாக தமிழக சட்டமன்றத்திலே சொல்லப்பட்டது. கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிப்பது சம்பந்தமாக எடுக்கப்பட்ட அந்த ஆராய்ச்சியினுடைய பயன் என்ன நிலையில் இருக்கிறது என்பதை இந்த அறிக்கையில் சொல்லவில்லை. கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிப்பது என்பது சோஷலிச நாடுகளில், சீனா போன்ற நாடுகளில் 75 சதவீதம் தயாரிக்கிற நிலைமை இருக்கிறபோது தமிழக அரசும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமானால் நிச்சயமாக மின்சார தட்டுப்பாட்டை குறைப்பதற்கு, மின்சார உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். தமிழக அரசு அது சம்பந்தமாக சிந்திக்க வேண்டும். அதேபோல 'மிஸ்—மேனேஜ்மெண்ட்' என்று சொல்லப்படுகிற நேரத்தில் மின்சார வாரியத்தில் இருக்கிற அதிகாரிகளுடைய 'இன்—எபிஷியன்சி' காரணமாக ரெயில்வேயிலிருந்து வருகிற மெட்டீரியல்சை ஆறு மாத காலத்தில் உரிய நேரத்தில் எடுக்காததால் ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாக அபராதம் கட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது; அது உண்மையா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அறிவிக்கவேண்டும். உரிய காலத்தில் பணம் செலுத்தாததால் 'டிலேயிட் பேமெண்ட்ஸ்' காரணமாக 20 சதவீதம் வட்டி கொடுத்ததன் காரணமாக மின்வாரியம் மிகப்பெரிய இழப்பிற்கு ஆளாகியிருக்கிறது. அந்த முறையில் ஏன் மின்வாரியம் செயல்படுகிறது? இருக்கக்கூடிய பணத்தில் அதிகமான நிர்வாகச் செலவுகள் மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட ஊதாரிச் செலவுகளுக்கும் கொண்டு போய் விட்டிருக்கிறது. இவற்றை வாரியம் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

100 கோடி ரூபாய்க்கு மெட்டீரியல்ஸ் வாங்கி ஸ்டாக்கில் புல ஸ்டோர்களில் வைத்திருப்பதாகவு, அவற்றை பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. 100 கோடி ரூபாய்க்கு மெட்டீரியல்ஸ் ஸ்டோர்களில் வைத்துக்கொண்டு பயன்படுத்தாமல் இருப்பதற்கான அடிப்படையான காரணம் என்ன? ஏன் ஸ்டோர்களில் போட்டு வைத்திருக்கிறார்கள்? அவற்றை பயன்படுத்துவதில் என்ன சிக்கல்? அவ்வாறு முடக்கி வைத்திருப்பதை அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார்களா, இல்லையா என்று எங்களுக்கு தெரியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தவிர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே நேரத்தில், தொழிலாளர்கள் பொறுத்தமட்டிலும் எருக்கஞ்சேரி என்ற பகுதியில் 200 வீடுகள் கட்டுவதற்கு, 1976-ஆம் ஆண்டிலேயே பணி ஆரம்பிக்கப்பட்டது. 6 ஆண்டுகளாகியும்கூட, நேற்றைய தினம் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கூட, கட்டத் துவங்கப்பட்ட வீடுகள் முற்றுப் பெறாமல் இருப்பதைப் படம் போட்டு, காட்டப்பட்டிருக்கிறது

6 ஆண்டுகள் ஆகியும்கூட அந்த வீடுகள் ஏன் கட்டிமுடிக்கப்படவில்லை. முடிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி தயவுசெய்து சொல்ல வேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மின்சார வாரியத்தில் 25,000 இடங்கள் காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 3 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட ஒப்பந்தத்தை இந்த மின்சார வாரியம் அமுல் நடத்தியிருக்கிறதா, இல்லையா என்பதைத் தயவுசெய்து சொல்லவேண்டும். 3 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட ஒப்பந்தத்தை அமுல் நடத்தியிருந்தால் 25,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திருக்கும். அந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்தாமல் காலந்தாழ்த்தி வருவதாகச் சொல்லப்படுகிறது. ஏன் அப்படிப்பட்ட நிலைமை என்பதைத் தயவுசெய்து அறிவிக்க வேண்டும். எனவே, காலியாக இருக்கக்கூடிய அந்த 25,000 இடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, இறந்தவர்களுடைய குடும்பத்திலே உள்ளவர்களுக்கு, டிப்பென்டன்ட் என்ற முறையிலே ஒருவருக்கு வேலை கொடுக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே, பிப்ரவரியிலே நடைபெற்ற மேலவைக் கூட்டத்திலேயே அறிவித்தார்கள். அப்படி இறந்தவர்களுடைய குடும்பத்திலே இருக்கக்கூடியவர்களில் ஒருவருக்காவது, வேலை கொடுக்கப்பட்டுள்ளதா? படிப்பு விதியையும், வயது விதியையும் தளர்த்தி நிச்சயமாக, அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று கடந்த ஆண்டு பிப்ரவரியில் மேலவையிலே நடைபெற்ற கூட்டத்திலே அறிவித்தார்கள். அப்படி அறிவித்தும்கூட அவர்களுக்கு ஏன் வேலை கொடுக்கப்படவில்லை என்பதைத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல தொழிலாளர்களுடைய ஊதியத்திலிருந்து ஆண்டுகளாக பிராவிடன்ட் பண்ட் பணம் பிடித்தம் செய்தும் கூட, எவ்வளவு பணம் பிடிக்கப்பட்டிருக்கிறது? அதற்கான கணக்கு எவ்வளவு என்பதைப் பற்றி அந்தத் தொழிலாளர்களுக்கு ஸ்லிப் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதுவரையில் ஸ்லிப் கொடுக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? பிடிக்கக்கூடிய பணத்தை எங்கே சேமித்து வைத்திருக்கிறீர்கள்? பிடித்த பணத்திற்கு, அவர்களுக்கு வட்டி என்ன என்பதைக் கூட தொழிலாளர்களுக்குச் சொல்லாமல் இருப்பது சரியல்ல. அது மின்சார வாரியத்தின் மீதே தவறான கருத்தைத்



தொழிலாளர்கள் மத்தியிலே உருவாக்கும். எனவே, தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்திருக்கக்கூடிய பிராவிடன்ட் பண்ட் பணத்திற்கு உத்தரவாதம் ஏற்படக்கூடிய முறையிலே, அந்த பிராவிடன்ட் பண்ட் ரசீதுகள் வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள், இந்த அறிக்கையிலே கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழைஅரிசனங்களுக்கும், மற்றும் இருக்கக்கூடியவர்களுக்கும் கிட்டத்தட்ட இலட்சக்கணக்கான மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு கிராமங்களில் இருக்கக்கூடிய அரிசனங்களுக்கும் மற்றவர்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது; நாங்கள் பாராட்டுகின்றோம். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், தொழில் நகரமாக இருக்கிற காரணத்தால், உடனடியாக அங்கே ஒரு தெர்மல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விவசாயிகளுக்கு இரவு நேரத்திலே கொடுக்கக்கூடிய 6 மணி நேர மின்சாரத்தை பகல் நேரத்திலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இப்படிப்பட்ட வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. கே. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு மின் வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும், 1981-82 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் இந்த மின்சார வாரியத்தினுடைய நிலைமையைப் பற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே சொன்னார்கள். இந்த மின்சார வாரியம், 1981—82-ல் மின்சாரத் தட்டுப்பாட்டினைப் பெருமளவுக்குச் சமாளித்தது என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. அரசு அதிகமாக விளம்பரம் செய்கிறது என்பதை இதன்மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக, இங்கே எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் சொன்னார்கள். பருவமழை தவறிவிட்டது என்று. ஆனால், இந்த மின்சாரத் தட்டுப்பாட்டுக்கு, இந்த மின்சார வெட்டுக்குப் பருவமழை மட்டும் தான் காரணமா என்று ஒரு கணம் உற்று நோக்கினால், ஒரு பக்கம் பருவமழை தவறியிருந்தாலும், இந்த அரசினுடைய மெத்தன போக்கே இதற்குக் காரணம் என்று என்னால் சொல்ல முடியும். இந்த அரசு 100 சதவீதம்

பல தொழிற்சாலைகளுக்கு இருக்கின்ற மின்னிணைப்புகூட ஒழுங்காக வருவதாக இல்லை. உதாரணமாக என்னுடைய தொகுதியில் உள்ள கூடுவாஞ்சேரி பகுதியில் சாதாரண மின்னிணைப்புகூட கிடைப்பது கடினமாக இருக்கிறது.

அதற்கடுத்தாற்போல, என்னுடைய தொகுதி பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். கடலோரப் பகுதியில் வாழ்கிறார்கள். இது குறித்து ஏற்கனவே அமைச்சர் அவர்களிடத்தில் கேள்வியாகக் கேட்டிருந்தேன். இங்கே உங்களுடைய அறிக்கையிலே மீனவப்பகுதிகளிலும், அரிசனப் பகுதிகளிலும் உபரியான மின் இணைப்பைக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அங்கே பொருத்தப் படுகின்ற கம்பிகள், உப்பங்காற்றுப் பட்டவுடன் அந்தக் கம்பிகள் அறுந்து போகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்தக் கம்பிக்குப் பதிலாக, அண்டர் கிரவுண்டில், பூமிக்கு அடியில் பொருத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அதிகமாக செலவாகும் என்று சொல்லுகிறார்கள். நான் அமைச்சர் அவர்களைப் பரிவோடு கேட்டுக் கொள்கிறேன். செலவைப் பார்க்காமல் பொதுமக்கள் நன்மைக்காக இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய முதலமைச்சர்கூட மீனவ நண்பனாக நடித்துள்ளார். எனவே மீனவர்கள் நலன் கருதி இதை பூமிக்கடியில் பொருத்துவதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிசனக் காலனிகளுக்கு, 1982–83 ஆம் ஆண்டில் முழுவதும் மின் இணைப்பு கொடுத்திருப்பதாக உங்கள் புள்ளி விவரத்தில் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் இன்றையதினம் அரிசன காலனிகள் பலவற்றிற்கு மின் இணைப்பு இல்லை. ஒரு வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டம் என்று கொண்டு வந்தீர்கள். ஆனால் அந்தத் திட்டத்தை சரியாக அமல் படுத்தவில்லை. பல குடியிருப்புகள் இன்றைக்கு மின் இணைப்பில்லாமல் இருக்கின்றன.

அடுத்து இப்போது வருகின்ற பல்புகள், டியூப் லைட்கள் சாதாரண வோல்டேஜ்கம்மியாக இருந்தால்கூட எரிவது இல்லை. அப்படியே போட்டால் அது 'ப்யூஸ்' ஆகிவிடுகிறது. ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களிலே கொடுக்கப்படும் பல்புகள் ப்யூஸ் ஆகி விடுகின்றன. அந்த பல்புகளை எல்லாம் நீங்கள் எப்படி வாங்குகிறீர்கள், எங்கிருந்து வாங்குகிறீர்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பல்புகளின் தரம் சரியில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு தரமுள்ள பல்புகளை வாங்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து மாண்புமிகு சின்னராஜ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நிலக்கரி வருவதற்கும் மத்திய அரசுதான் காரணம் என்று சொன்னார். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தாமதப்படுத்துவதற்கு மத்திய அரசு என்று காரணம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு இந்த மாநில அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது. இங்கே நீங்கள் ஒருவிதமாகப் பேசுகிறீர்கள். ஆனால் அங்கே போனால் வேறுவிதமாகப் பேசுகிறீர்கள். நீங்கள் இதைச் சொல்லி ஏன் வாதாடக் கூடாது. இங்கே பேசிய எங்கள் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொன்னதைப்போல 'உறவுக்குக் கைகொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதைப்போல, நீங்கள் உறவுக்குக் கை கொடுங்கள், அதேநேரத்தில் நம்முடைய உரிமைக்குக் குரல் கொடுக்கத்தான் வேண்டும். எனவே நமக்குத் தேவையானவைகளை மத்திய அரசிடம் இருந்து பெறுவதற்கு நீங்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் இந்த மின்வாரியத் தொழிலாளர்கள், குறிப்பாக ஒயர்மென்கள் கிராமங்களிலே தங்குவதில்லை. கேட்டால் எங்களுக்கு வீடு வசதியில்லை என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக எங்காவது மின்சாரத் தடை ஏற்பட்டால் இவர்களை கூப்பிடுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, குறிப்பிட்ட இடங்களில் பொதுவான இடத்தை ஆர்ஜிதம் செய்து தாலுகா வாரியாக மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கட்டிக் கொடுத்தால் எந்த நேரமும் அவர்களை அழைத்து ரிப்பேர் செய்ய வசதியாக இருக்கும்.

இந்த அரசின் மின்சாரத் தட்டுப்பாட்டு நிலையால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அரசு சிமென்ட் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக கட்டிடத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்த வேண்டிய நிலை கூட ஏற்பட்டது. அவர்கள் ஊர்வலம் எல்லாம் போன நிலை கூட ஏற்பட்டது. இப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை வரக்கூடாது, அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அரசினுடைய மெத்தனப் போக்கினால் மின்சார உற்பத்திக் குறைந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இனிமேல் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டு முடித்துக் கொள்கிறேன், நன்றி வணக்கம்.

(முற்பகல் 11.30)

மின்வெட்டைக் கொண்டு வந்திருக்கிறது. 1975-ஆம் ஆண்டில் இப்படியொரு மின்சாரப் பஞ்சம், மின்சார வெட்டு வந்த நேரத்தில் அன்றைக்கிருந்த அரசு 75 சதவீதம்தான் மின்சாரக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தது. ஆனால் இப்பொழுது 100 சதவீதம் என்று நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். 75 சதவீதம் என்ன, 100 சதவீதத்தையே நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று பெரிய புரட்சிகரமான திட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 100 சதவீதம் கொண்டு வந்த முதல் பரிசை நான்தான் பெற வேண்டுமென்று எவ்வளவோ பாடுபட்டேன். ஆனால் 1975-ஆம் ஆண்டே 100 சதவீதத்தைக் கொண்டு வந்து அந்தப் பரிசை அப்பொழுதே தட்டிக்கொண்டு போய்விட்டார் அன்றைய மின்சார அமைச்சரவர்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பெயரை நீங்கள் வாங்க வேண்டாமென்று நான் அமைச்சரவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் மின்சார அமைச்சரவர்கள் திறமை மிக்கவர்கள், வல்லமை மிக்கவர்கள், இந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள். அப்படியிருந்தும் இப்படிப்பட்ட நிலைமைகளை ஏன் உருவாக்குகிறார்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். 1981-82-ஆம் ஆண்டில் புனல் மின் நிலையங்கள், அனல் மின் நிலையங்கள் ஆகியவைகளிலே 12,103 மில்லியன் யூனிட் உற்பத்தியாகி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே, உபரி என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இன்று நாட்டிலே நடைபெறுகின்ற நிலைமை என்ன? பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகளில் லே ஆப் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இன்றைய தினம் ஏறியிருக்கின்ற விலைவாசிகளைப் பார்க்கின்றபொழுது படி அரிசி 7 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில்கூட விற்பதாகச் சொல்கிறார்கள். இப்படியிருக்கின்ற நேரத்தில் ஒரு தொழிலாளி 3 நாட்கள், 4 நாட்கள் மட்டும் வேலை செய்தால் எப்படி அந்தத் தொழிலாளி தன்னுடைய குடும்பத்தை நடத்த முடியும் என்பதைச் சற்று உற்றுக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய நிறுவனங்களாக இருக்கின்ற எண்ணூர் அசோக் லேலண்டில் 3 நாட்கள்தான் வேலை. எண்ணூர் பவுண்டரியில் 4 நாட்கள்தான் வேலை. இப்படி பல பெரிய தொழிற்சாலைகளில் இந்த நிலைமைகள் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மறைமலைநகரிலே பல தொழிற்சாலைகள் கட்டப்பட்டு, சிறு தொழிற்சாலைகள் கட்டப்பட்டு இதுவரையிலும் மின்இணைப்பு இல்லாமல் கஷ்டப்படும் நிலைமையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.



இன்றையதினம் தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள் ஒருபக்கம் அவதிப்படுகிறார்கள். முதலாளிகள் பல தொழிற்சாலைகளை அமைப்பதற்குக் கஷ்டப்படும் சூழ்நிலை ஒருப்பக்கத்திலே இருக்கிறது. மின்சாரம் ஒரு பக்கம், இன்னொரு பக்கம் இடம் கிடைப்பதில் உள்ள கஷ்டம். ஒரு சாதாரண கம்பெனி நிறுவ வேண்டுமென்று சொன்னால்கூட மின்சாரம் ஒரு பக்கம், இடம் ஆர்ஜிதம் கொடுக்காதது ஒரு பக்கம் என்ற வகையில் இந்த அரசாங்கம் தூங்கும் நிலையில் இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் திரு. ஆறுமுகம் அவர்கள் கூறியதைப்போல 6 மணி நேரத்திற்கு விவசாயிகளுக்கு இரவு நேரத்தில் கொடுக்கிறீர்கள். இந்த 6 மணி நேரமாவது ஒழுங்காகக் கொடுக்கிறீர்களா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் இந்த அரசு ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. இரவிலே 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொல்லி, மனைவி மக்களை விட்டுவிட்டு அந்த மனைவி மக்கள் தங்களுடைய குடும்பத்திலே உள்ள மூத்தவர் இல்லாமல் தவிக்கும் நிலையில், அந்த மூத்தவர் இரவு நேரங்களிலே கழனியிலே படுத்துத் தூங்கவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. இந்த நல்ல காரியத்தை இந்த அரசு செய்திருக்கிறது என்ற வகையில் நீங்கள் உள்ளபடியே புரட்சியான திட்டத்தைத்தான் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொன்னால் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? பருவ மழை என்று சொல்லுகிறீர்கள். நெய்வேலியிலும் மற்றுமுள்ள அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், அதிலும் குறிப்பாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மின்சார உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு போக்குவரத்து நிலைமைகளைப் பொறுத்த வரையில் கப்பல் பேரம் நடத்தப்பட்டிருக்கிறது. மூன்றாண்டுக் காலமாக அந்த பேரத்திலேயே காலத்தைக் கழித்திருக்கிறீர்கள். ஐரோப்பாவோடு பேசியிருக்கிறோம், இன்னொரு இடத்திலே பேசியிருக்கிறோம் என்று இப்படிக் கப்பலைப் பற்றிப் பேசுவதிலேயே மூன்றாண்டுக் காலத்தைக் கழித்திருக்கிறீர்கள். இவ்வாறு செய்து விட்டு இப்பொழுது மின்சாரம் இல்லை என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் அதிலே இந்தச் சர்க்கார் மெத்தனப் போக்கைக் கடைபிடித்ததுதான் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பக்கம் மழை இல்லை என்று சொல்கிறீர்கள்; இன்னொரு பக்கத்தில் போக்குவரத்திற்கான நிலைமைகளில் கவனம் செலுத்தவில்லை. இதுதான் உண்மையிலேயே நடந்திருக்கிறது.

(முற்பகல் 11.40)

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 1981–82 ஆம் ஆண்டுக்கான மின்சார நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களை நான் தெரிவிக்க முற்படுகிறேன். இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் மின்சார வெட்டு என்பது மிக சாதாரண ஒன்றாக ஆகிவிட்டது. மின்சாரவெட்டு என்பது இன்றைக்கு யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்று சொல்வார்கள், அதைப்போன்று இந்த ஆண்டு மழை வராத காரணத்தால் இந்த மின்சார வெட்டு ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்த மின்சாரம் பற்றாக்குறை ஏற்பட்டும், இதனால் பின்விளைவுகள் என்ன ஏற்படும் என்பதை அதிகாரிகள் நல்ல முறையில் ஆலோசனை செய்யாத காரணத்தினால், பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் விவசாயம் செய்தும், பயிரிட்டும், அவைகள் எல்லாம் கருகிவிட்ட சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகள் முன் எச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாக பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் இன்றையதினம் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டதன் காரணமாக பாதிப்பு இருந்தபோதிலும் இருக்கக்கூடிய தண்ணீரை கிணற்றிலேயிருந்து இறைத்து பயிர் செய்தாலும் கூட அவற்றை காப்பாற்ற முடியாத ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய நீர் நிலைகளைப் பயன்படுத்தி மின்சாரத்தை எடுத்துவிட்டோம். அதனால் மீண்டும் அனல் மின்சார நிலையங்களை நாம் ஏற்படுத்த வேண்டும். அதற்கான ஆயத்தங்கள் ஏற்படுத்தியிருப்பதாக நாம் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இந்த நேரத்தில் நிலக்கரி வேண்டுமென்று சொல்கிறபோது நாம் மத்திய அரசை காரணம் காண்பித்துக் கொண்டிருக்கிறோம். இதுவரையில் மத்திய அரசு எந்த அளவுக்கு நிலக்கரி கொடுத்துக்கொண்டு இருந்தார்களோ, எந்தமுறையில் நிலக்கரி வந்ததோ, அதைத்தான் நாம் பின்பற்றவேண்டுமே தவிர, அதைவிடுத்து, கப்பல் இல்லை, அதனால் நிலக்கரி வரவில்லை என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. இதை மாற்றி இதுவரையில் எந்த முறையில் நிலக்கரி வந்து கொண்டு இருந்ததோ அதைப் பயன்படுத்தி இந்த மின்சாரப் பற்றாக்குறை ஏற்படாத அளவிற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் இன்றையதினம் மின்சார வெட்டு என்று சொல்லி 100 சதவீதம் மின்சார வெட்டு தொழிற்சாலைகளுக்கு கொண்டு வந்து விட்டோம் என்று சொல்கின்ற நேரத்திலே நாம் மற்ற மாநிலங்களைக் காண்பித்து மற்றவர்களைக் காண்பித்து அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நாம் காரணம்



கற்பிக்கிறோம். ஆனால் பொதுவாக இந்தியாவில் எதற்கு எடுத்தாலும் நம்முடைய மாநிலம் முன் உதாரணமாக, தமிழகம் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் பார்க்கின்றபோது நாம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்துகொண்டிருக்கிறோம். இன்றையதினம் மின்சார உற்பத்தியில் மட்டுமல்ல, கிராம மக்களுக்கும் விவசாயிகளுக்கும் மின் வெட்டு கொடுப்பதிலே நாம் முன்னணியில் இருந்துகொண்டிருக்கிறோம். இதைப் பின்பற்றாமல் மற்ற மாநிலங்களில் எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறதோ அதைத்தான் நாம் செய்யவேண்டுமே தவிர அதைவிடுத்து மற்ற மாநிலங்களைக் காண்பித்து, ஒப்பிட்டு பார்ப்பது தேவையில்லாத ஒன்று என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு நெய்வேலியில் மின் நிலையம் முதல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அது முடிந்து, இரண்டாம் கட்டத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு மூன்றாவது கட்டமாக மின் உற்பத்தி நிலையத்தை துவக்குவதிலே நாம் மிகவும் அலட்சியமாக இருந்துகொண்டிருக்கிறோம். அவ்வாறு உற்பத்தியாகின்றபோது தமிழகத்திற்குப் போதுமான மின்சாரத்தை கொடுத்துவிட்டு மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் அங்கே தென் ஆற்காடு மாவட்டத்திலே இந்த உற்பத்தி நிலையம் இருக்கின்ற காரணத் தாலே அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு, அவர்களுக்கு முன் உரிமை கொடுத்து, அவர்களுக்கு கொடுத்தது போக மற்ற மாவட்டங்களுக்கு, மற்ற மாநிலங்களுக்கு கொடுக்கவேண்டு மென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, எரிவாயு உற்பத்தி செய்வதற்கு தமிழகத்திலே சில மாவட்டங்களில் நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக் கிறோம். அதைப் பார்க்கிறபோது தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதற்கு வேண்டிய, எரி வாயு தயாரிப்பதற்கு வேண்டிய சவுக்கு மரம், கருவேல மரம், நிலம், ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. இது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தென் ஆற்காடு மாவட்டம் சவுக்கு உற்பத்தி செய்வதிலே ஒரு முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறது. அதோடு வன இலாகா மூலமாக அங்கே பலவிதமான கருவேல மரங்களை நட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதோடு வனத்துறையிலே யூக்கலிப்டஸ் மரத்தை நட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை மாற்றி கருவேல மரங்களை, சவுக்கு மரங்களை நட்டால் அந்த மாவட்டத்திலே ஒரு எரிவாயு உற்பத்தி நிலையம் அமைப்பதில் எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதை நான் எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன், அந்த எரி வாயு மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலங்கள் கள்ளக்குறிச்சிக்குப் பக்கத்திலே மணிமுத்தாறு ஆற்றின்

ஓரத்திலே நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு அருகிலே ஆறு ஓடிக்கொண்டிருக்கிற காரணத்தால் இன்றையதினம், குடிநீர் வடிகால் வாரியம் அங்கே ஒரு நிமிடத்திற்கு 600 காலன் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். நிலமும் கிடைக்கிறது, நீரும் கிடைக்கிறது, இடமும் கிடைக்கிறது,—இவற்றைப் பயன் படுத்தி அங்கே ஒரு எரி வாயு உற்பத்தி நிலையத்தை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கல்ராயன் மலைக்கு அருகிலே இருக்கக்கூடிய நீர் வீழ்ச்சிகளை ஆராய்ச்சி செய்வதற்காக நாம் சர்வே செய்து கொண்டு இருக்கிறோம். அவற்றையும் பயன்படுத்தி, கல்ராயன் மலைக்குப் பக்கத்திலே ஒரு மின் நிலையத்தை நாம் துவங்க வேண்டும். அதோடு ஆத்தூருக்குப் பக்கத்திலே ராமாச்சரம் என்ற இடத்திலே, எப்பேர்ப்பட்ட வறட்சியாக இருந்தாலும், ஊற்றின் மூலமாக நிறைய தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரைப் பார்த்தால் சுமார் 500 மீட்டருக்கு மேலாக வந்து கொண்டிருக்கிறது. அவற்றையும் பயன்படுத்தி சிறு மின் நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, ஜப்பான் போன்ற நாடுகளில் எல்லாம் சிறுசிறு மின் நிலையங்களை ஆங்காங்கே ஏற்படுத்தி, அதன் மூலம் மின்சாரத்தை பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இது போன்று சிறிய மின்சார நிலையங்கள் மூலம் நாமும் மின் உற்பத்தி செய்தால், ஆங்காங்கே உள்ள விவசாயிகளுக்கு அதைக்கொடுக்கமுடியும், அது ஒரு நல்ல காரியமாக அமையும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றையதினம் மின்சார வாரியத்தின் மூலமாக தமிழகத்தில் உள்ள கிராமங்களில் உள்ள ஏழை எளிய நடுத்தர விவசாயி களுக்கு, குடிசை வாழ் மக்களுக்கு மின்சாரம் கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால் என்னுடைய தொகுதியில் உள்ள சின்ன சேலம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் மின்குழல் விளக்குகள் போடப்படவில்லை. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடிசை வாழ் மக்கள் மின் வசதி வேண்டும் என்று மனு கொடுத்து இருந்தும் கொடுக்கப்படவில்லை. என்னுடைய பக்கத்துத்தொகுதி—ஆளும் கட்சி உறுப்பினர் தொகுதி. அங்கே எங்கே பார்த்தாலும் குழல் விளக்குகள் போடப்பட்டுள்ளன. குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளன. அங்கேயிருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறபோது, என்னுடைய தொகுதிக்கு அப்படிப்பட்ட வசதிகள் செய்யாமல் இருப்பதற்குக் காரணம், நான் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவன் என்பதாலா என்கிற வினா என் மனதில் எழுகிறது.





அங்கேயிருக்கும் கோட்ட மின் பொறியாளரை இது பற்றி கேட்டால் அவர் என்னை வேறு இடத்திற்கு மாற்றிவிடுவார்கள், ஆகவே, வருவதற்குத் தயாராக இல்லை என்று சொல்கிறார். போன் மூலமாகக் கேட்டாலும், ஆள் இருந்துகொண்டே இல்லை என்று சொல்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இந்த அளவிற்கு நிர்வாகத்தில் சீர்கேடு ஏற்பட்டு இருக்கிறது.

மின் தட்டுப்பாடு காரணமாக என்னுடைய தொகுதியில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக இன்று இருக்கும் மின்சார வாரியத் தலைவர் அவர்களைச் சந்தித்து மனு கொடுக்கலாம் என்று சென்றேன். அவர் இல்லை. ஆனால் அவருடைய நேர்முக உதவியாளரிடம் இதைப் பற்றிச் சொன்னேன். அவர் உடனடியாக இதற்கான நடவடிக்கை தலைவரிடத்தில் சொல்லி எடுத்ததால், நிவாரணம் ஏற்பட்டது. அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று ஆங்காங்குள்ள சிறுசிறு அதிகாரிகள் நடவடிக் கைகள் எடுத்தால் நன்றாக இருக்கும். அப்படி எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் கட்சிப் பாகுபாடின்றி எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி தாலூகா தலைநகரம். அங்கேவரும் மின்சாரத்தில் மிகவும் வோல்டேஜ் குறைவாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரத்தில் ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருந்துகொண்டு இருக்கிறது. அதையும் ஏற் படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் கள்ளக்குறிச்சிக்கும் நல்லமுறையில் மின் வழங்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

உடல் ஊனம் உற்றோர் ஆண்டு என்று சொல்லி நாம் கொண்டாடினோம். உடல் ஊனமுற்றோர் என்று நான் சொல் கிறபோது, இரண்டு கால் அல்லது இரண்டு கை இழந்தவர்கள் விவசாயம் செய்கிறார்கள். அவர்களைப் பற்றிச் சொல்கிறேன். அவர்கள் விவசாய மோட்டாருக்கு மின் இணைப்பு கேட்டு மனு கொடுத்தார்கள். அவர்களுக்கு எந்தவிதமான முன்னுரிமையும் கொடுக்கப்படவில்லை. சீனியாரிட்டி முறையில்தான் கொடுக்கப் படுகிறது. ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் இருக்கும் தொழில்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. சிறுசிறு தொழில்கள்-கோழிப்பண்ணை போன்றவற்றை குடிசைத் தொழிலாக அங்கே செய்து வரு கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மின் கட்டணம் குறைவாக வசூலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாப்,

அரியானா போன்ற மாநிலங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மின் கட்டணத்திற்கு அவர்கள் வைத்து இருக்கும் மோட்டார் ஆர்ஸ்-பவர் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதைப்போன்றதொரு. நிலைமையை இங்கேயும் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பெரிய பெரிய பேரூராட்சிகள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றில் எல்லாம் சோடியம் மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. அப்படிப்பட்ட விளக்குகள் போட்டால் மின்சாரம் குறையும் என்று சொல்கிறார்கள். அதைப்பார்க்கிறபோது, கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் போன்ற பகுதிகளில் 4 சந்திப்புகளில் சோடியம் மின் விளக்குகள் பொருத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–50.)

அதோடு அங்கே மலைப்பகுதி அதிகமாக இருப்பதால், அந்த மலைப் பகுதிகளில் குடிசைவாசிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியவில்லை. வன இலாகாவின் அனுமதிப் பெற்றுத்தான் அங்கே மின்சாரம் கொண்டு செல்ல முடியும், மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். வன இலாகாவின் அனுமதி பெறாததால், இன்னும் அந்தப் பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியவில்லை. அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சிறுவளூர் கிராமத்தில் சுமார் 7 ட்ரான்ஸ்ஃபார்மர்கள் இருக்கின்றன. இருந்தாலும் அங்கே மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று 6,7 ஆண்டுகளுக்கு முன்னால் மனு செய்தவர்களுக்குக்கூட இன்னும் கொடுக்க முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், இப்போது இருக்கின்ற ட்ரான்ஸ்ஃபார்மர்கள் 100 கே.வி. திறன் கொண்டவை என்று சொல்லப்படுகிறது. அதை மாற்றினால் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். அந்த விவசாயிகள் எல்லாம் எல்.டி. பாங்க் மூலம் கடன் வாங்கி மோட்டார் வைத்திருக்கிறார்கள். 6,7 ஆண்டுகள் ஆகியும் மின் இணைப்பு கிடைக்காததால் கடன் தவணை கட்டமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். வட்டி ஏறிக்கொண்டிருக்கிறது, ஆகவே, உடனடியாக அந்த ட்ரான்ஸ்ஃபார்மர்களை 250 கே வி. திறன் கொண்டவைகளாக மாற்றி, எல்லா விவசாயிகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இருபது அம்சத் திட்டத்தின்கீழ் எங்கள் தொகுதியில் நாங்கள் பிரச்சாரம் செய்கிறோம். நாடகம், இசை நிகழ்ச்சிகள் மற்றும் பல வகைகளில் பிரச்சாரம் செய்கிறோம். பல நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய நிகழ்ச்சிகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் கிடைக்கவில்லை. வட்டார அதிகாரிகள் மின்சாரம் வழங்குவதாகச் சொல்கிறார்கள், நாங்கள் நிகழ்ச்சியை ஆரம்பிக்கும்போது கரண்டு இருக்கிறது: சற்று நேரத்தில் மின்சாரம் நின்றுவிடுகிறது. எல்லோரும் இருளிலேதான் இருக்க வேண்டும். இந்த நிலைமைகளை எல்லாம் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த மின்சார வாரியத்திலே உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கூட இருளிலே இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சரியாக மின்சாரம் கிடைக்கவில்லை. பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மின் இணைப்பு கேட்டாலும், அவர்களுக்கும் சீனியாரிட்டி பேசிசில்தான் கொடுப்போம் என்கிறார்கள். அதனால் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்சாரம் கிடைக்காமல் அவர்கள் விவசாயத்தை சரியாகச் செய்ய முடியவில்லை. இந்த முறையை மாற்ற வேண்டும். பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அல்லது அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள்மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் சார்பாக பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்காக முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே இன்றைக்கு மின்சாரம் இல்லாத காரணத்தால் தொழில்கள் எந்த வகையிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதையும் நம்மால் உணர முடிகிறது.

இந்த மின்சாரத் தட்டுப்பாட்டினால் சிமிண்ட் உற்பத்தி நடைபெறவில்லை. அதனால் கட்டிடத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயமும் மின்சாரம் இல்லாத காரணத்தால் செய்யமுடியவில்லை. செய்த பயிர்கள் எல்லாம் தீய்ந்து போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு வறட்சி, வறட்சி என்று சொல்கிறோம். தண்ணீர் கொடுக்க முடியவில்லை. இதற்கு எல்லாம் காரணம் மின்சாரம் இல்லாதது முக்கியமாகும்.

மின்சார தட்டுப்பாட்டிற்கு மற்றொரு காரணம் நிர்வாக குறைபாடு. இந்த நிர்வாகம் தகுந்த நேரத்தில் தகுந்த காரியத்தை எண்ணித் துணிந்து செய்திருந்தால் இன்றைக்கு இந்த மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்காது. அண்ணா தி. மு. க. 7 ஆண்டு காலமாக ஆட்சி செய்து வருகிறது. இந்த 7 ஆண்டு காலத்திலே மின்சார உற்பத்தி சம்பந்தமாக அவர்கள் போதிய நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக இன்றைக்கு மின்சாரத் தட்டுப்பாடு, கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. நிர்வாகத் திறமை இல்லாத காரணத்தால் நாம் பஞ்சம், வறட்சி என்று ஓலமிட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நேரங்களில் இந்தத் துறையில் இருப்பவர்கள் எண்ணிப்பார்த்து உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமையை நாம் சமாளித்திருக்க முடியும்.

அது மட்டுமல்ல, அனல் மின்சாரம் உற்பத்திக்கு தேவையான இயந்திரங்களை கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். அது பழுதடைந்தால் அந்த பழுதை நீக்குவதற்கு சரியான நடவடிக்கை எடுப்பது இல்லை. இப்படி தட்டுப்பாடு வருகின்ற காலத்தில் ஓலமிட வேண்டியிருக்கிறது; ஆளைத் தேடி ஓடவேண்டியிருக்கிறது. முன்கூட்டியே வேண்டிய நடவடிக்கையை எடுத்திருந்தால், தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தால் நிச்சயமாக சமாளித்திருக்கலாம். ஆகவே இந்த நிலைமைக்கு நிர்வாக குறைபாடுதான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே எல்லா உற்பத்தியுமே பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மின்சாரம் கிடைக்கவில்லை. எனவே, போர்க்கால நடவடிக்கைபோல் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. போர்க்கால நடவடிக்கைபோல் விரைவாக தேவையான நடவடிக்கைகளை எடுத்து நிலைமையை சமாளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 3000 தியேட்டர்கள் இருக்கின்றன. இந்த 3,000 தியேட்டர்களுக்கும் வழங்கும் மின்சாரத்தை நிறுத்தி, அந்த மின்சாரத்தைத் தொழில் உற்பத்திக்குக் கொடுத்தால் தொழில்கள் சரியாக நடக்கும்; தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். பொருட்காட்சிகளைக்கூட நிறுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்தால் தொழில் உற்பத்தியும் விவசாய உற்பத்தியும் சிறப்பாக இருக்கும் என்பதைக் குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், ஊராட்சி, நகராட்சி பகுதிகளிலே மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் தண்ணீரை மேலேற்றுவதற்காக மின்லைன்கள் தனியாக இருந்தால் உதவியாக இருக்கும். ஏனெனில் மின் அலுவலகத்திலிருந்து மொத்தமாக சப்ளை வருகிற காரணத்தால், மின்சார தட்டுப்பாடு காரணமாக மின் இணைப்பை துண்டிக்கிறபோது, குடிநீர் சப்ளையும் பாதிக்கப்படுகிறது. ஆகையினால் அந்தந்த நகராட்சி ஊராட்சி பகுதிகளில் குடிநீருக்கான மின் லைனை மட்டும் தனியாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மொத்த மின் சப்ளை நிறுத்தப்பட்டால், குடிநீருக்கு மின் சப்ளையாவது சரிவர வழங்க அது உதவியாக இருக்கும் என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



அது மட்டும் அல்லாமல், ஊராட்சி, நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களில் பல்புகள் எரியாவிட்டால், அந்த அலுவலகங்களுக்குச் சென்று முறையிடும்போது, மின் அலுவலகத்திற்குச் சென்று முறையிடுமாறு சொல்கிறார்கள். மின் அலுவலகத்திற்குச் சென்று எழுதி வைத்தாலும், அவர்கள் நகராட்சி அலுவலகங்கள் அல்லது ஊராட்சி அலுவலகங்களுக்கு கடிதம் எழுதி, கடிதப் போக்குவரத்துக்களை நடத்திய பிறகுதான் பல்பு பொருத்திக் கொடுக்கிறார்கள். இது வீணான காலதாமதத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே பியூஸ் போன பல்புகளை உடனடியாக போடக்கூடிய அதிகாரத்தை அந்தந்த ஊராட்சி, நகராட்சி அலுவலகங்களிடத்திலேயே கொடுத்தால், உடனடியாக அவைகளை மாற்ற இயலும். ஒன்றியங்களுக்கு அதற்கான அதிகார வாய்ப்பு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு நாட்டிலே இருக்கிற மின தட்டுப்பாடு நிலைமையை எண்ணிப்பார்த்தால் கவலையாக இருக்கிறது. அதிகமான அளவில் மின் உற்பத்தி செய்ய என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள்? எவ்வளவு தொகையை அதற்கென ஒதுக்கப்போகிறீர்கள்? எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் தகுமா? ஒதுக்கப்படும் தொகையும் காலத்தில் அதற்கான சரியான முறையில் செலவிடப்படவேண்டும். இவைகளுக்கு ஏதாவது புதிய திட்டங்களை வைத்திருக்கிறீர்களா என்பதையும் அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்து அமர்கிறேன். நன்றி, வந்தனம்.

* திரு. க. பரமமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பினை கொடுத்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் சரியாகவே கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனம் எல்லாம் இந்த மின் விநியோகத்தின்மீதே இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். கவனம் இருப்பது மட்டும் அல்ல. நிச்சயமாக கவலையும் இடம் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை, தொழில் துறை, வணிகத் துறை போன்றவை எல்லாம் மின்சாரம் இல்லாமல் அவதிப்படுகின்றன என்பது மட்டுமல்லாமல், சமுதாயத்தின் மாமுல் வாழ்க்கையே மின் வெட்டின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்

கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. பருவமழை தவறியதன் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டு, உற்பத்தி குறைவாகி உணவு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதோடு மட்டு மல்லாமல், சரியான விளைச்சல் இல்லாமையால், விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதுவும் மிகையாகாது.

மின் வெட்டின் காரணமாக 1800—க்கும் அதிகமான பெரிய தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி என்று சொன்னால், இத்தப் பெரிய தொழிற்சாலைகளை நம்பியிருக்கிற ஏறக்குறைய 50 ஆயிரம் சிறிய தொழிற்சாலைகளும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பாதிப்பின் காரணமாக ஜூன் மாதம் வரைக்குமான மின் தட்டுப்பாடு காரணமாக தொழில் முடக்கம் ஏற்பட்டு, 800 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. Cycle of reaction என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதனுடைய விளைவுகள் வருகின்ற ஆண்டுகளிலும் இருக்கும் என்று சொல்லலாம். அதேபோல் மின்வெட்டின் காரணமாக சிமெண்ட், ரசாயன உரம் போன்ற தொழிற்சாலைகளின் உற்பத்தி மூன்றில் ஒரு பங்காக குறைந்ததின் விளைவாக, 700 கோடி ரூபாய்க்கும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் உற்பத்தி 650 மெகாவாட்டிலிருந்து 250 மெகாவாட்டாக குறைந்திருக்கிறது, ஏறக்குறைய 30 சதவீதத்திற்கும் குறைவாக இன்றைக்கு உற்பத்தியாகிறது என்றும் சொன்னால், அது மிகவும் கவலையை அளிப்பதாக இருக்கிறது என்பதை த்தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல அமைச்சருடைய அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் அடிக்கடி இயந்திரங்கள் பழுதடைகின்ற காரணத்தாலே உற்பத்தி குறைவாக ஏற்பட்டு இருக்கிறது. அது 30 சதவீதம் அளவில் உற்பத்திக் குறைவு ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது என்பது உண்மையிலேயே மிகவும் மன வருத்தத்தைக் கொடுக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எண்ணூரிலும் 30 சதவீதம் உற்பத்திக் குறையக்கூடிய நிலை இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த இயந்திரக் கோளாறுகளைப்போக்க 35 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அதனை மேம்பாடு செய்வதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருவதாக இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் மிகவும் வேதனை அளிக்கக் கூடிய நிலையிலேயே இருக்கின்றன. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது இப்படிப்பட்ட மின்சார நட்டம் ஏற்படுவதற்கு, இந்த மின்சார அமைப்புதான் காரணமா அல்லது செயல்பாடு முறைகள் காரணமா? இவைகளுக்கெல்லாம் மூ



காரணம் என்ன என்பதையெல்லாம் கண்டறிந்து நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தும் வகையில்—இன்றைக்கு அதில் ஏற்பட்டிருக்கக் கூடிய சிக்கலைப்போக்கக்கூடிய முறையில்-டோன் அப் என்று சொல்வார்களே. அந்த முறையில் செம்மையாக நடைபெற நடவடிக்கை எடுத்து, அந்த நிறுவனங்களில் திடீரென்று இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கும் தடுப்பு சாதன வசதிகளை ஏற்படுத்துவதற்கும், மற்றும் உள்ள குறைகள் எல்லாம் ஆராய ஒரு விசாரணையையும் நடத்தி, இப்படிப்பட்ட முறைகேடுகளை, சீர்கேடுகளைத் தவிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00.)

மின் இழப்பினைப் பொறுத்தவரையில் 1974-75லே 21.5 சதவீதம் என்றும் 1981-82-லே 18.9 சதவீதம் என்றும் அமைச்சரின் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிகக் குறைவானது என்று சொல்வதிலே நமக்கு மகிழ்ச்சியானாலும் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு 9 ஆண்டுகாலம் அமைச்சர் அவர்கள் இந்த நிர்வாகத்திலே போராடியும் கூட 2.6 சதவீதம்தான் குறைக்க முடிந்தது என்று சொல்கிறபோது கொஞ்சம் ஏமாற்றமாகத் தான் இருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மனதில் கொண்டு, அதாவது இவ்வளவு வேகமான சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டும் இழப்பு சதவீதத்தைக் குறைக்க முடியவில்லை என்பதைப்பற்றி நன்கு ஆராய்ந்து உரிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய புனல் மின் ஆதாரங்களை முழு அளவிற்குப் பயன்படுத்திக் கொண்டிருந்தால் அனல் மின்சாரத்தை நம்பித்தான் இருக்கவேண்டி இருக்கின்றது. ஆனால் ,அனல் மின் உற்பத்தியைப் பகிர்ந்தளிப்பதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போன்று மத்திய அரசினுடைய கொள்கை நமக்கு ஏற்புடையதாக இல்லை, சரி. மாநிலங்களில் உள்ள மின் பற்றாக்குறை அல்லது தேவை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து மத்திய அரசின் மின் நிலையங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின்சாரத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்குப் பதிலாக மத்திய அரசின் திட்ட நிதி உதவியை அடிப்படையாக வைத்து மின்சாரத்தைப் பகிர்ந்து கொடுப்பது என்பது நம்மால் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல.

அடுத்து நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதன் மூலம் கிடைக்கின்ற மின்சாரம் முழுவதையும் நீங்களே எடுத்துக் கொள்ளவேண்டு என்று நம்மை வற்புறுத்தி அதன்படி 1970லே நாம் ஒப்புதல் கொடுத்ததற்குப் பிறகு அதற்கு முன்னாலே போடப்பட்டுள்ள மத்திய அரசினுடைய விதிமுறைகளுக்கேற்ப தான் அவர்கள் பகிர்ந்தளிப்பதாகச் சொல்வது நிச்சயமாக அது மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொன்னால் கூட மிகையாகாது. ஆகவே, ஆவர்கள் ஏற்கெனவே கேட்டுக்கொண்டிருக்கிறபடி அந்த இரண்டாவது சுரங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் முழுவதையும் பெற்றாகவேண்டும், அதற்குரிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு புனல் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் ஒகேனக்கல் திட்டமும், பாண்டியாறு, புன்னம்புழா திட்டமும் நம்முடைய பரிசீலனையில் இருக்கின்றது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்படவேண்டும். அவை மற்ற மாநிலங்களிடையே ஆற்றுநீரைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சனைகளுக்கு தொடர்பு கொண்டது என்று சொல்கிறபோது பாண்டியாறு புன்னம்புழா சம்பந்தமாக கேரள மாநிலத்தோடு பேச்சு வார்த்தை நடந்து ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரியது. விரைவாக அது நமக்கு வந்து சேருகின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆனால் ஒகேனக்கல் திட்டம் என்ன ஆயிற்று? அதை வற்புறுத்திப் பெறுவதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பது குறித்து சொல்லப்பட வில்லை. இது நமக்கெல்லாம் கவலை அளிக்கின்ற விஷயம். மற்ற மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றால நாம் அவர்களை மதிக்கிறோம். ஆனால் இந்தப் பிரச்சினையிலே கர்நாடக அரசு மேகதாது மின் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது என்றால் அது என்ன நிலைமையைக் காட்டு கின்றது. அதனைத் தடுத்து நிறுத்த நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பது குறித்துச்சொல்லப்பட வில்லை. அதுபற்றி உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தூத்துக்குடித் துறைமுகத்திற்கு நமக்கு 1.8 இலட்சம் டன் நிலக்கரி தேவை என்று மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தும் அவர்கள் நமக்குக் கொடுத்திருப்பது 80,000 டன்தான் என்று சொல்லப்படுகிறது. அதுவும் தரமான நிலக்கரி இல்லை என்றும் சொல்லப்படுகின்றது. நம்முடைய உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கின்ற நிலைமையில் இப்படித் தரமான நிலக்கரி கொடுக்கப் படாமல் இருக்கின்றது ஹால்டியா துறைமுகம் சீரடையும் வரை இந்த நிலைமைதான் நீடிக்கும் என்ற காரணத்தால் ஏறக் குறைய 5 இலட்சம் டன் நிலக்கரியினை இறக்குமதி செய்வதைத்



தவிர வேறு வழியில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தால் நான் நன்றி உள்ளவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலக்கரி நிலைமை சீர் அடையாவிட்டால் எரி எண்ணெயைப் பயன்படுத்தி தூத்துக்குடியில் மின்சாரம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எரி எண்ணெய் விரைவாக மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற வாய்ப்பு இருக்கின்றது என்றும் சொல்லப்படுவதால் அதுகுறித்து உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்திலே கூடங்குளத்திலே இரண்டாவது அணு மின் திட்டத்தினை அமைக்க பல வருடங்களாக மத்திய அரசினை மாநில அரசு வற்புறுத்தி வருவதாக சொல்லப் பட்டிருக்கின்றது.

அந்த இடம் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் ஆகும். அப்படி இருந்தாலும் அதைத் துவங்குவதற்கு தாமதம் ஏன்? இதற்கு மத்திய அரசை வற்புறுத்தி பெறுவதற்கு ஏற்பாடு செய்வதில் என்ன சிக்கல் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும். அப்படி மத்திய அரசு ஏற்கனவே ஒப்புக்கொண்டு இருப்பதால் இந்த திட்டங்களை விரைவாக அமலுக்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் சமயநல்லூரில் ஒரு அனல் மின் நிலையம் இருந்தது. இன்றைக்கு அது விற்கப்பட்டுவிட்டாலும் கூட அந்த இடமும் கட்டிடமும் விற்கப்படவில்லை. புதிய அனல் மின் நிலையங்களை அமைக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் தயவுசெய்து எல்லா வசதியும் இருக்கிற அந்த சமய நல்லூர் மின் நிலைய இடத்தில் அந்த அனல் மின் நிலையங்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களைப் பொறுத்தவரை ஏறக்குறைய 15,735 கிராமங்களில் 108 கிராமங்களைத் தவிர மற்ற எல்லா கிராமங் களுக்கும் மின்சாரம் கொடுக்க பட்டு விட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது அதேபோல் 47,838 சிற்றூர்களில், 353 சிற்றூர் களைத்தவிர மற்ற எல்லா சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கப் பட்டுவிட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்; எனக்கு இருக்கிற ஒரு சந்தேகம் என்னவென்றால் என்னுடைய தொகுதியிலே ஒரு 3,4 தினங்கள் நான் சுற்றுப்

பயணம் செய்தேன். குறிப்பாக இடையாத்தூர், மோசுகுடி, மீனாட்சிபுரம் ஆகிய 3 கிராமங்களில் ஏறத்தாழ 6 மின் விளக்குகள் ஒவ்வொரு ஊரிலும் இருக்கின்றன அதில் ஒரு மின் விளக்குதான் ஒவ்வொரு ஊரிலும் எரிகிறது. மற்ற மின் விளக்குகள் எரியவில்லை. இதுதான் தமிழகத்தின் நிலையா என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆகவே இத்தனை ஆயிரம் மின்விளக்குகள் கிராமத்தில் போட்டிருக்கிறீர்கள் நான் பாராட்டு கிறேன். ஆனால் கிராமங்களில் உள்ள எல்லா மின் விளக்கு களும் எரிய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மின் விநியோகத்தைப் பொறுத்த வரை அமைச்சர் அவர்களுக்கு தனியான ஒரு வேண்டுகோள்; எங்கள் பகுதி என்பது தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதி. 'இன்டஸ்டிரிய பேக்வார்டு டிஸ்டிரிக்ட்' அதிலே குறிப்பாக மானாமதுரை பகுதி மிக மிகப் பின்தங்கிய பகுதி. அங்கே இப்போது புதிது புதிதாக அரசாங்க ஆதரவு பெற்று, உதவி பெற்று பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஏற்கனவே மின் இணைப்பை எதிர்பார்த்து வேலை எல்லாம் முடிந்தும் தொழிற்சாலையை ஓட்ட முடியாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் மின் இணைப்பு கிடைக்காததுதான். இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது நிலைமை கொஞ்சம் சீர்பட்டு இருக்கிறது. அது இன்னும் சீராக அமையவேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது புதிய மின் இணைப்புகள் கொடுக்கிறபோது இந்தத் தொழிலில் பின்தங்கிய இந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மின் இணைப்புகளில் முறைகேடுகள் இருப்பதாக குறிப்பு இருக்கிறது. ஏறத்தாழ 1 இலட்சம் முறைகேடுகள் கண்டுபிடிக்கப் பட்டு 30 இலட்சம் ரூபாய் வசூல் செய்ததாகவும் சொல்லியிருக் கிறார்கள் நடப்பு ஆண்டில் கூட 50 ஆயிரத்திற்கு அதிகமான தவறுகள் மின் இணைப்புகளில் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. இது ஒரு பெரிய சமுதாய குற்றம் என்று சொன்னால் கூட மிகையாகாது. ஆகவே மின் இணைப்பு முறைகேடுகள், மின் திருட்டு போன்றவைகளைக் கடுமையான குற்றம் என்று கருதி கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அரசாங்கம் மின் சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பல்வேறு முறைகளில் பத்திரிகை வாயிலாக, வானொலி மூலமாக, தொலைக்காட்சி மூலமாக பிரச்சாரம் செய்வதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இது நல்ல முயற்சிதான். வரவேற்கிறேன். இன்று இருக்கிற சூழ்நிலையை மனதில் கொண்டு விழாக்கள்,



பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், ஆடம்பர விளம்பரங்கள் போன்ற விழாக்களில் ஆடம்பர மின் விளக்குகளை போடுவதை முழுமையாக தடை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன் சிலயிடங்களிலே பொதுக்கூட்டங்களிலே ஆடம்பரமாக மின்விளக்குகளைப் போடுகிறார்கள். இதைத் தடை செய்ய வேண்டும். அதிகாரிகள் கவனக் குறைவு காரணமாக காலை 7 மணி வரையில் லைட் எரிகிறது. சிலயிடங்களில் மாலை 5 மணிக் கெல்லாம் லைட் எரிகிறது. இப்படிப்பட்ட தவறுகள் அதிகாரி களின் கவனக் குறைவால் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட தவறு களைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளுக்கு தரமான பல்புகளை வழங்க வேண்டும்; கடந்த சில வாரங்களாக மின் சப்ளையில் ஓரளவுக்கு திருப்தி ஏற்பட்டு விவசாயிகளுக்கு 6 மணி நேரம் நல்லமுறையில் விநியோகம் செய்யப்படுகிறது. இது இரவு நேரத்தில் கொடுக்கப் படுகிறது. இரவு நேரத்தில் கொடுப்பதற்கு பதிலாக பகல் நேரத்தில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

(பிற்பகல் 12.10)

மின்சாரத் தேவை உயர்ந்திருக்கின்ற காலகட்டத்திலே, மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்ற நிலையிலே, பல தொழிற் சாலைகள் மூடப்பட்டிருப்பதால் ஆயிரக்கணக்கான தொழி லாளர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளிடம் அண்டர்—எம்ப்ளாய்மெண்ட் என்ற நிலை இருக்கிறது ஆகவே அரசாங்கம் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து நல்ல முறையிலே இந்த வாரியத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஜெய்ஹிந்த்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சென்ற செப்டம்பர் மாதம் இந்த அவையிலே கொடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் அமைச்சர் அவர்கள்

Power position during the year 1981-82 was comfortable என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒரு மெத்தனக் கண்ணோட்டம் அரசுக்கு இருந்ததா என்பதைப் பற்றி பின்னாலே கூற விரும்புகிறேன். இன்றைக்கு நிலை என்ன? நூறு சதவீத மின்வெட்டு தொழிற்சாலைகளுக்கு இருப்பதன் அர்த்தம் தொழிலாளர்களுக்கு வேலையில்லை என்பது தான். இன்றைக்கு அந்த நிலை எங்கே போயிருக்கிறது என்று பார்த்தால், பொதுக்கூட்டங்களுக்குக் கூட மின்சாரம் பயன்படுத்

தக்கூடாது என்ற இடத்திற்கு நாம் சென்று இருக்கிறோம்
என்பதை வருத்தத்தோடு நாம் பார்க்கவேண்டிய விஷயமாக இது
இருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்கள் யார்?
இந்த நாட்டிலே உள்ள ஏழை விவசாயிகளும், நடுத்தர விவசாயி
களும் தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் கடுமையாக
அவர்களுக்கு 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படும் என்று
சொல்லப்பட்டது. ஆனால் அவர்களுக்கு இன்றைக்கு 3 மணி
நேரம்கூட, சில இடங்களிலே இரண்டு மணி நேரங்கூட மின்சாரம்
உத்திரவாதமாக கிடைக்கும் என்ற நிலை இல்லை. அமைச்சர்
அவர்கள் எங்கே என்று கேட்கலாம். தென் மாவட்டங்களிலே
மதுரை மாவட்டம் நெல்லை மாவட்டம் ஆகிய மாவட்டங்
களிலே பல இடங்களிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது
என்று தெரிய வருகின்றது. இந்நிலையில் மின்சார வாரியம்
2.2.83 ஆம் தேதியிலிருந்து விவசாயிகளின் மின்
இணைப்புகளைத் துண்டித்து வருகிறார்கள். எவ்விதமான முன்
அறிவிப்பும் கொடுக்காமல் யாருக்கும் தெரியாமல் துண்டித்து
வருகிறார்கள். பணமும் அன்றே கட்ட வேண்டுமென்று சொல்
கிறார்கள். எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்று விவசாயி
களுக்குத் தெரியவில்லை. இந்த நிலையில் ஒட்டுமொத்தமாகப்
பணத்தைக் கொடுக்கவேண்டுமென்று திடீரென்று வற்புறுத்தினால்
விவசாயிகளின் நிலை என்ன ஆகும்? அரசு இதை உணர்ந்து
பார்த்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். குடிநீர்
கிடைக்காமல்கூட இன்றைக்கு கஷ்டப்படக்கூடிய நேரத்திலே
அந்த நடவடிக்கையை உடனடியாக அரசு திரும்பப் பெற வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக மின் துண்டிப்பை
நிறுத்திவைத்து நடைமுறை மாதப் பில் பணத்தை மட்டும்
வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழைய பாக்கிகளை ஒரு
வருடம் தள்ளி வசூலிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.
இந்த நிலைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாமூலான வாழ்க்கை நிலைகூட கடுமையாகப் பாதிக்கப்படக்
கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரைஸ்மில்கள்—மின்சார
வெட்டு ஏற்பட்டு இருப்பதால்—ஓடாத நிலைமை ஏற்பட்டு
அரிசி கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது, சந்தையிலே அரிசி
கிடைக்கவில்லையென்றால் ஏழை மக்கள்தான் பாதிக்கப்படு
கிறார்கள். சிறு தொழில்களுக்கு மின்வெட்டு இருப்பதன் காரண
மாக பல ஆயிரக்கணக்கான சிறு தொழில்களிலே வேலை செய்து
கொண்டிருக்கும் தொழிலாளர்களுடைய வாழ்க்கை கடுமையாகப்
பாதிக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது
என்பது இன்னொரு பக்கத்திலே உள்ள நிலைமை. மற்றொரு
நிலைமை என்ன பார்க்கிறோம் என்றால் மின்சாரம்,
குடிநீர் கூட கிடைக்காத அளவுக்குப் பல பகுதிகளிலே உள்ள
மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மண்ணெண்ணெய் கூட
ஒழுங்காக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்தக்கூடிய கடை
களிலேகூட கிடைக்காத நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல,



இதைவிடக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருப்பவை மருத்துவ
மனைகள்தான். மருத்துவ மனைகளிலே மின்வெட்டின் காரணமாக
நோயாளிகளுக்கு என்ன உதவி கிடைக்கவேண்டுமோ அது
கிடைக்காத நிலை இருக்கிறது. காலேஜ்களில் மின்வெட்டு
ஏற்படுத்தியிருப்பதால் மாணவர்களுக்கு லேபரட்டரிகளில் என்
னென்ன முறைகளில் படிப்பு ஏற்படுத்த வேண்டுமோ அவை
கிடைக்காமல் இருக்கிறது. பவர் கட் ஏற்பட்டிருக்கிற இந்த
நேரத்தில் விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு விதிவிலக்கு ஏற்
படுத்தி அவர்களை காப்பாற்ற முடியுமோ அந்த அளவிற்கு நட
வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதுபோல இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். பம்ப்
செட்டுகளுக்கு மனு போட்ட 90 நாட்களுக்குள்ளாக மோட்டார்
வாங்கி வைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. வாங்கி
வைக்கப்பட்டதற்குப் பிறகு பல ஆண்டுகளாகியும் இன்னும் மின்
இணைப்பு கொடுக்காத நிலை தமிழகத்தில் இருக்கிறது. அதே
நேரத்தில் மின்சார கட்டணத்தை உயர்த்தப்போகிறோம் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பக்கத்தில் சொல்கிறார்கள்.
எப்படி இந்த நிலை தமிழகத்தில் ஏற்பட்டது? உலக வங்கியின்
ஏற்பாடுகளின் காரணமாக எப்படி இந்த நிலை ஏற்பட்டது
என்பதை எல்லாம் நேற்றையதினம் என்னுடைய கட்சியைச்
சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள்.
நான் அந்த விவாதத்திற்கு போகவில்லை.

பல கிராமங்களில் நல்லமுறையில் மின்சார வசதி இல்லாத
நிலை இன்றையதினம் இருந்து வருகிறது. பல வருடங்களாக
மனுக்கள் போட்டும் மின் இணைப்பு கிடைக்காத நிலை இருக்
கிறது. கொடுக்கப்பட்ட இடங்களில் என்ன நிலை என்றால்
பல்புகள் இன்று போட்டால் அடுத்த நாள் 'ப்யூஸ்' ஆகிவிடு
கிறது. ஆகவே எவ்வளவோ செலவழித்தும் கூட நல்ல பல்புகள்
கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே தரமான பல்புகளை
தயாரிக்க தனியாக ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் முன்
னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது,
ஆனால் இன்னும் பல இடங்களில், குறிப்பாக கன்னியாகுமரி
மாவட்டத்தில் தெளிவாகச் சொல்ல முடியும். பல ஆதிதிரா
விடர்களுடைய குடிசைகளுக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை.
அரசினால் அமைக்கப்பட்டிருக்கிற அரிசன காலனிகளில் கூட மின்
இணைப்பு கொடுக்காத நிலை இருக்கிறது. மலையோரப் பகுதி
களில் வாழ்கிற மக்களுக்கு மின்சார வசதி இன்னும் செய்து
கொடுக்கப்படவில்லை. அதேபோல கடலோரப் பகுதிகளில்
இருக்கிற மக்களுக்கு மின் வசதி ஏற்படுத்தி கொடுத்திருப்பதிலே
பல குறைகள் இருக்கின்றன. அதை மாற்றுவதற்கு தகுந்த
நடவடிக்கை எடுக்கவேண்டும். வாசுதேவ நல்லூரில் ஒரு சப்
ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்று கேட்டு பல வருடங்களாகியும்
இன்னும் கொடுக்காத நிலை இருக்கிறது.

1982 ல் கன்சூமர்ஸ்களின் எண்ணிக்கை 44 இலட்சமாக உயர்ந்து இருக்கிறது. 1973-ல் 22 இலட்சமாக இருந்த இடத்தில் இப்போது 44 லட்சமாக உயர்ந்திருக்கிற நேரத்தில் பராமரிப்பிலே உயர்வை ஏற்படுத்த வேண்டுமே, அதை செய்யவில்லை அதற்கான காரணங்களை கேட்கிற நேரத்தில் அவர்கள் 'மென் அன்ட் மெட்டீரியல்ஸ்' என்பது 'ஷார்ட்டேஜ்' என்று சொல்கிறார்கள்; இதையும் தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோதையாறு திட்டம் 1971 லே ஆரம்பிக்கப்பட்டது. 1981 லிருந்து அங்கே லீக்கேஜ் ஏற்பட்டிருக்கிறது என்று தெளிவாக மின் இலாக்காவிற்குத் தெரியும். சுமார் 20 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான தண்ணீர் இன்றைக்கு அங்கு வீணாகிறது. அதை தடுப்பதற்கு ஒரு அணை அமைக்கப்படுமானால் உற்பத்தியை பெருக்கமுடியும். நேற்றைய தினம் ஒரு விஷயம் சொல்லப்பட்டது. 120 டன் ரோட்டார ஒன்று அங்கே பொறுத்தப்பட்டிருக்கிறது. ஈ.ஓ.டி. டிரெயினர் 110 டன்தான் இருக்கிறது. நான் சொல்வது அல்ல, அது தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய ஜனவரி 1982 ஜர்னலில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த டிரெயினரை ஸ்ட்ரெங்த்தன் பண்ணுவதற்கு ஐந்தாண்டுகள் ஆகியும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்பெறவில்லை.

(பிற்பகல் 12.20)

ஆகவே, இந்த நிலை ஒரு பக்கத்திலே இருக்குமேயானால், அப்பர் கோதையாற்றிலே, ஏறத்தாழ ரூ.25 இலட்சம் மதிப்புள்ள டிரான்ஸ்பார்மர்கள் எரிந்து விட்டிருக்கின்றன. காரணம் என்ன அங்கே 1981—லே குத்தியாறிலே போடப்பட்டிருந்த ஷிப்ட் டியூட்டியை ஸ்டாப் பண்ணுவதற்கு மின்சார வாரியம் முடிவு செய்ததற்குப் பிறகுதான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே பராமரிப்பதற்காக ஆட்கள் செல்வதில்லை. அதனுடைய விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையை மாற்றவேண்டும் அங்கே விஞ்சுக்குத் தேவையான ரோப் வாங்கப்பட்டு, அது தரமான ரோப் அல்ல என்ற காரணத்தால், இன்று உபயோகப் படுத்தப்படாமல் வைக்கப்பட்டு இருக்கிறது. அது வழியாக இன்றைக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு பக்கத்திலே என்றால், தொழிலாளர்கள் நிலை என்ன. காஷ பில்லிங் முறை இன்றைக்கு அமுல் படுத்தப்பட்டிருக்கிறது ஏறத்தாழ3,000 காசாளர்களுக்கு வேலை இல்லாத நிலைமை இன்றைக்கிருக்கிறது. அவர்கள் ஐடியலாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் மின் வாரியத்திலே இன்று செயல்படுகின்ற சங்கங்களை அழைத்து. அவர்களோடு பேசி, ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அரசும் இந்த வாரியமும் நடவடிக்கை



எடுக்காததுதான், அதற்குப் பதிலாக இன்றைக்கு காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பல இலட்சக்கணக்கான வேலைகள், கம்பம் நடுதல், லைன் இழுத்தல், டிரான்ஸ்பார்மர்கள் நிறுவுதல் போன்ற வேலைகள் இன்றைக்கு ஸ்பாகட் பேமெண்டிலே நடத்துவதனுடைய விளைவாக, ஒழுங்கான தரமான வேலை அங்கே நடக்கவில்லையென்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஒரு பக்கத்திலே, எலெக்ட்ரிசிட்டி போர்ட் ஒரு மாடல் எம்ப்ளாயர் ஆக இருக்கவேண்டிய இடத்திலே, 15,000 காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் இன்று எந்தவிதமான லேபர் சட்டங்களுடைய உதவியும் இல்லாமல், எந்தவிதமான ரெக்கார்டும் இல்லாமல், எந்தவிதமான ரிஜிஸ்தரும் இல்லாமல். எந்த தமான சலுகையும் இல்லாமல், வேலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். It is a latitudal violati n f labcu law லேபர் இலாகா, இன்றைக்கு ஓட்டல்களில் போய் கடைகளில் போய், ரிஜிஸ்டர் வை, என்று வற்புறுத்தும்போது, மின் வாரியத்திலே, லேபர் இலாகா என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்கூட இங்கே இருக்கிற காரணத்தாலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல அங்கேயுள்ள நிலைமை. அங்கே விபத்து ஏற்பட்டு ஒருவர் இறந்தால் காம்பன்சேஷன் கூடக் கொடுக்கப் படாத நிலை ஏற்பட்டிருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்திலே ஒருவர், இந்த காண்ட்ராக்ட் வேலையிலே ஈடுபட்டவர் இறந்தார். அவருக்கு இன்னும் காம்பன்சேஷன் கொடுக்கப்பட வில்லை. கன்னியா குமரியிலே ஜான் பெர்னாட் என்ற ஒரு தொழிலாளி, பர்மனெண்ட் டிஸ்ஏபிள்ட் ஆகிவிட்டார். 6 மாத காலமாயிற்று. எந்தவிதமான உதவியும் அவருக்குக் கொடுக்கப் படவில்லை. இப்படி பல திட்டங்களிலே காண்ட்ராக்ட் முறையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு, வாழ்க்கையை நடத்துவதற்கான ஊதியம் கூட கொடுக்கப்படாத நிலையிருக்கிறது.

இன்னொரு பக்கத்திலே பிராவிடண்ட் பண்ட் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. பென்ஷன் ஸ்கீம் 1973-லேயிருந்து அமுல்படுத் தப்பட்டு, ரூ.6.80 இலட்சம் தொழிலாளர்களிடமிருந்து வசூலிக் கப்பட்டு இன்னும் கமிஷன் அலுவலகத்திலே கட்டப்படவில்லை. என்ன நடவடிக்கை எடுத்தது அரசு என்று கேட்க விரும்பு கிறேன்? அதே போன்று பிராவிடண்ட் பண்ட் ரசீதுகள் 5 வருஷங்களாகியும் எந்தத் தொழிலாளருக்கும் கொடுக்கப்பட வில்லை.

இன்னொரு பக்கத்திலே, 1973-லே 1.12 இலட்சம் தொழிலாளர்களுக்கு போஸ்ட்கள் சாங்க்ஷன் ஆகியுள்ளன. ஆனால், இன்று இங்கே 25,132 தொழிலாளர்களுடைய போஸ்ட்கள் வேக்கன்ட்டாக இருக்கின்றன. அவற்றை பில் அப் செய்யவில்லை

என்பது மட்டுமல்ல, மறுபக்கத்திலே இன்றைக்கு ஐ. எம். எப். ஸ்டாண்டர்டை ஏற்பாடு செய்து, 25 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரை தொழிலாளர்களை மேலும் குறைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்று ஆராய்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு அஸ்திவாரமாக இருப்பது,
European Man Power Committee
யினுடைய ரிப்போர்ட் என்று சொல்லப்படுகிறது. ஐரோப்பா வினுடைய ஸ்டாண்டர்டை எப்படி இந்தியாவில் இருக்கிற தொழிலாளர்களுக்கு அமுல் படுத்த முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர்களுடைய லீவ் கன்டிஷன்ஸ் என்ன? அவர்களுடைய மற்ற அமைப்புகள் என்ன? அவர்களுக்கு கொடுக் கக்கூடிய ஊதியத்திலே 10 சதவீதம் ஊதியம்கூட இன்று இந்தி யாவிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குக் கிடைக்காத நிலைமை இருக்கிற நேரத்தில், ஸ்டாண்டர்டை இங்கே உப யோகப்படுத்துவது நியாயமா என்று நான் கேட்க விரும்பு கிறேன்.

அதே போன்று கட் அவுட் ப்யூஸ் ஆனால், ஒயரிங் லைசென்ஸ் உள்ள ஆட்களை வைத்து வேலை செய்து கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பு கொடுத்ததாகக் கேள்விப் பட்டேன். அது சரியாக இருந்தால் 62,000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றுள்ள மின்சார ஷார்ட்டேஜைப் பொறுத்தவரையில், லைன் லாஸால் ஏற்படும் லீக்கேஜையும், டிரான்ஸ்பார்மர்களிலே ஏற்படும் லீக்கேஜையும் சரிக் கட்டுவதற்கு சரியான நடவடிக் கைகளை மின்சார வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக மின் ஸ்கீம்களைப் பொறுத்தவரையில் அரசின் பார்வை என்ன என்று அறிய விரும்புகிறேன். ஏற்கனவே சொல்லப்பட்டது, மத்திய அரசு எப்படி இந்தத் தமிழகத்தைப் புறக்கணிக்கிறது என்று. அந்த விஷயத்திற்கு வருவதற்கு முன் கன்னியாகுமரி மாவட்டத்திலே பரளியாறு ஸ்கீம் அமல்படுத்தப் பட முடியும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் புதிய அரசு அதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்று தெரிகிறது. சமயநல்லூரில் ஏற்கனவே இருந்திருப்பதை மீண்டும் வைவ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேரலாறு, மேல் மணிமுத்தாறு போன்ற இம்மாதிரி திட்டங்களையும் நடத்து வதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.



1982-லே கொடுக்கப்பட்ட நோட்டிலேகூட
Micro. Mini and small Hydel Sc emes
பொறுத்தவரையில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இந்த ரிப்போர்ட்டில் அதுபற்றிக் காணப்படவில்லை. அப்படிப்பட்ட
Micro, Mini and Small Sc emes
களை அமல் படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். சீனாவில் இந்த அளவிற்கு முன்னேற்றம் எற்பட்டதற்குக் காரணம் இப்படிப்பட்ட ஸ்கீம்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். ஆகவே, ப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

The Madras Atomic Power Project, 6 nos. Gas Turbin: units, Basin B idge Power Work
ஆகியவைகளுக்கு அனுமதி கிடைக்காமல் இருக்கிறது. ஏழு ஹைடல் ஸ்கீம்களுக்கும் அனுமதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று பேசும்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரிசி பிரச்னையிலே எப்படி மத்திய அரசு மாற்றாந்தாய் மனப் பான்மை காட்டுகிறது என்பது குறித்துப் பேசினார்கள். இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே அரிசி கிடைக்காத நிலைமை இருக்கிறது. அது இருக்கட்டும். ஆனால் இன்று நான் என்ன வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன் என்றால் இதில் அரசினுடைய பார்வை என்ன. பிப்ரவரி 1983-இல் கொடுக்கப் பட்ட அறிக்கையிலே எட்டாவது பக்கத்திலே அமைச்சரவர்கள் சொல்கிறார்கள்
We have been repeatedly requesting the Ministires of Energy, Finance and Railways and Planning Commission to give clearance to the projects on all aspects.
ஆகவே, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்தப் பிரச்னையிலே நேற்று மாண்புமிகு ரமணி அவர்கள் குறிப்பிட்ட தைப்போல மக்களிடம் இதைப்பற்றிச் சொல்லி மக்களைத் திரட்டி, மத்திய அரசின் இந்தத் தவறான கொள்கைக்கு எதிராக தமிழகத்தைப் புறக்கணிக்கும் கொள்கைக்கு எதிராக, மக்களைத் திரட்டி என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அந்த முறையிலே நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்கிக்கொண்டிருக் கிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

உண்மையிலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், அரிசிக்காக ஆந்திராவைப் பார்க்க வேண்டும், தண்ணீருக்காக கர்நாடகத்தைப் பார்க்க வேண்டும், மின்சாரத்திற்காக கேரளாவைப் பார்க்க வேண்டும் என்ற அந்த நிலைமைதான் தமிழகத்தில் நீடித்துக்கொண்டிருக்க முடியும். இதை நாம் எல்லோரும் கூர்மையாகப் பார்க்க வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏழாண்டுக்

காலமாகப் பல ஸ்கீம்களுக்கும் அனுமதி கேட்டு வழங்கப்படவில்லை என்று நான் சொல்லவில்லை, அமைச்சராலேயே சொல்லப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிராவிலே

Mioro, Mini and small Hydel schemes

கொடுக்கப்படுகிறது ஆனால் தமிழகத்திலே கொடுக்கப்படவில்லை என்று அமைச்சரவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னைகளில் மத்திய அரசு எப்படிப்பட்ட தவறான கொள்கையைத் தமிழகத்திற்கு எதிராக எடுக்கிறது என்பதை பற்றி மக்களிடத்திலே சொல்வதற்கு மாநில அரசு முன் வர வேண்டும்; மக்களைத் திரட்ட வேண்டும். அவ்வாறு திரட்டுவதற்குப் பல மாநிலங்களிலே எப்படி மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிராகப் போராடி அவர்களுடைய உரிமைகளை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறார்களோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கத் தமிழக அரசும் முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.30)

திரு சி. த. சிதம்பரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே மின்வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு முதலிலே என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் இப்போது நிதிப் பற்றாக்குறை மின்சாரப் பற்றாக்குறை ஆகியவற்றினுடைய நிதிநிலை அறிக்கையை கொடுத்திருக்கிறது. நம்முடைய அமைச்சரவர்கள் எனக்கு வரவேண்டிய பெருமையை முன்னரே தேடிக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நல்ல பெருமை கிடைத்திருக்கிறது. மின்வெட்டு அறிவிக்கப்படாமலேயே பவர் கட், அமல் நடத்தப்படுகின்ற இந்தப் பெருமை வேறு யாருக்கும் கிடைக்காது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத்தான் கிடைக்கும். இப்படிப்பட்ட நிலைமையை முன்னாலேயே அறிவிப்பு செய்யப்பட்டிருந்தால் இந்த அளவுக்குப் போயிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே பல்வேறு திட்டங்களை எல்லாம் இங்கே சொன்னார்கள். என்னுடைய மாவட்டத்தில் திருவாடனை தாலுக்காவில் சின்னக் கீரமங்கலம் கிராமத்தில் நீண்ட நாட்களாக ஒரு துணை மின்நிலையம் கட்டப்பட்டு அது செயல்படாமல் இருக்கின்றது. இது குறித்து அமைச்சரிடம் நேரிலேயே சொல்லி இருக்கிறேன். இப்போது அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தத் துணை மின்நிலையம் செயல்பட அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





இப்போது மின்சாரத்திற்குக் கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள் அளவு சொல்லி இருக்கிறார்கள். நேரம் சொல்லி இருக்கிறார்கள். கட்டுப்படுத்திய பிறகு, அளவு சொல்லிவிட்டபிறகு, நேரத்தைச் சொல்வதுதான் சரியாக இல்லை. எந்த நேரத்திலே கொடுக்கிறோம் என்று சொல்லுகிறீர்களோ அந்த நேரத்தில் மின்சாரம் கொடுக்கவேண்டும். மின்சாரம் எப்போது வருகிறது, எப்போது போகிறது என்று அதிகாரிகளுக்குக்கூட தெரியாமல் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நீங்கள் எந்த நேரத்தில் சொல்கிறீர்களோ அந்த நேரத்திலாவது கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் அப்போதுதான் அவரவர்கள் எந்தத் தொழிலாக இருந்தாலும் அவர்களால் சரியாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் குறிப்பாக, விவசாயம், தொழில், குடிநீர், ஆகியவை நிறைய பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய மாவட்டம். அங்கே பல பேர் தொழிலைத் துவங்க முன்வருகிறபோது—முன்பெல்லாம் தொழில் செய்ய முன்வருவது இல்லை, இப்போது தொழில் செய்ய வருகிறபோது மின்சார பாதிப்பு வருகிறது. அப்போது அவர்கள் தொழிலை விட்டு விட்டு, தொழிலே வேண்டாம் என்று போகக்கூடிய நிலைமை, தொழிற்சாலையை மூடவேண்டிய நிலைமை, தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழக்கும் நிலைமை ஆகியவை இன்றையதினம் உருவாக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இந்த பின்தங்கிய மாவட்டத்திற்குக் கொஞ்சம் அதிக சலுகை காட்டி தொழிற்சாலை ஏற்படவும். தொழிலாளர் நலன் பாதிக்காமல் இருக்கவும், ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, இப்பொழுது அளவைக் கொடுத்துவிடுகிறீர்கள். அந்த அளவைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்காமல் எந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறதோ அந்த அளவை அவர்கள் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். காரணம், இரண்டு மணி நேரம் சில தொழிற்சாலைக்கு சரியாக வருவதற்குள்ளாகவே அந்த இரண்டு மணி நேரமும் முடிந்து போய்விடுகிறது. அளவைக் கொடுத்தால் மட்டும் போதாது. தொடர்ந்து அவர்கள் ஓட்டுவதற்கு அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசும்போது பொதுக் கூட்டங்களிலே ஜெனரேட்டர் வைத்துத்தான் நடத்த வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்கிறார்கள். காரைக்குடியிலே பேராசிரியர் அவர்களை வைத்து கூட்டம் நடத்துவதற்கு நகராட்சியிலே கேட்டோம், அதேபோல் மின்வாரியத்திலே கேட்டோம். முடியாது என்று சொல்லி விட்டார்கள். ஜெனரேட்டரை வைத்துதான் நடத்தினோம். அதற்கு நான்கு நாட்களுக்கு முன்னாலே

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தேவகோட்டையில் கலந்து கொண்ட ஒரு கூட்டத்திற்கு நகராட்சியில் இருந்து மின்சாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மின்சாரவாரியத்தில் இருந்து கொடுக்கப்பட்டு இருக்கிறது இன்னும் சொல்லப்போனால் ஆடம்பரமாக கோபுரம் போல் இருக்கக்கூடிய ஒரு விளக்கைப் போட்டு அதற்கு நகராட்சியில் இருந்து கரெண்ட் எடுக்கக்கூடிய அளவிற்கு அங்கே மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நான்கு நாட்களுக்கு முன்னாலே தேவகோட்டையில் கொடுக்கப்பட்ட மின்சாரம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் பேசும்போது காரைக்குடியிலே கொடுக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம்? கொடுக்கவில்லை என்பதிலே நாங்கள் வருத்தப்படவில்லை. அங்கே கொடுக்கப்பட்ட சலுகை ஏன் எங்களுக்குத் தரப்படவில்லை என்பதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாற்றாந்தாய் மனப்பான்மை இதிலே வரவேண்டாம் என்று அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இப்போது வீடுகளுக்குக் கார்டு கொடுத்து இருக்கிறார்கள். இந்தக் கார்டு சிஸ்டம் எப்படி நடைபெறுகிறது. மாதம் ஒரு முறை எடுக்கிறார்களா? அல்லது 3, 4 மாதத்திற்கு ஒரு முறை எடுக்கிறார்களா, அப்படி கொடுப்பதிலே எவ்வளவு சிக்கல் ஏற்படுகிறது? ஒரு மாதத்திற்கு என்று கட்டப்படவேண்டிய பணம் மூன்று நான்கு மாதங்கள் என்று சேருகிறபோது வரால் எப்படிக் கட்ட முடியும் என்பதை நான் அமைச்சர் அவர்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆள் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லி தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் சேர்த்து நிறைய ஆட்களை எடுத்துப் போட்டும் இப்போது அதே நிலைமை நீட்டிப்பதற்கு என்ன காரணம்? இதிலே பல்வேறு தவறுகள் மோசடிகள் நடைபெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். கார்டு கொண்டு போய்க் கொடுத்து அளவு எடுத்து அங்கேயே பணம் வசூல் செய்து அவர்கள் எடுத்துக்கொண்டு போனதாக, ஒரு 50, 60 வழக்குகள் தொடரப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார்களே அதன் உண்மையான நிலைமை என்ன? இந்த திட்டம் சிராக, சரியாக இயங்கவில்லை என்பதை, இந்த அரசாங்கம் புரிந்துகொண்டு முன்பு போல் இருக்கக்கூடிய அளவிற்கு மறுபரிசீலனை செய்யுமா என்று நான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன் ஆனால் இந்த திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை. இதில் ஏற்படுகிற குறைகளை, தவறுகளை, அதற்காக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் மின்வாரியத்திலே, அதிலும் தொழிற் சங்கத்திலே நல்ல மனப்பக்குவம் உடையவர், தொழிற் சங்கத்தில் ஆரம்பத்



திலிருந்து தொழிற் சங்கத்தினுடைய வளர்ச்சிக்கெல்லாம் காரணமாக இருந்தவர். தொழிலாளர் முன்னேற்ற சங்கம் வளர்வதற்குக்கூட நம்முடைய அமைச்சர் அவர்கள் பெரும் துணையாக இருந்தார்கள். ஆனால் இப்போது ஏ.ஐ.டி.யு.சியிலிருந்து சி.ஐ.டி.யு பிரிந்திருக்கிறது. அதேபோன்றுகணக்காயர் சங்கத்திலேயிருந்து தொழிலாளர் முன்னேற்ற சங்கம் பிரிந்திருக்கிறது. நாங்கள் இப்போது என்ன சொல்கிறோம் என்றால் நீங்கள் பழைய கணக்கைப் பார்க்கிறீர்கள். ஒவ்வொரு முறை சென்சஸ் எடுக்கும்போது கூட 71 லே எடுத்தார்கள், இருந்தாலும் 81 லே எடுக்க வேண்டுமென்று நாம் கார்ப்பரேஷனுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறோம். நகராட்சிக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் பழைய கணக்கை வைத்து அதுதான் உறுதி என்று எண்ணிக் கொண்டு, அந்த 2 சங்கத்திற்கு மட்டும் அங்கீகாரம் கொடுத்து இருப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் இதிலேயிருந்து பிரிந்து வந்தவர்களுக்கும், இன்றைக்கு அவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இருக்கக்கூடிய காரணத்தால், நீங்கள் அங்கீகாரம் வழங்க வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள்தான் தொழிலாளர் சங்கத்திற்கு நல்ல ஆதரவாக இருந்தார்கள். ஆகவே இந்த தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திற்கும் அங்கீகாரம் வழங்கக்கூடிய அமைச்சராகவும் அவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த நம்பிக்கையை அவர்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் விளையாட்டு திறமைக்கு அல்லது திட்டத்திற்கு இந்த மின்சார வாரியத்திலே இப்போது ஆட்களை எடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 300 பேர்களுக்கு எடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த மின்சார வாரியத்திலே எடுத்த இந்த 300 பேரும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக எடுக்கப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. மற்ற மாநிலங்களிலிருந்தும் வந்தவர்களையெல்லாம் இந்த 300 பேர்களிலே எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அது ஏன் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். இங்கே மின்சார வாரியத்திலே பணிபுரியக்கூடியவர்களுக்கு ஒரு பயிற்சியைக் கொடுத்து, அவர்களுக்கு ஒரு ஊக்கம் கொடுத்து, அவர்களை விளையாட்டுத் துறையில் பயன்படுத்தாமல் மின்சார வாரியம் நஷ்டத்திலே இருந்துகொண்டிருக்கிற நேரத்திலே புதிதாக ஒரு 300 பேர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக அவர்களை எடுக்காமல், எடுத்து இப்போது மின்சார வாரியம் அதிக நஷ்டத்திற்கு உள்ளாவதற்கு ஏன் இப்போது நடவடிக்கை எடுத்தீர்கள். இருப்பவர்களை வைத்து ஏன் பயிற்சி கொடுத்து, மின்சார வாரியத்திற்கு நம்முடைய பெருமையைச் சேர்க்கக் கூடாது என்று நம்முடைய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொண்டு இதிலே பல்வேறு தவறுகள், குறைபாடுகள் நடைபெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள், அவற்றுக்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்திலே அந்த டியூப் மாற்றுதல், வால்வு மாற்றுதல், மற்றும் கிளீன் செய் வதற்கு கான்ட்ராக்ட் முறையிலே இப்போது அந்த வேலைகள் கொடுக்கப்படுகிறது. அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர் களுக்கு கொடுக்காமல், கான்ட்ராக்ட் மூலமாக கொடுப்பதாலே பணம் அதிகமாக செலவாகிறது அங்கே இருப்பவர்களைப் பயன்படுத்தினால் இந்த மின்சார வாரியத்திற்கு பணம் மிச்ச மாகும், மின்சார வாரியம் பணப் பற்றாக்குறை என்ற நிலைமை யில் கொஞ்சம் மாறுதல் ஏற்படும். ஆகவே இந்த கான்ட்ராக்ட் முறையை மாற்றி அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும், பணம் வீணாவதை தடுக்க வேண்டும். அதை நல்ல முறையிலே அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நிர்வாகத்திலே பல்வேறு அதிகமான அதிகாரிகளை நியமிக்கிற காரணத்தால், நிர்வாகச் செலவுகள் கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தலைமைப் பொறியாளர்கள் 5 பேர்கள் அன்றைக்கு இருந்தார்கள். இப்போது 12 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்த 12 பேருக்கும் வேலை இருக்கிறதா, வேலை இல்லையா அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்பதை யெல்லாம் நீங்கள் எடுத்துப் பார்த்தால், இப்போது புதிதாக வந்து இருக்கக்கூடிய சேர்மென் அவர்கள், 3 பேருக்கு வேலை யில்லை என்று அவரே 3 பேரை குறைத்திருப்பதாகச் சொல் கிறார்கள். ஆகவே அதிகாரிகளை அதிகமாக்குவது நிர்வாகத் திலே பல்வேறு தொல்லைகளை, இடைஞ்சல்களை அது உண்டாக்கும் என்பது நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரியாதது அல்ல, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு இப்போது செலவைக் குறைக்கின்ற வகையிலேதான் அதிகமான ஆட்களை மின்சார வாரியத்திலே அதிகமான பிரிவுகளை ஏற்படுத்தாமல், அதிகமான ஆட்களை ஏற்படுத்தி, பணக்கஷ்டத்திற்கு ஆளாக்காமல் நிர்வாகச் செலவிலே சிக்கனத்தை ஏற்படுத்திக்கொடுத்து இந்த மின்சார வாரியத்தினுடைய நிதி நிலைமையை சீராக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

மின்சார வாரியத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தெரு விளக்கு பல்புகள் எல்லாம் சரியாக எரிவது இல்லை. அதிகாரி களைக் கேட்டால், எங்கள் அலுவலகத்திலும் அதைத்தான் போடுகிறோம், நல்ல. முறையில் எரிகிறது என்றும், அவர்கள் ரூமிற்குள் இருப்பதால் பாதுகாப்பாக இருக்கிறது என்றும் தெருவில் போடப்படும் விளக்குகள் வெயில், காற்று, மழை



புயல் ஆகியவற்றிற்கு இலக்காகிவிடுகின்ற காரணத்தால் சீக்கிரம் போய்விடக்கூடும் என்றும் சொல்கிறார்கள். கான்ட்ராக்ட் முறையில் இந்தப் பொருள்கள் வாங்கப்படுவதால்தான் இப்படி தரம் குறைவாக இருக்கின்றன. ஆகவே பொருள்களின் தரத்தைப் பார்த்து பல்புகளை வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திலே நிதி பற்றாக்குறை இருப்பதைத் தவிர்ப்பதற்காக சில யோசனைகளை தெரிவித்து இருக்கிறேன். மின்வெட்டு நிலைமையை சீராக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பெரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். நிறைய தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் நிறைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சிறு சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு பிரஸ் வைத்திருப்பவர் கூட ஒரு நாளைக்கு 3 யூனிட் உபயோகிக்கிறார் என்று சொன்னால், 90 யூனிட் ஒரு மாதத்திற்கு வேண்டும். ஆனால் அவர்களுக்கு 30 யூனிட்தான் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் மாதத்தில் 10 நாட்கள்தான் வேலை செய்ய முடியும். 15 நாட்கள், 20 நாட்கள் வேலை செய்ய முடியாது. ஆகவே தொழில்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவும், தொழிலாளர் களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவும், மின்சாரத்தை சீர் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் திறமைபெற்ற, தேர்ச்சி பெற்ற நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, பற்றாக்குறை கணக்குக் காட்டுவதை கண்டிக்கிறோம் என்று சொல்லி அதற்கான என்னுடைய வருத்தத்தை தெரிவித்து, விடைபெறுகிறேன்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மின்சார வாரியம் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களது தலைமையில் அண்ணன் பண்ருட்டி அவர்களுடைய சீரிய நிர்வாகத்தில் நல்ல முறையில் நடை பெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதற்காக நான் அவர்களை உளமாறப் பாராட்டுகிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த தி.மு. கழக தோழர்களும் காங்கிரஸ் அன்பர்களும் இந்த மின்சார வாரியத்தை குறை கூறுகிறார்கள். மின் வெட்டுக்குக் காரணம் நமது அரசு என்று குற்றம் சாட்டுகிறார்கள். அது மட்டுமா? நிர்வாகம் திறமையாக செயல்படவில்லை என்று குறை கூறு கிறார்கள். இவ்வாறு அவர்கள் கூறுவதற்குக் காரணம் இவர்கள் காலத்தில்தான் மின்சார வாரியத்தின் அழிவிற்கும் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கும், தமிழ் நாட்டின் வளர்ச்சிக் கும் முட்டுக்கட்டை போட்டார்கள் என்ற உண்மைகள் வெளி வந்துவிடக்கூடாதே என்பதற்காக நம்மைக் குறை கூறுகிறார்கள், நமது ஆட்சியையும் குறை சொல்கிறார்கள்,

மின்சார உற்பத்தித் திட்டங்கள் என்றால் அது இன்றைக்கு நினைத்து நாளைக்கு உருவாக்கப்படுகிற ஒன்றல்ல. இன்றைக்கு நாம் திட்டமிட்டாலும் அதன் பலன் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க குறைந்தது 5 அல்லது 6 ஆண்டுகள் ஆகும். இன்றைக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்றால் அதற்குக் காரணம் 6 ஆண்டுகளுக்கு முன்னால், 15 ஆண்டுகளுக்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் தி.மு.க. அரசும், காங்கிரஸ் அரசும் சரியான திட்டங்களைத் தீட்டாததன் காரணமே தவிர வேறு ஒன்றும் இல்லை. இன்றைக்குத் தமிழ்நாட்டின் தேவைகள், வளர்ச்சிப் பணிகள், முன்னேற்றங்கள் ஆகியவற்றிற்கு சரியான அடிப்படை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனையிலே திட்டங்களைத் தீட்டி இருப்பார்களானால் இன்றைக்கு இந்த நிலைமை ஏற்பட்டு இருக்காது. ஆனால் இவைகளை மறைத்துக் கொண்டு நமது ஆட்சி ஏதோ தவறு செய்து விட்டது போலவும் அவர்கள் காலத்தில் 'ஓகோ' என்று இருந்தது போலவும் பேசுவது மிகவும் விந்தையாக உள்ளது. இது எப்படி இருக்கிறது என்றால் ஒருவன் மல்லாந்து படுத்துக்கொண்டு எச்சில் துப்புவது போன்று இருக்கிறது. இவர்களால் சொல்லப்படுகிற அத்தனை குற்றச் சாட்டுகளுக்கும், குறைபாடுகளுக்கும், தவறுகளுக்கும், பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் அவர்களே தவிர, நாம் அல்ல. இதனைப் பொது மக்களும் நன்றாக அறிவார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு விளக்கம். 1967 வரையிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்தது. 1967-க்குப் பிறகுதான் இன்றைக்குப் பேசுகின்ற மாண்புமிகு சகோதரர் கூறுகின்ற நிலைமைகள் ஏற்பட்டன. ஆகவே மின் வெட்டு என்பது 1967-க்குப் பின்பு அதிகப்பட்டதே தவிர வேறல்ல, அதற்குப் பல சங்கடங்கள் இருந்தன. சமயநல்லூர் போன்ற மின் நிலையங்கள் மாற்றப்பட்டன. மற்றும் பல குறைபாடுகள் உள்ளன. ஆனால் 67 க்கு முன் அம்மாதிரி நிலைமை இல்லை. பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சியையும் சேர்த்துச் சொன்னதால் இதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசியதற்கு நான் பேசும் போது முடிந்தால் பதில் சொல்கிறேன். ஆனால், மதிப்புக்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசும்போது ஒரு மின்சார நிலையத்தை விற்றுவிட்டது போன்ற காரணத்தால் தட்டுப்பாடு என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டிலே ஆண்ட காலத்தில் அந்த நிலையம் தேவையில்லை என்று சொல்லி, விற்றுவிடுவதாக ஒரு நிபுணர் குழுவைப் போட்டு அந்த நிபுணர் குழு விற்றுவிடலாம் என்று அறிக்கை தந்து, அண்ணா காலத்திலோ அல்லது அதற்குப் பின்னாலோ விற்கப் பட்டது என்பதையும் அதன் காரணமாக மின்சாரத் தட்டுப்பாடு வரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் 1967—க்கு முன்னால் தமிழ்நாட்டில் மின்சார வெட்டு இல்லை என்று கருதுகிறார்களா?

திரு. எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கருதுவதுபோல் நான் இல்லை என்று சொல்லவில்லை. இந்த அளவுக்கு இல்லை என்று சொன்னேனே தவிர மின்வெட்டே இல்லை என்று சொல்லவில்லை. அது மட்டுமல்ல, அருமை சகோதரர் இராசு அவர்கள் சொன்னதைப் போன்று நிபுணர் குழு சொன்னதா, அவர்கள் கொடுத்தார்களா இவர்கள் கொடுத்தார்களா என்று நான் சொல்லவில்லை. சமயநல்லூர் மின்சார நிலையத்தை விற்றுவிட்டோம் என்பதால் பல காரணங்களில் இதுவும் ஒன்று என்று சொன்னேனே தவிர யார் விற்றார்கள் என்று கூட நான் கேட்கவில்லை. விற்றது சரியா, தவறா என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அதுபற்றி அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாற்றுத் தலைவரவர்களே பிரச்சனையை அவர்கள் கிளப்புவது, பதில் சொல்வது நானா? இதற்கு நீங்கள்தான் தீர்ப்பு அளிக்க வேண்டும் நான் கேட்டுக் கொள்வது, 1967—க்கு முன்னால் எவ்வளவு மின் வெட்டு இருந்திருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

திரு. எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே சொல்லும் போது கேள்வியும் பதிலும் என்று சொன்னார்கள். முன்னால இந்தப் பிரச்சினை வரும்போது நான் இந்த சபையில் இல்லை. எனக்கு முன்னால் அவர்கள்தான் பதில் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். இன்றைக்கு சென்ட் பர்சன்ட் அதாவது 100 சதவீதம் மின்சார வெட்டு என்று சொல்கிற அளவுக்கு அப்போது இல்லை என்று சொன்னேனே தவிர மின்சார வெட்டே இல்லை என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 100 சதவீதம் மின்சார வெட்டு என்பது இந்த ஆட்சியிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் சரி, இரண்டு வாரம் அல்லது மூன்று வாரம் இருந்தது. அதை ஒரு மின்சார வெட்டு என்று கணக்கிட முடியாது. திடீரென்று இயந்திரம் பழுதடைந்து விட்டால் இப்படி வந்துவிடும். இப்படிப்பட்ட நிலைமை குஜராத்தில் இருந்தது, பஞ்சாபில் இருந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்போது தமிழ்நாட்டில் மின்சார வெட்டு 40 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரை பற்றாக்குறை காரணமாகப் போடப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

திரு. இ. கணேசன்: இன்னும் 5 ஆண்டுகளுக்குப் பின்னால் மின்சாரத்தில் தன்னிறைவு வரவில்லை என்றால் அப்பொழுது தான் அந்தப் பொறுப்பு இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைச் சாரும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் பல கட்டங்கள் உள்ளன. திட்டமிடுதல், திட்ட அனுமதி வழங்குதல், நிதி ஒதுக்குதல், திட்டத்திற்குத் தேவையான உள்ளீடு பொருள்கள் வழங்குதல்போன்ற பல கட்டங்கள் உள்ளன. இதில் திட்டமிடுவதைத் தவிர திட்டத்தை நிறைவேற்றுவதைத் தவிர, மற்ற பொறுப்புகள் அனைத்தும் மாதாவிடத்திலே இருக்கிறதே தவிர, மக்களிடத்திலா இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்காரும் அதனை ஆட்டிப்படைக்கிற மாதாவிடத்திலும் தானே இருக்கிறது இங்கே

** **

ஆனால் அவர்களால் ஒரு திட்டத்திற்கேனும் ஒப்புதல் பெற்றுத்தர முடிந்ததா....

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே,

** **

அந்த வார்த்தைகளை நீக்கிவிட வேண்டும். சொல்வதை தைரியமாகச் சொல்லட்டும்; நாங்கள் பதில் சொல்கிறோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். கோபாலன்.

* *

என்று சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. இ. கணேசன்: மாற்றுத் தலைவரவர்களே, நான் அதைத் திருத்திக் கொள்கிறேன். "மாங்காய் புளித்ததோ, வாய் புளித்ததோ" என்று சொல்லலாம் அல்லவா? நான் அப்படி மாற்றிக்கொள்கிறேன்,

இவர்களைப் பற்றியும் இவர்களுக்கு மத்தியில் இருக்கிற செல்வாக்கு பற்றியும் மத்தியில் இருக்கிற ஆட்சி நடத்திவரும் தர்பாரைப் பற்றியும் நமக்குத் தெரியாதா என்ன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



135978

[பிற்பகல் 12-50]

1965 ஆம் ஆண்டிலே அனுப்பப்பட்ட தொழிக்கை வைக்கப்பட்ட நெய்வேலி இரண்டாவது திட்டம் இப்போது (குறுக்கீடு) உங்களுடைய முறை வரும்போது பேசிக்கொள்ளுங்கள் சார், நான் பேசி முடித்து விடுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்; தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், இது வேறு விஷயம், அவருடைய உரையில் நான் குறுக்கிட்டுப் பேசவில்லை, ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீனியர் உறுப்பினர். அவர்கள் எழுதி வைத்துக் கொண்டு படிப்பதுபோல் தோன்றுகிறதே, எந்த அடிப்படையில் அதை அனுமதிக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன்.

திரு. இ. கணேசன்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராக இருந்த அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்கள், இதைச் சொல்வதற்காக வருத்தப்படுகிறேன். உங்களுக்கு தெரிந்த அளவிலே 10 லே ஒரு பங்காவது எங்களுக்கும் தெரியும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1977 லே வந்த ஜனதா அரசால் அப்போது அந்த திட்டம் அனுமதிக்கப்பட்டது என்பதை பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எப்பொழுது யாரால் அனுமதிக்கப்பட்டது என்ற உண்மையை நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்ற எண்ணத்தில் பாவம் காங்கிரஸ் நண்பர்கள் ஏதேதோ பேசி உண்மையை மறைக்கப் பார்க்கிறார்கள். பாவம் பரிதாபத்துக்குரியவர்கள் தமிழக மக்கள் உங்களுக்கு ஓட்டுப் போடவில்லை என்ற காரணத்தால் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய மறுப்பது மக்களுக்குச் செய்கிற துரோகம், அது நியாயமாகாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரியகுளம் தேர்தல் என்னவாயிற்று, டெப்பாசிட்டே போனது....

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது என்ன மாண்புமிகு உறுப்பினர் பட்ஜெட்டின் மீதுதான் விவாதம் நடத்துகிறாரா அல்லது எலக்‌ஷன் பிரச்சாரம் செய்கிறாரா? அப்படி என்றால் எங்களுக்கும் நாங்கள் பேசும் போது இவைகளுக்கெல்லாம் பதில் கூற வாய்ப்பளிக்க வேண்டும். நாங்களும் எங்களிடம் உள்ள விஷயங்களை எல்லாம் எடுத்துச் சொல்வோம், அதை மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்:) அவையில் வைக்கப்பட்டிருக்கும் மின்சார நிதிநிலை அறிக்கையின் மீது மட்டும் பேசுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாற்றுத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு இதுபற்றி விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தாங்கள் என்னை அனுமதிப்பீர்களானால் என்னிடத்திலே இருக்கின்ற குறிப்பினை நான் இங்கே படிப்பது நிச்சயமாக பொருத்தமாக இருக்கும்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்): அதுபற்றி எல்லாம் உங்களுக்குப் பேச வாய்ப்பு வருகின்றபோது பேசுங்கள். இப்போது வேண்டாம்.

திரு. இ. கணேசன்: 1947 முதல் 1967 வரை தமிழ்நாட்டில் காங்கிரசால் ஏற்படுத்திய மின்சார நிறுவனத் திறன் ஒட்டு மொத்தமாக நமக்குக் கிடைத்தது 1,370 மெகாவாட் மட்டுமே. 1967 முதல் 1976 வரை இந்த உற்பத்தித் திறன் 785 மெகாவாட் அளவில் மட்டுமே உயர்த்தப்பட்டது. ஆனால் எங்களது இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் இப்போது உற்பத்தி நிறுவனத் திறன் 3,109 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. என்பதைப் பணிவோடு உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடி அனல் மின் திட்டம் நிறைவேற்றப்பட்டது இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில்தான். குந்தா 4-வது திட்டம் முடிக்கப்பட்டதும் இந்த பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனியான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான். மேட்டூர் அனல் மின் திட்டம், கடம்பாறைத் திட்டம் போன்ற திட்டப் பணிகள் விரைவு படுத்தப்பட்டதும் எங்கள் மக்கள் திலகம் கொடை வள்ளல் எம்.ஜி.ஆருடைய ஆட்சியில்தான். இது மட்டுமா? நாங்கள் மத்திய சர்க்காருக்கு அனுப்பி உள்ள திட்டங்கள் எவ்வளவு தெரியுமா? இவ்வளவு மின் திட்டங்களை இதுவரையில் எந்த ஆட்சியும் அனுப்பியதில்லை என்பதை நெஞ்சுயர்த்தி சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

வடசென்னைத் திட்டம் 1,050 மெகாவாட். மேட்டூர் விரிவாக்கம் 420 மெகாவாட், தூத்துக்குடி விரிவாக்கம் 710 மெகாவாட். எரிவாயு மின் திட்டம் 300 மெகாவாட், நெய்வேலி 3-வது திட்டம் 1 050 மெகாவாட், ஆக மொத்தம் 3,530 மெகாவாட். இந்தத் திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் உரிய காலத்தில் அனுமதி வழங்கினால் நமது மின்சாரப் பற்றாக்குறை விரைவில் தீரும் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



(பிற்பகல் 1-00.)

ஆனால் மத்திய சர்க்கார் விரைவில் அனுமதி அளிப்பார்கள் என்று நாம் நம்ப முடியுமா? எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா என்று மனமார உளமார உண்மையைச் சொல்லுங்கள்.

இதுவரையிலாவது தமிழகத்திற்கு வரவேண்டிய தொழிற் சாலைகளை கர்நாடகத்திற்கும் ஆந்திராவிற்கும் அனுப்பிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் இனிமேல் அங்கேயும் அனுப்ப மாட்டார்கள். விந்தியத்திற்கு அப்பால் தான் அனுப்புவார்கள். அதுவும் அடுத்த தேர்தல் வரைதான். அதற்குப் பின்னால் இந்தியாவிற்கு வெளியிலேதான் அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

* * *

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே,** என்ற குற்றச்சாட்டை கூறுகிறார்கள். மனம்போன போக்கில் பேசவில்லை. வாய்போன போக்கில் பேசுகிறார் ஆளும் கட்சி உறுப்பினர். ஒன்று இதை அவர் அவ்வாறு நிரூபிக்கவேண்டும். அல்லது அவர் அதை வாபஸ் பெறவேண்டும். அவர் பேசியதை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. ஆர். டி. கோபாலன்) அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தர விடுகிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு மின்சார துணை நிதிநிலை அறிக்கை மீதும் 1982-83 ஆண்டின் நிதிநிலை அறிக்கை மீதும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக் களை கூற விரும்புகிறேன். இந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதை போன்று விவசாய துறையாய் இருந்தாலும் சரி, தொழில் துறையாக இருந்தாலும் சரி, வாணிபத் துறையாக இருந்தாலும் சரி ஏனைய எல்லாத் துறைகளுக்கும் மின்சாரம் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. எண்ணூர் மின் உற்பத்தி நிலையமாக இருந்தாலும் சரி, தூத்துக்குடி மின் உற்பத்தி நிலையமாக இருந்தாலும் சரி, பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையமாக இருந்தாலும் சரி, அந்த உற்பத்தி நிலையங்களில் ஏற்கனவே நாம் போட்டுள்ள உற்பத்தி திறனில் திறம்பட செயல்படுகிறதா என்றால் இல்லை. அவைகளின் உற்பத்தித்

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

திரு. இ. கணேசன்: நெய்வேலி இரண்டாவது திட்டம் இவ்வளவு நாட்கள் கிடப்பிலே போடப்பட்டிருந்தது ஏன். மத்தியிலே ஆளும் இந்திரா காங்கிரஸ் 1965 ஆம் ஆண்டிலே இருந்து 1977 வரை இந்தத் திட்டத்தை ஊறுகாய் பானையிலே போட்டு ஊற வைத்திருந்தார்களா? இதை நாடு மறந்திருக்கும் என்று எந்த துணிவோடு காங்கிரஸ் நண்பர்கள் பேசுகிறார்கள் என்பது எனக்கு விந்தையாகவே இருக்கிறது. ஜனதா அரசு 1977 ல் இதை அனுமதித்திருக்காவிட்டால் இந்தத் திட்டம் கூட இன்னும் தமிழகத்திற்கு வந்திருக்காது.

அதேபோல தி.மு.க. காலத்தில் அனுப்பப்பட்ட மேட்டூர் அனல் மின் திட்டம் திருப்பி அனுப்பப்பட்டதே ஏன். அந்தத் திட்டத்தை பிறகு 1977 க்குப் பிறகு ஜனதா அரசினால் அல்லவா அனுமதிக்கப்பட்டது. கலர் பிலிம் தொழிற்சாலைக்கான விரிவாக்கம் உத்திரப் பிரதேசத்திற்கு ஏன் மாற்றப்படுகிறது. கடந்த 1967 ஆம் ஆண்டில் இருந்து தமிழக அரசின் பொறுப்புப் பேரறிஞர் அண்ணா வழியில் வந்தவர்கள் கையில் இருக்கிற காரணத்தினால் எத்தனை தொழிற்சாலைகள், திட்டங்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன, மாற்றப்பட்டிருக்கின்றன என்ற உண்மை யாருக்குத் தெரியாது. ஊருக்குத் தெரியாதா? மத்திய சர்க்காரில் இருக்கின்ற காங்கிரஸ்காரர்களின் பொறுப்பற்ற தன்மையும் உதாசீனப் போக்குமே இந்த மின்சாரத் துறையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளுக்குக் காரணம் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

மத்திய சர்க்காரின் பொறுப்பில் உள்ள கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் 470 மெகாவாட் உற்பத்தியை 1973-74-ல் தரவேண்டும் என்று திட்டமிடப்பட்டபோது 1973-74 லேயிருந்து கல்பாக்கம் மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்றார்கள். கிடைத்ததா? (குறுக்கீடு) கிடைக்கவில்லை என்பது தெரியும்? ஏன் கிடைக்கவில்லை? அதற்கு யார் பொறுப்பு? ஏன் அந்த நிலை என்று தான் கேட்கிறேன்? அப்படி அது வராததற்கு யார் காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்லுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

அதிலும் இந்த துறை மாண்புமிகு பிரதமர் அவர்களது பொறுப்பில் உள்ள துறை. இந்த நாட்டினுடைய பிரதமர் பொறுப்பேற்றிருக்கும் இந்தத் துறையிலேயே இந்த அளவிற்குக் கால தாமதம் ஏற்பட்டால் மற்ற துறைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும். இந்தத் தாமதம் வேண்டும் என்றே செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டை சுமத்துகிறேன். தமிழகத்திற்கு அணு மின்சாரம் விரைவில் கிடைக்கக் கூடாது என்பதற்காக செய்யப்படும் சதி என்றே கூறுகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன்; மாற்றுத் தலைவரவர்களே. I am on a point of order மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலாக மாலையிலே கட்சிக் கூட்டத்திலே பேசுவது போன்று பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் அடுக்கடுக்காக குற்றச் சாட்டுகளைச் சொல்லிக்கொண்டு வருகின்றபோது கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணம் மத்திய அரசு வேண்டும் என்றே சதி செய்கின்றது என்ற வாசகங்களை அவர் சொல்லியிருக்கிறார். அவர்கள் இந்த மன்றத்திற்கு முறையாக வந்துகொண்டிருக்கிறார்கள். அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கு கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். இங்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் இந்தப் பிரச்சினை எடுக்கப்பட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இது நம்முடைய கையிலேயும் இல்லை. மத்திய அரசின் கையிலேயும் இல்லை, இரண்டுக்கும் அப்பாற் பட்ட அகில உலக அளவில் சிக்கல் ஏற்பட்ட காரணத்தால் வந்தது என்று. ஆனால் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திசை திருப்புகின்ற வகையிலே மத்திய சர்க்கார் தான் சதி செய்தது என்று சொல்வது பொருந்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே என்னையும் சம்பந்தப் படுத்தி மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவாகள் பேசியதால் நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். 1964 ஆம் ஆண்டு கல்பாக்கம் அணு மின் நிலையத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அது 1973-74-ல் உற்பத்தியினைத் துவங்கும் என்று இந்திய அரசால் நமக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்போது கால தாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. 1973-74 லே உற்பத்தியினைத் துவங்கி இருந்தால் ஒரு பிரச்சினையும் இல்லை. 1976 ஆம் ஆண்டு நெருக்கடி காலம் அமல்படுத்தப் பட்டபோது ஒரு சின்ன அணு குண்டை வெடித்தார்கள். அது வரையில் உதவி செய்கிறோம் என்று சொன்ன கனடா நாடு அதை வெடித்த பிறகு உதவி செய்ய மறுத்து விட்டது. ஆனால் 1973-74 லேயே இந்தத் திட்டம் முடிந்திருக்குமே யானால் இந்த அணுகுண்டு வெடித்ததனால் அந்தத் திட்டத் திற்கு ஆபத்து வந்திருக்காது. ஏனென்றால் அணுகுண்டு வெடித்தது 1976 ஆம் ஆண்டில். 1976 க்குப் பிறகு அணு ஆயுதத் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டால்தான் மற்ற நாடுகள் உதவும் என்ற நிலைமை ஏற்பட்டதால் சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டே போய்க்கொண்டிருக்கின்றன, எனவே அன்றையதினம் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எழுப்பிய போது நான் அந்த விவரத்தைத்தான் சொன்னேன். நான் 1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடந்ததைச் சொன்னேன், ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் 1973-74-லேயே முடித்திருக்க வேண்டுமே என்று கேட்கிறார். அது நியாயமான கேள்வி.

திறன் குறைவாக இருக்கிறது. அதை முழுமையாக செயல்பட ஆக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்பாக்கம் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரை அது ஆரம்பிக்கும்போது அது செயல்பாட்டுக்கு எந்த ஆண்டு வரும் அவ்வாறு வருகின்றபோது மூலப் பொருளான கன நீரை நாம் எப்படி கொண்டு வந்து இந்த மின் நிலையத்தில் பயன்படுத்தவேண்டும் என்று திட்டமிட்டு இருக்கவேண்டும். செக்கோஸ்லேவியா நாட்டில் வாங்குவதா அல்லது கனடா நாட்டிலிருந்து கொண்டு வருவதா என்ற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக பல கோடி ரூபாய் செலவு செய்யும் இந்த திட்டம் மக்களுக்கு பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த சமயத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நீர் மின்நிலையத்தைப் பொறுத்தவரை மேட்டூர் ஆனாலும் சரி, குந்தா மின் நிலையமானாலும் சரி இன்னும் பிற இடங்களிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய சற்று ஏறக்குறைய 1400 மெகாவாட்டாக இருந்தாலும் தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழை ஏற்கனவே தவறி விட்டது என்று நமக்கு நன்றாக தெரிந்தும், அது சமயத்தில் அனல் மின் நிலையத்திற்கு சிங்கரேனியிலிருந்து நிலக்கரி கொண்டு வருவதா? இல்லது மேற்கு வங்கத்திலிருந்து நிலக்கரியை வாங்குவதா எந்த நிலக்கரியில் நமக்கு உற்பத்தி திறன் 25 சதவீதம் அல்லது 35 சதவீதம் என்ற தேவையான அடிப்படையில் இருக்கிறதா என்பதைப் பார்த்து மத்திய அரசிலிருந்து கேட்டு வாங்குவதற்கு வாய்ப்பு இல்லை என்றால், மத்திய சர்க்காருக்குக் கடிதம் மூலமாக தெரிவித்துப் பயன் இல்லாமல் போவதால் அதை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் முன்வந்திருந்தால் மின்சாரப் பற்றாக்குறையிலிருந்து நாம் மீண்டு நிலைமையைச் சரிசெய்து இருக்க முடியும். ஒகேனக்கல் திட்டத்திற்காக மத்திய அரசோடு கர்நாடக மாநிலம் மற்றும் நம்முடைய மாநிலம் சேர்ந்து பேசி அந்தத் திட்டத்தை முழுமையாகச் செயலுக்குக் கொண்டுவந்து இருப்போமானால் ஓரளவுக்கு மின்நெருக்கடியைப் போக்குவதற்கு அதுவும் பயன்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மின்சாரத் திட்டங்களாக இருந்தாலும் சரி, வேறு திட்டமாக இருந்தாலும் சரி, ஐ.எம்.எப். லோன் வாங்கப்படுகிறது, அந்த லோன் எதிர்பார்த்த அளவுக்குத் தராததால் அதுவும் இந்த நெருக்கடிக்கு ஒரு காரணமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய பம்புசெட்டுகளுக்கு 6 மணிநேரம் அளவுக்கு மின்சாரம் கொடுக்கப்போவதாக புள்ளிவிவரம் இருந்தாலும் கூட விவசாயிகளுக்கு 6 மணி நேரமும் முழுமையாக கிடைக்கிறது என்று சொல்ல முடியாது. காரணம் ஒரு 400 மெகாவாட்



டிரான்ஸ்பார்மரிலே தேக்கி வைக்க முடியும் என்ற நிலை இருந்தால் அதற்கு அதிகமாக சில இடங்களில் மின் இணைப்புக் கொடுக்கக்கூடிய—கொடுத்திருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டதன் காரணமாக மின் தடைகள் ஏற்பட்டு இடைஞ்சல்கள் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. இரவு பகல் எந்த நேரமும் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினால்தான் அவர்கள் விவசாயத்தை எந்த நேரத்திலும் பயன்படுத்தமுடியும். ஆனால் 6 மணி நேரம் என்று வரையறுத்து இருப்பதால் அதைப் பகலில் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் மின் கட்டணத்தை மேலும் உயர்த்தலாமா என்று நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். பிற மாநிலங்களிலே 28 பைசா 25 பைசா என்ற நிலை இருக்கிறது. நாமும் அந்த அளவுக்கு உயர்த்தலாமா என்ற யோசனையைப் பொறுத்த வரைக்கும் விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்தக்கூடாது. காரணம் விவசாயம் செய்யக்கூடியவர்கள் கடலைப் பயிராக இருந்தாலும் சரி, கரும்பாக இருந்தாலும் சரி, பருத்தியாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலையில்லாத காரணத்தினால் கிராமப்புற பொருளாதாரம் சீரழிந்து மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள போது மின்கட்டணத்தை உயர்த்துவதுபற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறமாநிலங்களிலே அதிகமாக இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்காது. கர்நாடக மாநிலத்திற்கு நான் சென்றபோது 5 எச்.பி. மோட்டார் இருக்குமானால் அவர்களுக்கு மொத்தமாக குறிப்பிட்ட தொகையை ஆண்டு பூராவிற்கும் சேர்த்து விவசாயிகளுக்கு வாங்கிக் கொள்வதாகவும் அப்படிப்பட்ட சலுகைகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுவதாகவும் கூறிக்கொள்கிறார்கள். நாமும் அந்த முறையைப்பின் பற்றி வருடத்திற்கு 2 முறைகள் அல்லது 3 முறைகளிலே விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடி மின் நிலையத்திலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். எண்ணூரிலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் எல்லாம் கான்ட்ராக்ட் லேபர்களாக இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

தனியார் என்று சொன்னால் தினசரி கூலியைக் கொடுத்து அவர்களை வெளியேற்றுவது சுலபமாக இருக்கும். ஆனால் அரசாங்கத்தின் கீழ் இருக்கக்கூடிய மின் கழகத்தில் இப்படி ஒரு முறையை கையாள்வது சரியாக இருக்குமா என்பதை யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இரண்டு கோடி ரூபாய் திட்டத்தில் எண்ணூர் மின் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று திரு. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் கமிட்டி ஒரு பரிந்துரை செய்ததாகவும், அந்தத் திட்டம் இன்னும் செயல்பாட்டிற்கு வராமல் இருப்பதாகவும் ஒரு நிலை இருக்கிறது. அதனையும் தயவுசெய்து செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1987-ம் ஆண்டுதான் தெர்மல் ஸ்டேஷன் வரும் என்ற ஒரு நிலையிலிருந்து அதை துரிதப்படுத்தி 1985-வது ஆண்டே செயல்பாட்டிறகு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளாக மின் துறையில் சேர்மேனாக இருப்பவர்கள் நான்கு பேர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்தத் துறையில் வல்லுநர்களாக இருக்கிற பொறியாளர்களை நியமனம் செய்து அதை எப்படி மேம்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்ற நிலையில்லாமல், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பணியமர்த்துகிற சூழ்நிலையினால் கூட இந்தத் திட்டம் சரிவர நடைமுறைக்கு வருமா என்ற சந்தேகம் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து பாண்டியாறு, புன்னம்புழா திட்டம். அங்கேயிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு அரிசி கொடுப்பதா அல்லது சிமிண்ட் கொடுப்பதா என்ற நிலையில் பேசப்பட்டு அது கிடப்பிலே இருக்கிற நிலையிலே, இந்த அறிக்கையில் அந்தத் திட்டம் செயல்பாட்டிற்கு வரும் என்ற நிலை இருக்கிறது. அந்தத் திட்டம் செயல்பாட்டிற்கு வருமானால் உதவிகரமாக இருக்குமாதலால், அரசு உடனடியாக செயல்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெயில்வே, தேயிலை, சிமிண்ட் போன்ற பல்வேறு தொழிற்சாலைகளுக்கு கிட்டதட்ட 55-லிருந்து 60 சதவீதம் வரை நாம் மின்சாரத்தைக் கொடுக்கிறோம். விவசாயத்திற்கு சற்றேறக்குறைய 35 சதவீதமே நாம் மின்சாரம் கொடுக்கிறோம். வாரியத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளில் தொழிற்சாலைகளுக்கு அதனுடைய மின் கட்டணத்தை உயர்த்துவதா இல்லையா என்று பரிசீலனை செய்யவேண்டுமே தவிர எந்த காரணத்தைக் கொண்டும் விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின்சாரத்திற்கு கட்டணத்தை ஏற்றக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப் பணித்துறையிலிருந்துவரும் நீர் பிரச்னையைப் பொறுத்தவரையில் நமக்கு நீண்டகாலமாக ஒரு மாற்றமுடியாத பிரச்னை இருந்து வருகிறது. அந்த சிக்கலைத் தீர்த்து நீரைச் கொண்டு வருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்றுகேட்டு கொள்கிறேன்.





தொழிலாளர்களின் பிராவிடண்ட் பண்ட் போன்ற பிரச்சினைகளில் முழுமையாக செயல்படாமல் இருப்பதை செயலுக்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, அவை முன் வைத்திருக்கிற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அறிக்கையின் மூன்றாவது பத்தியில் மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களில் மின் சக்தி வழங்கப்படும் நிலைமையே மேலோங்கி இருக்கும் என்பது இயல்பானது என்றும், கடைசி பத்தியில் முக்கியமான இந்த பிரச்சினை மீது மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆழ்ந்த கருத்துக்கள் பெரிதும் பயன் தரும் என்றும், ஆகவே கருத்துக்களை வழங்க வேண்டுமென்றும் நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன்னர் பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் தந்ததைப்போன்று புள்ளி விவரங்களை நான் அதிகமாகப் புகுத்தாமல், மாண்புமிகு அமைச்சரைப் போலவே, கிராமப்புறத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற வகையில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன். "சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு மின் ஒளியும், அறிவொளியும் மிகமிகத் தேவை. இந்த இரண்டு ஒளியும் இடையறாது சமுதாயத்திற்கு வழங்கப்பட்டால்தான் சமுதாயம் எதிர்பார்த்த அளவிற்கு இந்த விஞ்ஞான யுகத்திலே முன்னேறமுடியும்" என்று புரட்சித் தலைவர் [illegible] அவர்கள் [illegible] குறிப்பிட்டார்கள். இப்பொழுது கல்வி ஒளியை வளர்த்திருந்தாலும், மின்சாரத் துறையிலே ஏற்பட்ட இன்னல்களை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. இந்த ஆண்டு இயற்கை பொய்த்த காரணத்தால் எவ்வளவு தொல்லைகள் வந்திருக்கின்றன என்பதை நாடு அறியும். நஞ்சைப் பயிரான நெல், கரும்பு, கடலை, வெங்காயம், மிளகாய் போன்ற அனைத்தும் பரவலாகவும், குறிப்பாக பெரம்பலூர் தொகுதியிலேயும் நாசம் அடைந்து போய் விட்டன. மின் தட்டுப்பாடு உள்ள காரணத்தால் என்பதை நான் அறுதியிட்டுத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மழை பெய்யாத காரணத்தால், புஞ்சைப் பயிர்களான கடலை, கொத்தமல்லி போன்ற கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்கு வருமானம் தருகிற பயிர்களும் நாசமாகிப் போய்விட்டன. அவைகளையெல்லாம் முன்கூட்டியே தடுத்திருக்க வேண்டுமென்பது என்னைப் போன்றவர்களுடைய வாதமாகும். மின் தட்டுப்பாடு வரும் என்பதை அறிந்திருந்தும்கூட [illegible] நிலக்கரியோ தவிர பழுதுபடாத இன்ஜினோ, நிலக்கரி வருவதற்கு வாகன வசதியோ கிடைக்காது அல்லது கிடைக்கவில்லை என்பதை அறிந்திருந்தும்கூட அதைத் தடுப்பதற்குப் பல

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல் இன்னும் தீவிரமாக அரசாங்கமும் மின் வாரியமும் செயல்பட்டுவிட்டிருக்க வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்திலே நான் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

போர்க்கால நடவடிக்கையைப் போன்று மின்துறை நிர்வாகமும், அரசும், எடுத்து விவசாயிகளுடைய மின்தட்டுப் பாட்டைப் போக்கியது என்று இங்கே பலரும் வாதாடினார்கள். அதிலே ஒரே ஒரு வித்தியாசம். போர்க்கால நடவடிக்கை எடுத்தது மின்துறையா அரசாங்கமா என்பது யோசிக்க வேண்டிய விஷயம். உள்ளபடியே போர்க்கால நடவடிக்கை எடுத்தது யார்? தமிழ்நாட்டு விவசாயிகள்தான். வீட்டுக்கு வெளியே வந்து விட்டார்கள் வேண்டுமானால் காவல் துறையினரிடமிருந்து நீங்கள் குறிப்புகளைக் கேளுங்கள். தமிழ்நாட்டிலே, எத்தனை கிராமங்களில் விவசாயிகள் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டு, மின் வாரிய நிலையத்திற்கு, பவர் ஸ்டேஷனுக்கு டி.இ. ஆபீசுக்கு எஸ்.இ. ஆபீசுக்கு, ஏ.இ. ஆபீசுக்கு ஏ.டி. அலுவலகத்திற்கு, எத்தனை இலட்சக்கணக்கான மக்கள் இந்த 15 நாட்களிலே படையெடுத்தார்கள். காவல் துறை மூலமாகக் கணக்கெடுத்து பாருங்கள். ஆகவே போர்க்கால நடவடிக்கை எடுத்தது அரசாங்கம்தான். அது பின்னால்தான். அதற்கு முன்னால் எடுத்தது தமிழ்நாட்டு விவசாய மக்கள். அவர்கள் நேரடியாக ஆபீசுக்கே போய் விட்டார்கள். நான் ஒரு வருந்தத்தக்க செய்தியைக் கூடச் சொல்கிறேன். அரசு முன்னெச்சரிக்கையாக இல்லாத காரணத்தால், இந்தத் துறையிலே பணியாற்றுகிற மிகப்பெரிய அதிகாரிகள்கூட தமிழ்நாட்டு விவசாயிகளாலே பயங்கரமாக திட்டப்பட்டார்கள். அதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆனால் அந்தத் திட்டுதலை இந்த அதிகாரிகள் வாங்கியதற்குக் காரணமாக இந்த அரசும் துறையும் இருந்தது என்ற குற்றச்சாட்டை நான் தெளிவாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல பேர்கள் லீவு போட்டே போய்விட்டார்கள், உங்கள் கவனத்திற்கு அதெல்லாம் வந்தே இருக்காது. அந்த அளவுக்கு மிக மோசமாக இருந்தது. நாங்கள் போய் ஏ.இ.யை கேட்கிறோம், எப்போங்க கரண்ட் வரும்? 'தெரியாதுங்க' சரி, ஏ.டி.இ.யைக் கேட்கிறோம். 'எனக்கும் தெரியாதுங்க' அவர் பதில். டி.இ.யைக் கேட்டால் 'எனக்கும் தெரியாதுங்க' அவர் பதில். சரி, திருச்சிக்குப்போய். எஸ்.இ.யைக் கேட்டால் 'எனக்கும் தெரியாது' அவர் பதில். விவசாயி கேட்கிறான், காமன் மேன் அவன்——அப்படித்தான் கேட்பான்—'எதுவுமே தெரியவில்லையென்று சொல்கிறீர்களே, பில்லுக்குக் கட்டணம் மட்டும் ரொம்ப ஈசியாக வசூல் செய்கிறீர்களே, அது எப்படித் தெரியும்? என்று. உங்களுக்கு இதெல்லாம் தெரியாது, ஆனால் பில் வசூல் பண்ணத் தெரிகிறதா? அதற்கு வந்து விடுகிறீர்களே, என்கிறான். இப்பொழுது ஒரு தவறு நடக்கிறது. இந்தநேரத்திலே அதை நான் குறிப்பிட விரும்புகிறேன்., ஒரு வருஷம்,



ஆறு மாதம் பில் கட்டினால்கூட முழுத்தொகையை மாதந் தோறும் கட்டி ரசீது வைத்திருந்தாலும், மீண்டும், ரூ. 1,000 ரூ. 2,000 கட்ட வேண்டுமென்று மின் துறையிலேயிருந்து பில் வருகிறது. ஒரு விவசாயி, கிராமத்தான், அதிகமாகப் படிக்கத்தெரியாதவன், பைல் வைத்திருக்க முடியாது. அவர் கட்டிய மின்சார பில்லுக்கான ரசீதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. அதைச் செய்ய வேண்டியது மின் வாரியம். சிறு தொழிலுக்கும் அப்படித்தான், மில்காரர்களுக்கு, பிரஸ்காரர்களுக்கு, ஐஸ் பாக்டரி வைத்திருப்பவர்களுக்கு, எல்லோருக்கும் அனுப்பி, திருப்பித் திருப்பிக் கட்டச் சொல்கிறார்கள். 'நான் ஏற்கனவே கட்டிவிட்டேன், கட்டாமலா நீங்கள் மறுபடியும் அனுமதித்தீர்கள் 'என்றால், நீ கட்டினாயோ இல்லையோ எனக்குத் தெரியாது. இப்போழுது ரூ. 1,500/- கட்டு என்கிறார்கள். நான் ஏற்கனவே கட்டிவிட்டேனே, இப்பொழுது ரூ. 1,500/- எப்படி கட்ட முடியும்? இயலுகிற காரியமா? நடக்கிற காரியமா? நான் எங்கே போவேன்' என்றால் எங்கே போவியோ, தெரியாது, இப்பொழுது கட்டு' என்கிறார்கள்.

(பிற்பகல் 1-20)

ஏன் பணம் கட்டியதற்குப் பில் வேண்டுமே, நீதான் காட்ட வேண்டும் என்று கேட்டால் ஒவ்வொரு விவசாயியும் பில் வைத்துக்கொண்டிருப்பார்கள் என்று நாம் எப்படி எதிர் பார்க்க முடியும்? அதற்கான ரிக்கார்டு இல்லையா? அந்த ரிக்கார்டில் பதிவு செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. சில நேரங்களில் பதிவு செய்திருக்கிறார்கள், ஆனால் பல நேரங்களில் பதிவு செய்வதில்லை. இதனால் சாதாரணமாக விவசாயி 100 ரூபாய், 200 ரூபாய், 1,000 ரூபாய் 2,000 ரூபாய் என்று இரண்டாவது முறையாகக் கட்டுகின்ற அளவிற்கு இருக்கிறது. ஆனால் இதற்காக ஐந்தாறு சீஃப் என்ஜினியர்கள், ஏகப்பட்ட அதிகாரிகள், பெரிய நிர்வாகம் யானை போல இருக்கிறது. கட்டணம் கட்டியதற்கான ரிக்கார்டுகூட இல்லாமல் எலக்ட்ரிசிட்டி போர்டு என்ன?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதற்கென்று பைல் வைத்து அதில் என்ட்ரி போட்டிருக்க வேண்டுமா இல்லையா? விவசாயிகள் எப்படிப் பாதுகாத்துக் கொண்டு வந்து காட்டுவார்கள் என்பதை எதிர் பார்க்க முடியும்? நாமே இருக்கிறோம், அதிகாரிகளாக இருக்கிறோம், கட்டணம் கட்டியதற்குப் பில்லைக் காட்டு என்றால் ஒத்துக் கொள்வோமா? எலக்ட்ரிசிட்டி போர்டு அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்களைக் கேட்டால் ஒத்துக் கொள்வார்களா?

இவ்வளவு பெரிய சிரமங்களை விவசாயிகளுக்கும், நிர்வாகத்திற்கும் உண்டாக்கும் இதுபோன்ற தவறுகளை எதிர் காலத்திலே உண்டாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரம் வருகின்ற நிலைமையைப் பற்றிச் சொன்னால் எதிர் காலத்திலே நடவடிக்கை எடுப்பதற்குப் பயன்படும் என்று கருதுகிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற கடைசி ஊர் பகடப்பாடி என்பது. அங்கே ஒரு நாள் இரவு 10 மணிக்கு துக்கம் ஏற்பட்டு விட்டது. இறந்தவரின் உற்றார் உறவினர்கள் சுமார் 1,000 பேர் கூடியருக்கிறார்கள். திடீரென்று மின்சாரம் வருகிறது- உடனே பிணத்தை விட்டுவிட்டு வயலுக்கு ஓடுகிறார்கள் அங்கே போனதும் 10 நிமிடங்கள்தான் தண்ணீர் வருகிறது. பிறகு திரும்பி வருகிறார்கள். இப்படி மின்சாரம் வந்துவிட்டது என்று சொன்னால் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள். பாதி தூரத்திற்குச் சென்றதும் எதிரே வருகின்றவர்கள் மின்சாரம் நின்று விட்டது என்று சொல்கிறார்கள். பிறகு திரும்பி வருகிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்பொழுது சொல்லியது ஞாபகத்திற்கு வருகிறது. குழந்தை பிறக்கின்ற நேரம்தான் தெரியாது என்று சொல்லுவார்கள், ஆனால் அதைக்கூட இப்பொழுது கண்டு பிடித்து விட்டார்கள், ஆனால் மின்சாரம் எப்பொழுது வரும் என்று யாருக்கும் தெரியவில்லை என்று சொன்னார். அதைப் போல யாருக்குமே தெரியாத இரகசியமாக மின்சாரம் வருவதும் போவதும் இருக்கிறது. இத்தகைய நிகழ்ச்சிகளை எதிர்காலதிலே தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் விவசாயிகள், மற்ற ஜனங்கள் மிகவும் சிரமப் படுகிறார்கள்.

மின்சாரம் இல்லாத காரணத்தினால் சீமெண்ணெயின் விலையும் ஏறியிருக்கிறது. மோட்டார் என்ஜினல் சீமெண்ணெயை விட்டு ஓட்டலாம் என்றால் அதுவும் லிட்டருக்கு ஒரு ரூபாய் அறுபது காசாக விற்றது நான்கு ரூபாய்க்குப் போனது. ஆனால் அதுவும் கிடைக்கவில்லை. மோட்டாருக்கு என்று ஒரு எண்ணெயை விற்கிறார்கள், அதுவும் 500 பேர் கியூவில நின்றால் 50 பேர்களுக்குத்தான் கிடைக்கிறது, மீதி 450 பேர் டின்னும் கையுமாகப் பிரமாதமாக ஊர்வலமாக வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டது என்று இந்த அறிக்கையிலேயே கொடுத்து இருக்கிறார்கள், கிராமங்களுக்கு அளித்த மின் வளர்ச்சி வீடுகளுக்கு கொடுத்த மின் வளர்ச்சி பற்றி. அதில் முக்காலே மூன்று வீசம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலும், அதற்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் கொடுக்கப்பட்டதாகத்தான் இருக்கும்



துரித வளர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்திலே இருந்தது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அந்த உண்மை தெரியும் என்று கருதுகிறேன். இதில் போட்டா போட்டி தேவைதான். இந்த வளர்ச்சியை இன்னும் கூடக் கொடுக்கலாம். ஆனால் இந்தக் குறைபாடுகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல காரணம், இன்றைய ஆட்சிதான் காரணம் என்பதை ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்ஜின் விலையைப் பொறுத்தவரையில் 2,500 ரூபாய்க்கு விற்ற என்ஜின் 4,500 ரூபாய், என்று விற்கிறது. 3,500 ரூபாய்க்கு விற்ற மோட்டார் ஆயில் என்ஜின் 6,000 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் ஏற்கனவே 1978–79-இல் அரசு கொடுத்த உறுதிமொழியை நம்பி விவசாயிகள் கடன் வாங்கி மெஷின்களை வாங்கி வைத்திருக்கிறார்கள். பம்பு செட்டுகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் அவைகளுக்கு இன்னும் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்பொழுது புதிய ஆயில் என்ஜினை வாங்கவேண்டுமென்றால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொல்லைகளை விவசாயிகள் அனுபவித்தார்கள், இன்றைக்கும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இம்மாதிரி குறைகளையெல்லாம் போக்குவதற்கு மின்துறை நிச்சயமாக எங்களுடைய யோசனைகளை ஏற்றுக் கொள்ளும் என்பதற்காகத்தான் இந்த வாதங்களை நான் வைக்கிறேன். இன்னும் இரண்டொரு குறைகளைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துகொள்கிறேன்.

மின்சாரம் எல்லா ஊர்களுக்கும் தரப்பட்டிருக்கிறது, எல்லாக் கிராமங்களுக்கும் தரப்பட்டிருக்கிறது என்ற வாதத்தை ஓரளவிற்கு ஒத்துக் கொள்ளலாம். அதில் சந்தேகமில்லை. ஆனால் விவசாயத்திற்கு மின்சாரம் தராத ஊரே பலயிடங்களில் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் அமைச்சரவர்களுக்கும் தெரியும், காரியானூர் என்ற ஊரிலே மின்சாரம் இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு அங்கே நூற்றுக்கணக்கான, ஏன், ஆயிரக்கணக்கான மின் இணைப்புகள் தரப்பட வேண்டும். என்ன காரணமோ தெரியவில்லை இன்னும் அவைகளுக்குத் தரப் படாமல் இருக்கிறது. எனவே, அதற்கு ஸ்பெஷல் கன்சிடரேஷன் என்ற முறையில் ஒரு தனிச் சலுகை காட்டியாவது அந்த ஊரிலே உள்ள நிலைமையைக் கவனிக்க வேண்டும். அந்த ஊரிலே ஒரு பம்பு செட்கூட ஓடவில்லை. ஆனால் மின்சாரம் இருக்கிறது.

வீதி விளக்குகளைப் பொறுத்தவரையில் குண்டு விளக்கு களுக்குப்பதில் டியூப் விளக்குகள் போட்டதாகச் சொல்கிறார்கள். அது உண்மயையாகக்கூட இருக்கலாம். ஆனால் விளக்குகள் எரிய வில்லையே, விளக்கின் பயன் எரிவது தானே எரியாமல் எதற்கு விளக்கு? நேற்றையதினம் கூட நான் இந்திரா நகருக்குச் சென்றிருந்தேன். அங்கேயும் மின்சாரம் இல்லை இதிலிருநது ஒன்று தெரிகிறது. இந்திரா நகருக்கும் மின்சாரம் இல்லை; கிராமங்களுக்கும் மின்சாரம் இல்லை; இந்திரா நகரும் இருண்டிருக்கிறது, கிராமங்களும் இருண்டிருக்கின்றன, நகரங் களும் இருண்டிருக்கின்றன. ஆனால் அறிக்கையிலே மட்டும் வெளிச்சம் இருக்கிறது. அதையெல்லாம் கொஞ்சம் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரைக்குடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கடந்த 25-ந் தேதி நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு நோக்கத் திற்காகக் கொண்டாடப்பட்ட இந்தி எதிர்ப்பு தியாகிகள் வீர வணக்க நாள்—அதற்குக்கூட மின்சார இணைப்பு மறுக்கப்பட்டது. நாங்கள் எல்லாம் பெட்ரோமாக்ஸ் வைத்துப் பேசினோம். தந்தை பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் 50,60 ஆண்டுகளுக்கு முன்னாலே பேசியதைப்போல, பேசினோம். கூடியிருந்தவர்களின் முகத்தைக் கூட எங்களாலே பார்க்க முடியவில்லை. இருந்தாலும் பேசினோம். இப்படிப்பட்ட ஓரவஞ்சனை இல்லாமல் இருக்கவேண்டும். விவசாய அமைச்சருக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு ஒரு நீதி என்ற பாகுபாடு இல்லாமல் கூட்டம் நடத்துவதற்கு மட்டும் நல்ல முறையில் மின் இணைப்பைத் தரவேண்டும். நாங்கள் வேண்டுமானால் ஒரு கண்டிஷன் தருகிறோம். இந்த மின்சாரப் பற்றாக்குறையை வேண்டுமானால் கூட்டங்களில் பேசாமல் இருக்கிறோம். விவசாயத்திற்கு நீங்கள் மின்சாரம் தருகிறீர்கள். ரெகுலேட் பண்ணியிருக்கிறீர்கள், ரொம்ப நன்றி. பாராட்டு. ஆனால், நீங்கள் சொல்வது 6 மணி நேரம் மாற்றி மாற்றி தருகிறோம் என்று. ஆனால் 4 மணி நேரமோ, 4½ மணி நேரமோ கிடைக்குமா என்பது சந்தேகம். ...ரிலேயிருந்து ரிப்போர்ட் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி சொன்னதைப்போல அதையும் பார்த்து நீங்கள் ரெகுலேட் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராத்திரியிலே மின்சாரம் வழங்கி விவசாயிகளுக்கு அதிக பயன் இல்லை. விதை விதைக்க முடியாதிருக்கிறார்கள். தண்ணீர் பாய்ச்சி யூரியா மற்றும் இடுபொருள் போடுகிறபோது மின்சாரம் அவசியம் தேவை. ஒரு நேரத்தில் யூரியா போட்டு விட்டு இன்னொரு நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியாது. ஆகவே சில வேலைகளை தண்ணீர் பாய்ச்சுகிறபோது தான் விவசாயிகள் செய்ய வேண்டும். அதனாலே பகலிலே இரண்டு பிரிவாக பிரித்து காலை 6 மணிக்கு ஒரு பகுதிக்கும் மாலை 6 மணிக்கு ஒரு பகுதிக்கும் மின்சாரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நம்முடைய கவர்னர் பெருமான் உரையில் முக்கியமான விஷயம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நிலைமை சரியில்லை அதனாலே மின்சாரம் கட்டணத்தை நாங்கள் உயர்த்துவதாக இருக்கிறோம், என்ற அபாய அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக் கிறது. அதைப்பற்றி ஏடுகள் என்னென்ன எழுதியிருக்கிறார்கள் என்பதை எல்லாம், இந்தத் துறையிலே கற்று உணர்ந்து திறமையாக விஷயங்களை புரிந்துகொள்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலுடைய மிக முக்கியமான ஆங்கில தமிழ் நாளேடுகள் எழுதியுள்ளதை கவனிக்க வேண்டும். உயர்த்தியதற்கு கூட பரவாயில்லை. ஆனால் விவசாயமும், தொழிலும் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று தினமணி உட்பட—மக்கள் குரல் எழுதியதாக எனக்கு ஞாபக மில்லை—மற்ற பத்திரிகைகள் அனைத்தும் எழுதியிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே இதை கவனிக்க வேண்டும். நமக்கெல்லாம் தெரிந்த ஒரு பழமொழியின்படி தான் இப்போது விவசாயி இருக்கிறான். கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனில் மடியும் நிலையில் இருக்கிறான். அவனுக்கு கடனும் கொடுக்க முடியாதநிலை. இப்போது மேச்சங்காட்டு வெள்ளாமை, நஞ்சை வெள்ளாமை இரண்டுமே வாங்கியுள்ள விவசாயக் கடன் எல்.எம். பாங்க் கடன் தனியார் கடன் போன்றவற்றை அடைப்பதற்கு சான்சே கிடையாது. ஏக்கருக்கு ஐந்து மூட்டை கொத்தமல்லி, விளையும் என்று போட்டால் ஏக்கருக்கு ½ மூட்டை கொத்தமல்லி கூட விளையவில்லை. ஆகவே இவ்வளவு மோசமான சூழ்நிலையில் தமிழ்நாட்டு விவசாயி இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஒருங்கிணைப் பான காரியத்தை செய்ய வேண்டும். அதற்கான சிந்தனை தெளிவும் அவருக்கு உண்டு என்பது என்னுடைய நம்பிக்கை. என்ன ஒருங்கிணைப்பு என்றால் பொதுவாக மின்துறை அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால்,—தயவு செய்து அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. கல்லில் சாம்பல் கலந்து வருகிறது என்று இங்கே கொடுத்திருக்கிறீர்கள். ரிப்போர்ட் வருகிறது. அதிகாரிகளைக் கேட்டால்—யார் என்று கேட்கக் கூடாது.—சும்மா சொல்லவேண்டுமென்று சொல் கிறார்கள். இதெல்லாம் ஒரு சாக்கா? என்று சொல்கிறார்கள். ...ட் இஸ் நாட் தி பிராப்பர் ரீசன் யார் சொன்னார்கள் என்று கேட்கக்கூடாது. நாம் எல்லோரும் சாதாரணமானவர்கள், விவசாயிகள்; என்ஜினியருடைய அப்பா கூட விவசாயி தான். இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தில் ரெயில்வே வேகன் ஒத்துழைக்க வேண்டும்; கப்பல் போக்குவரத்து ஒத்துழைக்க வேண்டும்; நிலக்கரி தேவையான அளவிற்கு சப்ளை ஆக வேண்டும். இதையெல்லாம் எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் தான் சொல்லவேண்டும். ஆனால் நீங்களோ எங்களுக்கு ரிப்போர்ட் வைத்துவிட்டு, இன்னென்ன காரியங்களால் எங்களுக்கு மின் தட்டுப்பாடு வந்து உற்பத்தி அதிகமாக பண்ணமுடியவில்லை, இயந்திரங்கள் எல்லாம் பழுதடைந்து விட்டன, என்று அறிக்கை வைத்திருக்கிறீர்கள். இயந்திரங்கள்

பழுதாகிவிட்டதற்கு விவசாயி என்ன பண்ணுவான்? எம்.எல்.ஏ
தான் என்ன பண்ண முடியும்? டிபார்ட்மென்ட் இருக்கிறது;
எக்ஸ்பர்ட்ஸ் இருக்கிறார்கள். எல்லோரும் இருக்கிறார்கள்.
அமைச்சர் கூட சொல்லக்கூடும். மந்திரி மட்டும் என்ன பண்ண
முடியும் என்று; ஆனால் இந்த இலாக்கா—இந்த ஆட்சி,
உங்களிடம் இருக்கிறது. நீங்கள் தான் அதைப்பற்றி கவனிக்க
வேண்டும் தவிர, எங்களை மாதிரி மின்சாரம் இல்லை, நிலக்கரி
வரவில்லை என்றால் அதற்காக உங்களோடு சேர்ந்து போராடுவோம்.
அதிலே எந்த ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் நாங்கள்
கொடுக்கிற பதிலையே நீங்கள் எங்களுக்கே வினாவாக வைத்தால்
நாங்கள் யாரிடம் போய் பதில் பெறமுடியும். ஆகவே ஒருங்
கிணைப்புத் திட்டமாக எல்லா யோசனைகளையும் பெற்று
நீங்கள் செய்யவேண்டும். எத்தனையோ முறை நீங்களும்
வலியுறுத்தியிருக்கிறீர்கள். நிச்சயமாக மத்திய அரசாங்கம் அந்த
குறைகளை எல்லாம் கவனிக்கவேண்டும். இந்த தமிழ்நாட்டின்
வளர்ச்சிக்கு அனைத்து பேர்களும் மத்திய அரசுடன் ஒத்துழைக்க
வேண்டும்.

(பிற்பகல் 1—30)

இதில் என்ன தகராறு என்றால் சில அமைச்சர்களின்
மாறுபட்ட கருத்துக்கள்—அதாவது சில அமைச்சர்கள் பல
மேடைகளிலே மத்திய அரசு நாங்கள் கேட்டால் கொடுக்கிறது
திட்டங்களை அப்படியே ஒப்புக்கொள்கிறது; சுமுகமான உறவு
இருக்கிறது; மறுப்பதே இல்லை என்று ஒரு பக்கத்திலே
பேசுகிறார்கள்.

மறுபக்கத்திலே மத்திய அரசு எதைக்கேட்டாலும் கொடுப்பது
கிடையாது என்று பேசுகிறார்கள். இது முன்னுக்குப் பின்
முரணாக இருக்கிறது என்று கூறி பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி
கூறிமுடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 7—2—1983
தேதிகாலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.



## (8) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

135. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு பட்டுப்புழு முட்டை (உற்பத்தி, வழங்கல் மற்றும் பகிர்வு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 31.3.1981 ஆம் தேதியிடப்பெற்ற தொழில் துறையில் 434 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பட்டுப்புழு முட்டை (உற்பத்தி வழங்கல் மற்றும் பகிர்வு) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23 1956) 19 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏழனபதாள்கள்

23 தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1983) நகலும் இணைப்பும்.

24. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983) நகலும், இணைப்பும்.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை—விவாதம்—(தொடர்ச்சி) .. 558—614

திரு. வெ. அரங்கராசன் .. .. .. 558—561

திரு. து. புருஷோத்தமன் .. .. 561—565

திரு. இரா. கருப்பையா .. .... .. 565—571

திரு. ப. தீர்த்தராமன் .. .. .. 572—576

திரு. டி. மணி .. .. .. .. 576—581

திரு. வ. சத்தியமூர்த்தி .. .. 581—584

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி .. .. 585—599

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் .. 599—614

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 615

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, பிப்ரவரி 7, 1983

தை 25, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு—2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்அல்லது இல்லை பிற.''

யாம் நுட்பமான அறிவுடையோம் என்று சொல்லிக்கொள்ளத் தக்க அறிவுடைய அதிகாரிகள் முதலியோர் பிறருடைய உள்ளக் கருத்துக்களை அறிந்து கொள்ளப் பயன்படும் அளவுகோல் யாது என ஆராய்ந்து பார்க்கின்றபொழுது 'கண்களைத் தவிர வேறொன்றும் இல்லை' என்பது புலனாகும்.

### I. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

நிலை உயர்த்தப்பட்டுள்ள கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள்

* வினா எண் 160—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்கள் B2 நிலையிலிருந்து B1 நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளதால் வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப்படி ஆகியவை தமிழக அரசு அலுவலர்களுக்கு அதிகரித்து வழங்கப்படும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகரங்களில் பணியாற்றும் அரசுப் பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி அதிகரித்து வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் கோவை, மதுரை ஆகிய நகரங்களில் பணியாற்றும் அரசுப் பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி, வாடகைப்படி அதி கரிப்பது சம்பந்தமாகப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன் னார்கள். கோவை, மதுரை ஆகிய நகரங்களை மாநகராட்சி என்று அறிவித்து—கோவையைப் பொறுத்தவரையில் மூன்று ஆண்டுகள் ஆகிறது, மதுரையை மாநகராட்சியாக்கி எத்த னையோ ஆண்டுகள் ஆகிவிட்டது—பல்லாண்டுகள் ஆகிய பின்னரும், இதுவரையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நகர ஈட்டுப்படி கொடுக்காத காரணத்தால் அவர்கள் இழப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் உடனடியாக இதைப் பரிசீலித்து, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவற்றை உடனடியாகக் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நாம் மாநகராட்சி மன்றமாக அவைகளை ஆக்கினாலும், மத்திய அரசு அந்த நகரங்களை எந்தப் பிரிவில் சேர்த்து வைத்து இருக்கிறார்களோ அந்தப் பிரிவின் அடிப்படை யில்—அதாவது ஏ, பி1, பி2 மற்றும் சி என்ற அடிப்படையில் பல்வேறு நகரங்களைப் பிரித்து வைத்து இருக்கிறார்கள். நகர ஈட்டுப்படி, வாடகைப்படி ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு தற்போதுதான் மதுரை, கோவை ஆகிய நகரங் களை B2 நிலையில் இருந்து B1 நிலைக்கு உயர்த்தியிருக்கிறது. அந்த வகையில் மத்திய அரசு அங்குள்ள பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி, வாடகைப்படி ஆகியவற்றை மாற்றியமைத்து இருக்கிறது. ஆகவே, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங் கப்படுகின்ற நகர ஈட்டுப்படி, வாடகைப்படி ஆகியவை குறித்து நாம் மத்திய அரசுக்கு எழுதிக்கேட்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருநது அதற்கான பதில் வந்ததும் அதன் பேரில் மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த நகரங்களை தரம் பிரிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போதுதான் மதுரை, கோவை ஆகிய நகரங்களுக்கு தகுதி உயர்வு அளிக்கப் கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசு தற்போது அநதத் தகுதியை உயர்த்திக் கொடுத்து இருப்பதால், அரசாங்கம் அதைப்பற்றிப் புரிசீலிக்கிறது என்று சொன்னாலும், மதுரை, கோவை ஆகிய நகரங்கள் என்றைக்கு மாநகராட்சி அந்தஸ்த்துக்கு உயர்த்தப்பட்டனவோ, அந்தத் தேதியில் இருந்து அவர்களுக்கு நகர ஈட்டுப்படி, வாடகைப்படி உயர்த்திக் கொடுக்கப்படுமா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த நகரங்கள் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட தேதியில் இருந்து தருவது என்பது முடியாது. அது எப்போது பி2 நிலையில் இருந்து பி1 நிலைக்கு மத்திய அரசால் உயர்த்தப் பட்டதோ அந்தத் தேதியில் இருந்துதான் கணக்கிட வேண்டி வரும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்த இரண்டு நகரங்களை எந்தத் தேதியில் பி2 நிலையில் இருந்து பி1 நிலைக்கு உயர்த் தியது என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போலவே, இதனால் எவ்வளவு ரூபாய் அதிகம் செலவாகும் என்று அரசு எதிர்பார்க்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்தத் தேதியில் அது மாற்றம் செய்யப்பட்டது போன்ற விவரங்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. அண்மையில் தான் பி2 நிலையில் இருந்து பி1 நிலைக்கு அவைகள் உயர்த்தப்பட்டன. மத்திய அரசு ஏ, பி1, பி2 மற்றும் சி பிரிவு நகரங்களில் பணியாற்றும் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கின்ற நகர ஈட்டுப் படி, வாடகைப்படி ஆகியவற்றைப் பற்றிய விவரங்களைக் கேட்டு இருக்கிறோம். அதிலே சிலபல மாற்றங்களை மத்திய அரசு செய்து இருக்கிறது. அது பற்றிய விவரங்களை மத்திய அரசிடம் கேட்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து அது பற்றிய விவரங்கள் வந்தபிறகு மாநில அரசு அதனுடைய அடிப் படையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**திரு. மா. சின்னராஜ் :** தலைவரவர்களே, இப்படி நகரங் களுடைய அந்தஸ்தை உயர்த்தும் போது ஒவ்வொரு இலாகா விலும் ஒவ்வொரு தேதியிலிருந்து படிகளை உயர்த்திக் கொடுக் கின்ற நிலைமை இருக்கிறது. சில இலாக்காக்களில் அதைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, அரசு நகரங்களின் அந்தஸ்தை உயர்த்திய தேதியிலிருந்து எல்லாத் துறையினருக்கும் சம்பள உயர்வு அல்லது படி உயர்வு பொருந்தும் என்று பொதுவான உத்தரவை வழங்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர் களே, அது பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டேன். விவரங்கள் மத்திய அரசிடம் இருந்து வந்தவுடனே கோவை, மதுரை மாநக ரங்களுக்கு படிகளை உயர்த்தி வழங்குவது பற்றி முடிவு செய்யப் படும். அப்படி முடிவு எடுக்கப்படும்போது மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் மனதிலே கொள்ளப் படும்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவரவர்களே, பி-2, பி-1 நகரங்களைப் போன்று மட்டுமல்ல. இன்றைய தினம் மாநகராட்சிகளில் என்ன வாடகை வாங்கப்படுகிறதோ அதைப்போன்றுதான் அநேகமாக எல்லா நகரங்களிலும் வாடகை உயர்த்தி வாங்கப்படுகிறது. ஆகவே, எல்லா நகரங்களிலும் சம நிலையில் படி, வாடகை உயர்வு அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஒரு முறையை செயல்படுத்த அரசுக்கு இயலாது. மத்திய அரசு மக்கள் தொகை அடிப்படையில், அங்கே இருக்கின்ற வாழ்க்கை வசதிகள் அடிப்படையில் ஏ, பி-1, பி-2, சி என்று தரம் பிரித்து, கணக்கிடுகிறார்கள். அண்மையில்தான் பி-2 நிலையில் இருந்த கோவை, மதுரை மாநகராட்சிகளை பி-1 நிலைக்கு மத்திய அரசு உயர்த்தியிருக்கிறது. அந்த அளவுக்கு நாம் நகர ஈட்டுப் படியை உயர்த்தவேண்டும். அது பற்றிய விவரங்களை மத்திய அரசிடம் நாம் கேட்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து பதில் வந்தவுடன், அந்த அடிப்படையில் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### நியாய விலைக் கடைகள் மூலம் மலிவு விலையில் வழங்கப்படும் அரிசிக்கு மானியம் அளிக்கும் திட்டம்

* வினா எண். 161—திரு. பொ. உத்திராபதி, திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விநியோகிக்கப்படும் அரிசிக்கு, உபயோகிப்பவர்களுக்கு மலிவு விலையில் கொடுக்க வேண்டுமென்பதற்காக அரசு மானியம் கொடுக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், ஒரு கிலோ அரிசிக்கு எவ்வளவு தொகை மானியமாகக் கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) மற்றும் (ஆ): நியாய விலைக் கடைகள் மூலம் மலிவு விலையில் அரிசி வழங்குவதால் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கிலோவிற்கு சராசரியாக 70 காசுக்கு மேல் நட்டம் ஏற்படுகிறது. ஏற்படும் இந்நட்டத்தை ஈடு செய்ய அக்கழகத்திற்கு மானியம் அளிப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.



**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, ஒரு கிலோ அரிசிக்கு 70 காசு மானியம் அளிக்க வேண்டியிருக்கிறது ; ஏனென்றால் அந்த அளவுக்கு இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். கொள்முதல் செய்வது ஏறத்தாழ ஒரு குவிண்டாலுக்கு 110 ரூபாய் தான். அப்படியானால் ஒரு கிலோ அரிசிக்கு ரூ. 1.60 தான் செலவாகும். இதரச் செலவுகள் எல்லாம் சேர்ந்து ஒரு கிலோ அரிசிக்கு ரூ. 1.80 தான் வரும். ஆகவே, 70 காசு மானியம் கொடுக்க வேண்டிய நிலை எப்படி வரும் ? கொள்முதல் விலைக்கும் விற்பனைக்கும் இடையே உள்ள இந்த வித்தியாசம் எப்படி வருகிறது ? இந்த 70 காசு மானியம் கொடுப்பதன் மூலம் விவசாயிகள் கூறுவதைப் போன்று குவிண்டாலுக்கு 150 ரூபாய் கொடுக்கலாமே. ஆகவே, இழப்பைக் குறைக்கவும், விவசாயிகளுக்கு விலையை உயர்த்திக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திலே கொள்முதல் செய்வது, மத்திய அரசின் மூலம் கொள்முதல் செய்வது என்று மட்டும் அல்லாமல், நாம் விநியோகம் செய்கின்ற அரிசியை நம்முடைய மாநிலத்தின் நுகர் பொருள் வாணிபக் கழகத்திடமிருந்தும் பிற வாணிபக் கழகங்களிடமிருந்தும் வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசு தருகின்ற அளவை வைத்துப் பார்த்தால் 50 காசு மானியம் என்ற அளவுக்கு வரும். எல்லாவற்றையும் சேர்த்து ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் சராசரியாக கிலோவுக்கு 70 காசு இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பை மானியமாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், நாம் ஏற்கெனவே அதற்காக வழிவகை முன்பணம் அளித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான வட்டிப் பணமும் கழகம் தர வேண்டியிருக்கிறது. அந்த வகையில் மொத்தத்தில் சலுகை விலையில் அரிசி விநியோகம் செய்வதன்மூலம் சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 36 கோடி ரூபாய் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போன்று இந்த ஆண்டு 40 அல்லது 46 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படும் என்று தெரிகிறது. அரிசி, நெல் கொள்முதல், அதற்கான போக்குவரத்துச் செலவு, மற்றக் கணக்குகளை எல்லாம் பார்த்து சராசரியாக இந்த இழப்பு ஏற்படுகிறது என்ற கணக்கு தரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-10)

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட அரசாங்கத்தின் வறட்சி நிதியையும் சேர்த்து ஒரு குவிண்டாலுக்கு ரூ. 137 தான் கொடுக்கிறார்கள், நெல்லுக்காக. அதிலே விவசாயிகளுடைய முக்கியமான கோரிக்கையே, தஞ்சை மாவட்டம் அல்லது வேறு எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி, விவசாயிகள் கேட்பது 150 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள், அப்படிக் கொடுத்தாலும் கூட ரூ. 2.50 பைசா எல்லா விதமான செலவையும் சேர்த்து ஒரு

கிலோ அரிசி அடக்கம் ஆகிறது. அதிலே 70 பைசா மானியம் என்று கொடுத்து விட்டோம் என்றால் ரூ. 1.80 க்கு நல்ல அரிசி ஐ. ஆர். 20, என்று சொல்லக்கூடிய, பொன்னி என்று சொல்லக் கூடிய மிக நல்ல அரிசியை நாட்டு மக்களுக்கு, நாடு முழுவதற்கும் கொடுக்கலாமே. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசித்து, இந்த 70 பைசா மானியம் கொடுக்கும்போது, மலிவான விலையில் மக்களுக்கு அரிசி கொடுக்க முனைவதோடு, உற்பத்தி பண்ணக்கூடிய விவசாயிகளுக்கு அவர்கள் கேட்கக் கூடிய 150 ரூபாய் விலையைத் தரலாமே. அதைப்பற்றி ஒரு சரியான நடவடிக்கை எடுக்க, சம்பந்தப்பட்ட மற்றக் கட்சிகளையும் சேர்த்து கலந்து ஆலோசித்து ஒரு நடவடிக்கையை எடுப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு 1982 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நஷ்டத்தினுடைய கணக்கைப் பார்க்கிறபோது சாதாரணமாக நெல்லின் கொள்முதல் விலை சென்ற ஆண்டு 122 ரூபாய். சன்ன ரகம் 126 ரூபாய், மிகச் சன்ன ரகம் 130 ரூபாய் இந்த மிகச் சாதாரண ரகத்தை 122 ரூபாய்க்கு கொள்முதல் செய்தாலும், அரிசியின் அடக்கவிலை 256 ரூபாய் ஆகிறது. விற்பனை விலை 175 ஆகத்தான் இருக்கிறது. அதிலே கணக்கிட்டால் குவிண்டால் ஒன்றுக்கு 81 ரூபாய் நட்டம் வருகிறது என்றால் ஒரு கிலோவுக்கு 81 பைசா நமக்கு நட்டம் வருகிறது.

அதே மாதிரி சன்ன ரகம் 126 ரூபாய். அடக்கவிலை 263. ரூபாய் விற்பனை வரி 200. இதிலே 63 காசு கிலோவுக்கு நட்டம் வருகிறது. மிகச் சன்ன ரகம் 130 ரூபாய் கொள்முதல் விலை, அரிசியின் அடக்க விலை 270 ரூபாய் விற்பனை வரி 215, இதிலே 55 காசு ஆகிறது. இதனால்தான் முதலிலேயே சராசரி 70 காசு என்று நான் குறிப்பிட்டேன். ஆகவே அரிசியினுடைய கொள்முதல் விலை எப்படி இருக்கவேண்டும் என்பதை மத்திய அரசு நிர்ணயிக்கிற விலைக்குத்தான் நாம் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் போனஸ் கொடுத்தாலும் கூட, மத்திய அரசு அதனை ஏற்றுக் கொள்வதில்லை என்று நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். போனஸ் கொடுத்தாலும் கூட, அதற்கு கிரெடிட் தரவேண்டாம் என்று ரிசர்வ் வங்கியிடம் மத்திய அரசு சொல்லியிருக்கிறது. ஆகவேதான் இப்போது கூட நாம் 15 ரூபாய் கொடுப்பதையும் வறட்சிச் சலுகை என்ற பெயரிலேயே தருகிறோமே தவிர, போனஸ் என்றோ வேறு வகையிலோ தரவேயில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திலிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 400 டன் நெல் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள அரிசி அரவை ஆலைகளுக்கு கொடுக்கப்பட்டு, இன்னும் அரிசி, நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு திருப்பிக் கொடுக்கப் பெறாமல் இருக்கிறது. இதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும்....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசி மலிவு விலையில் கொடுக்கப்படுவதைப் பற்றிக் கேள்வி. ஸ்ரீவில்லிப்புத்தூரில் முறைகேடுகள்பற்றி கேள்வி கேட்டால், அமைச்சர் அவர்கள் எப்படி பதில் கூற முடியும்?

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நான் வேறு கேள்வி கேட்டுவிடுகிறேன்—அது பெரிய நாட்டுப் பிரச்னை, அரிசியை கடத்துகிறார்கள். தயவுசெய்து அனுமதிக்க வேண்டும். சென்னையிலேயிருந்து கொல்லத்திற்கும், செங்கோட்டைக்கும் 5 லாரிகளில் நெல் கடத்தப்படுகிறது. வழியில் ஆங்காங்கேயுள்ள கீழ்மட்ட அதிகாரிகள் நெல்லை பிடித்து விற்று விடுகிறார்கள். ஆகவே எல்லைகளில் சரியான பாதுகாப்பு போடப்படுமா ? இத்தகைய கடத்தலுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் எல்லைப் புறங்களிலே எந்தெந்த வகையில் தணிக்கை செய்யவேண்டுமோ அந்தந்த வகைகளில் பாதுகாப்புகள் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று சில பல அதிகாரிகள் தவறு செய்வார்களேயானால், அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டுக் குறித்துக் கொடுத்தால், தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் விற்கிற அரிசிக்கு என்ன மானியம் நமது அரசு கொடுக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நியாய விலைக் கடைகளில் பல மாதங்களாக கோதுமை சப்ளை செய்யாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? கோதுமையை சப்ளை செய்வதற்கு மத்திய அரசு ஏதாவது மானியம் தருகிறார்களா ? அல்லது நமது அரசு மானியம் கொடுக்கிறதா ? கொடுக்கிறது என்றால் எந்த விகிதத்தில் கொடுக்கப்படுகிறது ? அந்த விலையில் ஏன் கோதுமை சப்ளை ஆகாமல் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி அரிசியைப் பற்றியது. இதில் கோதுமையைப் பற்றிக் கேட்டால் எப்படி? (குறுக்கீடு) உணவுப் பொருள்கள் எல்லாமே சாப்பிடுபவை தான். அவைகள் எல்லாவற்றிற்கும் அமைச்சரிடம் பதில் இருக்காது. கோதுமையைப்பற்றிய கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருந்தால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும்
தொடர்பு இல்லை. விவரங்களும் இல்லை. பொதுவாக நம்மு
டைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் குறைந்தது 10
ஆயிரம் டன் வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வரு
கிறோம். ஆனால் மத்திய அரசு 3 ஆயிரம் டன்னிலிருந்து
4 ஆயிரம் டன் வரைதான் தருகின்ற காரணத்தால் இப்படிப்
பட்ட பற்றாக்குறை ஆங்காங்கே ஏற்படுகின்றது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வறட்சி காரணமாக பதுக்கல் பேர்வழிகளால்
அரிசி பதுக்கப்பட்டு தாறுமாறாக ஏறிவருகின்ற அரிசியின்
விலை உயர்வைக் கட்டுப்படுத்தி தற்போது ஒரு கிலோவிற்கு
70 பைசா என்று தரப்படுகின்ற மானியத்தினை ஒரு ரூபாயாக
ஆக்கி வாசனைப் பொருட்களின் மீதும், லாகிரி வஸ்துக்களின்
மீதும் அதிக வரி வசூலித்து அந்த நட்டத்தினை ஈடு கட்டி இந்த
நாட்டு மக்களை மன மகிச்சியோடு வாழ வைக்க அரசு
முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அரிசித் தட்டுப்பாடு இல்லா
மல் செய்வதற்கு எந்தெந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டுமோ அதைப்பற்றி அரசு உன்னிப்பாகக் கவனித்து
வருகின்றது. பொதுச் சந்தையிலேயும் அரிசி வினியோகம்
தாராளமாக இருக்கவேண்டும், நியாய விலைக்கடைகள்,
17,700 கடைகளின் மூலம் கார்டுகளுக்கு வழங்கவேண்டிய
அரிசியினையும் தொடர்ந்து குறைவுபடாமல் வழங்கவேண்டும்
என்ற வகையிலே பல்வேறு வழிகளில் நாம் முயன்று
கொண்டிருக்கிறோம். ஆனால் பதுக்கல் காரணமாக ஆங்
காங்கே அரிசி வெளியே வருவது தடைப்படுகின்ற சூழ்நிலையில்
அதையும் அரசு கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. அது
பற்றி என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று யோசித்துக்
கொண்டிருக்கின்றது. அதுபற்றிய திட்டவட்டமான கருத்
துக்கள் அரசுக்கு வந்து சேர'ல்லை. இருந்தாலும் தஞ்சை
போன்ற மாவட்டங்களில் அதனை அரசு உன்னிப்பாகக் கவனித்துக்
கொண்டு வருகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்
எல்லாப் பிரிவுகளிலுமே அரிசி போதுமான அளவுக்கு ஸ்டாக்
இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப் போக்க அரசு
என்ன நடவடிக்கை எடுக்கும் ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே அதுபற்றி பல
தடவை நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே ஓரளவுக்கு
இருப்பு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் கொள்
முதலை தீவிரப்படுத்தவேண்டிய அவசியம் வந்து தஞ்சை
மாவட்டத்தில் தனியார் வியாபாரிகள் யாரும் கொள்முதல்
செய்யக்கூடாது என்றும் அரசு நுகர்பொருள் வாணிபக் கழகம்
மட்டுமே கொள்முதல் செய்யும் என்றும் போட்டிருக்கிறோம்.
இதெல்லாம் அரசினிடத்திலே இருப்பு அதிகமாக ஆகவேண்டும்
என்ற காரணத்தால்தான். மேலும் மத்திய அரசு சென்ற
ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் தந்ததைப் போன்று அவர்
களுடைய இருப்பில் இருந்து தொடர்ந்து கொடுத்துக்கொண்டி
ருக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் பதில் சொல்கின்றபோது நியாய விலைக் கடைகளுக்கு
நாம் 70 பைசா மானியம் தருகிறோம் என்று சொன்னார்கள்.
ஆனால் பல கடைகளில் செங்கற்பட்டு, தென்னாற்காடு,
வடாற்காடு போன்ற மாவட்டங்களில் உள்ள பல கடைகளில்
ஏழைகளுக்கு அரிசி கொடுக்கப்படாமல் இருப்பதை அரசு
அறியுமா ? அதைப்பற்றி கவனித்து உடனடியாக நடவடிக்கை
எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நியாய விலைக் கடைகளின் மூலமாக நாம் வழங்கு
கின்ற அரிசி மாதத்திற்கு மாதம் ஏறுகிறது என்றுதான் நாம்
குறிப்பிட்டுச் சொன்னோம். எனவே அந்த அளவுக்குக்
கொடுக்கப்படுகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் கூறுவது போன்று எங்கேயாவது தட்டுப்பாடு இருக்குமே
யானால் இருக்கின்ற அரிசியினைத்தான் நாம் எல்லா
மாவட்டத்திற்கும் வினியோகம் செய்துகொண்டு வருகிறோம்.
நம்முடைய கணக்குப்படி மார்ச் மாதம் இறுதி வரையிலும்
நமக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசி வழங்கு
வதற்கு இருப்பு இருக்கின்றது என்ற கணக்கின் அடிப்படை
யில் பல்வேறு மாவட்டங்களுக்கு நாம் அனுப்பி வைத்து
நியாய விலைக் கடைகளின் மூலமாக அளிக்கின்ற முயற்சியினை
மேற்கொண்டிருக்கிறோம். எங்கேயாவது தட்டுப்பாடு இருக்கு
மேயானால் உடனடியாகக் கவனித்து அந்த இடங்களில்
அரிசித் தட்டுப்பாடு இல்லாமல் செய்வதற்கு அரசு தக்க
முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நாளுக்கு நாள் அந்த
அரிசியின் அளவு அதிகமாகிக் கொண்டு வருகின்றது என்று
சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே கிராமப்புறங்
களில் அந்த அளவுக்கு கொடுக்கவில்லை. அரிசியின் அளவு

நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது. கொடுக்கப் படுகின்ற அரிசியும் தரமானதாக இல்லை. ஒருவகையான துர்நாற்றம் அடிக்கக்கூடிய அரிசியாகத்தான் அது இருக் கின்றது. எனவே அந்த நிலைமையினை மாற்றி நல்ல வகையிலே வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் அதிகரிக்கப் படும் என்று நான் சொல்லவில்லை. இருக்கின்ற அளவினை ஒழுங்காகக் கொடுத்துக்கொண்டு வந்தால் போதும் என்று தான் இருக்கிறோம். மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்தினருக்கு 20 கிலோ அரிசி தர வேண்டும் என்பதற்கு குறையாமல் இருப் பதற்கான வழிமுறைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். நாம் இங்கே பெறுகின்ற அரிசி, பிற மாநிலங்களில் இருந்து வாங்குகிற அரிசி, மத்திய அரசு நமக்கு ஒதுக்குகின்ற அரிசி ஆகியவற்றின் அடிப்படையில்தான் நாம் வழங்கிக்கொண்டு வருகிறோம்.

(முற்பகல் 9-20.)

பல ஆயிரக்கணக்கான டன் அரிசி உபயோகப்படுத்துகிறபோது சில பல இடங்களில் தரக்குறைவான அரிசி வந்துவிடுகிறது என்று குறிப்பிடுகிற நேரத்தில் உடனடியாக அதை மாற்றி தரமுள்ள அரிசி வழங்கவேண்டும் என்று பொதுவாக உத்தரவு இருக்கிறது. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அந்த மாதிரி சூழ்நிலை இருக்குமானால் அரசு அலுவலர்களைக் கொண்டு அந்தக் குறைபாட்டை நீக்க தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தாம்பரம் தொகுதியிலுள்ள மேய்க்கால் புறம்போக்கு நிலம்.

*வினா எண். 162—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், கோவிலம்பாக்கம் கிராமத் தில், புல எண். 435/1 மேய்க்கால் புறம்போக்கு சுமார் 45 ஏக்கர் நிலத்தில் திடீரென சிலர் குடிசைகள் போட்டு விற்பனை செய்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், (கொளத்தூர்) கிராமத்தில் புல எண். 435/1இல் மேய்க்கால் தரை புறம்போக்கில் 80 பேர் ஆக்கிரமித்துள்ளனர். குடிசைகள் போட்டு விற்பனை செய்கிறார்கள் என்பது உண்மையல்ல.

## கோத்தகிரியில் வட்ட வருவாய் அலுவலகம் கட்டும் திட்டம்.

*வினா எண் 163—திரு. கே. உச்சி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தை சார்ந்த கோத்தகிரியில் வட்ட வருவாய் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் வட்டாட்சியர் மற்றும் அதனைச் சார்ந்த அலுவலகங்களுக்குப் புதிதாகக் கட்டிடம் கட்டு வதற்காக ரூபாய் 21.75 இலட்சம் செலவு செய்ய அரசு அனு மதித்துள்ளது.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, மலைப்பகுதியாக இருக்கிற கோத்தகிரியில் அரசுக்கு உரிய இடங் கள் கிடைப்பதும், கட்டிடங்கள் கிடைப்பதும் கடுமையாக இருக்கிற காரணத்தினால் இந்த வட்டாட்சியர் அலுவலகத் தினை கட்டித்தரும் பணியினை விரைவாக கட்டி முடித்துக் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசு பராமரிப்பிலுள்ள அச்சேறாத பழஞ்சுவடிகள்.

*வினா எண். 25—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சேறாத பழஞ்சுவடிகள் அரசு பராமரிப்பில் ஏதே னும் உள்ளனவா ?

(ஆ) அவற்றை அச்சேற்ற என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்தின் புலவர்களைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு அவை வெளிவந்து கொண்டுள்ளன.

### குமரி மாவட்டத்தில் கல்வித் துறைப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதிநேர ஊழியர்கள்.

*வினா எண். 26—திரு. டி. மணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கல்வித்துறையில் பள்ளிகளில் பகுதிநேர ஊழியர்களாக பணிபுரியும் ஊழியர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) இல்லையெனில் முழுநேர ஊழியர்களின் இடங்கள் காலி ஏற்படும் போது பகுதி நேர ஊழியர்களுக்கு தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பகுதிநேர சில்லரைச் செலவின ஊழியர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்ய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) பகுதிநேர சில்லரைச் செலவின ஊழியர்கள் தமிழ்நாடு அடிப்படைப் பணியிலுள்ள பணியிடங்களில் நியமனம் அல்லது பதவி உயர்வு மூலம் நியமனம் பெற தற்சமயமுள்ள விதிகளில் அனுமதி இல்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தக் கல்வித்துறையில் பகுதி நேர ஊழியர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் முழு நேரமும் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே, என்னுடைய வேண்டுகோளும், கேள்வியும் என்னவென்றால், இந்தப் பகுதி நேரப்பணியில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்களை அங்கே காலி இடம் வருகின்றபோது அந்த காலி இடங்களில் இந்த பகுதி நேர ஊழியர்களில் யார் அந்த வேலைக்கு தகுதி உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களை நியமிப்பதில் அரசாங்கத்திற்கு ஏதாவது சட்டப் பிரச்சினைகள், சிக்கல்கள் இருந்தால் அதை அகற்றி இந்த பகுதி நேர ஊழியர்களில் யார் அந்த வேலைக்கு தகுதி உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு நேரிடையாக அந்தப் பதவிகளைத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அடிப்படை பணி விதிகளின்படி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட வயது மற்றும் கல்வித் தகுதி பெற்றிருப்பவர்கள் தமிழ்நாடு அடிப்படைச் பணி விதிகளின்படி அவர்கள் முழுநேர ஊழியர்களாக நியமனம் பெறலாம். தற்சமயம் உள்ள தமிழ்நாடு அடிப்படை பணி விதிகளின்படி அடிப்படை ஊழியர்களாக நியமனம் பெற பகுதிநேர ஊழியர்களுக்கு எந்தவித சலுகையும் இல்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி எல்லாம், பகுதிநேர ஊழியர்களுக்கு சலுகை காட்டுங்கள் என்று சொல்லவில்லை. தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு இந்த விதியில் ஒரு தளர்வை ஏற்படுத்தி எல்லாத் தகுதியும் பெற்றுள்ளவர்களை இந்த புதிய பதவிகளில் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வரவேண்டும்.

### தேசிய மாணவர் படையிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்படும் தொகை

*வினா எண். 27—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய மாணவர் பயிற்சி படையில் பள்ளி மாணவன் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப்படக்கூடிய கட்டணம் எவ்வளவு ?

(ஆ) மத்திய—மாநில அரசுகளின் பங்கு எவ்வளவு ?

(இ) மத்திய அரசின் பங்கை உயர்த்த கோரிக்கை விடப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தேசிய மாணவர் படையிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு கட்டணம் ஏதும் அளிக்கப்படுவதில்லை. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மணி ஒன்றுக்கு 50 பைசா விதம் ஒரு ஆண்டில் அதிக பட்சம் 80 மணி நேரத்திற்கு சிற்றுண்டிப்படி வழங்கப்படுகிறது. மேலும் ஒரு ஆண்டில் நபருக்கு மாதம் ரூபாய் 1 விதம் 6 மாதங்களுக்கு சலவைப்படி வழங்கப்படுகிறது. இதைத் தவிர, அம்மாணவர்களுக்கு முகாம்களில் ( Camps ) பங்கு பெறும்போது நபருக்கு நாளொன்றுக்கு ரூபாய் 7 விதம் உணவுப்படியும், ரூபாய் 1 விதம் தற்செயல் செலவுப்படியும் (Incidental Charges) அந்த முகாம் காலம் முடியும்வரை வழங்கப்படுகிறது. மேலும் அம்மாணவர்களுக்கு அவர்கள் முகாம் நடத்தப்படும் இடத்தை அடையத் தேவையான பிரயாணப்படியும் அத்துடன் இரயில் பயணம் செய்தால் ரூபாய் 5ம் சாலையில் பயணம் செய்தால் ரூபாய் 3-ம் தினப்படியாக ( Daily Allowance ) வழங்கப்படுகின்றது.

(ஆ) முகாம்களில் வழங்கப்படும் படிகளினால் ஆகும் செலவில் 50 சதவீதம் மட்டும் மைய அரசால் ஏற்கப்படுகிறது. மற்ற செலவுகளை மாநில அரசே ஏற்கிறது.

(இ) இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாணவர்களுக்கு வழங்கப்படும் அந்த அலவன்சும், சலவைப்படியும் நிர்ணயம் செய்யப்பட்டு ஆண்டுகள் பலவாகியும் அவை கூட்டப்படவில்லை. அந்தப் படியைக் கூட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவ்வப்போது வருகின்ற அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் நாம் அந்தப் பிரச்னைகளைப் பரிசிலனை செய்து முடிவு எடுக்கிறோம். தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு தற்போது சிற்றுண்டிப் படியாக வழங்கும் 30 பைசாவை 50 பைசாவாக உயர்த்த இந்த அரசு இசைவளித்துள்ளது. இப்போது அளிக்கப்படும் சலவைப் படியை ரூபாய் ஒன்றிலிருந்து இரண்டு ரூபாயாக உயர்த்த இந்த அரசு இசைவளித்துள்ளது. இது குறித்து மைய அரசு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த தேசிய மாணவர் படையில் மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கு ஏதாவது சிறப்புத் திட்டம் அரசிடம் இருக்கிறதா ? அதற்கான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேசிய மாணவர் படைப் பயிற்சியை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக்க இந்த அரசு எண்ணியுள்ளது. இந்தக் கருத்து நடைமுறைக்கு வந்தால் மொத்தச் செலவு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 25,71,45,000 ஆகும். இதில் மூன்றில் ஒரு பங்கு இந்த அரசும் மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கினை, அதாவது 17,14,30,000 ரூபாயை மைய அரசும் கொடுக்க வேண்டியிருக்கும். இந்தக் கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் மைய அரசு அந்தக் கருத்துருவை ஏற்கவில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : இந்தத் தேசிய மாணவர் பயிற்சிப் படையிலுள்ள மாணவர்களுக்கு 50 பைசா, ஒரு ரூபாய் என்கிற நேரத்தில் ஒரு நாள் அவர்கள் வெளியே செல்கிறபோது ஏழு ரூபாய் என்ற நிலையில் ஏற்கெனவே முடிவு செய்யப்பெற்றிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் பெரும்பாலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களைத்தான் இந்தப் பயிற்சிக்கு எடுக்கிறார்கள். எட்டாவது வகுப்பு வரை உள்ள நடுத்தர பள்ளி மாணவர்களையும் இந்தப் பயிற்சிக்கு எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; இப்போது உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது. அங்கிருக்கிற மாணவர்களுக்கு போதுமான அளவிற்கு நாம் பயிற்சி தர முடியவில்லையென்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாணவர்களுக்கு போதுமான அளவிற்கு போதுமான பள்ளிகளில், கூடுமான வரை எல்லாப் பள்ளிகளிலும் இதைக் கொண்டுவரக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கிவிட்டால் பிறகு இதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, மாணவர்களுக்கு சிற்றுண்டிப்படி, சலவைப்படி, பயணப்படி. போன்றவைகள் இவ்வளவு இவ்வளவு அரசால் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அதெல்லாம் முறையாக மாணவர்களுக்குச் சென்று அவர்களுக்கு பலன் கொடுக்கிறதா என்பதைத் கண்காணிக்க அரசாங்க அலுவலர்கள் அல்லாத ஒரு குழுவை அரசு அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதற்கென ஒரு பெரிய டைரக்ட்ரேட்டே வைத்து தனியாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதில் அந்த அதிகாரிகள் போய் அதைப் பற்றி விசாரிக்கிறார்கள். அது தவிர கல்வித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இதுபற்றி புகார்கள் வந்தால் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். காரணம் அந்த என்.சி.சி. ஆபீசர்களாக இருக்கிறவர்கள் ஆசிரியர்கள்.

திரு. செ. சிவசாமி : மாணவர்களுக்கு பயிற்சி நடைபெறக் கூடிய நேரத்தில் 15 நாட்கள், இரண்டு வாரம், மூன்று வாரம் என்று போட்டு அந்தப் பயிற்சி நடக்கிறது. இரண்டு அல்லது மூன்று வாரத்திற்கான தொகையை அரசு கொடுத்து உதவுகிறது. அந்நிலையில் பதினைந்து நாட்கள் நடப்பதாகச் சொல்லிவிட்டு பத்து நாட்களில் அந்தப் பயிற்சியை முடித்துக்கொண்டு ஐந்து நாட்களுக்கு தவறாகக் கணக்கு எழுதி அரசுக்கு வந்து அதுபற்றி புகார்கள் வரும்போது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் சில நேரங்களில் இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் என்ன செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகின்றபோது, எந்த இடத்தில் நடந்தது என்பதைச் சொல்லியிருக்க வேண்டும். இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொது வாகச் சொல்லுகிறார்கள். ஆனால், என்.சி.சி.ஐப் பொறுத்த வரையில், முறையாக ஆங்காங்கே பயிற்சி முகாம்கள் நடந்தே தீரவேண்டும். நடக்கவில்லை என்றால், அதிகாரிகள் உடனடி யாக நடவடிக்கை எடுப்பார்கள். இதிலே பாதுகாப்புத் துறை யும் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏதாவது ஒரு இடத்தில் நடக்கவில்லை என்பதை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கிறோம். 15 நாட்கள் நடக்கவேண்டிய முகாமை, 10 நாட்களில் நடத்தி விட்டு, 5 நாட்கள் செலவை எடுத்துக்கொள்வது என்பது கடுமையான தவறாகும். இதுபற்றி தகவல் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இளமைப் பருவத்தில் நாட்டுபற்று ஏற்பட வேண்டுமென்ற அளவில் அமெரிக்காவில், ஐந்தாம் வயதிலிருந்து இராணுவத்தில் பணிபுரிய ஒப்புதல் கொடுத்தால், சாதாரண கல்வியிலிருந்து, உயர்கல்வி வரையில் இலவசமாகப் படிப்பதற்கு அரசாங்கம் சலுகைகள் கொடுப்பதோடு, பாக்கட் மணியும் கொடுக்கிறார்கள். ஆகவே, நமது நாட்டிலும் மாணவர்கள்



இராணுவத்தில் பணிபுரிய ஒப்புதல் அளித்தால், அவர்களுக்கு அத்தகைய சலுகைகள் கொடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் ஆலோசனை கூறுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கட்டாயப்படுத்துவதற்கு இல்லை. ஆனால், அப்படி இராணுவத்தில் சேரவேண்டுமென்று விரும்பு கின்ற மாணவர்களை இராணுவத்தில் எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். போதுமானவர்கள் போகவில்லை என்ற நிலைமை இருக்கிறதே தவிர, மற்றபடி இராணுவத்திலே சேருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதிலேயும், குறிப்பாக, பஞ்சாப் மாநிலத்திலே இருக்கிற இளைஞர்கள் நிறைய பேர்கள் இராணுவத்தில் சேர்ந்து, அதனால் அவர்கள் நாட்டுக்குப் பாடுபடுகின்றார்கள் என்பதோடு வேலையும் பெற்று, ஒரு 10 அல்லது 15 ஆண்டுகள் இராணு வத்தில் சேவை செய்துவிட்டு, பின்னர் ஓய்வுபெற்று, வீட்டுக்கு, அல்லது தங்கள் கிராமங்களுக்கு வந்து, வேறு தொழில்களை செய்கிறார்கள். இன்றைக்கு பஞ்சாப் மாநிலம் ஒரு நவீன பஞ்சாப்பாக தொழில் துறையிலே முன்னேறியிருக்கிறது. ஆனால் அந்த அளவிற்கு இராணுவத்தில் சேரவேண்டுமென்கிற எண்ணம் புறநானூறைப் பற்றிப் பேசும் தமிழ்நாட்டில் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆம்பூர் நகரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்

* வினா எண். 164—திரு. ந. குலசேகரபாண்டியன்; மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் நகரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) அண்ட் (ஆ) ஆம்பூர் நகரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து பெறப் பட்டு, நிதித் துறையோடு கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை ஆம்பூர் நகரில் அமைக்கின்ற ஆலோசனை இருந்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது வேலூரில் அந்த மாவட்ட முன்சீப் நீதிமன்றம் தலைமை இடமாக இருக்கிறது. அதற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? பாதிப்பு ஏற்படாமல் வேறு ஒரு மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை அமைப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் பகுதியும், ஆம்புரை ஒட்டியுள்ள பகுதிகளும் அந்த டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்டிலே அமைக்க வேண்டுமென்ற ஓர் செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்திடமிருந்து வந்திருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரில் அமைக்கப்பட இருக்கின்ற மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தோடு, எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு குடியாத்தம் பிர்க்கா, குடியாத்தம் வட்டத்திலுள்ள பேரணாம்பட்டு பிர்க்கா, வாணியம்பாடியிலுள்ள வாணியம்பாடி பிர்க்கா, மற்றும்ஆம்பூர், துதிப்பட்டு ஆகிய பகுதிகள் அதோடு சேர்க்கப்படலாம்என்று கருதப்படுகிறது.

### செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சேவை சங்கங்களை ஒருங்கிணைப்புச் செய்யும் திட்டம்.

* வினா எண். 165—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் சில கூட்டுறவு சேவை சங்கங்களை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் ஏற்கனவே பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு பணியில் தொடர மாற்று ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம் எடுக்கப்பட்டு வருகிறது.



(ஆ) சங்கங்களில் பணியாற்றும் சிப்பந்திகள் சம்பந்தமான விவரங்கள் எல்லா மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் கேட்கப்பட்டுள்ளது. எல்லா சங்கங்களிடமிருந்தும் விவரங்கள் கிடைத்தவுடன் ஒருங்கிணைப்புச் செய்யும் சங்கங்களில் பணிபுரியும் சிப்பந்திகளின் ஆட்குறைப்பை தவிர்ப்பது பற்றி ஆராயப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத்தலைவர் அவர்களே, இந்தகூட்டுறவு சேவை சங்கங்களை இணைக்க என்ன நடைமுறை கையாளப்படுகிறது? இதுவரை எத்தனை சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக 447 கூட்டுறவு சேவை சங்கங்கள் தன்னிறைவு பெறாத சங்கங்கள் என்று ரிசர்வ் வங்கியினுடைய விதிமுறைக்கு உட்பட்டு கருதப்பட்டு அந்த அடிப்படையில் செங்கை மாவட்டத்தில் 72 தன்னிறைவு பெறாத சங்கங்கள் என்று கணக்கிடப்பட்டு அதில் 67 சங்கங்களை இணைக்க முதல்கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 15 சங்கங்கள் இதுகாறும் இணைக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள சங்கங்களை இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : இந்த சங்கங்களை இணைக்கிற காலத்திலே அங்கே பணிபுரிகின்ற தாற்காலிக ஊழியர்களுக்குப் பணிப் பாதுகாப்புக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மூலவினாவிற்கான விடையிலே இதுபற்றிக் கூறினேன். இதுகாறும் 15 சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த சிப்பந்திகளுக்கு பணி இழப்பு ஏற்பட்டுவிடவில்லை. ஆகவே பணிப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் சங்கங்களை இணைக்கும் பணி தொடர்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, பொருளாதார ரீதியில் சங்கங்களை இணைக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் வளர்கின்ற நிலையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் சேவை சங்கம் அவசியம். ஒவ்வொரு கிராமத்திலும் பொருளாதார அடிப்படையில் பார்க்காமல் தேவையின் அடிப்படையில் பார்த்து அவைகளை நடத்துவதற்கு மறுபரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கூட்டுறவு சங்கம் என்பது நடைமுறையில் வருவது நல்லதுதான். அது அரசினுடைய கருத்தும்கூட. ஆனால் குக்கிராமங்களில்கூட கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவை நான் வயபிள் என்ற நிலைக்கு வந்து விட்டன என்று ரிசர்வ் வங்கி கூறி சிலவரையறைகளை வகுத்துள்ளது. 3 ஆயிரம்

ஏக்கர் நீர்ப்பாசனம் உள்ள, நீர்ப்பாசனம் இல்லாத நிலம் இருக்க வேண்டும். குறுகிய காலக் கடன் வசதிகள் குறைந்த பட்சம் 2 லட்சம் இருக்கவேண்டும். இல்லையெனில் அந்த சங்கம் நான் வயபிள் சங்கமாகக் கருதப்பட்டு ரிசர்வ் வங்கி உத்திர விட்டு அந்த உத்திரவு நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டாயமாக ஆக்கப்பட்டு இருக்கிறது. காரணம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறுகிய காலக் கடன்களுக்கு நிதி வசதியை ரிசர்வ் வங்கி தரு கின்றது, ஆகவே அவர்கள் சில கட்டளையிடுகிறார்கள். அதை நடைமுறைப்படுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு ரெவின்யூ வில்லேஜுக்கும் ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கவேண்டு மென்ற முடிவை மறுபரிசீலனை செய்து அந்த சங்கங்களை வய பிள் என்ற அடிப்படையில் கொண்டுவரவேண்டுமென்று மாநில அரசும் ரிசர்வ்வங்கியிடம் வற்புறுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகிறபோது ரிசர்வ் வங்கியின் இந்த விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததா? இப்போது அவை அனுசரிக்கப்பட் டதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே மட்டுமல்லாமல், பாரதத்தின் பல்வேறு மாநிலங் களிலே இந்தச் சங்கங்கள் பரவலாக அமைக்கப்பட்டு நான்- வயபிள் என்ற நிலைக்கு வந்து, குறுகிய காலக் கடன்களைத் திருப்பித் தராத நிலைக்கு வந்து ரிசர்வ் வங்கி அதனை ஆராய ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்தது அந்த ஆய்வின் அடிப்படை யில் அவையெல்லாம். Amalgamation of Co-operative Societies to a viable extent is inevitable என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு எல்லாம் அறிவுரை கூறி கட்டளையும் இட்டது.

**கிராமப்புற வீட்டு வசதி திட்டத்திற்காக ஒதுக்கப்படும் தொகை.**

* **வினா எண். 166—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு L.I.C. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரசு கடன் வாங்கி கொடுப்பதால் காலதாமதமாகின்றது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசே தனது நிதியிலிருந்து பணம் ஒதுக்கும் செயற்குறிப்பு உண்டா?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) அண்ட் (ஆ) கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 40,000 வீடுகள் கட்ட ரூ. 12.80கோடி தேவைப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1982—83-ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு— | |
| (அ) கடன் .. .. .. | 150.00 |
| (ஆ) பங்கு மூலதனம் .. .. .. | 200.00 |
| (இ) முதலீட்டு மானியம் ... .. | 450.00 |

ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் பொதுக் காப்புறுதி கழகங்களிடமிருந்து அரசு ரூ. 350 இலட்சத்தை 1982—83-ஆம் ஆண்டு கடனாக எதிர்பார்க்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் 30—9—1982 தேதிவரை அரசு கீழ்க்கண்ட வண்ணம் நிதியினை வழங்கியுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கடன் .. .. .. | 123.72 |
| 2. பங்கு மூலதனம் .. .. .. | 200.00 |
| 3. முதலீட்டு மானியம் .. .. .. | 293.26 |

அரசு தனது நிதியிலிருந்து தேவைக்கேற்ப பணத்தை ஒதுக்கீடு செய்வதால் காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

(முற்பகல் 9-40)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது பல கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி கொடுத்திருந்தாலும் கூட கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் இரண்டாவது இன்ஸ்டால்மென்ட் வரவில்லை. மூன்றாவது இன்ஸ்டால்மென்ட் வரவில்லை என்று நான்கு, ஐந்து ஆண்டுகளாக அப்படியே இருப்பதாக மிகவும் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இவைகளை மாற்றக்கூடிய அளவிற்கு, அரைகுறையாக கட்டியிருக்கிற வீடுகளை அவர்கள் கட்டிமுடிப்பதற்கு அரசாங்கம் பணம் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

கொடுக்கும் போது வீடுகள் இன்னும் கட்டப்படாத நிலைமையிருக்கிறது. பலதடவைகள் அமைச்சர் அவர்களிடமே சொல்லியிருக்கிறேன். அப்படிக் கொடுப்பதைவிட கிராமாந்திரக் கூட்டுறவு சொசைட்டிகளை அமைத்து, அவர்களே கட்டும்படியாக ஏற்பாடு செய்து, அவர்களிடமே நேரடியாகப் பணம் கொடுக்க புதிய யோசனைசெய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடுக்க அரசாங்கம் உடனடியாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) அதிகாரிகள் மூலம் கொடுப்பதாலே அந்தப் பணம் சரியாகப் போய்ச் சேருவதில்லை. அதனால் காலதாமதம் ஆகிறது. அந்தந்த கிராமங்களில், தாங்களே சொசைட்டி பார்ம் செய்து, அதைவிட வீடுகளைக் கட்டிக் கொள்வதாகத் தெரிவித்தால், நேரடியாக அவர்கள் மூலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று கேட்கிறேன். கோவாப்பரேட்டிவ் பில்டிங் சொசைட்டி செய்வது மாதிரி அரசு செய்யுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. கிராமங்களிலே வீடுகள் கட்டுவதற்கு 110 சங்கங்களை அரசு அமைத்து அவை செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல், தகவலோ, புகாரோ இதுவரை வரவில்லை. செம்மையாக நடைபெறுவதாகத்தான் தகவல் வந்திருக்கிறது. எந்த, எந்த கிராமத்தில் அந்த மாதிரி நடைபெறுகிறது என்று சொன்னால், இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதையும் சேர்த்து அரசு பரிசீலனை செய்யும்.

சென்னை பெருநகர் குடிநீர் வாரியம் 1982–83இல் வெளியிட்டுள்ள கடன் பத்திரம்.

* வினா எண் 167—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கு கழிவுநீரகற்று வாரியம் 1982–83-ல் கடன் பத்திரம் வெளியிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) திரட்ட உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) மாநில அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியுடன் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் ரூ. 110 லட்சம் வெளிச் சந்தையிலிருந்து 1982–83-ல் கடனாக பெற்றுள்ளது. வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று முதலீட்டுப் பணிகளுக்காக இக்கடன் எழுப்பப்பட்டது.



சாத்தனூர் அணையின் பழைய கால்வாய் முழுவதும் சிமெண்ட் பூசி நீர் கசிவு ஏற்படாமல் தடுக்கும் திட்டம்.

* வினா எண் 168—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையின் பழைய கால்வாய் (இடதுபுற கால்வாய்) முழுவதும் சிமெண்ட் பூசி நீர் சிதைவு ஏற்படாமல் இருக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : சாத்தனூர் அணையின் பழைய கால்வாய் (இடதுபுறக் கால்வாய்) முழுவதும் சிமெண்ட் பூசி நீர்க்கசிவு ஏற்படாமல் தடுக்க விரிவான திட்டமும் மதிப்பீடுகளும், பொதுப்பணித்துறை ஆய்வுப் பிரிவால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையின் இடதுபுறக் கால்வாய் நீர்க்கசிவைப் போக்குவதற்கு, விரிவான திட்டமும் மதிப்பீடுகளும் பொதுப் பணித்துறை ஆய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டப் பணியினுடைய வேலைகள் எப்பொழுது முடிவடையும் அல்லது அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையின் பழைய கால்வாயான இடதுபுறக் கால்வாயில் 0/0 கி.மீ. முதல் 13/60 கி.மீ. வரை முக்கிய கால்வாயில் ஏற்கனவே சிமெண்ட் பூசப்பட்டுள்ளது. இக்கால்வாயின் எஞ்சிய பகுதிக்கும் சிமெண்ட் பூசப்படவேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததன் விளைவாக ஆய்வுகள், மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அது இன்னும் அரசினுடைய நிலைக்கு வரவில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையின் இடதுபுறக் கால்வாயின் மொத்த நீளம் எவ்வளவு? அந்த மொத்த நீர்ப்பரப்புக்கும் சிமெண்ட் பூச அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே 13/60 கி.மீ. வரை முக்கிய கால்வாயில் சிமெண்ட் பூசப்பட்டுள்ளது. இக் கால்வாயின் எஞ்சிய பகுதியான 13/60 கி.மீ. முதல் 35/465 கி.மீ. வரையிலும் மற்றும் 68.35 கி.மீ. நீளத்திற்கு கிளைக் கால்வாய்களுக்கும், 28.11 கி.மீ. நீளத்திற்கு உபக் கிளைக் கால்வாய்களுக்கும் சிமெண்ட் பூசுவதற்கு மொத்தமாக மதிப்பீடுகள் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரைகுறையாக வீடுகள் ஏன் நிற்கின்றன என்ற தகவல்கள் அவ்வப்போது, கிராம வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகத் தெரிவிக்கப்படுமானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். நானே அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை அரைகுறையாக கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறேனே, அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அவர்கள் கொடுக்கிற மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும், ஆவன செய்யவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வீடு கட்டுகிற திட்டம் ஒவ்வொரு தாலுக்காவிலும் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் எந்தவிதமான போர்டும் இல்லாமல், ஒரு தனி அதிகாரியின் மூலம் இயங்கி வருகிறது. சென்ற ஆண்டு கொடுத்த மனுக்களை எல்லாம், எல்.ஐ.சி லோனில் தாமதம் அல்லது ஏரவில்லை என்று சொல்லி மனுக்களை திரும்ப மனுதாரர்களிடமே கொடுத்து விடுங்கள் என்ற மாநில சங்கம் உத்தரவிட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அரசாங்கம் ஒரு கோடி கடன், 2 கோடி மூலதனம் தொகை கொடுத்திருக்கிறது. அதை விட்டு விட்டு ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 10 கோடி ரூபாயாவது வீடு கட்டுகிற திட்டத்திற்கு பட்ஜெட்டிலே ஒதுக்கி கிராம வீடு கட்டுகிற திட்டத்தில் வீடுகளை சரியாக சீராக கட்டுவதற்கு உரிய உதவிகளை அரசாங்கம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆண்டிற்கு 40 ஆயிரம் வீடுகள் ; ஐந்தாண்டிற்கு 2 லட்சம் வீடுகள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று கணக்கிட்டு பணியாற்றிக் கொண்டு வருகிறோம். இதில் கிராம வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு கடன் தொகையில் 1,000 ரூபாய் மானியமாக வழங்குவதால் அரசிற்கு



ஆண்டிற்கு 300 லட்சம் செலவாகிறது. மேலும் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு வட்டியை அரசே ஏற்பதினால் ஆண்டு ஒன்றிற்கு சுமார் 81.25 லட்சம் செலவாகிறது. ஹட்கோ கிராம வீட்டு வசதி திட்டத்திற்கு தேவையான கடன் தொகையில் 50 சதவீதம் வழங்குகிறது ; மீதி 50 சதவீதம் கடன் தொகையை மாநில அரசே மேட்சிங் கிராண்ட் கான்ட்ரிபியூஷனாக தலைமை சங்கத்திற்கு தருகிறது ; இதோடு சங்கத்திற்கு நிதி பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம் அரசு வழிவகை முன்பணம், வேஸ்-அண்ட்-மீன்ஸ் அட்வான்ஸ் வழங்குகிறது. எனவே அரசு கிராம வீட்டு வசதி திட்டத்திற்கு பெருமளவில் பண உதவி செய்து வருகிறது என்பது தான் உண்மை. நீங்கள் சொல்வதைப்போல 10 கோடி ஒதுக்குவது, 20 கோடி ஒதுக்குவது என்பதெல்லாம் வராது. 40 ஆயிரம் வீடுகளுக்கு எவ்வளவு பணம் தேவை என்பதைப் பார்த்து அதில் ஒரு பகுதியை அரசு கொடுத்து விட்டு, மீதியை லெண்ட்டிங் இன்ஸ்டிடியூஷன் மூலமாக வாங்கி காரியங்களை நடத்துகிறது. எல்லா பணத்தையும், எல்லா வகையையும் அரசே கொடுக்கவேண்டுமென்றால் ஒரு அரசை நடத்த முடியாது. ஹவுசிங் போர்டிற்குக் கூட பணத்தை ஹட்கோவில் வாங்குகிறோம். குடிதண்ணீர் வழங்குவதற்கு எல்.ஐ.சி.யில் கடன் வாங்குகிறோம். ஒரு குடும்பத்தை நடத்துகிறபோது கூட நாம் கடன் வாங்கிவிட்டு சம்பளம் வாங்கியவுடன் அதைக் கொடுக்கிறோம். பணத் தட்டுப்பாடு ஏற்படுகிற நேரத்தில் வாங்குகிறோம். திரும்ப அவைகளை கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை விரைவில் செய்கிறோம். ஆகவே 40 ஆயிரம் வீடுகள் கட்டுகிற திட்டம் திருப்திகரமாகவே செயல்பட்டு வருகிறது. எங்காவது சிக்கல் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமவீட்டுவசதி சங்கங்களின் மூலம் கடன் வழங்குகிறபோது வரிசைக்கிரமாக, சீனியாரிட்டி அடிப்படையில் வழங்குகிறார்கள். அதிலேயிருந்து தீ விபத்திற்கு ஆட்படுகிற வீடுகளுக்கு மட்டும் முன்னுரிமை அளித்து, வரிசைக்கிரமமாக வரவேண்டும் என்பதை மாற்றி கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற கண்டிஷன்கள் எல்லாம் சரியாக இருந்தால் முன்னுரிமை கொடுப்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 40,000 வீடுகள் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 40,000 வீடுகளுக்கும் பணம் கிராமியக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்

## கொள்ளிடம் ஆற்றில் வருடந்தோறும் ஏற்படும் வெள்ள அபாயத்தைத் தடுக்கும் திட்டம்.

* வினா எண் 169—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் லோயர் அணைக்கட்டிலிருந்து மஹேந்திரப்பள்ளி வரையில் வருடந்தோறும் ஏற்படும் வெள்ள அபாயத்தை தடுப்பதற்கு நிரந்தரமான பரிகாரம் காண திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) இரு இடங்களில் வெள்ள பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆலக்குடி கிராமத்தில், கொள்ளிடம் ஆற்றின் வலது கரையை ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் பலப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது. மற்றும் சில இடங்களில் ''கிராயின்கள்'' அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50.)

திரு. என் கிட்டப்பா : தலைவரவர்களே, கொள்ளிடம் ஆற்றின் தென் கரையில் லோயர் அணைக்கட்டிலிருந்து மஹேந்திரப்பள்ளி வரையில் வருடந் தோறும் ஏற்படும் வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கு நிரந்தரமான பரிகாரம் காண திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதோ பாலத்தைக் குறிப்பிட்டு அந்தப் பாலத்தைக் கட்டுவது, அதற்கான மதிப்பீடு ஆகியவற்றை இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதி அடிக்கடி வெள்ள அபாயத்திற்கு உட்பட்டு வருவதால் அந்தப் பகுதிக்குப் பக்கத்திலே உள்ளவன் என்ற முறையில் நான் அறிந்திருப்பதால் கேட்கிறேன். அங்கே நிரந்தரமான பரிகாரம் காண்பதற்கு எவ்வளவு மதிப்பீட்டுத் தொகையை நமது அரசு ஏற்படுத்தியிருக்கிறது? எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய இயலுமா? அந்த வேலை எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய இயலுமா?



மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொள்ளிடம் ஆற்றின் தென கரையை கீழ் அணைக்கட்டிலிருந்து மஹேந்திரப்பள்ளி வரையில் பலப்படுத்துவது பற்றி—பாலம் கட்ட அல்ல, பலம் பாலமாகத் தெரிந்திருக்கலாம். அதற்காக 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. மேலும் நான்கு இடங்களில் கசிவு ஏற்படுவதைத் தடுப்பதற்காக கான்கிரீட் முறையைப் பின்பற்றி 12 இலட்சம் ரூபாய் செலவு செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதல் அளிக்கின்ற நிலையிலே இருக்கிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள அபாயத்தைத் தடுக்கின்ற முறையிலே காவேரியிலும், பெரியார், வைகை, தாமிரபரணி ஆகிய நதிகளிலும் வெள்ளத்தைத் தடுக்கின்ற ஒரு திட்டத்தை அரசாங்கம் உருவாக்கியிருக்கிறதா ? அதைப் பற்றிய விவரம் என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஹேந்திரபள்ளி அணைக்கட்டு பற்றிச் சொல்லும்பொழுது ஆலக்குடியில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்தைப் பற்றித் தெரிவித்தார்கள். ஆனால் மஹேந்திரப்பள்ளி என்ற ஊரிலேதான் கொள்ளிடம் தண்ணீர் எதிர்த்து, கடலிலேயிருந்து எதிரே வந்து கிராமங்களுக்குள் நுழைகின்ற ஒரு ஆபத்தான நிலைமை இருக்கிறது. ஆகவே, அதற்கேற்ற வகையில், ஆலக்குடியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில்தான் மஹேந்திரபள்ளி இருக்கிறது. அந்த மஹேந்திரபள்ளியையும் சேர்த்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, 97-வது மைலிலிருந்து 100-வது மைல் வரையில் உள்ள பகுதி ஒட்டு மொத்தமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடும் பகுதி சேர்க்கப்படவில்லை என்றால் அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, கொள்ளிடத்தில் இருக்கின்ற வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கு ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதே போல் காவேரியில் வெள்ளம் வருகின்ற காலத்தில் அதைத்

தடுப்பதற்கு வடிகால் திட்டம் ஒன்று இருக்கிறது. அதை விரைவில் அமல் செய்து இந்தக் கொள்ளிடத்தில் கீழ்ப் பகுதியிலே காவேரியில் ஏற்படும் வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுகின்ற அந்த ஆய்வுப் பணிகள் முடியும் தறுவாயிலே இருக்கின்றன.

## பெரியகோம்பை பகுதியிலுள்ள ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

* வினா எண். 170—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) ராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை பகுதியிலுள்ள பிரபஞ்சோலை அருகிலுள்ள பெரியகோம்பை பகுதியில் உள்ள ஆற்றின் குறுக்கே அணை கட்ட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில். எப்போது செயலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட இடத்தில் அணை கட்டும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பது பூர்வாங்க ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்த ஆய்வு முடிந்தவுடன் மேல் நடவடிக்கை தலைமைப் பொறியாளரால் எடுக்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூர்வாங்க ஆய்வு, அதாவது பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் விரைவாக முடிக்கப்பட்டு, மதிப்பீடு விரைவாகத் தயாரிக்கப்பட்டு இந்த அணை கட்டும் பணி விரைவாகத் தொடங்கப் படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இப்பொழுது நடந்து வருகின்ற இந்த ஆய்வுப் பணிகளை விரைவில் முடிக்கும்படி அரசு உத்தரவிட்டிருக்கிறது.

## பாபநாசம் அருகே கோரையாற்றில் அணை கடடும் திட்டம்.

* வினா எண். 171—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் எல்லையில் உள்ள பாபநாசம் பக்கம் கோரையாற்றில் ஒரு அணை கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

(இ) திட்ட மதிப்பீடு என்ன ?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ): இத் திட்டம் தலைமைப் பொறியாளரின் முன்னோடி ஆய்வில் உள்ளது. முன்னோடி ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் திட்டத்தை எடுத்துக் கொள்ள சாத்தியக் கூறுகள் இருக்குமானால், திட்டம் விரிவான ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆற்றிலிருந்து வரும் தண்ணீர், குறிப்பாக மழை நேரங்களில் வெள்ளப் பெருக்கெடுத்து, கடலில் வீணாகக் கலக்கும் அபாயம் இருப்பதால், இதற்கு விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டு, சீக்கிரமாக இந்தத் திட்டத்தை ஆய்வு செய்து, அணை கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே எப்படியாவது ஒரு அணையைக் கட்டவேண்டும் என்பதிலே அரசு அக்கறையாக இருக்கிறது. அதன் காரணமாக அந்த முன்னோடி ஆய்வுத் திட்டம் நடத்துகின்றபோது அதற்காக எவ்வளவு மதிப்பீடு தயாரிக்க வேண்டும் என்பதை எல்லாம் நாம் அவர்களைச் செய்யச் சொல்லி இருக்கின்றோம். அந்த அடிப்படையில் கிட்டத்தட்ட திட்டத்தின் உத்தேச மதிப்பு 811 லட்சம் என்றும், தேக்க அளவு 725 மில்லியன் கன அடி நீர் தேக்கி வைக்கப்படலாம் என்றும், இதனால் 8,246 ஏக்கர்கள் புதிய நஞ்சை நிலங்கள் பயன்பெறும் என்றும், அதிகமாக 8,100 டன் உணவு உற்பத்தி கிடைக்கும் என்றும் சொல்லப்

பட்டிருக்கிறது. இதன் முன்னோடி ஆய்விலே ஒரு புதிய முறையைச் சேர்த்திருக்கிறோம். காரணம் இன்னொரு ஆய்வு செய்வதைத் தவிர்ப்பதற்காக அந்த அடிப்படையில் அதை எடுத்துக் கொள்கின்ற வாய்ப்புகள் நிரம்ப இருக்கின்றன என்றுதான் கருதுகிறேன்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய பயனைப் பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதையும், மதிப்பீடு எவ்வளவு ஆகும் என்பதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முன்னோடி ஆய்விலேயே, முடிந்த ஆய்வாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 8 கோடியே 11 லட்சம் செலவாகும் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கின்றது விரிவான அறிக்கையைப் பெற்று நிச்சயமாக அதை எடுத்துக் கொள்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் பொதுவாகவே ஆய்வு செய்கின்ற காலங்களிலே 3 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையில் நீடித்துக் கொண்டே போகிறார்கள். இந்த ஆய்வு செய்யும் காலத்தினைக் குறைத்து உடனடியாக செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மேற்பரப்பு நீரை, சர்பேஸ் வாட்டர், நாம் அதிகமாகவே பயன்படுத்தி வருகிறோம். எனவே அணைகளைக் கட்டுகின்றபோது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனுடைய நீர் வரத்தை நீரியல் அடிப்படையிலே கணக்கிடக் கடமைப் பட்டிருக்கிறோம். அது னால் சில பகுதிகளில் 3 ஆண்டுகள்—அதற்கு மேலும் ஆகின்றது. கூடுதலாக எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதைப் பார்த்த பிறகு, மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் 3 ஆண்டுகள் 4 ஆண்டுகள், என்று ஆகின்றன. இப்போது அம்பாசமுத்திரம் வட்டம் பாபனாசம் அருகில் கோரையாற்றின் குறுக்கே ஒரு அணை கட்ட வேண்டும் என்ற கோரிக்கை வந்தபோது, அது முதல் நிலை ஆய்வாக இருந்தாலும்கூட, முடிந்த பணியாக அதை மனதிலே கொண்டு செயல்பட வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை மூலமாக அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 3 ஆண்டுகளில் முடிய வேண்டிய இந்த வேலையை 6 மாதங்களுக்குள்ளாகவே இந்தத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே முடித்திருக்கிறார்கள். இடத்தைப் பொறுத்தும் சூழ்நிலையைப் பொறுத்தும் அரசு அவ்வப்போது விரைவான நடவடிக்கையை எடுத்து வருகிறது,



### மதுரை மாவட்டத்தின் புதிய நூற்பாலைகள் தொடங்க 1980-81-ல் வழங்கப்பட்டுள்ள அனுமதிகள்.

*வினா எண். 134—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் புதிதாக நூற்பாலை தொடங்க 1980-81-ல் யார், யாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, விவரங்கள் அடங்கிய அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அதோடு, பருத்தி பயிரிடுவதற்காக 25 ஆயிரம் கதிர்கள் கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை ஒன்றை தேனிப்பகுதியிலே ஏற்படுத்துவதற்கு பணி நடைபெற்று வருகின்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 32 ஆலைகள் தொடங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இருக்கின்றன. இந்த 32 ஆலைகளிலே ஏதாவது ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றனவா? அப்படித் தொடங்கப்பட்டால் அவற்றிலிருந்து உற்பத்தியாகும் நூல் அளவைப் பற்றிய விவரம் ஏதாவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு 1980—81 ஆண்டிலே உரிமங்கள் பெற்றிருக்கிறார்கள். இதிலே எந்த நூற்பாலையும் உற்பத்தியைத் தொடங்கியதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அந்த நேரத்திலே நூற்பாலைகளிலே அதிகமான லாபம் இருந்தபோது பல பேர் மனுச் செய்து உரிமம் பெற்றார்கள். சில பேர்கள் இப்போதுதான் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமதி பெற்ற 32 ஆலைகளில் ஏறத்தாழ முக்கால் பங்கு ஆலைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியிலே அதாவது திண்டுக்கல், வேடசந்தூர் பகுதியிலே துவங்கவிருக்கின்றன. அதைப் பற்றிக் கூட வருத்தமில்லை. ஆனால் அதிகமாக பருத்தி விளையக்கூடிய திருமங்கலம், உசிலை பகுதிகளிலே இப்படிப்பட்ட ஆலைகளைப் புதிதாகத் துவங்க அரசு முயற்சி எடுக்குமா ?

---

616—621ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உரிமங்கள் வழங்குவது பம்பாயிலே உள்ள மைய அரசுக்குச் சொந்தமான நூல் ஆணையர், டெக்ஸ்டைல் கமிஷனர் ஆவார். போடப்படுகின்ற மனுக்கள் அனைத்தையும் அவர்கள் நேரடியாக்ப் பரிசீலித்து உரிமம் வழங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலரை அல்லது சிலரைப் பார்த்து புதிதாக மனுச் செய்து அந்தப் பகுதியிலே நூற்பாலையைத் துவங்க நடவடிக்கை எடுப்பார்களானால் அரசும் அதற்கு உதவி செய்யும்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலைகளுக்கு உரிமம் வழங்கி 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் இதில் நூற்றுக்கு 75 சதவீதம் ஆலைகளின் கட்டுமானப் பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. இப்படி ஒரு உரிமம் வழங்குகிறபோது, இந்த நிபந்தனைக்கு உட்பட்டு, இந்த ஆண்டுக்குள், அல்லது இத்தனை மாதங்களுக்குள் வேலைகள் துவங்கப்படவேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு அந்த உரிமங்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல பல பேர்கள்—தனியார்கள்— மனு செய்து உரிமங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். அதற்குப் பின்னர் வேலைகளைத் துவங்குவது இல்லை. 1981-ஆம் ஆண்டிலே நூற்பாலைகளில் மொத்தமாக லாபம் வருகிறது என்பதாலே பலர் இப்படி மனுச் செய்தார்கள். அதையெல்லாம் கருத்திலே கொண்டு நாம் இப்போது 1981 ஜனவரிக்குப் பின்னாலே நூற்பாலைகள் நிறுவ வேண்டுமென்றால், கூட்டுறவுச் சங்கங்கள், அதேபோல் கம்பெனிகள் மட்டுமே அவற்றுக்கான அனுமதி கொடுக்க வேண்டும் என்று அவர்களே ஒரு ரெஸ்ட்ரிக்ஷன் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே இப்போது உரிமங்கள் மிகக் குறைவாகத்தான் கொடுக்கப்படுகின்றன.



## மதுரை மாவட்டம் பாளையம் பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 135—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை–திருச்சி மாவட்டங்களுக்கு இடையே பாளையம்—மைலம் கிராமம் அருகில் தொழில் இலாகாவைச் சேர்ந்த புவியியல் பிரிவு ஆய்வு செய்ததா ?

(ஆ) ஆம் எனில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு சிமெண்ட் தொழிற்சாலை துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தேவர் மலை, வரவணை, பாளையம் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் இருப்புக்களைப் பயன்படுத்தி மதுரை மாவட்டம், பாளையம் என்னுமிடத்தில் ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமிண்ட் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இசைவுக் கடிதம் கோரி தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மைய அரசிற்கு விண்ணப்பித்துள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

*வினா எண். 136—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுகா பாளையம் அருகில் சிமெண்ட் ஆலை அமைக்க மாநில அரசுக்கு மைய அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(ஆ) இல்லையெனில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) மதுரை மாவட்டம், பாளையம் பகுதியில் ஒரு புதிய சிமெண்ட் ஆலை நிறுவ அனுப்பிய விண்ணப்பம் இன்னும் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பாளையத்தில் சிமெண்ட் ஆலை ஆரம்பிக்க வேண்டிய தகுதிகள் அனைத்தும் இருக்கின்றன. ஆனால் மத்திய சர்க்கார் காலதாமதம் செய்து கொண்டு வருகிறது. ஆகவே தொழிற்சாலைகள் அமைக்க லைசென்ஸ் வழங்கும் உரிமை மத்திய அரசிடம் இருப்பதால்தான் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மொத்தமாக இத்தனை லைசென்ஸ் எங்களுக்கு வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் போராடி வாங்குமா ? அதுமட்டும் அல்லாமல் தமிழ்நாடு முழுவதும்,

பாளையத்தில் சிமெண்ட் ஆலை வேண்டுமென்று மக்கள் மத்தியில் எழுச்சி நாள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, உரிமங்கள் வழங்குகிற அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு வழங்கப்படுமானால் அது மகிழ்ச்சியோடு வரவேற்கக்கூடிய ஒன்றுதான். எழுச்சிநாள் கொண்டாடுகிற அவசியம் இல்லாத அளவிற்கு மத்திய அரசே பரிவோடு நம்முடைய வேண்டுகோளை ஏற்கும் என்று மனப்பூர்வமாக நம்புகிறோம். ஏற்கனவே கரூர்—திண்டுக்கல் ரயில்வே லைனுக்கு ரயில்வே பாதையில்லை என்ற காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டது. இப்போது அது ஏற்பட்டதற்கு பின்னாலே, அதற்கு நிலக்கரி இருப்பில் இல்லை என்று சொல்லி நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும்கூட அது ஒரு நியாயமான வாதம் என்பதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அதற்கான உரிமையை வழங்க வேண்டும். ஏன் என்றால், தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் அரசாங்கத்தினுடைய நிறுவனமாக இருந்துவருகிறது. சுமார் 40 கோடி இருப்பிலே. எனவே—அரசாங்கம்—உரிமம் வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்துகிறோம். மத்திய அரசு நிச்சயமாக ஏற்கும் என்று மனப்பூர்வமாக நம்புகிறோம். இந்த மன்றத்தின் மூலமாக வேண்டுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பாளையத்தில் சிமெண்ட் ஆலை நிறுவுவதற்கு மத்திய அரசு மட்டும் காலதாமதம் செய்யவில்லை. கரூர் அருகே உள்ள தனியார் சிமெண்ட் ஆலை. * * *

தடையாக இருப்பது அரசுக்குத் தெரியுமா? * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அனுமதிக்க முடியாது.

திரு. இரா. தாமரைக்கனி : * * * *

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே * * * என்று தங்களைப் பார்த்து அழைக்கலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையின்படி அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன அந்தப் பெயரை நீக்கிவிடலாம். தனியார் யாருடைய வற்புறுத்தலுக்கும் மத்திய சர்க்கார் பணிந்து போகின்ற அளவிற்குப் பலவீனமாக இருக்கிறது என்பதை நான் நம்பவில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்டவர் பெயரும் நீக்கப் பெறுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேடசந்தூர், பாளையம் பகுதியிலே 40 கோடி செலவில் இந்த சிமெண்ட் தொழிற்சாலையை அமைப்பதற்கான அனுமதியை, 2 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய சர்க்காரிடம் நம் அரசு கோரியது. அன்றையதினம் மத்திய அரசின் தொழில் அமைச்சராக இருந்த சரண்சிங் சனானா அவர்கள் அங்கே சிமெண்ட தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்கப்படும் என்று சொல்லி அந்தச் செய்தி பத்திரிகையிலே எல்லாம் வந்திருக்கிறது. அப்படி அந்த மத்திய அமைச்சரின் உறுதிமொழியை நம்பி மாநில அரசு நில ஆர்ஜிதப் பணிகள், அதேபோல் பிராஜெக்ட் ரிப்போர்ட் போன்றவைகளை தயாரித்து இருக்கிறது என்பது உண்மையா? அப்படி என்றால் அந்தக் காரணத்தை சுட்டிக்காட்டி மையஅரசின் அமைச்சருடைய உறுதிமொழியை நம்பி இறுதி நடவடிக்கைகள் மாநில அரசு எடுத்து விட்டது என்றும், எனவே உடனே அனுமதி வழங்கவேண்மென்றும் மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப்போல ஏற்கனவே அதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகள்—ஆரம்பப் பணிகள் முடிவுற்று இருக்கின்றன. நில ஆர்ஜிதப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த ஆலை நம்முடைய அரசுத் துறை நிறுவனமான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் மூலம் தொடங்கப்படவுள்ளது. மத்திய அரசு கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையில்தான் அவைகள் செய்யப்பட்டன. ஆகவே, மத்திய அரசு கொடுத்த உத்தரவாதத்தை நிராகரிக்காமல் நிச்சயமாக உரிமம் வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவேதான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நிலக்கரிப் பற்றாக்குறையால் மைய அரசு அனுமதி வழங்குவதைக் காலதாமதமாக்குகிறது என்று இறுதியாக நமது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் அந்தத் தொழிற்சாலையைப் பாளையத்தில்

அமைக்கவேண்டும் என்று மத்திய அரசுக்கு விண்ணப்பித்த பிறகு, மத்திய அரசு கேரளத்தில் ஒரு பெரிய சிமெண்ட் தொழிற்சாலையை அமைப்பதற்கும், அதேபோல், தனிப்பட்டவருக்கு ஒரு மினி சிமெண்ட் ஆலை அமைப்பதற்கும் அனுமதி வழங்கியிருக்கிறதா? 4 லட்சம் டன் சிமெண்ட் தயாரிக்கும் அந்தப் பாளையம் சிமெண்ட் ஆலைக்கு 70,000 டன்தான் ஆண்டு ஒன்றுக்கு நிலக்கரி தேவைப்படுகிறது. நிலக்கரியை இறக்குமதி செய்ய அன்னியச்செலாவணி அதிகமாகும் என்று காரணம் சொல்லப்படுகிறது. ஆனால் அதேநேரத்தில் பல லட்சம் டன் சிமெண்டை இந்திய அரசு இறக்குமதி செய்துவருகிறது. ஆகவே, மாநில அரசே இந்த சிமெண்ட் ஆலைக்குத் தேவையான 70,000 டன் நிலக்கரியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யத் தயாராக இருக்கிறது என்ற ஒரு கோரிக்கையை முன் வைத்து அந்த பாளையம் சிமெண்ட் பாக்டரிக்கு அனுமதி பெற மாநில அரசு உடனே முயற்சியை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய மின்சார உற்பத்தி நிலையங்களுக்குப் போதிய தரமான நிலக்கரி கிட்டாத காரணத்தால், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. அதற்கே இன்னும் மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. எனவே அந்த அடிப்படையில் நாமே இறக்குமதி செய்துகொள்கிறோம் என்று சொன்னாலும் அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல் நாம் கேட்ட பிறகு, மற்ற மாநிலங்களில் இருப்பவர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. எனவே நாமே வெளிநாட்டில் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்கிறோம், அனுமதி கொடுங்கள் என்று கேட்பதற்குப் பதிலாக மைய அரசே நமக்கு நிலக்கரி தருவதற்கு உத்தரவாதம் தந்து, தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சில மாநிலங்களில் வெளிநாட்டில் இருந்து சிமெண்ட் இறக்குமதி செய்து கொண்டு இருக்கும் நிலையை இல்லாது ஆக்குவதற்கும், மேலும் உற்பத்தியை அதிகமாக உண்டாக்குவதற்கும் ஏற்றவகையில், மத்திய அரசு நமக்கு நிராகரிப்பு மடல்களை அனுப்பாமல், உரிமம் வழங்குவதற்கு முன்வரும் என்று நம்புகிறோம்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த வேடசந்தூர் பாளையம் சிமெண்ட ஆலை என்பது பல ஆண்டு காலமாக அந்தப் பகுதி மக்களால் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிற ஒன்றாகும். அதை மத்திய அரசு வேண்டுமென்றே



காலதாமதப்படுத்தி, கொடுக்கக்கூடாது என்று எண்ணுவது போல் தெரிகிறது. ஆகவே, இந்த ஆண்டே அவர்களிடமிருந்து அனுமதியை வாங்கும் முறையில் இந்த அரசு புதிய யோசனை ஏதேனும் வைத்து இருக்கிறதா ? இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் எத்தனை முறை மத்திய அமைச்சரோடு விவாதித்து இருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா ?

(முற்பகல் 10—10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அநேகமாக டெல்லிக்குப் போகிறபோதெல்லாம்—மாதம் இரண்டு தடவை குறையாமல் போகிறோம்—மத்திய அமைச்சர் திரு. திவாரி அவர்களைப் பார்த்து பேசுகிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் போகும்போதும் மத்திய அமைச்சரையும், பிரதமரையும் சந்தித்து, அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கடிதங்கள் மூலமும், அதிகாரிகள் மூலமும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். தற்போது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை இது. இதற்கு மேலும் ஏதாவது செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் யோசனை கூறினால் அந்த யோசனைகளையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. என். வரதராஜன் : தலைவரர்களே, இந்த மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் பாளையம் என்ற பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இதற்கு வேண்டுமானால் பாளையம் என்று பெயர் இருக்கலாம். ஆனால் அது ஒரு பாலைவனம். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்கள் 95 சதவீதத்திற்குமேல் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். தொடர்ச்சியாக மழை இல்லாத ஒரு பிரதேசம் அது. இந்த ஆலையை ஏற்படுத்துவதற்கு அங்கே மூலப்பொருள் கிடைக்கிறது. உழைப்பாளிகள் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலேயும் இதற்கு விதிவிலக்கு கொடுத்து, குறைந்த நிலக்கரியே இதற்குத் தேவை என்பதால் இந்த ஆலையை உடனடியாக அந்தப் பகுதியில் தொடங்க மத்திய அரசை நம்முடைய மாநில அரசு இந்தக் கருத்தையும் இணைத்து வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இதைப் போன்று எல்லாவற்றையும் நேரிலே சந்திக்கும்போது தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறோம். இன்றைக்குப் பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்களுடைய உணர்வுகளை இங்கே பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோருடைய உணர்வுகளையும் மத்திய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்று நம்புகிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இந்தப் பாளையம் சிமென்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய சுண்ணாம்புக் கல் கிடைக்கின்ற பகுதி ஒரு தனியார் கம்பெனியான செட்டிநாடு சிமென்ட் கம்பெனிக்குக் குத்தகைக்குக் விடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஏற்கனவே செட்டிநாடு சிமென்ட் தொழிற்சாலைக்கு, அவர் களுடைய உற்பத்திக்கு வேண்டிய அளவுக்கு 'லீஸ்' மற்ற ஏரியா வில் பெற்றிருக்கிறார்கள். ஆனால், பாளையம் சிமென்ட் தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற எந்தப் பகுதியும் தனியார் எவருக்கும் வழங்கப்படவில்லை. இனிமேலும் வழங்கப் படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகள்.

*வினா எண். 137—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிமென்ட் கார்ப்பரேஷன் (Tancem) நிர்வாகத்தின் கீழ் சிமென்ட் உற்பத்தி தொழிற்சாலைகள் எங் கெங்கு உள்ளன ?

(ஆ) அவைகளின் உற்பத்தி அளவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், ஆலங்குளம் என்னும் இடத்தில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறனுள்ள ஒரு சிமென்ட் தொழிற்சாலையும், திருச்சி மாவட்டம் அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தித் திறனுள்ள மற்றொரு சிமென்ட் தொழிற்சாலையும் உள்ளன.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சிமென்ட் உற்பத்திச் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் இரண்டு இடங்களில் இருப்பதாகவும் அவை 9 இலட்சம் டன் உற்பத்திச் செய்வதாகவும் சொல்லியிருக் கிறார்கள். தமிழ் நாட்டினுடைய சிமென்ட் தேவை எவ்வளவு? அதை ஈடு கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து நாம் ஒவ்வொரு ஆண்டும் பெற்றுக்கொண்டிருப்பது எவ்வளவு என்பதை அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் ஒரு காலாண்டுக்கு 3 மாதத்திற்கு லெவி சிமெண்ட் கிட்டத்தட்ட நமக்கு 1,25,000 டன் கிடைக்கிறது. நம்முடைய தேவை அதைப்போல நான்கு மடங்கிற்கும் அதிகாக இருக்கிறது. மூன்று மாதத்திற்கு 5 அல்லது 6 இலட்சம் டன் நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் 1.25 இலட்சம் டன்தான் லெவி சிமெண்ட் கிடைக்கிறது. எனவே அரசுத் துறைகளின் சார்பிலே நடைபெறும் பணிகள் காலதாமதம் இல்லாமல் நடப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து இரண்டு இலட்சம் டன் சிமெண்ட் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து இதுவரையில் சுமார் 40,000 டன் வந்திருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, நம்முடைய தேவை கிட்டத்தட்ட 20 இலட்சம் டன் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுப்பது போதவில்லை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதாகச் சொன்னார்கள். நாமே இறக்குமதி செய்ய முடியுமா ? அதற்கு வழிவகை இருந்தால் வெளிநாடுகளிலிருந்து இந்த ஆண்டு எவ்வளவு சிமெண்ட் இறக்குமதி செய்யப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மட்டுமல்ல ; இந்தியா முழுமையும் எல்லா மாநிலங்களுக்கும் இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தேவை என்று கருதினால் வெளிநாடுகளிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்துகொள்ளலாம் என்ற அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் நம்முடைய அரசு ' நார்த் கொரியா அரசு சிமெண்ட் கார்ப்பரேஷனிட' மிருந்து தமிழக அரசு சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலம் சுமார் 2 இலட்சம் டன் பெறுவதற்கு ஒப்பந்தம் செய்து, இதுவரையில் 40,000 டன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த 2 இலட்சம் டன்னுக்குப் பின்னாலும், மேலும் சிமெண்ட் தேவைப்பட்டால் இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்,

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் நிர்வாகத்தின் கீழ் நடைபெறும் அரியலூர் சிமெண்ட் உற்பத்தி சாலையில், இந்த ஆண்டாவது திட்டமிட்டபடி குறியீட்டு அளவுக்கு முழு உற்பத்தி நடைபெறுகிறதா என்பதையும், அவ்வாறு நடைபெறாவிட்டால் அதற்கு என்ன காரணம் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசு அமைத்த பின்னாலே இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்ட அரசு

[1983 பிப்ரவரி 7

நிறுவனமாகும் துவக்கத்தில், அது அரசு நிறுவனமாக இருந்தாலும்
சரி, தனியார் நிறுவனமாக இருந்தாலும் சரி, முதலிலேயே லாபத்
தையோ அல்லது உற்பத்தியையோ முழு அளவில் எதிர் பார்க்க
முடியாது. படிப்படியாக வருகிற நாட்களில்தான் கொஞ்சம்
கொஞ்சமாக உற்பத்தி திறத்தையோ, லாபத்தின் அளவையோ
உயர்த்த முடியும். இந்த ஆண்டு போதிய நிலக்கரி இல்லாத
தோடு, கடுமையான மின் வெட்டின் காரணமாக, ஆலங்
குளம் அரியலூர் ஆலைகள் மட்டும் அல்ல, தனியார் துறை
சிமெண்ட் ஆலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த
இரண்டு முக்கிய பிரச்சினைகளும் நீங்கலாக மற்றபடி நிர்வாகத்
திறமையின்மை காரணமாகவோ அல்லது வேறு எந்தக் காரண
மாகவோ உற்பத்தியின் அளவு குறைந்துவிடாத அளவுக்கு அரசு
முயன்று நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாயனூரில் சிமெண்ட் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 188—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் மாயனூரில் சிமெண்ட் ஓடு தொழிற்சாலை
அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை. ஆனால்,
ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்களை தயாரிப்
பதற்கான திட்டம் ஒன்று சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே
வரவிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆலையின் உயர்ந்தபட்ச மதிப்பீடு எவ்வளவு?
இந்த ஆலை துவங்கப்படும்போது எத்தனை பேருக்கு வேலை
வாய்ப்புக் கிடைக்கும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்
பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் மாயனூரில்
இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக முடிவு செய்யப்பட்டு,
அதற்கான நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இது ஆண்டு
ஒன்றுக்கு 36,000 டன் எடையுள்ள ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்
அழுத்தக் குழாய்களைத் தயாரிக்கும். இந்தத் தொழிற்சாலை
8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஆரம்பிக்கப்படவிருக்கிறது.
30 மாதங்களில் அதற்கான பணிகள் நிறைவேற்றப்படும்.
இதன் மூலம் நேரிடையாக சுமார் 300 பேருக்கும், அதை
யொட்டி மற்ற வகைகளில் 500 பேர்களுக்கும் வேலை வாய்ப்
பளிக்கக் கூடிய வாய்ப்பிருக்கிறது.



திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தற்போது சிமெண்ட் உற்பத்தி செய்கிற முறையினை
மாற்றி, டிரை பிராஸஸ் என்ற முறையிலே சிமெண்ட்
உற்பத்தி செய்யக்கூடிய வழி இருப்பதாகச் சொல்லுகிறார்களே
அந்த வழிமுறைகளை பின்பற்றி அரசு ஆலையில் சிமெண்ட்
உற்பத்தி செய்ய அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

பதில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி
வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறியிடப்
பெற்றிருந்தால் (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்
றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வறட்சி நிலை.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். வட ஆற்காடு மாவட்டத்
திலே வறட்சி அதிகமாகயிருக்கின்ற காரணத்தாலே, அந்த மாவட்
டத்து மக்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும்
வெளியேறிச் செல்கிற ஒரு பயங்கரமான நிலைமை இருப்பதாகக்
கூறி, அதனைப் பேரவையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும்
கேட்டு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கி
றோம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது போல்
மக்கள் அதிக அளவில் வெளியேறுவதாகத் தெரியவில்லை, நீங்
களும் தற்போது இங்கேயேதான் இருக்கிறீர்கள். அவையில்
எடுத்துச் கொள்ள வேண்டும் என்று எழுதிக் கொடுத்திருந்தால்
எப்படி அது முறைப்படி வரவேண்டுமோ அப்படி வரும். அந்த
முறையின்படியே தாங்களும் அவையில் அதனை எழுப்ப
வேண்டும். இப்படி பாயிண்ட் ஆப் ஆர்டரில் எழுப்பக் கூடாது.

திரு. பாபு ஜனார்த்தனன் : அது பற்றிய ரிப்போர்ட் இந்து
பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது. நாங்களும் அதனை விவா
திக்க வேண்டும் என்று கோரி எழுதிக் கொடுத்திருக்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளிலே வரு
வதை எல்லாம் ஆதாரமாக வைத்துக் கொண்டு, இங்கே எழுப்பக்
கூடாது. முறைப்படி அவையில் கொண்டு வாருங்கள். தாங்
கள் எழுதிக் கொடுத்திருப்பதாகச் சொன்னீர்கள். அப்படியென்
றால் அது வரும்போது வரும். இப்போது வராது.

திரு. பாபு ஜனார்த்தனன் ; வட ஆற்காடு மாவட்டத்தில் வறட்சி நிலை அதிகமாக இருக்கிறது. அது குறித்து அவையில் எழுப்ப வேண்டும் என்று நாங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறோம். அதனை அவையில் விவாதிக்க மறுக்கிற காரணத்தால், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்புச் செய்கிறோம்.

(வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.).

(ஆ) துணை வினா அனுமதிப்பது.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; 169-வது கேள்வியில், கொள்ளிடம் ஆற்றின் தென் கரையில் லோயர் அணைக்கட்டிலிருந்து ......( மணியடிக்கப் பெற்றது). நான் சொல்ல வந்ததை சொல்லிவிட்டுத்தான் முடிப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஒரு உப கேள்வி தான் கேட்கலாம். தயது செய்து உட்காருங்கள். வினாக்கள் விடைகள் நேரம் முடிந்து விட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பலம் என்பது பாலமாகத் தெரிந்திருக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்களே, எனக்கு என்ன பாலத்திற்கும் இதற்கும் வித்தியாசம் தெரியாதா? அவர்களுக்குத்தான் தெரியாது....(வினாக்களின் பட்டியல் அறிக்கையை கிழித்து எறிந்தார்.)

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்கு ஒரு துணைக் கேள்வி அனுமதித்தாகிவிட்டது. அதற்குமேல் அனுமதிக்க இயலாது. எனவே அனுமதி அளிக்காததற்கு வருத்தப்படுவதில் பயன் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்பு.

திரு. வேடந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். இந்தப் பேரவையின் உரிமையினைப் பறிக்கின்ற முயற்சி வெளியே நடக்கின்றது. மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களின் மீதே வழக்கு தொடரப்படுகின்ற



நிலைமை ஏற்பட்டு அது இந்த அவையின் உரிமையை மீறுவதாக இருக்கின்றது. எனவே அவையின் உரிமையைக் காக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு வந்திருப்பதற்காக உணர்ச்சி வசப்படக்கூடாது. இந்த அவையிலே வழக்கு மன்றம் குறித்து ஒரு விவாதம் வந்து விடக்கூடாது . அரசியலமைப்புச் சட்டத்தில் 211-வது விதி ஒன்றிருக்கின்றது. 212-வது விதி ஒன்று இருக்கின்றது. இது பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் தெரியும்.

"2 2(1) The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure.

(2) No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers",

இந்த இரண்டுமே இருக்கின்றது. எனவே இதற்குமேல் எதுவும் சொல்லத்தேவையில்லை. நான் சொல்வதாகவும் இல்லை. இது குறித்து யாரும் இங்கே விவாதிக்கக்கூடாது. இதனை சட்டப்பிரச்சினையாக ஆக்கக்கூடாது. அடுத்து (குறுக்கீடு).... உரிமை மீறல் பிரச்சினை....

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நான் 3 உரிமை மீறல் பிரச்சினைகள் கொடுத்திருக்கிறேன். ஏற்கெனவே தங்களிடத்திலே வேண்டுகோள் கேட்டிருக்கிறேன். திரு. மோகன்தாஸ் அவர்கள் மீது கொண்டு வந்த பிரச்சினை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் திரும்பவும் பத்திரிகையில் வராது. இப்போது உங்களுக்காகத்தான் நான் உரிமை மீறல் பிரச்சினையைக் கவனிக்கின்ற வகையிலே முன் னுரிமை கொடுத்திருக்கிறேன். அதற்காக நீங்கள் மகிழ்ச்சி அடையவேண்டும்.

## 3. உரிமைப் பிரச்சினை

ஒரு சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவின் ஆய்வில் இருக்கும் போது அதே போன்றுள்ள ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் 246-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்குமாறு கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இப்பிரச்சினையில் என் இசைவை அளிக்குமுன், இதில் அவை உரிமை மீறல் எவ்வாறு ஏற்படுகிறதென்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ஆம் தேதி ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு இன்றியமையாப் பணிகளை ஒழுங்குபடுத்தும் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார்கள். இந்த அவசரச் சட்டம் ஆளுநர் அவர்களால் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு இதே அவையில் அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு மசோதாவாக இங்கே கொண்டு வரப்படுகின்ற நேரத்தில் ஆளும். கட்சியினைத் தவிர அனைத்து கட்சிகளும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம், அந்தச் சட்டம் தொழிலாளர்களுக்கு விரோதமான சட்டம், தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறிக்கக்கூடிய சட்டம் ஜனநாயக விரோதச் சட்டம், இன்னும் சொல்லப்போனால் வேலை நிறுத்தம் என்ற ஒரு ஆயுதம் இல்லை என்று சொன்னால் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காண முடியாத நிலைமை ஏற்படும். பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத நிலைமையில் அதைத்தவிர வேறு வழியில்லை என்று சொல்லக்கூடிய அந்த ஜனநாயக உரிமையினை பறிக்கின்ற விதத்தில் இந்த சட்டம் கொண்டுவரப்படக்கூடாது என்று சொன்னோம். மேலும் ஏற்கெனவே வேலை நிறுத்தம் அல்லது வேறு பிரச்சினை என்று சொன்னால் இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் அந்தப் பிரச்சினைகளைச் சந்திப்பதற்குரிய வசதி வாய்ப்புகள் இருந்தும் கூட தொழிலாளர்களுக்கு விரோதமாக, தொழிலாளர்கள் நல அரசு என்று சொல்லக்கூடிய இந்த சர்க்கார் அந்த மசோதாவினை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னதற்குப் பிறகு அது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது.



இப்போது அந்தப் பிரச்சினை செலக்ட் கமிட்டியிலே இன்னும் முடிவு அடையாமல் விவாதத்தில் இருந்து கொண்டு இருக்கிறது. அந்த செலக்ட் கமிட்டி இந்த அவசரச் சட்டத்தைப் பற்றி, இந்த மசோதவைப்பற்றி கருத்துக்களை அறிக்கையின் மூலமாக சபையில் இன்னும் அறிவிக்கவில்லை. எனவே இப்போது கொண்டு வரக்கூடிய அவசரச் சட்டம் இருக்கிறதே இது ஏற்கனவே கொண்டுவரப்பட்டு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அதை மறுத்தும்கூட அது இப்போது செலக்ட் கமிட்டியில் மேட்டர் பெண்டிங்காக இருக்கிறது.

நிலைமை இப்படி இருக்கும் போதுஇந்த அவையிலுள்ள உறுப்பினர்கள்தான் எஸ்டிமேட் கமிட்டியிலும், இந்த செலக்ட் கமிட்டியிலும் இன்னும் பல கமிட்டிகளிலும் இருக்கிறார்கள். அந்த கமிட்டிகளும் இந்த சபையினால்தான் நியமிக்கப் படுகிறது. இந்த கமிட்டிகள் தங்களுடைய அறிக்கைகளை எல்லாம் இந்தச் சபையின் மூலமாகத்தான் அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும். அந்த கமிட்டியின் நடவடிக்கைகளை வெளியில் சொல்லக்கூடாது. அது ரகசியமானது என்று சட்டப்பேரவையின் விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும்போது திடீர் என்று இந்த அவசரச்சட்டத்தை பழையபடியும் கொண்டுவர ஏற்பாடு செய்து இருப்பது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. ஏன் என்றால் ஏற்கனவே சட்டமன்றத்தால் செலக்ட் கமிட்டி நியமிக்கப்பட்டு அந்த சட்ட முன்வடிவை விவாதித்து அறிக்கை இன்னும் அளிக்காத நிலைமை இருக்கிறது. இப்போது அதே அவசரச் சட்டத்தை இந்த சபையில் கொண்டுவருவதற்கு இவர்களுக்கு அதிகாரம் கிடையாது. உரிமையும் கிடையாது. எனவே சட்டசபையினால் நியமிக்கப்பட்ட கமிட்டி அமுலில் இருக்கும்போது அதனுடைய உரிமைகளை மதிக்காமல் அதனுடைய அதிகார வரம்பிற்குள் தலையிட்டு அந்தக் கமிட்டியை கேலி செய்கின்ற விதத்தில் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அவசரச் சட்டத்தை கொண்டுவந்த சர்க்கார் குறிப்பாக இந்த அமைச்சரவை அதற்கு பொறுப்பு ஏற்கவேண்டும். காரணம் புரம்மல்கேட் பண்ணுகிற அதிகாரம் ஆளுநருக்கு இருக்கிறது. He is the Executive Nominal Head அவர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவர முடியாது. கொண்டுவரக்கூடாது என்றுவிதி இருக்கிறது. எனவே இந்த அவசரச் சட்டத்தை பிறப்பிப்பதற்கு காரணமாக இருந்த இந்த அமைச்சரவை மீது 'கன்டெம்ட் ஆப் அவுஸ்' என்று முறையில் கருதி அமைச்சரவையில் உள்ள அத்தனை பேரையும் தாங்கள் விசாரிக்க வேண்டும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அத்தனை பேரையும் விசாரிக்க முடியாது. ஒருவரைத்தான் விசாரிக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே அவையினுடைய உரிமையையும் அதைப்போலவே இந்த சபையின் பெருமையையும் சீர்குலைக்கின்ற விதத்தில் ஏதேட்சதிகாரமாக மீண்டும் இந்த சட்ட முன்வடிவை கொண்டு வந்து இருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும் என்று குறிப்பிட்டு இதை விசாரித்து நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் ஏற்கனவே ஜ. ஜி. மோகன்தாஸ் அவர்கள் மீது உரிமைப் பிரச்சினையை கொடுத்து இருக்கிறேன் . . . .

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொண்டுவரப் பட்டிருக்கிற இன்றியமையாப் பணியாளர்களுடைய பாது காப்பு சட்ட முன்வடிவு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப் பட்டு இருப்பது அவைக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக ஒரு சட்டமுன்வடிவை கொண்டு வந்து பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு இருக்கும்போது மீண்டும் ஒரு அவசரச் சட்டத்தை கொண்டு வந்தது விதிகளுக்கு அப்பாற் பட்டது, சட்டத்திற்கு முரணானது என்று கூறியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் ஒரு வழக்கறிஞர். அவர்கள் கூறுவது சட்ட விதிகளுக்கு முற்றிலும் மாறானது என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அசெம்பிளி விதி 182-ல் மிக தெளிவாக இது கூறப்பட்டிருக்கிறது.

Whenever an Ordinance, which embodies wholly or party or with modification the provisions of a Bill pending before the Assembly, is promulgated, a statment explaining the circumstances which had necessitated immediate legislation by Ordinance shall be laid on the Table at the commencement of the Session following the promulgation of the Ordinance.

ஒரு சட்ட முன்வடிவு ஏற்கனவே அவை முன் வந்து அது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு இருந்தபோதிலும் கூட அந்த சட்ட முன்வடிவை ஒட்டி அதே சட்டத்தைக் கொண்டு வரவோ மாற்றங்களோடு கொண்டு வரவோ அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ள அவைக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது விதி 182-ல் மிக தெளிவாக இருக்கிறது. அந்த விதியை ஒட்டி ஏற்கனவே கூட அவசர சட்டம் 1972-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி அவசரச் சட்ட முன்வடிவு ஏற்கனவே இருந்தபோதிலும் கூட மறுபடியும் அவசரச் சட்டம் கொண்டு வந்து அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுபோன்று எத்தனையோ சட்டங்கள் நடைமுறையில்

இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே ஒரு பில் பொறுக்குக் குழுவுக்கு போயிருக்கின்றபோது அந்த பில்லை ஒட்டி அதையே மீண்டும் அவசரச் சட்டமாக கொண்டு வந்திருக்கிறது என்று. அப்படி அல்ல அந்த அவசரச் சட்டம் .

That is Ordinance 12/1982ஐ

பொறுத்தவரை அதிலிருந்து சில மாறுதல்களோடு இந்த ஆர்டினன்ஸ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது அரசின் உத்திரவின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. காரணம் ஓர்க்ஷாப் என்ற ஒரு பிரிவை அதில் சேர்க்கவேண்டும் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. அந்த ஓர்க்ஷாப் பிரிவை சேர்க்கவேண்டும் என்பதற்காகத்தான் அதைச் சேர்த்து

Any service connected with the work for maintenance or repair of the motor vehicle of any transport service referred to in sub-clause ( )

சேர்க்கவேண்டும் என்று மத்திய அரசு கூறியதால் அதைப் போலவே

Any service connected with the public health and sanitation including hospitals and dispensaries and public conservancy.

என்பதை சேர்க்கவேண்டும் என்று மத்திய அரசு கூறியது

(முற்பகல் 10-30)

அது மட்டுமல்லாமல், 'ரெப்யூஸல்டு ஓர்க்' என்று சட்டமுன் வடிவிலே இருப்பதை மாற்றி 'ஸ்ட்ரைக்' என்று போட்டு, 'ரெப்யூஸல் டு ஓர்க்' என்ற பிரிவைப் பொறுத்தவரைக்கும் தனிப்பட்ட ஒருவர் இன்றியமையாத பணிக்கு இடையூறாக இருக்கிறபோது அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதற்கு பதிலாக

Collective responsibility of the workers when they resort to strike that should be brought in the provision

என்ற முறையில் அதை மாற்றவேண்டுமென்று மைய அரசு கூறியதன் அடிப்படையில் இந்த மூன்று திருத்தங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே பொறுக்குக் குழுவிலே இருப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. பொறுக்குக் குழு அண்மையிலே கூடி 15—3—1983-க்குள் தொழிற் சங்கங்கள்,

தொழிற்சாலைகள் தங்களுடைய கருத்துக்களை இந்த சட்ட முன்வடிவிலே தெரிவித்துவிட வேண்டுமென்ற அடிப்படையிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி, இந்த ஆர்டினன்ஸைப் பொறுத்தவரைக்கும் அவை விதிகளுக்குட்பட்டு, சட்டத்திற்குட்பட்டு ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்ட முன் உதாரணத்தின் அடிப்படையிலே கொண்டுவரப் பட்டிருப்பதால் இதிலே.

There is no breaoh of privilege

என்பதைக் கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீது என்னுடைய தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, டி, மணி, உ. சுப்பிரமணியன், மு. அப்பாதுரை, ப. பொன்னுரங்கம், கே. எம். தங்கமணி ஆகியோர் '' தூத்துக்குடியில் 31—1—1983 அன்று போலீசார் மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாலும், அதனால் சிலர் இறந்துள்ளதாலும் பலர் காயமுற்று உள்ளதாலும் மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப் புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவரவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவர் அவர்களே, 30—1—1983-ஆம் தேதியன்று தூத்துக்குடியிலே மீனவர்கள் பகுதியிலே இருவர் தெருவிலே நின்று கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள். அதைப்பற்றி அங்கே இருக்கின்ற போலீசார் 'நியூசென்ஸ் சார்ஜ்' அவர்கள் மீது போடப் போகிறோம் என்று சொல்லி அவர்களை அரஸ்ட் செய்து இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்கள் நியூசென்ஸ் சார்ஜ்தானே, நாங்கள் ஜாமீன் அவர்களுக்குக் கொடுக்கிறோம், கோர்ட்டிலே அவர்கள் ஆஜராவார்கள், கோர்ட்டு என்ன தீர்ப்பு கொடுக்கிறதோ அதற்கு நாங்கள் கட்டுப்படுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால்



அந்தப் போலீசார்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் அவர்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுப்பி வைக்கிறோம் என்று தாஜாசெய்து சொல்லி கொண்டுபோய் இருக்கிறார்கள். அவர்களை ஜாமீனில் விடவில்லை. அவர்கள் திரும்பவரவில்லை. அதைப்பற்றி ஊருக்குள்ளே ரொம்ப பதட்ட நிலை ஏற்பட்டு அதன் காரணமாக போலீஸார் 3, 4 பேர்களை ஊருக்குள்ளே ரோந்து என்ற முறையிலே அனுப்பி வைத்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுபோன ஆட்கள் திரும்பி வராத காரணத்தினாலே எங்கள் ஆட்களை கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி கொந்தளிப்பு ஏற்பட்டு அந்த ஊர் ஜனங்கள் எல்லாம் கொடுத்த வாக்குறுதி காப்பற்றப்படவில்லை என்பதால் எங்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் அதிலே ஒருவர் போலீசார் தங்களைத் தாக்குவதற்காக முயற்சி எடுக்கப்படுவதாக ஒரு ஆள் மூலமாகத் தகவல் சொல்லி போலீஸ் படையே திரண்டு வந்து எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் துப்பாக்கி பிரயோகம் செய்து பலர் காயம் அடைந்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியையொட்டி போலீஸ் ரெய்ட் தொடர்ந்து இருப்பதன் காரணமாக மக்களுக்கு பீதி ஏற்பட்டு அவர்கள் வெளியிலே முடக்கூடியநிலை ஏற்பட்டது. பல்வேறு ஆஸ்பத்திரிகளிலே இன்றைக்கு போலீசார்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். கூட்டுக் கலவரம் செய்தார்கள் என்று நூற்றுக்கணக்கானவர்களின் பெயர்களைக் குறித்துவைத்துக் கொண்டு அவர்கள் ஆஸ்பத்திரிக்கு காயத்திற்கு மருந்து போடவந்தால்—அவர்கள் வேறு காயம் ஏற்பட்டு அங்கு வந்தாலும்கூட—அவர்களைப் பிடிக்கக்கூடிய நிலமை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இதனால் மீனவர்கள் வாழ்கிற பகுதியை காலி செய்திருக்கிறார்கள். தொடர்ந்து போலீசின் மிரட்டல் நடந்து கொண்டிருக்கிறது. போலீஸ் தரப்பைப் பொறுத்தமட்டில் தங்களுடைய ஆட்களை தாக்க முயன்றார்கள், அதற்காக ஆகாயத்தை நோக்கி சுட்டோமே தவிர யாருக்கும் காயம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் காலியான ஒரு நிலை இப்போது இருக்கிறது. தொடர்ந்து போலீஸ் ரெய்ட் இருக்கிறது. இதை நிறுத்தியிருக்கவேண்டும். போலீஸ் தரப்பிலே நியூசென்ஸ் சார்ஜ் என்று கையெழுத்து வாங்கிக்கொண்டு ஜாமீனில் விடப்பட்டிருந்தால் சம்பவமே தவிர்க்கப்பட்டிருக்கும். வீணான, அநாவசியமான இந்த போலீஸ் அத்துமீறல் காரணமாக வேண்டாத ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடை பெற்றிருக்கிறது. ஆகவே துர்ப்பாக்கியமான

இதுபோன்ற நிலைநடைபெறாமல் இருக்க, இவைகளை
விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவலல்களை
ஒத்திவைக்க அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, துப்பாக்கிச்சூடு சம்பந்தமாக திரு. சொரணம் அவர்
கள் விரிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆங்காங்கு தேவையில்லாத
சூழ்நிலைகளில் போலீசார் துப்பாக்கிச்சூடு பிரயோகத்தில் ஈடு
படுகிறார்கள் என்பது இந்த அவையில் பலமுறை எடுத்துச் சொல்
லப்பட்டிருக்கிறது. குடித்துவிட்டு கலாட்டா செய்கிறவர்களை
அரெஸ்ட் செய்வதற்கு போன போலீஸ்காரர்களை தாக்கியதாக
வும், போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனவர்களை திரும்பக்
கொண்டுவருவதற்கு பெரிய கும்பல் ஒன்று சென்றதாகவும் சொல்
கிறார்கள். பெரும்பாலான ரிப்போர்ட்களில் போலீஸ் தரப்பி
னுடைய வாதத்தையே பத்திரிகைகளில் போடுகிற சந்தர்ப்பங்
கள் இருக்கின்றன. அடிப்படையில் என்ன நிலை இருக்கிறது
என்பதை அறிந்துகொள்ள வேண்டும். பல சந்தர்ப்பங்களில்
நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது அதனுடைய மூல காரணம்
என்ன ? அங்கே புரோவோகேஷன் பேரிலேதான் துப்பாக்கிச்
சூடு நடந்ததா ? அல்லது தங்களுடைய அதிகாரத்தைப் பயன்
படுத்தி, எந்த நேரத்திலும் துப்பாக்கிச்சூடு நடத்தலாம் என்று
சுட்டார்களா ? என்ற ஐயம் இருக்கிற காரணத்தால், சில சம
யங்களில் '' தி ரெய்ன் ஆப் டெரர் இஸ் லெட் லூஸ் '' என்ற
அளவிலேகூட சில பகுதிகளில் நடந்து, அந்த பகுதி மக்கள்
கலவரம் அடையக்கூடிய, பீதி அடையக்கூடிய சூழ்நிலை இருக்
கிறது. ஆகவே, இதையெல்லாம் வருங்காலத்திலாவது தடுத்து
நிறுத்துவதற்கு, இதுபற்றி விரிவாக விவாதம் நடத்துவதற்கு
அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று,
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை,
என்பதை முதலில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். திரேஸ்புரம் என்ற பகுதியில் 30-ஆம் தேதி நடந்த
போலீஸ்காரர்களுடைய அக்கிரமமான செயல்கள் துப்பாக்கிச்
சூட்டிற்குப் போகிற அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்
பதை மிக வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதில்
பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் கட்டுமர மீனவர்கள். வல்
லத்தில் சென்று தொழில் செய்பவர்கள். இன்னும் சொல்லப்
போனால் ஆழ்கடலில் மூழ்கி சங்கு எடுத்து இந்த சர்க்கார்
வியாபாரம் செய்வதற்கு உதவிகரமாக இருப்பவர்கள். இந்த
வல்லத்து மீனவர்கள் அன்றாடம் காய்ச்சிகள் என்பதை முதலில்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அன்றையதினம் தான் அந்த நிகழ்ச்சி நடைபெற்றதா ? இது
போன்ற விரும்பத்தகாத, வேண்டத்தகாத, அநியாயமான, அக்
கிரமமான நிகழ்ச்சிகள் அன்றையதினம்தான் நடைபெற்றதா,
என்றால் இல்லை. இந்த ஆட்சியிலே தொடர்ந்து போலீசின்
அடக்குமுறை திரேஸ்புரத்தில் உள்ள அந்தப்பகுதி மக்களைப்
பொறுத்தவரையில் வாய் இல்லாதவர்கள் என்ற காரணத்தால்,
கேட்பதற்கு ஆள் இல்லாதவர்கள் என்ற காரணத்தால் போலீசின்
அணுகுமுறையானது மிக மோசமான நிலையை உருவாக்கி வந்
திருக்கிறது என்பதை வேதனையோடு அந்த மக்கள் தெரிவிக்கிற
நிலை இருக்கிறது என்பதை முதலில் சுட்டிக்காட்டக்கடமைப்
பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10–40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலும் கடை
சியும் அதுதான். முதலிலே என்ன சுட்டிக்காட்டுவது ? இது
ஒத்திவைத்து விவாதிக்க அனுமதி கோருவது.

திரு. ப. பொன்னுரங்கம் : முடித்துவிடுகிறேன். அந்தக்
கட்டுமர மீனவர்கள் செய்த கொடிய செயல் என்னவென்றால்,
அவர்கள் குடித்து இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.
ஏனென்றால், நாட்டிலே யாரும் குடிக்காத மாதிரியும், அந்தக்
கட்டுமர மீனவர்கள்தான் குடித்திருந்த மாதிரியும், அதனால்
போலீஸ் தீவிரமான நடவடிக்கை எடுத்த மாதிரியும் சொல்கிறார்
கள். அவர்கள் தொழிலுக்குக் குடிக்க வேண்டியது அவசியம் ;
அது தவிர்க்க முடியாதது. ஏனென்றால், அவர்கள் தொழில்
அந்த மாதிரி. அந்த இடத்தில் போலீஸ் நடந்து கொண்ட முறை
வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று நான் சொல்கிறேன்.
குடித்துவிட்டு கலாட்டா செய்தார்கள் என்று சொல்கிறார்கள்.
அப்படிக் குடித்துவிட்டு கலாட்டா செய்தவர்களுக்கு ஆதரவாக,
அனுசரணையாக, பெண்களும், பிள்ளைகளும் சேர்ந்தா
போவார்கள்? அந்தப் பெண்களும் பிள்ளைகளும் போலீசாரிடம்
மன்றாடினார்கள் என்று சொல்லப்படுகிறது. கலாட்டா செய்
பவர்கள் எப்படி மன்றாடுவார்கள் ? ஆகவே, போலீஸ் தரப்
பில் சொல்லப்படுவது முன்னுக்குப் பின் முரணானது என்பதை
இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போலீ
சாருடைய அத்துமீறிய செயல், அடாவடித்தனமான செயல்
இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டிருக்கிறது. அந்தப் பகுதி
போலீசார், ஏழை மீனவர்கள், வல்லத்து மீனவர்கள், கட்டுமர
மீனவர்கள் வீடுகளிலே புகுந்த ஆண்கள் என்றும் பார்க்காமல்,
பெண்கள் என்றும் பார்க்காமல், நையப் புடைத்திருக்கிறார்கள்,
உதைத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அக்கிரமமான
செயல் அங்கு நடைபெற்றிருக்கிறது.

கன்னியாகுமரி வரையில் இத்தகையச் சம்பவங்கள் நடந்திருக்
கின்றன. மண்டைக்காட்டிலே போலீஸ் அணுகு முறையால்தான்
9 பேர்கள் செத்தார்கள். ஏன், என் தொகுதியில், அம்பல
வாணன் என்ற கட்டுமரத் தொழிலாளி, அ.இ. அ.தி.மு.க.வைச்
சேர்ந்தவர், போலீசாரால் சுட்டு வீழ்த்தப்பட்டான் உங்கள் ஆட்
சியில். ஆகவே, பொதுவாக மீனவர்களை, குறிப்பாகவும் சிறப்
பாகவும் கட்டுமர மீனவர்களைப் பொறுத்த வரையில் இந்த
ஆட்சியினுடைய அணுகுமுறை கண்டிக்கத்தக்கது என்பதை நான்
வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்
றது). முடித்துவிடுகிறேன். * *

அடுத்து, பெரும்பாலான கட்டுமர மீனவர்கள் பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள். எதெதற்கோ நம்முடைய முதலமைச்சருடைய
நிவாரண நிதியிலிருந்து தாராளமாக உதவி வழங்கப்
படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதுபோல், பாதிக்கப்பட்ட
மீனவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம்
அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது) அமைச்சருக்கு ஒரே ஒரு வேண்டுகோள். அங்கு 11
மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த மீனவர்
கள்மேல் போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் வாங்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, அது சம்பந்த
மாக விரிவாக விவாதிக்க, அனைவருக்கும் வாய்ப்பு தர இந்த
அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதனை
விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்
கள் தன் பேச்சை முடிக்கவேண்டுமென்று தாங்கள் மணி அடித்த
வுடன் அவர் முடித்து விடுகிறேன்** என்று சொன்னார். அவ்வாறு
சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தையை
அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கிடைத்த
தகவலின்படி தூத்துக்குடியில் 1983-ஆம் ஆண்டு சனவரித் திங்
கள் 30-ஆம் நாள் அன்று இரவு 8–30 அளவில் தூத்துக்குடி
வடக்குக் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் சென்னை நகரக்
காவல் சட்டப்பிரிவு 75-இன் கீழ் தெரசாபுரத்தைச் சேர்ந்த
இரண்டு மீனவர்களைக் கைது செய்தார். உடனே, தெரசா
புரத்தைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்பட்ட மீனவர்களை
மீட்க முயற்சித்தனர். சப்-இன்ஸ்பெக்டர் சமாளித்துக் கைது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.



செய்யப்பட்ட இருவரையும் காவல் நிலையத்துக்குக் கொண்டு வந்துவிட்டார். இதற்கிடையில், தெரசாபுரத்துக்கு அருகாமையில் உள்ள மாதவன் நாயர் காலனியில் பந்தோபஸ்துப் பணி செய்துகொண்டிருந்த மூன்று காலவர்களைச் சுமார் 100 மீனவர்கள் சேர்ந்து அடித்து அவர்களைக் கடத்திக் கடற்கரைக்குச் கொண்டு சென்றனர். தகவலறிந்த தூத்துக்குடி மத்திய காவல் ஆய்வாளர் தனது சகாக்களுடன் சென்று கடத்தப்பட்ட மூன்று காவலர்களையும் மீட்டு வந்தார். அவர் திரும்பி வரும்போது மீனவர்கள் அதிகமாகக் கல்லெறிந்து காவல் துறையினரைத் தாக்கி ஒரு சைக்கிளையும் பிடுங்கிக் கொண்டனர். உடனே, கூட்டத்தைக் கலைக்க தடியடி நடத்தியும் பயனில்லாத நிலையில், சட்டத்துக்கு விரோதமான அந்த வன்முறைக் கும்பலைக் கலைக்க இரவு சுமார் 10–30 மணியளவில் காவல் துறையினர் 4 '' பக்சாட் '' குண்டுகளையும் 5 சுற்றுக்களையும் வானை நோக்கிச் சுட்டனர். உடனே, கூட்டத்தினர் கலைந்து சென்று விட்டனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமடையவில்லை. எவருக்கும் உயிரிழப்பும் ஏற்பட வில்லை. காவலர்கள் ஆங்காங்கே பந்தோபஸ்துப்பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இது தொடர்பாக தூத்துக்குடி வருவாய்க் கோட்டாட்சியர் மாஜிஸ்ட்டிரேட் விசாரணை செய்யும்படி ஆணையிடப்பட்டுள்ளார். இது குறித்து தூத்துக்குடி வடக்கு காவல் நிலையத்தில் 3 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருநெல்வேலி கிழக்கு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டுள்ளார். இப்போது நிலைமை கட்டுக்குள் அடங்கி உள்ளது.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து, நிலைமை கட்டுக்கடங்கி இருப்பதாலும், மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நடைபெறாததாலும் இது குறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு, அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பி பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

5. கவன ஈர்ப்பு.

நூல்விலை உயர்வினால் நெசவாளர் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, எம். சின்னசாமி, மி. வின்செண்ட், செ. செம்மலை, ப. வெங்கடசுப்பிரமணியம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். செல்லமுத்து, டி. மணி, ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி, என். வரதராஜன், ஜே.

ஹேமச்சந்திரன், கே. ஆர். சுந்தரம், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன், உ. சுப்பிரமணியன், ப. நெடுமாறன், குமரி அனந்தன், க. பாரமலை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ''கைத்தறி நெசவுத் தொழிலுக்கு வேண்டிய நூல் விலை உயர்த்தப்பட்டு விற்பதால் நெசவாளர்கள் படும் இன்னல் குறித்த''

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்ற மாதம், தமிழ்நாட்டில் அமுலுக்கு வந்த 100 சதவீதம் மின்வெட்டை ஒட்டி, வெளி மார்க்கெட்டில் நூல்விலை அபரிமிதமாக சுமார் 40 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இதனால் குறிப்பாக 20 நெ., 40 நெ., 2/17 நெ., எண்ணுள்ள நூலை பயன்படுத்தி துணி உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் தொடர்ந்து தொழில் செய்வதில் சிரமம் ஏற்பட்டது. மதுரை, கரூர், ஈரோடு மற்றும் நாகர்கோயில் பகுதிகளிலுள்ள தனியார் துறை நெசவாளர்களிடமிருந்து இது பற்றிய முறையீடுகளும் வந்தன. நெசவாளர்களுக்கு மேலே கண்ட எண்ணுள்ள நூல் நியாய விலையில் வழங்கி அவர்கள் தொடர்ந்து தொழில் நடத்த வசதி செய்து கொடுப்பதற்காக கீழே விவரிக்கப்பட்டபடி சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுத் துறை :

தமிழகத்திலுள்ள கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு மாதமொன்றுக்கு பலவகை நூல்களாக சுமார் 4,500 பேல்கள் வரை தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில், தேவையில் சுமார் 60 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை ஜெனரேட்டர்களைக்கொண்டு மின் உற்பத்தி செய்ய வசதிகள் உள்ளன. அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி தேவையான எண்ணுள்ள நூல் உற்பத்தியை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்யவும், அவற்றை பூராவையும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிப்பதற்காக ''கோ-ஆப்டெக்ஸிற்கு'' சப்ளை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது

இது தவிர, மேற்கண்ட எண்ணுள்ள நூல் சுமார் 3,000 பேல்கள் இதர மாநிலங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து அகில இந்தியக் கூட்டுறவு நூற்பாலைகள் சம்மேளத்தின் மூலமாக நியாய விலையில் அடுத்த மூன்று மாதங்களில் ''கோ-ஆப் டெக்ஸிற்கு'' சப்ளை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளின் பயனாக கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் தேவை முழுமைக்கும் நூல் வழங்கப்பட்டு வருகிறது.

தனியார் துறை :

தனியார் துறையிலுள்ள நெசவாளர்களின் மாதமொன்றின் நூல் தேவை பின்வருமாறு :

| வகை. | | தேவை. | |
|---|---|---|---|
| 20 நெ. | .. | 920 | (பேல்கள் 180 கிலோ). |
| 40 நெ. | .. | 680 | ஷை |
| 2/70 நெ. | .. | 4,4 0 | ஷை |

தனியார் துறையில் செயல்படும் நெசவாளர் கழகங்களின் பிரதிநிதிகளுடன் அவர்களது நூல் தேவை, விலைபற்றி இருமுறை பேச்சு வார்த்தை நடத்தி கைத்தறி இயக்குநர், தட்டுப்பாடு உள்ள 20 நெ., 40 நெ., 2/17 நெ. நூல்களை தேசிய பஞ்சாலைக் கழகத்தின் மூலம் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டார். தென்னிந்திய நூற்பாலைகள் கழகத்துடனும் தொடர்பு கொண்டு, அதனுடன் இணைந்த ஆலைகளிலிருந்து நூல் ஒதுக்கீடு பெறுவது பற்றியும், பேச்சு வார்த்தை நடத்தினார். தனியார்துறை நெசவாளர்களுக்கு மேற்கண்ட ஆலைகளிலிருந்தும், பிற மாநில நூற்பாலைகளிலிருந்தும், நூல் வாங்கி விநியோகிப்பதற்கென தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 50 இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது. இக்கழகம் ஆந்திர மாநிலத்தில் உள்ள நூற்பாலைகளில் இருந்து 261 பேல்கள் மோட்டாரக நூலைக் கொள்முதல் செய்துள்ளது. இவை கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இதர நூற்பாலைகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

இறுதியாக , தென்னிந்திய ஆலை கழகப் பிரதிநிதிகள், தனியார் துறை நெசவாளர் கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் அரசு 21—1—1983-அன்று பேச்சு வார்த்தைகள் நடத்தி ஆலைகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய நியாய விலையில்

20 நெ., 40 நெ., 2/17 நெ., எண்ணுள்ள நூல் சுமார் 3,000 பேல்களையும், 60 நெ., 80 நெ. எண்ணுள்ள நூல் ஓரளவிற்கும் ஒதுக்கீடு உட்ன்டியாக செய்யக் கேட்டுக்கொண்டது. இம்முயற்சி களின் பலனாக தென்னிந்திய நூற்பாலைக் கழகம் கீழ்க்கண்ட வாறு நூல் ஒதுக்கீடு செய்துள்ளது.

| நூல் எண். | | விலை. |
|---|---|---|
| | (1) | (2) |
| 2/20 எஸ் | 1,562 பேல்கள் | மார்க்கெட் விலையை விட கட்டுக்கு ரூ. 7 குறைவு. |
| 20 எஸ் | 309 ஷ | மார்க்கெட் விலையை விட கட்டுக்கு ரூ. 5 குறைவு. |
| 40 எஸ் | 601 ஷ | மார்க்கெட் விலையைவிட கட்டுக்கு ரூ. 10 குறைவு. |
| 60 எஸ். | 210 ஷ | மார்க்கெட் விலையைவிட கட்டுக்கு ரூ. 14·50 குறைவு. |

இந்த ஒதுக்கீட்டிலிருந்து தனியார் துறை நெசவாளர் கழகங் கஞக்கு நூல் வழங்க கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரகத்திலிருந்து தனியார் துறை நெசவாளர்களுக்கு ஒதுக் கீடு செய்யப்பட்டு, 30–1–1983 ஆம் தேதி இயக்குநரால் நடத் தப்பட்ட கூட்டத்தில் தனியார் துறை நெசவாளர் கழகப் பிரதிநிதிகள் மேற்கண்ட ஒதுக்கீடு நூலைப் பெற்றுக் கொள்ளு மாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய ஆலைகள் சங்க உறுப்பினர்கள் ஆலைகளிலிருந்து பெறப்படும் நூலின் விலையை மேலும் குறைக்கவும், 80 எஸ்., 100 எஸ். ,ால் தேவையைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தவிர, முழு அளவு மின் வெட்டின் காரணமாக நூல் உற்பத் திக் குறைவை சரிக்கட்டும் வகையில் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் சுமார் 1,200 பேல்கள் கையால் நூற்பு செய்யப்பட்ட நூலை வழங்கிட முன் வந்துள்ளது. நெசவாளர்களுக்கு துணி உற்பத்திக்குக் கட்டுப்படியான விலை யில் இந்த நூலை வழங்கிட தமிழ்நாடு அரசு ரூ. 11 இலட்சம் அளவுக்கு மானியம் வழங்கி, கட்டு ஒன்றுக்கு ரூ. 110 விலையில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 20 நெ. நூலைப் பயன்படுத்தி விருப்பமுள்ள தனியார் துறை நெசவாளர்





கள் இந்த நூலை வாங்கி 'ஊடை' நூலாகப் பயன்படுத்தலாம். இந்த் ஏற்பாடுகளின் பயனாக தனியார் துறை நெசவாளர்களுக் குத் தேவையான நூல் நியாய விலையில் கிடைத்துத் தொழில் தடங்கலின்றி நடைபெறுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது பருத்தி நூல் விலை இறங்குமுகமாக உள்ளது. கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் 20 நெ. நூல் கட்டு ஒன்றுக்கு ரூ. 96 என்ற விலையில் நெசவாளர் கூட்டு றவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளவர் களுக்கு கோவாப்டெக்ஸிலிருந்து மலிவு விலையில் நெசவாளர் களுக்கு நூல் கொடுப்பதற்கு நல்லமுறையில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லப்படு கின்றவர்களின் கீழ் வேலை பார்க்கும் நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற நூலின் விலை அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களும், இந்தத் துறையின் டைரக்டர் அவர்களும் தென் இந்திய நூற்பாலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டு 3,000 பேல்கள் பலரக நூல்களும், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் 1,200 பேல்கள் நூலும் கிடைக்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, நெசவாளர் பாதுகாப்புச் சட்டம் அமலில் இருப்பதால் மாஸ்டர் வீவர் தடை செய்யப்பட்டு அவர்களின் பிடியிலிருந்து நெசவாளர்களைப் பாதுகாப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது மாஸ்டர் வீவர்களிடமிருந்து பணியாற்றுகின்ற கைத்தறி நெசவாளர் களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமென்று கருதி, மாஸ்டர் வீவர்ஸ் தங்களுக்கு நூல் கட்டுப்படியாகக் கூடிய விலையில் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற் காக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதுதான் இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கிறது. இதிலே முக்கிய மான பிரச்சினை என்னவென்றால், கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக இல்லாத கைத்தறி நெசவாளர்கள் உடனடி யாகக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக்கொண்டு, அரசின் மூல மாகக் கிடைக்கின்ற அந்தப் பயன்களைப்பெற வேண்டுமென் பதுதான் அரசின் முக்கிய நோக்கம். அந்த வகையில், இந்த நெருக்கடி காலத்திலேயும் கூட, கடந்த ஒரு வாரத்திற்குள்ளாக குறிப்பாக மதுரையில் 12 புதிய கூட்டுறவு நெசவாளர் சங்கங்

கள் பதிவு செய்யப்பட்டு, 1,367 நெசவாளர்கள் உறுப்பினர்
களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவு ஸ்பின்னிங்
மில்லின் மூலம் தயாரிக்கப்படும் நூல், இலாப நஷ்டம் பாராமல்
விற்கப்படும் நூல் அவர்களுக்குக் கிடைக்கும். இதைப்போல
மற்றவர்களும் கைத்தறி நெசவாளர் சங்கங்களை அமைத்துக்
கொண்டு இந்த அரசினுடைய உதவியைப் பெற முன் வந்தால்
அதுதான் சரியான வழியாக இருக்குமென்று கருதுகிறேன்.
மற்றபடி மாஸ்டர் வீவர்களுக்காக கைத்தறி நெசவாளிகள்
போராடுவதோ அல்லது கைத்தறி நெசவாளர்களைப் பயன்
படுத்திக் கொண்டு மாஸ்டர் வீவர்கள் போராட்டம் நடத்தி
இந்த நேரத்தில் ஏதாவது லாபம் சம்பாதிக்க முடியுமா என்று
பார்ப்பதும் அது மாண்புமிகு உறுப்பினருடைய ஆதரவுக்கு உரி
யது அல்ல என்பதைக் குறிப்பாகச் சொல்லிக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–50.)

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இப்படி அர
சாங்கம் கொடுக்கின்ற நூலை தனிப்பட்ட முதலாளிகள்
வாங்குகிறார்கள். ஆகவே அவர்களிடம் நெய்கின்ற தனிப்
பட்ட நெசவாளர்களுக்கு அந்த நூல் போய்ச் சேருவதில்லை.
எனவே அவர்களிடம் நேரடியாகக் கொடுப்பதற்கு அரசு
ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர்
அவர்களே, இப்போது நாம் நூலை தந்தாலும் கூட அது
நெசவாளிகளுக்கு வேலை தரக்கூடிய வாய்ப்பை உருவாக்குமா
என்பது சநதேகம்தான். ஆனால் நேரடியாக நாம் நெச
வாளர்களுக்குத் தர முடியாது. அவர்கள் சங்கங்களை அமைத்
துக் கொள்வார்களானால் நேரடியாகத் தர முடியும்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே,
தென்னிந்திய நூற்பாலைக் கழகத்தின் மூலம் தனியார்
துறை நெசவாளர்களுக்கு நூல் ஒதுக்கீடு செய்கிறபோது
அந்த நூலினுடைய விலை மார்க்கெட் விலையைவிட குறை
வாக இருக்கிறது என்றாலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு
விநியோகிக்கின்ற விலையை விட சற்று அதிகமாக இருப்பதாகச்
சொல்லப்படுகிறது. எனவே இப்படிப்பட்ட விலை வித்தியா
சத்தை போக்குவதற்கும் தனியார் நெசவாளர்களுக்கு உதவி
செய்கிற அளவில் அந்த விலையைக் குறைத்து அவர்களுக்கு
விநியோகம் செய்கிற நிலைமையை ஏற்படுத்துவதற்கும் அரசு
முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற நெச
வாளர்களுக்கு நாம் கூட்டுறவு மில்லிலே தயாராகிற நூலைத்
தருகிறோம். கூட்டுறவு மில் நம்முடைய மில் அல்லது நெச
வாளர்களுடைய மில்லாக இருக்கிற காரணத்தினால் லாபத்தைக்
கருதாது அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதே முறையில்
தனிப்பட்ட மில்கள் உற்பத்தி செய்வதும் குறைக்க வேண்டும்
என்று நாம் வற்புறுத்த முடியாது. இப்போது மாஸ்டர்
வீவர்கள் வேலை செய்ய வேண்டும், லாபம் பெற வேண்டும்
என்று கருதுவதைப்போல தனிப்பட்ட மில்களும் பல்வேறு சங்
கடங்களுக்கு இன்றைக்கு ஆளாகி இருக்கின்ற நேரத்தில் அவர்
கள் ஒரு குறைந்தபட்ச லாபத்தைப் பெற வேண்டும் என்று
கேட்பதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. ஆகவே
கூடுமானவரையிலும் எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ
குறைத்து, அதேவிலையில் நமக்குத் தேவைப்படுகிற நூலைத்
தர அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். ஆகவே இந்தப்
பரிகாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன். குறிப்பாக கரூர் பகுதியிலே இருக்கின்றவர்கள், இன்
றைக்கு அல்லது நாளைக்கு அந்த நூலை வாங்கிக்கொள்
வார்கள் என்று செய்தி தரப்பட்டிருக்கிறது. மதுரையிலேதான்
குறிப்பாக அவர்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டு இந்த
முயற்சிக்கு ஆதரவு தராத நிலையிலே இருந்து கொண்டிருக்கி
றார்கள். அங்கே இந்த மாஸ்டர் வீவர்கள் என்று சொல்லப்
படுகிற தனி முதலாளிகளுடைய ஆதிக்கம் கொஞ்சம் அதிகமாக
இருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : துணைத் தலைவர்
அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு 60/80 நூல்கள்
போதவில்லை என்பதையும் அவர்கள் அந்த நூல்களைக்
கூடுதலாக உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்றும், 100 ஆம் நம்பர் நூல் சுத்தமாகக் கிடைக்க முடியாத
நிலை இருக்கிறது அதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்
என்றும், பல கோவாப்டக்ஸ் நிறுவனங்களுக்குக் கூட்டுறவு நூற்
பாலைகளில் இருந்து அவர்கள் நூல் வாங்க வேண்டும்
என்ற உத்தரவை மீறி அனுப்பாமல் இருப்பது அரசுக்குத் தெரி
யுமா ? அதன் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர்
அவர்களே, குறிப்பிட்ட புகார்கள் வருமானால் அதைப் பரி
சீலித்து நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்லுகின்றபோது
மதுரையிலே உள்ள மாஸ்டர் வீவர்களுடைய மேலாதிக்கம் காரண
மாக இப்படி எல்லாம் நடக்கிறது என்று சொன்னார்கள். உண்
மையிலேயே அவர்களைப் பார்ப்பதைவிட அவர்களிடம்

வேலை செய்கிற தொழிலாளிகள், வேலை இல்லை என்ற
நிலைமை ஏற்படுகிறபோது அவர்கள் பட்டினி கிடக்கும்
நிலை ஏற்படுகிறது. ஆகவே அவர்களுடைய தொழிலை
உத்தரவாதப்படுத்துகின்ற நிலைமை ஏற்படுகிறது என்பதைக்
கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு நியாயமான விலையிலே
நூலைக் கொடுக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் எடுத்துக்
கொண்டு ஏற்கனவே இந்த மில்களில், மின் வெட்டைக் காரண
மாகக் காட்டி 40-ம் எண் மோட்டா ரகமும், மத்திய ரகமான
60/80 நூல்கள் எல்லாம் ஒரு கட்டுக்கு என்ன விலையோ
அதைவிடப் பலமடங்கு ஏற்றி இருக்கிறார்கள். அவர்களைப்
கட்டுப்படுத்தி ; நூலினுடைய விலையைக் கட்டுப் படுத்து
வதன் மூலமாக இந்த மாஸ்டர் வீவர்களைப் பாதுகாக்க
வேண்டும் என்பதற்குப் பதிலாக இந்தத் தொழிலைப் பாது
காக்க வேண்டி அரசாங்கம் முன் வருமா ? அதற்காக விஷேச
மான நடவடிக்கையை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர்
அவர்களே, குறிப்பாக கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்
புத் தரவேண்டும் என்பதற்காகத்தான் அக்கறை எடுத்துக்
கொண்டு, அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை
ஒரு விவர அறிக்கையாக உங்கள் முன் வைக்கப்பட்டிருக்கிறது.
நாம் இந்த இருதரப்பிலும் கலந்து பேசி, ஒரு நல்ல முடிவைத்
தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த நேரத்
தில் மாஸ்டர் வீவர்கள் கைத்தறி நெசவாளிகளைக் காட்டி
ஒரு பிரத்தியேக ஆதாயம் பெற முயற்சி செய்வதாகத்தான்
எங்களுக்குப் படுகிறது. அத்தகைய தவறான கருத்திலே அவர்
கள் உட்படக்கூடாது என்பதை இந்த நேரத்திலே குறிப்பாகச்
சொல்ல விரும்புகிறேன்.

திரு. டி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விவர அறிக்கையில்
அவர்கள் கூறியிருக்கின்ற நேரத்திலே பொதுவாக நம்முடைய
கைத்தறி நெசவாளிகளுக்காக கொடுக்கின்ற நூலின் விலை
களிலே சில மாற்றங்களை ஏற்படுத்தவேண்டுமென்று பொது
வாக இன்று நெசவாளிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.
அதாவது 10-ஆம் நெம்பர், 20-ஆம் நெம்பர் 1982-லே
60 ரூபாய், 80 ரூபாய்க்கு என்று கணக்கில் இருந்தது. இதிலே
யிருந்து சற்று கூடினாலும்கூட, அதனுடைய விலை, 7 ரூபாய்
8 ரூபாய் கூடினாலும்கூட அந்த விலைகளிலே கிடைத்தால்தான்,
சாதாரணமாக இருக்கின்ற இந்த முழுமையான தொழிலாளர்
களுக்கும் இந்த நியாயமான விலையில் கொடுத்து பாதுகாத்தால்
தான் அதற்கு வசதியாக இருக்கும். அப்போதுதான் கன்னியா
குமரியிலே இருந்து எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்ற நெசவாளி
களைப் பாதுகாக்க முடியும். அந்த முறையிலே நடவடிக்கை
மேற்கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர்
அவர்களே, அதிகப்படியாக விலை ஏறியிருக்கிறது என்பதைக்
கருத்தில்கொண்டுதான் நாம் மில் முதலாளிகளை இந்த
மாஸ்டர் வீவர் சங்கத்தின் பிரதிநிதிகளை உட்கார வைத்து
பேசினோம். மில் முதலாளிகள் சார்பில் பேசுகிறபோது
அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இந்த 100 பெர்
சண்ட், 60 பெர்சண்ட் மின் வெட்டின் காரணமாக மில் ஓடாமல்
இருக்கின்றபோது அந்தச் செலவினங்கள் அதிகமாக இருக்கிறது.
நாங்கள் அதை நூலில்தான் வைக்கவேண்டியதாக இருக்கிறது.
உற்பத்தி அதிகமாக இல்லாத காரணத்தால் இந்த உற்பத்தி
கொஞ்சமாக இருக்கும்போது, நூலின் மீது அதிகப்படியான
செலவை நாம் வைக்கின்றபோது நூல் விலை ஏறுகின்ற நிலைமை
இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே நாம்
சொல்வது நம்முடைய கைத்தறி நெசவாளிகளுக்கு, கூட்டுறவுச்
சங்கங்களுக்கு அப்பாலே நெசவாளிகள் வேலை செய்கின்ற நெச
வாளிகளுக்குத் தேவையான அந்த 3,000, 4,000 பேர்களுக்கு
மட்டும் விலையைக் குறைத்து அதை சப்ளை செய்யவேண்டு
மென்று கேட்டுக் கொண்டோம். அதற்காகத்தான் அவர்கள்
முடிந்த அளவிற்கு குறைத்திருக்கிறார்கள். அதற்கு மேல்,
அவர்களை குறைக்கச் சொன்னால் மில்கள் நஷ்டத்தில் ஓடும்.
அது மில் தொழிலாளிகளுக்கு விரோதமாக போய்விடும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஏற்கனவே ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிலே
இருந்து பிரதம சங்கங்களுக்கு வாங்குகின்ற அந்த துணிக்கு
குறிப்பிட்ட காலத்தில் உரிய தொகை போய்ச் சேருவதில்லை.
அதோடு இந்த மின்சார வெட்டின் காரணமாக இன்றைய தினம்
நூல் விலையேற்றம் இருக்கிறது. இது ஒருபுறத்திலே இருப்பி
னும், மறு புறத்திலே தனியார் நெசவுத் தொழில் பாதிக்க
கூடாது என்று அரசு 50 லட்சம் கடனாக கொடுத்து அந்தத்
தொழிலை பாதுகாப்பதாக இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு
ருக்கிறார்கள். ஆகவே மாஸ்டர் வீவர்ஸ் அல்லது தனிப்பட்ட
நெசவாளி என்று பார்க்காமல், அந்தத் தொழிலைப் பாதுகாப்
பதற்கு முழுவதுமாக அந்த 50 லட்சத்தினையும், மானியமாக
கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, அவர்களுக்கென அமைக்கப்பட்டிருக்கிற கார்ப்ப
ரேஷன் மூலமாக அந்த 50 லட்சத்தை தந்து அவர்களுக்கு
குறைந்த விலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.
அது ஒரு நடவடிக்கை. இன்னொன்று, நாமே தென் இந்திய
மில் முதலாளிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி விலையைக்
குறைத்து, தேவையான நூலை சப்ளை செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இது இன்னொரு
நடவடிக்கை.

இந்த 2 நடவடிக்கைகளின் மூலமாகத்தான் மலிவு விலையில் அவர்களுக்கு நூல் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பகுதியிலே இருக்கின்ற மாஸ்டர் வீவர்கள் இன்றைக்கு ஒத்துழைப்பு தரவில்லை என்பதற்குத்தான் மதுரை பக்கத்திலே நடை பெறுகின்ற போராட்டம். ஓரளவு அவர் களும் ஒத்துழைப்பு தந்தால்தான் நாம் நெசவாளிகளுடைய பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, முழு அளவு மின் வெட்டின் காரணமாக நூல் குறையைச் சரிக்கட்டும் வகையில் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சுமார் 1200 பேல்கள் கையால் நெய்யப்பட்ட நூலை வாங்க முன் வந்துள்ளது. நெசவாளிகளுக்கும் துணி உற்பத்தி கட்டுப் படியான அந்த விலையில் அந்த நூலை உபயோகப்படுத்த, ஒவ்வொரு குறுக்கிலே விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. இது எப்படி இருக்கிறது என்றால், இருக் கங்குடி கணக்குப்பிள்ளை, இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத் தான் என்பது மாதிரி ஒரு நிலைமை இருக்கிறது. அந்த நெச வாளிகளைக் காப்பாற்றும் முறையிலே அந்த 20 ஆம் நெம்பர் நூல்களை இன்றைக்கு 96 ரூபாய்க்கு கொடுப்பதாகச் சொல்லப் படுகிறது. அதை மேலும் குறைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11,00.)

மாண்புமிகு கே. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது கையிலே நூற்கப்படுகின்ற நூல் உற் பத்தியாகிக் கொண்டு இருக்கிறது. அந்த நூலை நாம் வாங்கித் தருவதன் மூலமாக அது 20 ஆம் நெம்பர் நூலுக்குச் சமமாக இருக்கும் என்று கருதித்தான் அதை வாங்குவதற்கு ஒரு உதவித் தொகையை, பணத்தை ஒதுக்கி, இன்றைக்கு அதை வாங்கித் தருவதற்கு முயற்சித்துக் கொண்டு இருக்கிறோம். அதையும் மின் உலையில் கலந்து ஒரு துணியை நெய்யலாம். அந்தத் துணி நல்லபடியாகக் கூட இருக்கலாம், அதற்கு மக்களிடத்திலே கூட வரவேற்பு இருக்கலாம். அதை இனிமேல் தான் பார்க்க வேண்டும். ஆனால் நாம் தருகின்ற பணம் அந்த நூல் உற்பத்தி யில் ஈடுபட்டு இருக்கின்ற சாதாரண கிராமத்திலே இருக்கின்ற தாய்மார்களுக்குப் போய்ச் சேருகிறது என்ற எண்ணத்தின் அடிப்படையில், சர்க்கார் இதற்குப் பணம் தருவதிலே எந்த விதமான வருத்தமும் அடையவில்லை. அதை ஒரு தவறாகவும் கருதவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்தத் தொழில் பாதிக்கப்படுகிறது என்ற பரிவோடு இந்தப் பிரச்சினையைப் பார்க்கவேண்டுமே தவிர, அந்த ஆலை முதலாளிகளுக்கு லாபம் வர வேண்டும் என்ற பரிவோடு பார்க்கக்கூடாது என்று சொல்லி, திடீரென ஏற்றியுள்ள நூல் விலையைக் குறைத்து நெசவாளர்களுக்கு நன்மை கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தவறான கருத்துக்கள், உணர்வுகள் ஏற்படுத்துகின்ற வகையில் கருத்துக்கள் தெரிவிக்காமல் இருப்பது நல்லது. நான் சொல்கிற போது தெளிவாகச் சொன்னேன். கூட்டுறவு ஸ்பின்னிங் ஆலையில் உற்பத்தியாகும் நூலை லாபம் எதிர்பார்க்காது, நெசவாளர்களுக்கு உற்பத்தி செய்கிற விலைக்கே தருகிறோம். அதைப் போல் மற்ற ஆலைகளையும் நாம் வற்புறுத்த முடியாது ; அவர்களிடத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அவர்கள் தரப்பில் கூறப்படுகிறது என்று நான் ஏற்கனவே சொன்னேன். மில் முதலாளிகள் சம்பாதிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இன்னும் சொல்லப் போனால் அங்கேயிருக்கும் மில்கள் எல்லாம் ஜாயின்ட் செக்டார் கம்பெனிகள், ஆனால் மாஸ்டர் வீவர்கள் தனிப்பட்ட முதலாளிகள். ஆகவே, நேரடியாக லாபத்தை முழுவதும் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு மில் முதலாளிகளின் அமைப்பு முறையல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் அவர்களுடைய கஷ்டத்தைச் சொல்கிறார்கள். 100 சதவீதம் மின் வெட்டு, 60 சதவீதம் மின் வெட்டு என்று வருகிறபோது, எங்கள் மில் தொழிலாளர்களுக்கு வேலை தர வேண்டும், அதற்காக சில செலவுகள் நாங்கள் மேற் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் சில சிரமங்கள் வருகின்றன. அதை நூலிலே சுமத்த வேண்டியிருக்கிறது. அதனால் தான் கூடுதல் விலை வைக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், எல்லா நூல்களுக்கும் விலையை இறக்க வேண்டும் என்று நாம் கேட்கவில்லை. நமக்குத் தேவையான இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான, 3,000 அல்லது 4,000 கைத்தறியாளர்களுக்குத் தேவையான நூலுக்கு மட்டும் குறைத்துக் தர வேண்டும், மீதி நூலை நீங்கள் இஷ்டப்படி விற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி, இந்த அளவிற்கு விலையைக் குறைத்து இருக்கிறோம். மீண்டும் பேச அரசு தயாராக இருக்கிறது. அதிலே எந்த விதமான பிரச்சினையும் இல்லை. இப்போது சமீபத்தில் வந்து கொண்டு இருக்கிற செய்திகளைப் பார்க்கிற போது விலை சற்று இறங்கி இருக்கும் நிலைமை இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, கைத்தறி நெசவாளர்களின் நன்மையைக் கருதித்தான் அரசு இந்த பிரச்சினையில் தலையிட்டு இருக்கிறதே தவிர, வேறு எதற்காகவும் அல்ல என்பதைத் நான் குறிப்பிட்டாக வேண்டும்.



நான் குறிப்பிட விரும்புவது, கரூர் பகுதியிலும் மற்றப் பகுதிகளிலும் இருக்கிறவர்கள் ஒத்துழைப்பு தருகின்ற நேரத்தில் இந்தக் குறிப்பிட்ட மதுரை பகுதியில் இருக்கிறவர்கள் மட்டும் ஏன் ஒத்துழைப்பு தரக் கூடாது என்பது என்னுடைய கேள்வி. அவர்களும் ஒத்துழைப்பு தந்து, மேற் கொண்டு அரசாங்கத்திடம் பிரச்சினையைச் சொல்லி, மேலும் ஏதாவது பரிகாரம் காண முயற்சி செய்யலாம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அல்லது மார்க்கெட்டிலே உற்பத்தி இல்லை என்று கூறி, தறி ஓடவில்லை என்றால் அது அவர்களுக்கு நல்லதாக இருக்கலாம். ஆனால் நெசவாளர்களுக்கு அது நல்லதல்ல. ஆகவே, நெசவாளர்கள் நலனை கருத்திற்கொண்டு இந்த மாஸ்டர் வீவர்ஸ் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, இந்த நூல் பிரச்சினையின் காரணமாக நூல் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகு பல்லாயிரக் கணக்கான நெசவாளர்கள் இன்றைக்கு தமிழ் நாட்டிலே பல பகுதிகளிலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதனாலே அரசு அவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் நிவாரணம் அளிக்க—லேபர் வெல்பேர் பண்டிலிருந்து அல்லது முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அல்லது வேறு ஏதாவது ஒரு வழியில் நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, வேலை கொடுக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கி இருக்கிறோம். ஓரளவு நூல் விலையைக் குறைத்திருக்கிறோம். சில நம்பர் நூல்களின் விலையை பாதி அளவுக்குக்கூட குறைத்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு விலையைக் குறைத்திருப்பதால் நூலை வாங்குகின்ற கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிடும். அதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போராட்டம் என்ற பெயரால் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதின் மூலம் விலையை இறக்கி, இந்தப் பிரச்சனையில் ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்று பார்ப்பதை விட்டுவிட்டு கஷ்டப்படும் கைத்தறி நெசவாளர்களை மனதிலே வைத்து, அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி இந்தப் பிரச்சினைக்கு ஆதரவு அளிப்பார்களானால் வேறு நடவடிக்கை தேவையில்லாமல் போய்விடும்.

திரு கே. ஆர். சுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இந்த நூல் நெருக்கக்கடியைத் தீர்ப்பதற்கு கதர் நூலை உற்பத்தி செய்திருப்பதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நூல் கைத்தறிக்கு ஏற்றதாக இல்லை என்று அரசுக்கு விண்ணப்பம் வந்திருக்கிறதா? மேலும் 40 சதவீதம் இன்றைக்கு விலை உயர்ந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் பேசுகின்ற போது, 'இருக்கங்குடி கணக்கன் இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான்' என்று கணக்குப் பிள்ளைத் தொழிலையே இழிவு படுத்தும் வகையில் இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்கள். அது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : இருக்கங்குடி கணக்கன் அல்ல, இருங்களூர் கணக்கன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த ஊர் கணக்குப் பிள்ளையாவது இருக்கட்டும், அதைப் பற்றியெல்லாம் கேட்கவேண்டாம்.

திரு. என். வரதராஜன் : இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அரசு மிக முக்கியமான ஒன்றாகக் கருத வேண்டும். தமிழ் நாட்டிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெருவாரியான மக்கள் நம்பி வாழும்படியான தொழில் கைத்தொழில். இந்தப் பிரச்சினையை இன்று அரசு கவனிக்கிற போது ஆலை முதலாளிக்கு லாபம் வேண்டுமே என்ற பார்வையிலோ அல்லது தொழிலாளர்கள் முழுவதும் கூட்டுறவுத் துறைக்கு வந்த பின்னாலே தான் அவர்களுக்குச் சௌகரியம் செய்ய முடியும் என்ற பார்வையிலோ அல்லது மாஸ்டர் வீவர்ஸ் சிலர் தூண்டிவிடுகிறார்கள் என்ற பார்வையிலோ பார்க்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டு, இந்தப் பிரச்சினையிலே இருக்கும் முக்கியம் என்னவென்றால், 1982 அக்டோபர் மாதம் என்ன விலையில் நூல் விற்று வந்தார்கள், இன்றைக்கு 1983-ல் என்ன விலைக்கு நூல் விற்கிறது என்று பார்த்தால், 30 சதவீதம் முதல் 50 சதவீதம் நூல் விலை ஏறியிருக்கிறது. ஆகவே, தொழில் நடத்த முடியவில்லை. இன்றைக்கு நாம் குறைத்துக் கொடுப்பது என்று சொல்வது எல்லாம் 5 சதவீதம் தான். ஆகவே, அந்த நூலைக் கொண்டு தொழில் நடத்த முடியாது. இன்னும் கூட எடுத்துச் சொல்ல வேண்டுமானால், மின்சார வெட்டின் காரணமாக ஜெனரேட்டர் உபயோகப்படுத்தினால் கூட அதனால் நூற்பாலைகளுக்கு கூடுதலாகச் செலவாகும் என்று சொல்லி கணக்குச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஜெனரேட்டர்கள் செலவிற்கு மேல்பல மடங்குலாபம் பெறுகிறார்கள். ஆகவே, இன்றைக்கு கைத்தறியை நம்பி நிற்கும் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கும் கொடுமைக்கு முடிவு காண அரசு துரிதமாக முன்வருமா ஆகவே, மீண்டும் ஆலை முதலாளிகளை, அந்த துணி உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசி, லாபம் முதலாளிக்கு அல்லாமல், அந்த நெசவாளிக்கு உதவி செய்யும்வகையில் நூல் கிடைக்கச் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

ஆனால் குறைக்கப்பட்டிருப்பது 5 சதவீதம் என்றுதான் இருக்கிறது. ஆகவே, மார்க்கெட்டில் நூல் விலையை குறையக்கூடிய சாத்தியக் கூறு இருப்பதால் மேலும் நூல் விலையைக் குறைக்க அரசு ஏ வடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மறுபடியும் அவர்க ளோடு பேசிப் பார்ப்பதற்கு அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை; பேசலாம்.

* திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, இந்த விவர அறிக்கையில் 3-வது பக்கத்தில் 21ந் தேதி இடந்த பேச்சு வார்த்தை மூலம் சுமார் 3,000 பேல் ஒதுக்கி ருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் நற்கனவே கூறியதைப் போல, இன்றைக்கு கரண்டு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் ஜெனரேட்டர்களை வைத்து உற்பத்தி செய்வதால் 50 அல்லது 60 சதவீதம் உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கிறது என்பது விலை உயர்வுக்கு ஒரு நியாயம் அல்ல. ஏனென்றால் ஏற்கனவே நூல்விலை இலாபகரமாக இருக்கிறது. எனவே, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற இலட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதுகாக்க இந்த 3,000 பேல்கள் என்பதை அதிகப்படுத்தி, இன்னும் சுமார் 25 சதவீதம் கூடுதலாக்கி, கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம் கொடுக்கப்படுகின்ற விலை அளவுக்கு இணையாக இந்த நூலைக் காடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவ ரவர்களே, கூட்டுறவு நூற்பாலை விலை அளவுக்கு குறைக்கச் சொன்னார்கள். நாங்கள் குறைக்கச் சொன்னோம்; முடியாது என்று சொல்லிவிட்டார்கள். காரணம் நாங்கள் நஷ்டத்திற்கு வியாபாரம் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொன்னதையும் பரிசீலித்து, தேவையான நூல் எவ்வ ளவு என்பதையும் கணக்கிட்டு, இந்த ஏற்பாட்டைச் செய்திருக் கிறோம். இதற்கு மேலும் தேவை என்றால் அவர்களோடு பேசி மேற்கொண்டும் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்

† திரு. க. பாரமலை : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த நூல் விலையைப் பொறுத்தவரையில் 1982 அக்டோபர் மாதம் இருந்த விலையைக் காட்டிலும் ஜனவரி மாதம் 83-லே அதிகமாக உயர்ந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் கூட குறிப் பிட்டார்கள். இப்போது நூல் விலை குறைந்து வருகிறது என்று. பேச்சுவார்த்தையின் மூலம் ஓரளவுக்கு நூல் விலையைக் குறைத்துக் கொடுப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் இன்றைக்கு விலை குறைந்து இருக்கும் இந்த நேரத் தில் ஏற்கனவே செய்த விலைக் குறைப்பால் பயன்பதவில்லை. ஆகவே, மீண்டும் விலை இறங்கு முகமாக இருக்கின்ற நிலையில்— பேச்சு வார்த்தை நடத்தி, இன்றைக்கு இருக்கிற மார்க்கெட் விலையை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு நியாய விலைக்குக் நூல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?



(முற்பகல் 11–10)

இத்தோடு மில் நூல் உற்பத்தி செய்கின்ற நூற்பாலைக் காரர்களிடமிருந்து இந்த நெசவாளர்களுக்கு நூல் வழங்குவதில் ஒரு குறிப்பிட்ட சதவீத ஒதுக்கீட்டை செய்து கொடுத்து, அதை சட்டரீதியாக ஆக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த விலையை இறக்க வேண்டும் என்ற அடிப்படையிலே மறுபடியும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று, கைத்தறித் துறை அதிகாரி களும், இயக்குனர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட சதவிகிதத்தை கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இப்பொழுது சர்க்கரை, சிமெண்ட், உற்பத்தியிலே எப்படி லெவி போட்டு எடுத்து மலிவு விலையிலே மக்களுக்கு வினியோகப்படுத்தப்படு கிறதோ, அதேப்போல நூலுக்கும் ஒரு லெவி போட்டு, வாங்கி அந்த கைத்தறி நெசவாளர்களுக்கு தருவதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்ற கருத்தை நாம் கைத்தறி அமைச்சர்கள் மாநாட்டில் கூறியிருக்கிறோம். மத்திய அரசின் கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறோம். அவர்கள் ஏற்றுக்கொண்டு அதற்கான உத்தரவை பிறப்பிப்பார்களேயானால் இந்தப் பிரச்சினை வெகு எளிதில் தீர்க்கப்பட்டு விடும்.

6. அரசினர் சட்ட முன்வடிவு

மீன்பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன். "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை விவாதம்—தொடர்ச்சி.

* திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83 ஆம் ஆண்டிற்கான மின்வாரிய நிதி நிலை அறிக்கையின்மீதும், 1981-82 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின்மீதும் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக முதலில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமைப் பொறுப்பு தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்கு மின் தேவையை பூர்த்தி செய்வதற்காக 1982-83-ல் கிட்டத்தட்ட 220 கோடி ரூபாய்க்கு மேலாக நிதிகளை ஒதுக்கீடு செய்து நல்ல பல திட்டங்களை தீட்டிக் கொடுத்து இருக்கிறார்கள்.

தமிழகத்தில் குடிசைகளிலே வாழ்கின்ற மக்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைக்கின்ற மகத்தான பணியினை, கிட்டத்தட்ட சுமார் 5 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதன் மூலம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே, என்றைக்காவது நமக்கு மின் விளக்குகள் கிடைக்குமா, நம் வீட்டில் மின் விளக்குகள் எரியுமா என்று ஏங்குகின்ற நிலைமையை மாற்றி அவர்களுக்கு மின் இணைப்புத் திட்டத்தினை நிறைவேற்றி தந்திருக்கிறார்கள்.

இந்த திட்டத்தினால், இன்றைய தினம் நகராட்சி களிலும், நகர பஞ்சாயத்துகளிலும் குடி இருக்கின்ற மக்களுக்கு இந்த திட்டம் போய் சேராத காரணத்தால், சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் எங்களிடம் தங்களுடைய குடிசைகளுக்கும் மின் இணைப்பு வேண்டுமென்று அடிக்கடி முறை யிடுகிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மாண்பு மிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், இப் பிரச்சினை குறித்து ஆலோசித்து இந்த திட்டத்தை மேற்படி குடிசை மக்க ளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தூத்துக்குடி அனல்மின் நிலைய 3-வது திட்டம் 1982-ஆம் ஆண்டு ஏப்ரலில் செயல்பட தொடங்கி யுள்ளதாகவும், அது தற்சமயம் நல்ல முறையில் இயங்கிக் கொண்டு இருப்பதாகவும், அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலே இருக்கிறது. ஆனாலும், அவைகள் சரிவர செயல்படாததற்குக் காரணம் அந்த நிறுவனத்திற்குத் தேவையன நிலக்கரியை மத்திய அரசு கொடுக்கிறது. ஒப்பந்தப்படி 'ஏ' குவாலிடி கொடுக்க வேண்டுமென்று இருப்பதாகவும், ஆனால் அவர்கள் நமக்கு 'எஃப்' குவாலிடியைத்தான் தந்துக்



கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆனால், 'ஏ' தரத்திற்கு உரிய விலையைத்தான் கொடுக்கவேண்டுமென்று கேட்பதால் அதன் மூலமாகவும் நட்டம் ஏற்படுவதோடு, நிலக்கரி தரம் குறைவாக இருப்பதால், இயந்திரங்கள் அடிக்கடி பழுது அடைகின்ற நிலை இருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

நிலக்கரியின் தரம் 'எஃப்' குவாலிட்டி என்று சொல்கிற போது அதிலே அதிக அளவில் இரும்புத் துண்டுகள் கலந்து இருப்பதால், அதை அரைக்கிறபோது, மின்சார கருவிகள் பழுது அடைகின்ற நிலைமை இருப்பதாக கூறுகிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசுதான் என கூற வேண்டிய நிலைமை இருக்கின்றது. எனவே நிலக்கரியினை வாங்குகின்றபோது 'ஏ' தர நிலக்கரிதான் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசினை வலியுறுத்த வேண்டும். மேலும் மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குரிய அனுமதியை மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டும். அப்போது தரமான நிலக்கரியினைப் பெறுவதன் மூலம் அனைத்து மின் நிலையங்களிலும் உள்ள இயந்திரங்கள் பழுதடையாமல் இருக்கக்கூடிய நிலைமையினை உருவாக்க வழிவகையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்றைக்கும் இல்லாத அளவுக்கு முழு அளவு இந்த ஆண்டு டிசம்பர் 29-ந்தேதியிலிருந்து பெரிய தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டினை அரசு அறிவித்திருந்தாலும் 15 தினங்களுக்குள்ளாக நிலைமையினைச் சீராக்கி இன்றைய தினம் அனைத்து மில்களும் ஓடுகின்ற நிலைமையினை புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செய்திருப்பதை தொழிலாளி வர்க்கத்திலே இருப்பவர்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் நமது அரசு கிட்டத்தட்ட 10 இலட்சம் விவசாயப் பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்காததால் ஏழை எளிய விவசாய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் அவர்களுக்கு மின்சாரம் வழங்கவேண்டும் என்பதற்காக தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கொடுப்பதை முழு அளவும் நிறுத்தி இருந்தாலும் இன்னும் ஒரு 15 தினங்களுக்கு முன்பாக அவ்வாறு செய்திருந்தால் விவசாயிகளுக்கு, எந்தவிதமான இழப்பும் ஏற்படாமல் செய்திருக்கலாம். மானாவாரி பயிருக்கு வேண்டுமானால் 10 தினங்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட்டால் போதும். ஆனால் நெற்பயிருக்கு 2 தினங்களுக்கு தண்ணீர் இறைக்காவிட்டால் கூட அவை பதராகி நெல் மணிகள் இல்லாமல் போய்விடக்கூடிய நிலைமை உருவாகிவிடும். எனவே அப்படிப்பட்ட நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதால் எப்படி வறட்சிப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு, செய்து மற்ற காரியங்களுக்கு எப்படியெல்லாம் செல

ஆண்டு காலம் ஆகியிருக்கிறது. அது அந்த அறமுகத்தில்
இருந்திருக்கிறது. அதற்கான காரணத்தை விளக்கவில்லை
என்று ஆடிட்டர் ஆப் ஜெனரல் அவர்கள் குறிப்பிட்டிருக்
கிறார்கள். இப்படிப்பட்ட நிர்வாக சீர்கேடு இங்கே இருக்
கிறது. அப்படி பெற்ற அந்த 4 கேப்பாசிட்டர்களையும் உப
யோகப்படுத்தினார்களா என்றால் நிச்சயமாக இல்லை.
1981-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே ஒரு கேப்பாசிட்டர
உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். 1981-ஆம் ஆண்டு நவம்பர்
மாதத்தில் ஒரு கேப்பாசிட்டர உபயோகித்து இருக்கிறார்கள்
அதைப்போல டிசம்பர் மாதம் ஒரு கேப்பாசிட்டர உப
யோகித்து இருக்கிறார்கள். அதற்கு செலவான தொகை
43.73 இலட்சம் ரூபாய். இவ்வளவு செலவு செய்து வாங்கியும்
கூட அந்த உபயோகிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை
ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
1982-ஆம் ஆண்டு பிப்ரவரி வரையிலும் மேலும் ஒரு கேப்பா
சிட்டரை இதுவரையில் உபயோகப்படுத்தவில்லை என்ற
குற்றச்சாட்டை ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் குறிப்பிட்
டிருக்கிறார்கள் இந்த அளவுக்கு நிர்வாக சீர்கேடு இருக்கிறது
என்பதை ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்
கள். அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு பகுதியை நான் இங்கே
சொல்கிறேன் :

'... However due to lack of proper advance planning and co-operation among various departments and non-execution of the connected works with a sense of urgency, only 3 of the 4 capacitors were erected in January, November and December 1981 after a delay of 4 years..'

4 ஆண்டு காலதாமதத்திற்கு பின்னால் அதை உபயோகித்து
இருக்கிறார்கள். மேலும் சொல்கிறார் 'and the remaining 1
capacitor had not been erected (February 1982)' இந்த அளவுக்கு
நிர்வாகத்திலே சீர்கேடு இருக்கிறது என்பதை இந்திய தணிக்கை
அதிகாரி அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதை இங்கே
குறிப்பிட விரும்புகிறேன். இதன் மூலமாக மின்சார வாரியத்
திற்கு நஷ்டம் என்று குறிப்பிட்டிருகிறார்கள். ரூபாய் 18.42
லட்சம் நஷ்டம் என்றும், முதலீட்டுக்கு இன்டரஸ்டு மூலமாக
நஷ்டம் ரூபாய் 7.86 லட்சம் என்றும் குறிப்பிட்டிருகிறார்கள்.
இப்படி நிர்வாக சீர்கேடு காரணமாக மின்சார வாரியம்
தொடர்ந்து மின் பற்றாக்குறை ஆண்டுக்கு ஒரு முறை குறிப்
பாக வரலாறு காணாத அளவுக்கு இந்த ஆண்டு 100க்கு 100
சதவீத மின்வெட்டு அறிவிக்கும் நிலைமை இருக்கிறது.
எப்படி அறிவித்து இருக்கிறீர்கள். இவ்வளவு கடுமையான பஞ்சம்
ஏற்பட்டு இருக்கும்போது அமைச்சர்கள் எல்லாம் முதலமைச்சர்
உட்பட மின்வெட்டை, மின்வெட்டு சதவீதத்தைக் குறைக்க
முயற்சி செய்யாமல் இங்கே சென்னையிலே அமைச்சர்கள்
இருக்கும்போது 40 சதவீதம் வெட்டு என்றும், டெல்லிக்குச்



சென்று, குடும்ப சமேதராய், குடும்பத்தோடு மனைவி, மகன்
என்று எல்லோரையும் அழைத்துச் சென்று அங்கே அறிவித்து
இருக்கிறார்கள் 60 சதவீதம் என்று. பிறகு இங்கே வந்த
பிறகு 100 சதவீதம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு
அத்தியாவசியமான மின்சாரத்தில் வெட்டு இருக்கிறது. இதை
தீர்க்க தலைநகரில் இருந்து கூப்பிட்டு ஆற்றவேண்டிய கடமை
யில் தவறி விளையாட்டு மைதானத்தில் வேடிக்கை பார்க்கின்ற
ஒரு நிலையில்தான் இந்த ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள்
என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சார நெருக்கடி இல்லை என்கிறார்கள். மின்சாரத்தின்
உற்பத்திக்கு நிலக்கரி வேண்டும். நிலக்கரியைக் கொண்டுவரு
வதற்கு கப்பல் வேண்டும். கப்பல் வாங்குவதற்கு தி.மு.க.
வினர் தடையாக இருக்கிறார்கள் என்றும் மத்திய சர்க்கார்
அனுமதி தரவில்லையென்றும் சொல்கிறார்கள். நம்முடைய
ஆளுங்கட்சி உறுப்பினர் அருமை திரு.குப்புசாமி அவர்கள் தலைவ
ராக இருக்கின்ற பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையில்
இந்தக் கப்பலை நிலக்கரி கொண்டுவருவதற்குப் பயன்படுத்த
வேண்டிய அந்தக் கப்பலை எந்த அளவுக்கு விற்றிருக்கிறார்கள்
என்பதைக் கண்டித்து இருக்கிறார்கள். 'தமிழ் அண்ணா' என்ற
அந்தக் கப்பலை கல்கத்தா நகரத்திற்கு பழுதுபார்க்க அனுப்பு
கிறார்கள். பழுது பார்த்துக் கொண்டிருந்தபோதே அதை விற்க
வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். கப்பலை
வாங்குவதற்குதான் முறைகேடு இருக்கிறது என்பதை நாம்
பத்திரிகை வாயிலாகவும் உலகம் முழுவதும் தெரிந்திருக்கின்ற
செய்தியாகவும் பார்க்கிறோம். ஆனால் கப்பலை விற்கின்ற
வகையிலேகூட முறைகேடு நடந்திருப்பதாக அந்த அறிக்கை
யிலே கூறியிருக்கிறார்கள். அந்தக் கப்பலை 85 லட்சம் ரூபாய்க்கு
விற்கிறார்கள். பழுதுபார்த்த வகையிலே ஆன செலவு 11
லட்சம் ரூபாயைச் சேர்த்து 96 லட்சம் ரூபாய்க்கு விற்க
முடிவு செய்கிறார்கள். யாருக்கு விற்கிறார்கள் தெரியுமா ?
சாகர் லைன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற கம்பெனிக்கு
விற்கிறார்கள். ஒரு பொருளை விற்கவேண்டுமென்றால் அதை
வாங்குகிற சக்தி உடையவருக்கு தான் விற்கவேண்டும். சாகர்
லைன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற கம்பெனி
எவ்வளவு பெருமானம் தெரியுமா ? எவ்வளவு முதலீடு
தெரியுமா ? 2.51 லட்சம்தான். 2½ லட்சம் முதலீடு செய்
துள்ள அந்த கம்பெனிக்கு 96 லட்சம் பெருமானமுள்ள கப்பலை
விற்கிறார்கள். விற்றதற்குப் பிறகு முழுப் பணத்தைத் தர
வேண்டுமென்று ஒரு கண்டிஷன் போடுகிறார்கள். விற்றவுடனே
விற்பனைசெய்யப்பட்ட அந்தக் கப்பல் பாரசீக வளைகுடா
நாட்டுக்கு வேறு சில சாமான்களை ஏற்றிச் செல்கிறது. நிலக்கரி
வரவேண்டுமென்ற அக்கறை. அதன்மூலம் மின்சார உற்பத்தி
செய்யவேண்டுமென்ற அக்கறை இந்த அரசுக்கோ வாரியத்
திற்கோ இல்லையென்று நான் இந்த நேரத்திலே குற்றஞ்சாட்ட

வழிக்கிறோமோ அதேபோன்று இந்த ஆண்டு மின்சாரம் கிடைக்காததன் காரணத்தால் பாதிப்பு ஏற்பட்ட விவசாயி களுக்கு வறட்சி நிவாரண நிதியிலிருந்து நிதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழக அரசுக்கு மத்திய அரசிலிருந்து பல்வேறு மின் திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கும், வடசென்னை அனல் மின் திட்டங்களுக்கும், எரிவாய்வு மின் திட்டங்களுக்கும் அவர்கள் அனுமதி தரவில்லை என்பது குறித்து சொல்லப் பட்டிருக்கின்றது. மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு மட்டும் அனுமதி தந்து மற்றவற்றிற்கு அனுமதி தரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே மத்திய அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையோடு நடக்கவில்லை என்று சொன்னால் மாநில அரசு கேட்கின்ற அனைத்து மின் திட்டங்களுக்கும் அனுமதியினைத் தந்து மின்சாரத்தில் தன்னிறைவினை ஏற்படுத்துவதற்கு உதவவேண்டும். எனவே அதற்குரிய அனுமதி யினை விரைவிலே அவர்கள் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே மத்திய அரசினை நாம் வலியுறுத்தி யாக வேண்டும்.

மேலும் இன்றைய தினம் 1–1–1982 முதல் மின்சாரத்தை எவ்வளவு உபயோகப்படுத்தி இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்து பில்களைப் போடுவதற்கு பதிலாக அட்டவணையிலே குறிப்பிட்டு அவர்கள் எவ்வளவு தொகை கட்டவேண்டும் என்று நிர்ணயிக்கின்ற வகையிலே காலதாமதத்தைக் குறைக்க வேண்டும் என்ற வகையிலே அட்டையில் குறிக்கின்ற ஒரு திட்டத்தினை ஏற்படுத்தி அதனை நிறைவேற்றிக் கொண்டு இருக் கிறோம். இதன் மூலமாக உடனடியாகத் தொகையினைக் கணக் கிட்டு பணம் கட்டுவதற்குரிய வசதி வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நதி நீரினை தேசிய மயமாக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது நாம் கேரளாவிலே இருந்தும், கர்நாடகாவிலே இருந்தும் மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவ்வாறு இல்லாமல் தேசிய மயமாக்குகின்ற திட்டத்தின் மூலம் மின்சாரத்தை தேசிய மயமாக்கி அதன்மூலம் மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கப் படுமேயானால் மின் பற்றாக்குறை என்பது இல்லாமல் போகின்ற நிலைமை ஏற்படும். சென்ற வாரம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் கேரள அரசோடு ஒப்பந்தம் செய்து தமிழக மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்கின்ற வகையில் மின்சாரத்தைப் பெற்றுத் தந்ததற்காக அவர்களுக்கு நன்றி யினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி யிலே பச்சைமலையிலே மலைவாழ் இராம மக்கள் கிட்டத்



தட்ட 40 கிராமங்களிலே இருக்கிறார்கள். இதுவரையில் 5 கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைத்திருக்கின்றது. மீதி கிராமங்களுக்கும் மிக விரைவிலே மின் வசதியினை உருவாக்கித் தருகின்ற வகையிலே திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–20)

மேலும் என் தொகுதியில் இருக்கிற முருங்கைப்பட்டி கிராமத்திற்கு 110 கே.வி. துணை மின் நிலையம் தேவை என்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த கோரிக்கையை இந்த ஆண்டு நிறை வேற்றி அந்த பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு மின்சார வினியோகம் அதிக அளவில் விரைவாக கொடுக்கின்ற நிலைமை உருவாக்கித்தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என் தொகுதியில் இருக்கின்ற கொல்லிமலையில் அணை கட்டுகின்ற திட்டத்திற்கு பக்கமாக இன்றைய தினம் புதுப்பட்டி அருகாமையில் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் செலவில் திட்டத்தை உருவாக்கி செயலாற்றிச் கொண்டு வருகிறார்கள். முடிந்தால் அதிலும் நீர் மின் திட்டம் உருவாக்குகின்ற வகையில் திட்டத்தை உருவாக்கி தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு இங்கே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு துணைத் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார நிதிநிலை அறிக்கை மீது முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். பொதுவாக வரலாறு காணாத அளவுக்கு இந்த ஆண்டு 100-க்கு 100 சதவீத மின்சார வெட்டு இருக்கிறது என்பதை மெத்த வருத்தத்தோடு இங்கே நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த மின் வெட்டு காரணமாக ஏராளமாக எல்லாத் துறை களிலும் மனித வாழ்க்கையிலும் அன்றாடம் தேவைப்படுகிற மின்சாரம் இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் இருக்கிறார்கள், என்பதை உணரவேண்டும். இதற்கெல்லாம் காரணம் இந்த நிர்வாக சீர்கேடு என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். நான் மட்டும் அல்ல 1980–81-ஆம் ஆண்டு Comptroller and Auditor-General of India அவர்களுடைய அறிக்கையில் தெரி வித்ததைப் போல உலக கடன் வழங்கும் நிறுவனம் ஐ.பீ.ஏ. மூலமாக 1976-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 சக்தி வாய்ந்த கேப்பாசிட்டர்களை வாங்கியிருக்கிறார்கள். அது ஆகஸ்டு மாதம் நம்முடைய சென்னை துறைமுகத்திற்கு வந்திருக் கிறது. அதைப் பெற்றுக் கொள்வதற்கு ஏறக்குறைய ஓர்

விரும்புகிறேன். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை இதனை
வெளியிடுகிறது. 16 லட்சம் கொடுத்து இருக்கிறார்கள். மீதப்
பணம் தரவேண்டுமென்பதற்காக ஹைகோர்ட்டிற்குப் போகி
றார்கள். அங்கே 36 லட்சம் தரவேண்டுமென்ற உத்திரவைப்
பெறுகிறார்கள். பெற்றதற்குப் பிறகும்கூட அந்தப் பணம் வர
வில்லை. அதற்குப் பின்னாலே லீகல் அட்வைசர் ஒருவர் இருக்
கிறார். அவருக்கு ஆன செலவு 5.46 லட்ச ரூபாய். லீகல்
விவகாரமாக சட்ட விவகாரமாக பணியாற்றியவருக்கு இந்தக்
கப்பல் போக்குவரத்துக் கழகம் தந்திருக்கிறது. இந்த அளவுக்கு
இருக்கிறபோது கப்பல் வாங்கவேண்டுமென்ற முயற்சி செய்கிறார்
கள். உள்ளபடியே கப்பல் வாங்கினால் நிர்வாகம் சரியாக
நடக்குமா ? நிலக்கரி வருமா என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும். இந்த அறிக்கையிலே சொல்கிறார்கள், நெய்வேலி
5 வது சுரங்கம் வெட்டியெடுக்கப்படுகிற போது அதன்மூலம்
கிடைக்கிற பழுப்பு நிலக்கரியைக் கொண்டு 810 கோடி ரூபாய்
செலவிட்டு தமிழ் நாடு ஒரு அனல் மின்சார நிலையம்
ஏற்படுத்தப்போகிறது, அதற்கு மத்திய அரசின் அனுமதி
கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

நான் முதலிலேயே சொன்னதுபோல் எரிவாயு மூலமாக மின்
திட்டத்தை ஏற்படுத்தப் போகிறோம், 6 காஸ் டர்பைன்கள்
கேட்கிறோம், அதற்காக 113 கோடி ரூபாய் செலவாகும்,
மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.
ஆனால் மத்திய அரசு அனுமதி மறுக்கிறது என்று சொல்கிறார்
கள். அதே நேரத்திலே மராட்டிய மாநிலத்திலே 4 காஸ்
டர்பைன்கள் போட்டிருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசு
அனுமதி தந்திருக்கிறார்கள். நாம் கேட்டால் மத்திய அரசு
கொடுக்கவில்லை என்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 11-30)

அவர்கள் கேட்டால் மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்
கிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்த நேரத்தில் மாண்பு
மிகு முதலமைச்சரும் மின் துறை அமைச்சர் அவர்களும் போராட
வேண்டாமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எது எதற்கோ
போராடுகிற முதலமைச்சர்—நம்முடைய மாண்புமிகு சங்கரய்யா
அவர்கள் கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள், என்.ஜி.ஓ. போராட்
டம் என்றால் ராஜினாமா செய்துவிட்டு நடுத்தெருவிற்கு வருவேன்
என்று சொல்கிற முதலமைச்சர் இன்று வேறு மாநிலத்திற்கு
கொடுக்கிற அனுமதி நம்முடைய மாநிலத்திற்கு இல்லையே
... ...தற்காகப் போராட வேண்டாமா? (மணியடிக்கப்பெற்றது).



பேசுகிறபோது அரசை தாக்கினால் ஷாக் அடிக்கிறதே; ஒரே
ஒரு விவரத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.
நம்முடைய உரிமைகளைப் பெற வேண்டும். முடியவில்லை
யென்றால் சர்வகட்சித் தலைவர்களை அழையுங்கள். 15 நிமிடத்
திற்கு தலைவர்களை தனியாக அழைத்து பேசினால் மட்டும்
போதாது. எல்லாத் தலைவர்களையும் அழைத்து விட்டு கூண்
டோடு ராஜினாமா செய்யலாம். அதற்கு அமைச்சர்கள்
தயாராக இருக்கிறார்களா ? சட்டமன்ற உறுப்பினர்கள்
அத்தனை பேரும் உரிமைகளைப் பெறுவதற்காக ராஜினாமா
செய்ய தயாராக இருக்கிறோம். தமிழக ஆட்சியில் இருக்கிற
போது ஜனநாயக உரிமைகளுக்காக பதவிகள் பறிபோகும் என்று
நினைத்தும் கூட ராஜினாமா செய்த சர்க்கார்தான் தி.மு.க.
சர்க்கார் என்பதை எண்ணிப்பார்த்து, அந்த உணர்வை இந்த
ஆட்சியாளர்கள் குறிப்பாக மின்துறை அமைச்சர் அவர்களும்
முதலமைச்சர் அவர்களும் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். அதைப்போலவே மின்வாரியத்தை பொறுத்த
வரையில்........

(மணியடிக்கபெற்று அடுத்த உறுப்பினர் அழைக்கப்பெற்றார்)

* திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை கூறுவதற்கு
விரும்புகிறேன். தமிழகத்தில் கடுமையான மின் பற்றாக்குறை,
அதன் காரணமாக மின்வெட்டு ஏற்பட்டு மிகப் பெரிய நெருக்
கடி நிலை உருவாகியிருக்கிறது என்பதை நாம் அறிவோம்.
வறட்சி ஒருபுறம் தமிழகத்தில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி
யிருக்கிறது. அதன் காரணமாக தமிழகத்தில் விவசாயிகள்,
விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், உணவு
பற்றாக்குறை ஏற்பட்டு, அரிசி போன்ற அத்தியாவசியமான
பொருள்களின் விலை தினசரி உயர்ந்து கொண்டே இருக்கிறது.

மின்சார பற்றாக்குறை, மின்சார வெட்டின் காரணமாக
தமிழகத்ினுடைய தொழில் துறையில் நெருக்கடி உருவாகி
இன்றையதினம் தொழில்கள் தேக்கம் அடைந்து நிற்கின்றன
என்பது அனைவருக்கும் தெரியும். தொழில் துறையில் கடந்த
சில தினங்களுக்கு முன்பு 100 சதவீத மின்வெட்டு அமலாக்கப்
பட்டு, இப்போது சற்று குறைந்து 75 சதவீதமாக ஆக்கப்பட்
டிருக்கிறது. சிறுதொழில்களுக்கு 45 சதவீதமாக குறைக்கப்
பட்டிருக்கிறது. இன்றையதினம் மின்வெட்டின் காரணமாக
ஆலைகளில் பணிபுரிகிற தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். அவர்கள் லே-ஆப் செய்யப்பட்டிருக்கிறார்கள்.
விலைவாசிகள் உயர்ந்துகொண்டே வருகிற இந்த நேரத்தில்
அவர்களுக்கு முறையாக கிடைக்கக்கூடிய ஊதியம் கூட முழுமை
யாக கிடைக்கக் முடியாத நிலை இருக்கிறது. தொழில்
துறை என்கிறபோது பெரிய தொழில்கள் மட்டுமல்ல, சிறு

தொழில்களும் பெரிய அளவில் மூடப்படக் கூடிய நிலை ஏற் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் குடிசைத் தொழில்களில் பணிபுரிகிற தொழிலாளர்கள் கூட இதன் காரணமாக பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். குடிசைத் தொழிலிலே பீடி சுற்றும் தொழிலாளிகள் இருக்கிறார்கள். மின் விளக்குகள் சரியாக காலத்தில் எரியாததன் காரணமாக அவர்கள் தொழில் செய்து கூலியை முழுமையாக பெற முடியாத நிலை இருக்கிறது. ஓட்டல் களில் விடுதிகளில் சாப்பிடச் செல்கிறபோது, இட்லி கேட்டால் மின்வெட்டின் காரணமாக கிரைண்டர் ஓட்ட முடியவில்லை இட்லி இல்லை என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. திருமண காலங்களில் அந்த நிகழ்ச்சிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரியாக தமிழகத்தில் இருக்கிற அனைத்துப் பகுதி மக்களும் பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட் டிருக்கிறது. இந்த நிலையின் காரணமாக தமிழகத்தினுடைய பொருளாதாரமே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலேயிருக்கிற விவசாயிகள் ஒருபுறத்திலே வறட்சி யால் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், அந்த வறட்சியின் காரண மாக, கிணறுகளிலே இருக்கிற சிறிதளவு தண்ணீரைப் பயன் படுத்தி, அதாவது ½ அல்லது 1 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்து, அதை வைத்து தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியும் என்று பயிர்செய்த விவசாயிகள் மின்சாரம் கிடைக்காத காரணத் தாலே, அவர்கள் கையிலேயிருந்த முதலையும் இழந்து, தாங்கள் சாகுபடி செய்த பயிர்களையும் பாதுகாக்க முடியாத அந்தப் பயிர்கள் தீய்ந்து பாதிக்கப்பட்ட நிலையிலே, இன்றையதினம் இருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவுக்கு மிகப் பெரிய நெருக்கடி விவசாயிகளுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மின்சாரம் இல்லையென்றால், சமுதாயமே இயங்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வாழ்க் கைக்கு மின்சாரம் மிகவும் அத்தியாவசியமான, தேவையான ஒன்றாக இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். மின்சாரத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி குடிநீருக்குக்கூட நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது. பல்வேறு நகராட்சிகளில், ஊராட்சி மன்றங்களில், ஊராட்சிகளில் இருக்கிற குடிநீர்த் தேக்க தொட்டிகள் மின்சாரம் இல்லாததால், அவை இயங்க முடியாத தன் காரணமாக, குடிநீர் கூட அங்குள்ள மக்களுக்குக் கிடைக் காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கரூர் போன்ற பெரும் நகராட்சிகளில் பல தினங்களாக அங்குள்ள மக்களுக்குக் குடிநீர் கிடைக்காத காரணத்தால், அங்கு ஹர்த்தால், பந்த் நடவடிக் கைகளில் ஈடுபட நேரிட்டது என்பதை உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவுக்குக் கடுமையான நெருக்கடிக்கு தமிழக மக்கள் ஆள்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மிகப் பெரிய சோதனைக்கு ஆட்பட்டுள்ள இந்த நிலையிலே தான் நம்முடைய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இது சாதனை மிக்க நிதிநிலை அறிக்கை என்று கூறுவது வேடிக்கையாக



இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்று நிலைமையிலே ஏதோ சிறிதளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்று கூறினாலும், நிலைமையிலே இன்னும் முன்னேற்றத்தைப் பார்க்க முடியவில்லையென்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற இரண்டாம் தேதியன்று இதே மன்றத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர்—தோழர் அழகர்சாமி அவர்கள் '' இன்னும் சரியான முறையிலே மின் சாரம் கிடைக்கவில்லையென்று குறிப்பிட்ட நேரத்திலே, அமைச் சர் அவர்கள் எந்த இடத்திலே, எந்த ஊரிலே கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று கேட்டார்கள். கோயில்பட்டியிலே கிடைக்கவில்லை என்று தோழர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு நாளைக்கு 6 மணி நேரம் என்கின்ற வகையிலே, அங்கு உத்திரவாதமாகக் கிடைக்க உத்தரவாதம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அதாவது, ஜனவரி 2-ஆம் தேதியிலிருந்து உத்தர வாதமாகக் கொடுக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டார்கள். நேற்றைக்கு முன்தினம் தோழர் அழகர்சாமி அவர்கள் கோயில் பட்டி சென்ற நேரத்திலே, அவர் இங்கு பேசிய அதே 2-ஆம் தேதி அன்று விவசாயிகளுக்கு அன்று முழுமையாக மின்சாரம் கிடைக்கவில்லையென்ற புகாரை மக்கள் அவரிடம் கூறியிருக்கி றார்கள் என்பதையும் அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். அபிவிருத்தி ஏற்படிருக்கிறதா என்றால், சிறிது அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அதே நேரத்தில், இப்பேர்ப்பட்ட நெருக்கடி........

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு விவ ரத்தைச் சொன்னார்கள். நான் அன்றையத்தினம் மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. அழகர்சாமி அவர் கள் பேசுகிறபொழுது ஒரு கருத்தைச் சொன்னேன். இந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுப்பதற்கு நமக்கு ஏதுவாக இருக்கும். ஏனென்றால், நமக்கு மின் வாரியத் திலேயிருந்து தகவல்கள் கிடைக்கின்றன. எல்லா இடங்களுக்கும் 6 மணி நேரம் மின்வசதி வழங்கப்படுகிறது என்று. பொதுவாக சொல்லப்பட்டால், வலது காதில் கேட்டால் அது இடது காது வழியாகப் போய்விடும் அல்லது இடது காதில் கேட்டால் அது வலது காது வழியாகப் போய்விடும். அதற்காகத்தான், விவரங் கள் இருந்தால் நான் அதை விசாரிப்பதற்கு என்ன, எங்கு, எப்பொழுது என்ற விவரம் கொடுத்தால் பயனுள்ளதாக இருக் கும். அதற்கு உதவி செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட் டேன்.

**திரு. இரா. கருப்பையா :** அமைச்சர் அவர்களிடம் அன் றைத்தினம் கோயில்பட்டியில் கிடைக்கவில்லையென்று குறிப் பிட்டார்கள். தோழர் திரு. அழகர்சாமி கோயில்பட்டிக்கு 3-ந் தேதி சென்று வந்திருக்கிறார்கள். அந்தக் கோயில்பட்டியில் 2-ந்

தேதி முழுமையாக மின்சாரம் கிடைக்கவில்லையென்று அங்குள்ள
மக்கள் தெரிவித்திருக்கின்றார்கள் என்பதைத்தான் நான் குறிப்
பிட விரும்புகிறேன். ஆகவே, அந்த அடிப்படையில், இன்றையத்
தினம் தமிழக மக்கள் மிகப் பெரிய வேதனைக்கு ஆளாக்கப்
பட்டிருக்கின்றார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

இந்த அளவிற்கு மின் வெட்டு ஏற்பட்டிருப்பது என்பது
தவிர்க்க முடியாததா? அதைத் தவிர்த்திருக்கலாமா? எந்த
அளவிற்குத் தவிர்த்திருக்கலாம் என்பதை நம்முடைய அரசு
பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற அறிக்கை
யிலே சொல்லப்பட்டிருக்கின்றது, 1981-82 ஆம் ஆண்டு உற்பத்தி
12,108 மில்லியன் யூனிட்டுகள் என்றும், 1982-83 ஆம் ஆண்டு
எதிர்பார்க்கக் கூடிய உற்பத்தி 9,831 மில்லியன் யூனிட்டுகள்
என்றும், அதிலே குறைவு ஏற்பட்டிருப்பது 3,238 மில்லியன்
யூனிட்டுகள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் சதவீதம்
என்று எடுத்துப் பார்த்தால் தூத்துக்குடியிலே ஏற்பட்ட
கோளாறை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகப்
பார்க்கும்பொழுது இதிலே ஏற்படக்கூடிய குறைவு என்று பார்த்
தால் சுமார் 25 சதவீதம் ஏற்படுகிறது என்பதை நான் குறிப்பிட
விரும்புகிறேன். ஆனால், அதே நேரத்தில் எந்த அளவிற்கு
இன்றைக்கு மின்வெட்டு அமல் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைப்
பார்க்க வேண்டும்.

உயர் அழுத்த மின்சாரம் பெறக்கூடிய தொழிற்சாலைகளுக்கு
இன்று 60 சதவிதம் மின்வெட்டு அமலாக்கப்பட்டிருக்கின்றது.
மற்றத் தொழில்களுக்கு 45 சதவீதம் மின்வெட்டு விதிக்கப்
பட்டிருக்கிறது. சாதாரணமாக வீடுகள், குடிசைத் தொழில்
செய்யக்கூடிய நிலையங்களுக்குக்கூட அந்தக் கட்டுப்பாடு விதிக்
கப்பட்டிருக்கின்றது. இம்மாதிரி இந்த மின்வெட்டை அமல்
செய்வதற்கு என்ன தேவை உருவாகியிருக்கிறது
என்பதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்கள் என்று சொல்லும் நேரத்தில், பெரிய தொழிற்
சாலைகளுக்கு மின் வெட்டு அமலாக்கப்பட்டிருக்கிறது. சிறிய
தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் மின்வெட்டு
அமல் செய்வதற்கான காரணம் என்ன? சாதாரண தொழி
லாளர்கள் தங்கள் குடிசைகளில் தொழில் செய்து தங்கள் வாழ்க்
கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பத்து பேர், ஐந்து
பேர்களை வைத்துக் கொண்டு சிறிய தொழில்களை நடத்திக்
கொண்டிருக்கின்றவர்கள் இருக்கிறார்கள். இதையே நம்பி
தங்கள் வாழ்க்கையை நடத்தக் கூடியவர்கள் இருக்கிறார்கள்.
அம்மாதிரி தொழில்களுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளிப்
பதற்கும் அல்லது இன்னும் குறைப்பதற்கும் அரசாங்கம்பரிசிலனை
செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



சாதாரண அச்சகங்கள் இருக்கின்றன. அவர்கள் ஏற்கெனவே
பயன்படுத்திய மின்சாரத்தைக் கணக்கிட்டு அந்த அச்சகங்கள்
பத்து நாட்கள் அல்லது ஒரு வாரத்திற்கு மேல் இயங்க முடியாத
நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதனால் அரசயல் கட்சிகளும்
பாதிக்கப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். பத்து
அல்லது பதினைந்து நாட்கள்தான் வேலை செய்கிறது
என்பது மட்டும் அலல பிரச்சினை. அந்த பத்து பதினைந்து
நாட்களிலும் வேலை செய்து மாதத்தில் 30 நாட்களுக்கும் கிடைக்
கின்ற வருமானத்தை எப்படியும் ஈடு செய்ய வேண்டுமென்று
செய்கிறார்கள். அவர்களுக்கும் மின்வெட்டை அமல் செய்
திருப்பதால் அங்கே வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு,
வேலை இல்லை என்று சொல்லி சம்பளத்தைக் குறைக்கிறார்கள்.
எனவே, இம்மாதிரி இருக்கின்ற பல்வேறு நிலைமைகளையும்
கணக்கிற்கொண்டு சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள்
ஆகியவற்றிற்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிப்பது சம்பந்த
மாகப் பரிசீலனை செய்து அவற்றிற்கு மின்வெட்டிலிருந்து விலக்கு
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மின்வெட்டு என்பது ஏதோ திடீ
ரென்று இந்த ஆண்டு ஏற்பட்டதாக நானும் கூறவில்லை.
அமைச்சரவர்களும் கூறவில்லை. தொடர்ச்சியாக ஒவ்வொரு
ஆண்டும் இந்த நிலைமையை நாம சந்தித்துக் கொண்டிருக்கி
றோம். ஆனால் அது அமல்படுத்தப்படும் காலத்தில்தான் வித்தி
யாசம் ஏற்படுகின்றது. 1982-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தி
லேயிருந்து இந்த மின்வெட்டு அமலுக்கு வந்துவிட்டது. சென்ற
ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலிருந்து மே மாதம் வரையில்
வந்திருக்கிறது. ஆனால் அப்பொழுது இந்த அளவிற்குக் கடுமை
யாக இல்லை. ஆனால் இந்த ஆண்டு அதிகமாக இருக்கிறது.
எனவே, ஒவ்வொரு ஆண்டும் இந்த மின்வெட்டு ஏற்பட்டுக்
கொண்டுதான் இருக்கிறது.

அதற்கு அமைச்சரவர்கள் சொல்லுகின்ற காரணம் என்ன
வென்றால், ஒன்று, நீர் மின் நிலையங்களில் போதுமான
தண்ணீர் இல்லாததால் போதுமான அளவு உற்பத்தியாகவில்லை.
அனல் மின் நிலையங்களில் போதுமான கரி இல்லை அல்லது
தரமான கரி இல்லை. ஆகவே, உற்பத்தி செய்ய முடியவில்லை.
இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டுவிட்டன. அதன் காரணமாக
இந்தக் குறை ஏற்பட்டிருக்கின்றது என்பது. ஏதோ இந்த
ஆண்டுதான் இது மாதிரி சொல்லியிருப்பார்களேயானால், திடீ
ரென்று விசேஷமான நிலைமை ஏற்பட்டு விட்டது என்று நாம்
கருதலாம். ஆனால், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயும்
பார்க்கின்ற நேரத்தில், இதே காரணங்கள் அந்த அறிக்கை
யிலேயும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. அதற்கு முந்தைய
ஆண்டுகளில் நிலக்கரி பற்றவில்லை, தரமான நிலக்கரி இல்லை
என்று இருக்கிறது. நீர் மின் நிலையங்களில் நீர் இல்லை என்பது
எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விஷயம்தான்.

நீரைத் திடீரென்று கொண்டு வந்து மின்சார உற்பத்தியைச்
செய்துவிட முடியாது. இயற்கை பொய்த்து, பருவமழை
இல்லாத நேரங்களில் அது குறையும் என்பது இருக்கின்ற
யதார்த்தமான உண்மையாகும்.

ஆனால் அதே நேரத்தில் அனல் மின் நிலையங்கள், இதை
ஈடு செய்யக்கூடிய அளவுக்கு முழுமையாக எந்தவிதமான பழுதும்
இன்றி அந்த மின் உற்பத்தியை முறையாகப் பாதுகாக்கும்
பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதிகாரிகளுக்கும் இருக்கிறது.
(மணி அடிக்கப்பட்டது). இன்றையதினம் அரசு இந்தக் கடமை
யிலே இருந்து தவறி இருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். ஜனவரி 2-க்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற நிலை
மையை, இதற்கு முன்னாலேயே ஏற்படுத்தி இருக்க முடியாதா?
ஏனென்றால் செப்டம்பர் மாதத்திலேயே இந்த மின்வெட்டு
துவங்கிவிட்டது. இப்போது ஜனவரி 2-ந் தேதிக்குப்
பிறகு அதே கரிதான் தற்போதும் இருக்கிறது. ஒருவேளை
அதனுடைய தன்மையிலே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று
வேண்டுமானால் வாதத்திற்கு இப்போது சொல்லாம். இயந்
திரங்களைப் பழுது பார்ப்பதிலே மாற்றம் இருக்கிறது என்று
சொல்லலாம். ஆனால் இந்த நிலைமை தொடர்கிறது. இன்றைய
தினம் ஒரு அரசாங்கம் சமுதாயத்திற்கு அத்தியாவசியமான,
தேவையான, முழுமையாக சமுதாயத்தை இயக்கக்கூடிய ஒரு
பொருளாக, கருவியாக இருக்கக்கூடிய மின்சாரத்தை எந்தவித
மான தடையும் இன்றி, இடர்பாடும் இன்றி, முழுமையாக
உத்திரவாதம் செய்யக்கூடிய நிலையில், இதற்கான நடவடிக்கை
களை எடுக்கவேண்டியது அவசியம். அந்த முறையிலே அரசு
தன்னுடைய கடமையைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் அல்லது
கோரமான தன்மைகளை உத்தேசித்து—ஒரு நாளைக்கு மின்
சாரம் இல்லை என்றால் இந்த சமுதாயமே ஸ்தம்பித்து நிற்கிறது.
கிராமப் புறங்களிலே பல நாட்கள் மின்சாரம் இல்லாமல்
இருக்கும், சில நகரங்களில் இருக்கும், சில நகரங்களிலே இல்லாமல்
இருக்கும். அதன் காரணமாக மக்கள் அனுபவித்து
வந்திருக்கின்ற வேதனைகளை மனதிலே கொண்டு இம்மாதிரி
யான நிலைமைகள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு முன்
னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் மத்திய அரசாங்கத்தி
னுடைய நடவடிக்கைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சுட்டிக்
காட்டினார்கள். மத்திய அரசாங்கம் நாம் கோரியிருக்கின்ற
பல்வேறு திட்டங்களுக்கான அனுமதியை அவர்கள் கொடுக்க
மறுக்கிறார்கள். ஒரே திட்டத்திற்கு மட்டும் அனுமதியைக்
கொடுத்திருக்கிறார்கள். நெய்வேலியிலே உற்பத்தி செய்யக்



கூடிய 3ஆவது நிலையத்திற்கு. அதிலே உற்பத்தியாகக்கூடிய
மின்சாரம் முழுமையாக நமக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடு
களைச் செய்யவேண்டும். அதற்கான நம்முடைய கோரிக்கை
களை வைத்திருக்கிறோம் என்ற முறையிலே கூறி இருக்கிறார்
கள். இன்றையதினம் தமிழகத்திற்குத் தேவையான மின்சார
உற்பத்திக்கு தேவையான அத்தனை திட்டங்களையும் நிறை
வேற்றுவதற்கு மறுக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தினுடைய
நடவடிக்கைகளை எதிர்த்து உறுதியாக, தமிழக மக்களுடைய
நலன்களை காக்கப் போராடினால் யாரும் அதை எதிர்த்து
நிற்க முடியாது. ஆகவே அனைத்து அரசியல் கட்சிகளையும்,
அனைத்து மக்களையும் திரட்டி, உறுதியான நிலையை எடுத்து
இதைப் பெற்றுத் தீருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம்
எடுக்க ஏன் தயக்கம் காட்டுகிறது என்பதைக் கேட்க விரும்பு
கிறேன். ஆகவே, அந்த முறையிலே அதற்கான உறுதியான
நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்திலே ஏற்படக்கூடிய மின்சார
( line loss ) லைன் லாஸ், அதாவது கம்பிகளில் மின்சாரம்
செல்லக்கூடிய நேரத்திலே ஏற்படுகிற இழப்பு 18.9 சதவிகிதம்
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைச் சரிக்கட்டினால் கூட
இன்றையதினம் ஓரளவுக்கு மின்சார வெட்டை குறைக்கலாம்
என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே இது 22 சதவிகிதம்
என்று சொல்லப்பட்டு, கடந்த 2, 3 ஆண்டுகளாக 18.8, 18.5,
18.9 சதமாக இருந்துகொண்டிருக்கிறது. இது நிரந்தரமான
அம்சமாக இருக்கிறது. ஆகவே இதைத் தடுப்பதற்குத், இதைக்
குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறீர்கள்?

நம்மிடத்திலே தொழில் நுணுக்கமுள்ள தேர்ச்சி
பெற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்ட
விசேஷமான குழுக்களை நியமியுங்கள். அவர்களிடத்திலே
பொறுப்பை ஒப்படையுங்கள். அதன் மூலமாக இன்றைய
தினம் ஏற்பட்டிருக்கின்ற மின்சார நட்டத்தை ( Line loss )
குறைப்பதற்கான முறையில் நடவடிக்கை எடுக்க கேட்டுக்
கொள்கிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பொருள்
ஈட்டலும், காத்தலும், காத்து வகுத்தலும் வல்லது அரசு என்
கின்ற ஒரு குறளை நம்முடைய சபையில் கூறி இருக்கிறார்கள்.
அதை நினைவுபடுத்தி அந்த முறையில் தேவையான
மின்சாரத்தைப் பெறுவதும், அதை உற்பத்தி செய்வதும்,
உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தைப் பாதுகாத்தலும், அந்த
மின்சாரத்தை முறையாக மக்களுக்கு விநியோகிக்க வேண்டும்—
அரசு இந்தக் கடமையைச் செய்ய வேண்டும் என்று கூறி
என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி,
வணக்கம்.

(முற்பகல் 11-50)

*திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்பால் கொண்டு வந்திருக்கிற மின் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாட்டிலே இல்லாத ஒன்றுக்கு ஒரு துணை மானியக் கோரிக்கை கொண்டு வந்திருப்பது வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருந்தாலும், கொண்டுவந்திருப்பதாலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எதற்கு எடுத்தாலும், மத்திய அரசு மத்திய அரசு என்று கையைக் காட்டிக் கொண்டிருக்கிற நீங்கள் மின்சார உற்பத்திக்காக என்ன முயற்சிகளை செய்திருக்கிறீர்கள் ? என்ன நடவடிக்கையிலே ஈடுபட்டு இருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க ஆசைப்படுகிறேன். தூத்துக்குடியிலே மின் உற்பத்தி இயந்திரம் பழுதுபட்டு, பல நாட்கள் ஆகியும் அதை பழுதுபார்க்கவோ, மின் உற்பத்தியைப் பெருக்கவோ என்ன நடவடிக்கையை நீங்கள் முன்னெச்சரிக்கையாக எடுத்து இருக்கிறீர்கள்? இதற்கும் மத்திய அரசுதான் காரணமா என்பதைக் நான் வினாவாக இந்த நேரத்திலே கேட்க ஆசைப்படுகிறேன். நிலக்கரியை ஒரு காரணமாகக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அதைக் கொண்டு வர யார் தடை செய்தது? கப்பல் வாங்க அனுமதி மத்திய அரசு மறுத்துவிட்டது என்பதையும் நீங்கள் காரணமாக காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். கப்பல் வாங்க ஏன் மத்திய சர்க்கார் மறுத்தது என்பது இந்த அவைக்கும் இந்த நாட்டில் உள்ள அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இருப்பினும் கப்பல் வாங்காத காரணத்தால்தான் இந்த மின் தட்டுப்பாடு வந்ததா என்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதேபோல் இவ்வாண்டு வறட்சி ஏற்பட்டுள்ளது. இது யாரும் மறுக்க முடியாத உண்மைதான். இருந்தாலும், வறட்சிக்கு வலிவூட்டுகின்ற வகையிலே இன்று நீங்கள் மின்சாரத்தை முறையாக வழங்காத காரணத்தாலே வறட்சி மிக்வும் வலிவடைந்திருக்கிறது என்பதை உறுதியாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பல பகுதியிலே விவசாயத்திற்கு கிணற்றை மட்டுமே நம்பி சாகுபடி செய்கிற ஒரு நிலையிலே இருந்துகொண்டு வருகின்ற நேரத்திலே, மின்சாரத்தை யாவது முறைப்படுத்தி நீங்கள் கொடுக்காத காரணத்தால் விவசாயம் பாழடைந்து பலர் ஊரை விட்டே வெளியேறுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரை இன்று விவசாயத்திற்கு முழுவதுமாக கிணற்றையே நம்பி வாழ்கிற



ஒரு பகுதியாக அது இருக்கிறது. இப்போது சரியாக மின்சாரம் கிடைக்காத காரணத்தாலே விவசாயம் சரியான முறையில் செய்யாமல், மக்கள் அருகிலே இருக்கக்கூடிய பெங்களூருக்குக் கூலி வேலைக்காக சென்றுகொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக இன்றைக்கு கிராமப்புறங்கள் காலியாகிக் கொண்டிருக்கின்ற நிலை இருந்துவருகிறது என்பதை இந்த நேரத்திலே நான சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வானம் கருப்பாக இருக்கிறது என்று சொன்னால், அதற்கும் மத்திய சர்க்கார்தான்? காரணம் என்று நீங்கள் சொல்வீர்கள். அணை வெளிமைப்படுத்த நாங்கள் திட்டம் தீட்டி மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம், அதற்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்க மறுக்கிறது என்றுகூட நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கலாம். இந்த நாட்டிலே மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிற நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதனாலே எதற்கு எடுத்தாலும் நீங்கள் உங்களால் முடியாத ஒன்றுக்கு மத்திய சர்க்கார் என்று கையைக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டம். நாட்டை இருட்டிலே மூழ்கடித்துவிட்டு பசியிலேயும், பஞ்சத்திலேயும், பட்டினியிலேயும் ஆழ்த்தி விட்டு, சத்துணவுத் திட்டம் என்று ஒரு கோஷத்தை வைத்து அனைவரையும் நீங்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். சத்துணவுத் திட்டம் வரவேற்கிற ஒன்று தான், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்த அந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும் இந்த ஒரு திட்டத்தையே பெரிதுபடுத்திக்கொண்டு இந்த நாட்டு மக்கள் மத்தியிலே காண்பித்துக் கொண்டு, வேடிக்கை காட்டுவதுபோல் இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல் மின்சாரம், அதைச் சரியான முறையிலே. . . .

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஒரு வார்த்தையை இங்கே பயன்படுத்தினார்கள், ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று. எப்படி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும், அதில் எப்படி எங்கே ஏமாற்றம் இருக்கிறது என்பதை தயவு செய்து தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

*திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வினாவை எழுப்பினார்கள். அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். இங்கு கொண்டு வந்த ஆளுநர் உரையிலே ஏறத்தாழ பாதிக்கு மேலாக சத்துணவுத் திட்டத்தைப்

பற்றித்தான் இருந்துகொண்டிருக்கிறதே தவிர, மற்ற ஆக்கப்
பூர்வமான பணிகளைப் பற்றி ஏதும் இருந்ததாக எனக்குத்
தெரியவில்லை. அதைப் பார்க்கும்போது சத்துணவுத் திட்டம்
தான் இன்று ஒரு முக்கியமாக பொருளாதாரத் திட்டமாக இருந்து
கொண்டிருக்கிறது என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் நன்றாகப் பேசவேண்டும் என்பதற்காக, அவர்
களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்
கிறேன். இப்போது அவர் ஆளுநர் உரை மீது பேசிக்கொண்டு
இருக்கிறார்களா, அல்லது மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை
மீது பேசிக்கொண்டு இருக்கிறார்களா என்று தெரியவில்லை.
மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேசுவதாக
இருந்தால், இந்தப் பிரச்னை எழாது. மின்சார வாரியத்தைப்
பொறுத்தவரையில் பேசலாம். சத்துணவுத் திட்டம் குறித்து
எந்த அடிப்படையில் இதில் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்?

திரு. ப. தீர்த்தராமன் : நான் மின்சாரத் துறை பற்றித்
தான் பேசிக்கொண்டு இருக்கிறேன். உணவு உற்பத்தியைப்
பொறுத்தவரையில், இன்று மின்சாரத் துறையை நம்பி இருப்
பதால் இதையெல்லாம் நான் இழுக்க வேண்டிய நிலைமைக்கு
ஆளாக்கப்பட்டு இருக்கிறேன். இருக்கின்ற மின்சாரத்தை முறை
யாக வழங்காததால் தான் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு
வருகின்றன. ஆகவே, மின்வெட்டு என்கிற புரட்சிகரமான
திட்டத்தை இன்றைக்கு இந்த நாட்டிலே இந்த அரசு உருவாக்கி
யிருக்கிறது என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கின்ற மின்சாரத்தை ஓரள
விற்காவது விவசாயிகளுக்குச் சரியான நேரத்தில், தவறாமல்
கொடுக்காத காரணத்தால் தான், இன்றைக்கு விவசாய உற்
பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில்
நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே இருக்கின்ற மின்சாரத்தை ஓரளவிற்காவது
வீடுகளுக்குச் சரியான நேரத்தில், தவறாமல் கொடுத்தால்,
பள்ளி மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படாமல் இருக்கும் என்ப
தாலும் இரவு 6 மணியில் இருந்து 10 மணி வரையில் கண்டிப்பான
முறையில், சரியான வகையில் மின்சாரம் வீட்டு உபயோகத்திற்கு
கொடுத்தால், பள்ளி மாணவர்கள் படிப்பு நல்ல முறையில்
இருக்கும் என்பதாலும் தவறாமல் வீட்டுக்கு மின்சாரம் வழங்க
வேண்டும் என்று என்னுடைய ஆலோசனையை எடுத்துச்சொல்ல
ஆசைப்படுகிறேன்.



பல திட்டங்களிலே இன்றைக்கு அரசின் பணம் வீணடிக்கப்
பட்டுவருகிறது. இன்று தமிழ்நாடு முழுவதும் மின்துறையிலே
இருக்கின்ற கேஷியர்கள் பொறுப்பு நீக்கப்பட்டதால் அவர்கள்
கோர்ட்டிற்குச் சென்று, ஆணை வாங்கி வந்து விட்டார்கள். அதன்
காரணமாக அவர்கள் வேலைசெய்யாமல் உட்கார்ந்து கொண்டு
சம்பளத்தை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி மக்கள்
பணம் லட்சக்கணக்கில் வீணாகிக்கொண்டு இருக்கிறது. இதைக்
கேட்டால் கோர்ட் ஆணை என்று சொல்கிறார்கள். அவர்கள்
கோர்ட்டிற்குச் சென்று இப்படிப்பட்ட ஆணையை பெறுகின்ற
வகையில், அந்தச் சட்டத்திலே ஓட்டை வைத்து நிறைவேற்று
வதற்கான காரணம் என்ன என்பதை நான் அறியவிரும்பு
கிறேன். அன்றைக்கே இந்தப் பிரச்னையைத் தீர்க்க அவர்களை
நேரில் அழைத்துப் பேசி, முடிவு கண்டு இருக்கலாம் என்று
எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஒகேனக்கல் நீர் மின் திட்டம் பெரும் தலைவர் காமராஜர்
அவர்கள் ஆட்சி காலத்திலே திட்டம் தீட்டப்பெற்று, ஆய்வு
செய்யப்பட்டு, இன்றைக்கு அது கிடப்பில் கிடக்கிறது. அதற்கு
அரசு என்ன முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது? அதற்கான
முயற்சிகளை எடுத்து நிறைவேற்றினால், அதனால் என்னுடைய
மாவட்டம், என்னுடைய தொகுதி சிறப்பாகப் பயன்பெறும்.
அது நாட்டின் வளர்ச்சிக்கும் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதவிப்பொறியாளர்கள் நான்கு பேருக்கு, ஒரு உதவிக் கோட்
டப் பொறியாளர் என்று வைத்து, அவருக்கு வாகன வசதி
கொடுத்து, ஒரு டிரைவரும் கொடுத்து, வைத்திருக்கிறார்கள்.
அவர் இந்த நான்கு உதவிப்பொறியாளர்களையும் கண்காணிக்க
வேண்டும் என்ற முறையில் இந்த வசதி கொடுக்கப்பட்டுள்ளது.
ஆனால், அவர்கள் இருக்கும் ஊரிலேயே இரண்டு உதவிப்பொறி
யாளர்கள் இருக்கிறார்கள். மற்றும் உள்ள இரண்டு உதவிப்
பொறியாளர்கள் 5-10 மைலுக்குள்ளேயே, பக்கத்தில் இருக்
கிறார்கள். ஆகவே, அவர்கள் வாகனத்தில் சென்றுதான் இந்தப்
பணியைச் செய்யவேண்டும் என்று இல்லை. ஆகவே, இப்படிப்
பட்ட வீணான செலவை அரசு தடுக்க நடவடிக்கை எடுத்தால்,
அது அரசுக்கு லாபகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல் தருமபுரியில் உதவிக் கோட்டப்பொறியாளராக
இருக்கின்ற திரு. ஆதிமூலம் என்பவர் ஏறத்தாழ 10–15 ஆண்டு
காலமாக அங்கே இருந்து வருகிறார்கள். அவர் ஒரு பெரிய வியா
பாரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆகவே, அவருடைய
செல்வாக்கை வியாபார நோக்கத்தோடு அங்கே பயன்படுத்தி
வருகிறார். அவருக்கு இருக்கின்ற சுயவியாபார நோக்கத்தின்
காரணமாக, அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி விவு

சாயிகளுக்குச் சர்வீஸ் கொடுக்கின்ற இடத்திலே, எஸ்.இ. ஆபிசி
லே இடைஞ்சலாக இருந்து கொண்டு செயல்பட்டுக்கொண்டு
இருக்கிறார். ஆகவே, இதைத்தடுக்க உரிய நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

எதற்கெடுத்தாலும் மாற்றான் தாய் நோக்கம் என்று சொல்
லிக்கொண்டு இருக்கிறார்கள். ஒன்று மட்டும் குறிப்பிட்டுக் காட்ட
விரும்புகிறேன். குறிப்பாக சிகப்பு நோட்டீஸ் கிடைக்கப்பெற்
றதும் பம்ப்செட்டுகள் வாங்கி, இணைப்புகள் உடனடியாகக்
கிடைத்து விடும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு—கூடுதலாக
வட்டி கொடுத்து எல்லாம் மின் இயந்திரம் வாங்கிவைத்து மின்
இணைப்புக்கு காத்து இருக்கிறார்கள். பலபேர் இப்படி மோட்
டார் வாங்கி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும்
மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. அதற்காக எந்தவித
மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகளிடம்
சென்று கேட்டால், கேட்கின்ற நேரத்தில் அதற்குரிய மின்
இணைப்பு சாதனங்கள் இல்லை, இணைப்புக்கொடுக்க சாத
னங்கள் இல்லை என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.
நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்ற காரணத்தால் இது எல்லாம்
மாற்றான் தாய் மனப்பான்மையோடு செய்யப்படுகிறது என்று
சொல்லிவிடலாம். எல்லாப் பகுதியிலும் இந்தப் பிரச்னை இருப்
பதால், இந்தப் பிரச்னையை அமைச்சர் அவர்கள் மனதிலே
கொண்டு, நல்லமுறையில் முடித்துத் தருவார்கள் என்று கேட்டு,
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12–00)

*திரு. டி. மணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, இந்த மின்சார வாரியத்தினுடைய 1982-83ஆம் ஆண்டு
நிதிநிலை அறிக்கைமீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்
பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே நம்முடைய மின்சாரத் திட்டங்களைத் தயார்
செய்த போதே, அந்தத் திட்டங்களில் ஏற்பட்டிருக்கிற பல
கோளாறுகள் காரணமாக, இன்றைக்கு நமக்கு நீர் மின்சாரத்
தில் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பது எங்கள்
கட்சியின் கருத்து. உதாரணமாக எங்கள் கன்னியாகுமரி மாவட்
டத்தில் கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் இருக்கிறது;
அதிலே இருக்கிற பல கோளாறுகளை இங்கே எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன்.

குறிப்பாக கோதையாறு மின்சாரத் திட்டத்தில் டனலில்
இருக்கக் கூடிய ஒரு லீக்கேஜை அடைத்துவிட்டால் இன்னும் அதிக
அளவுக்கு மின்சாரம் உற்பத்திச் செய்ய முடியும். 1981-லே
அதை அடைப்பதற்காக 5 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டதாகக்
கூறப்படுகிறது. கிட்டத்தட்ட 13,000-க்கு மேற்பட்ட சிமெண்ட்
மூட்டைகள் அந்த லீக்கேஜை அடைப்பதற்கு கரைத்துவிட்டும்,





அதை அடைக்கமுடியவில்லை. அதனால் இரண்டாம் கட்ட
மான 40 மெகாவாட் நீர் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்
கான தண்ணீர் பாழாகிறது. இது அந்தத் திட்டத்தில் இருக்கிற
ஒரு முக்கியமான கோளாறு.

அடுத்தபடியாக, அங்கே பயன்படுத்தப்பட்டு வந்த இரண்டு
ட்ரான்ஸ்பார்மர்கள் எரிந்துவிட்டன. அந்த ட்ரான்ஸ்பார்
மர்கள் இருப்பது வனப் பகுதி. அங்கே ஏற்கெனவே
ரோடு போட்டிருந்தார்கள். அந்த ரோட்டை சரியாகப் பரா
மரிக்காததால் லாரி செல்ல முடியவில்லை. அப்பர்
சிஸ்டம் இருக்கின்ற அந்த வனப்பகுதியில் காட்டு மிருகங்கள் அதிக
மாக இருக்கின்றன. அதன் காரணமாக தொழிலாளர்களோ
அதிகாரிகளோ நடந்து அங்கே செல்ல முடியாது. அந்த உரிய
நேரத்தில் பார்த்து நடவடிக்கை எடுக்காமல் போனதால்
இரண்டு ட்ரான்ஸ் பார்மர்களும் எரிந்து போய்விட்டன. அது
அந்தத் திட்டத்தில் ஏற்பட்ட மற்றொரு கோளாறு.

இன்னொன்று. லோயர் கோதையாறு திட்டத்தில் மின்
சாரம் உற்பத்திச் செய்வதற்காகப் பயன்படுத்தும் பொருட்
கள் வைக்கப்பட்டிருக்கிற இடம் பாதுகாப்பாக இல்லை.
முக்கியமாக கேபிள்கள், இதரப் பொருள்களை அங்கே ஒரு
ஸ்டோர் இருந்தும் அங்கே வைக்காமல் மழையிலும் வெயிலி
லும் போட்டு, அதனால் அரசுக்கு அதிகமான இழப்பு ஏற்
பட்டிருக்கிறது. ஆக இப்படிப்பட்டத் திட்டங்களைத் தயா
ரிக்கும்போது அந்தத் திட்டங்களிலே இருக்கிற கோளாறுகள்
காரணமாக இன்றைக்கு இத்தகைய பற்றாக்குறை ஏற்பட்
டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்
கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது பல
குறைபாடுகளைச் சொன்னார்கள். ஒரு நாளைக்கு 6 மணி
நேரம் விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கப்படுவதாக
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால்
அப்படி கிடைக்கவில்லை. நேற்றைய தினம் கூட எனக்கு
கிடைத்திருக்கிற மதுரை, கோவை மாவட்டங்களில் பல்வேறு
பகுதிகளில் 6 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படவில்லை
என்று புகார் இருக்கிறது. மின்சாரத்தில் பற்றாக்குறை ஏற்
பட்டிருந்தாலும் இந்த நேரத்தில் விவசாயத்திற்குத் தேவை
யான மின்சாரத்தை வழங்க அரசாங்கம் தேவையான நட
வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது சிறு தொழில்கள். சிறு தொழில்
களுக்கு மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதால் ஆயிரக்கணக்கான
தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாநிலம் முழு
வதும் இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. சிறுதொழில்

வவாதம்.



கள் இன்றைக்கு முடமாக்கப்பட்டிருக்கின்றன.
தொழில்கள் அழிந்து போகும் நிலையில் உள்ளது அடுத்து இந்த சிறு
மின்சாரப் பற்றாக்குறை காரணமாக, அடுத்து இன்னொரு
கோளாறும் ஏற்பட்டிருக்கிறது. அரசினு டய பல்வேறு து ற
களிலிருந்து அவர்கள் கடன்பெற்றிருக்கிறார்கள். உற்பத்தி இல்லா
ததால் அந்தக் கட னக் கட்டுவதிலே அவர்கள் பெருத்த சிரமத்
திற்கு ஆளாகியிருக்கிறார்கள். மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.
ஆகவே, சிறு தொழில்க ள அழிக்காமல் பாதுகாக்க, அதற்கு
விவசாயத் தைப்போன்று முன்னுரிமை வழங்கி, சிறு தொழில்க ள
யும் அதை நம்பியிருக்கிற தொழிலாளர் குடும்பங்க ளயும் பாது
காக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன் றக்கு நம்மு டய நாட்டிலே சிமின்ட்
தொழிற் சா லகள் பூராவும் மூடிக்கிடக்கின்றன. காரணம்
கரண்டு தட்டுப்பாடு. அதனால் ஒரு பக்கத்திலே ஆயிரக்கணக்
கான தொழிலாளர்கள் வே லயில்லாமல் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். இன்னொரு பக்கத்திலே அரசாங்கத்தின் திட்டப்
பணிகள் சிமின்ட் கி டக்காமல் பாதியிலே விடப்பட்டிருக்கின்
றன; அரைகுறையாக கிடக்கின்றன.

குறிப்பாக கல்வித் துறையிலே இருக்கிற பள்ளிக ள எடுத்
துக்கொண்டால் கூட அதன் கட்டிட வேலை சிமின்ட் இல்லாமல்
அரைகுறையாக விடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை மாநிலம்
பூராவும் இருக்கிறது. இந்த நி லமைய நீக்க வேண்டும். அதற்கு
சிமென்ட் தொழிற்சா லகளுக்கு எந்தஅளவுக்கு மின்சாரம் அதிக
மாக வழங்க முடியுமோ அந்த அளவுக்கு வழங்கி, தொழிலாளர்
களைப் பாதுகாத்து, திட்டப்பணிகளை வி ரவிலே நி றவேற்ற
உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது அரிசி ஆலைகள். ஏற்கெனவே
உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. வறட்சி ஒரு பக்கம் இருக்
கிறது. எங்கள் மாவட்டத்திற்கு அடுத்த மாவட்டத்திலிருந்து
அரிசி வரக்கூடிய சாத்தியக்கூறு எதுவும் இல்லை. அடுத்த
மாநிலம் அரிசி பற்றாக்குறை உள்ள மாநிலம். அதன் காரணத்
தால் எல்லை வழியாக தினந்தோறும் நூற்றுக்கணக்கான லாரி
களில் அரிசி கடத்தும் நிலை அங்கே இருந்துகொண்டிருக்கிறது.
இந்த நிலையில் அரிசி ஆலைகள் கூட மின்சாரத் தட்டுப்பாட்டி
னால் சரியாக இயங்க முடியவில்லை. அதன் காரணமாகவும்
அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரிசி
ஆலைகளுக்கும் மின்சாரம் வழங்குவதில் முன்னுரி ம கொடுத்து,
இந்த ஆலைகள் ஒழுங்காக இயங்க ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த அறிக்கையிலே நம்மு டய மின்சாரத் திட்டத்
தின் விநியோகம் பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்
கிறார்கள்.



நம்மு டய இந்த அரசு ஒரு விளக்குத் திட்டம் என்கிற ஒரு
திட்டத் தக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே ஆதிவாசி
பழங்குடியினருக்கும், ஆதிவாசிகளுக்கும் முன் உரிமை கொடுத்து,
அவர்களு டய வீடுகளுக்கு ஒரு விளக்கு திட்டம் அ மத்து, அது
இந்த மாநிலம் பூராவும் நிறைவேற்றப்பட்டிருக்
கிறது என்று சொன்னாலும்கூட, குறிப்பாக கன்னியாகுமரி மா
வட்டத்திலேயிருக்கிற ஆதிவாசி பழங்குடியினருக்கு, அவர்கள்
வசிக்கிற கிராமங்களுக்கு இதுவ ரயில் ஒருவிளக்குத் திட்டத்தின்
படி எந்த ஒரு வீட்டிற்கும் மின் இ ணப்புத் தரவில்லை என்கிற
ஒரு பிரச் ன ய நான் மிக வருத்தத்தோடு கூறிக்கொள்ளக் கட
மைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, குறிப்பாக மாங்கோடு கிராமத்திலே குல
வி ள என்ற பகுதியிலே 100-க்கும் அதிகமான ஆதிவாசி மக்கள்
வசிக்கும் வீடுகளுக்கு இந்த ஒருவிளக்குத் திட்டம் தேவைப்பட்டு,
அவர்கள் பல்வேறு மனுக்க ள அனுப்பியும் கூட, அவர்களுக்கு
மின் இ ணப்புக் கொடுப்பது மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே,
அ தயும் கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்த ஒருவிளக்குத்
திட்டத் த கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆதிவாசி பழங்
குடியினருக்கும், ஆதிவாசிகளுக்கும் கொடுக்கக்கூடிய ஒரு நிலை
ம ய உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து ரோடுகளிலே போடப்படுகிற விளக்குக ள எடுத்துக்
கொண்டால், அ வகள் குண்டு விளக்குகள் ஆனாலும் சரி,
குழாய் விளக்குகள் ஆனாலும் சரி, போடப்பட்ட 10,15 நாட்
களுக்குத்தான் எரிகின்றன. பிறகு எரிவதேயில்லை. அதற்குக்
காரணம் அ வக ள நாம் தனியார் நிறுவனங்களிடமிருந்துதான்
வாங்குகிறோம். எனவே இப்படிப்பட்ட பிரச் னகளைப்
போக்க, நமது மின்சார வாரியமே நல்ல தரமான விளக்குகளை
உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நிலைமைய உருவாக்கினால்,
இத்த கய நி ல மக ளத் தவிர்க்கமுடியும் என்று நான் கருது
கிறேன்.

இது மட்டும் அல்ல, இப்படி இந்த விளக்குகள் ஏன் எரிவ
தில்லை என்று கேட்டால், அதற்குத் தேவையான உதிரிப்
பொருட்கள் கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் பதில் சொல்லு
கிறார்கள். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த
அபிவிருத்தி மன்ற கூட்டத்திலே இந்த பிரச்சினை எழுந்தக்
காலத்தில் இப்படி போதுமான உதிரிப் பொருட்கள் கிடைக்க
வில் ல என்கிற பதி ல அதிகாரிகள் சொன்னார்கள். அது மட்டும்
அல்ல, கன்னியாகுமரி மாவட்டத்திலே இப்படி இந்த விளக்கு
க ளப் போடவேண்டும் என்று கேட்டு, முன்னாலேயிருந்து நக
ரப் பஞ்சாயத்துக்களும், கிராமப்பஞ்சாயத்துக்களும் மனு
கொடுத்து கோரியிருப்பதுடன், போதுமான பணத்தைக் கட்டி,
6, 7 ஆண்டுகள் ஆனபிறகும் கூட மின் இணைப்புக் கிடைக்க
முடியாத நிலை இருக்கிறது.

கேட்டால், முதலிலே மின்சார கம்பங்கள் இல்லை என்று
சொன்னார்கள், இரண்டாவது முறை கேட்டபோது இணைப்புகள்
இல்லை என்று சொன்னார்கள், மூன்றாவது முறை கேட்டால்
தேவையான உதிரிப் பொருட்கள் இல்லை என்கிறார்கள். இப்
படிப்பட்ட காரணங்களாலே இந்தப்பணிகள் காலதாமதப்படுத்
தப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, தேவை
யான பொருட்கள் அனைத்தும், உதிரிப் பொருட்களானாலும்
சரி, குண்டு விளக்குகள், குழல் விளக்குகளானாலும் சரி, தேவை
யானவற்றை உற்பத்தி செய்கிற ஒரு பேக்டரியை நமது மின்
சார வாரியமே ஏற்று நடத்த முன் வருமேயானால், இந்தப்
பற்றாக்குறை ஒழிந்து, கிராமப்பகுதி மக்களுக்கு மின்சாரம் விரை
விற்கு கிடைப்பதற்கு வழி செய்ய முடியும். ஆகவே அதைப்பற்றி
அரசு யோசித்து ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்
டுக் கொள்கிறேன்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்னொரு சாபக்
கேடு இருக்கிறது. கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரையில்
தமிழகத்தினுடைய எல்லையில் உள்ள இந்தக் கடலோரப் பகுதி
கள் அனைத்திலும் எரிகின்ற மின் விளக்குகள் எல்லாம், மண்
ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தைக் கூட தருவது கிடை
யாது. மின்சாரம் இருக்கிறது, விளக்கும் எரிகிறது. ஆனால்
வெளிச்சம் சரியான அளவு இல்லாத ஒரு நிலைமை நீண்டகால
மாக அந்தப் பகுதிகளில் இருந்து கொண்டிருக்கிறது. அதிகாரி
களைக் கேட்டால் நமக்குத் தெரிந்த பதிலைத்தான் சொல்
கிறார்கள்.

அங்கு போடப்பட்டிருக்கும் கம்பிகளில் உப்புக் காற்று படு
வதினாலேயும், நீண்டகாலத்திற்கு முன்னாலே போடப்பட்ட
கம்பிகள் என்ற காரணத்தினாலேயும், அந்த மின்சார விளக்குகள்
எரிவதிலே இடையூறு இருக்கிறது என்று கூறுகிறார்கள். அவை
களை மாற்றி, அந்தப் பகுதிக்கு முறையான மின்சாரம் கிடைக்க
வழி வகைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
ஏனெனில் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னொரு
பிரச்னையும் இருக்கிறது. ஏற்கெனவே அந்த மாவட்டத்தில்
எப்போது மின்சாரம் வரும், எப்போது போகும் என்று தெரியாத
நிலை மக்களுக்கும் இருக்கிறது. அதிகாரிகளிடம் கேட்டு தெளிவு
பெறலாம் என்றால் அவர்களுக்கும் தெரியாத நிலை இருக்கிறது.
டி.ஈ., எஸ்.ஈ., லெவலிலேயே உள்ள அதிகாரிகள் எங்களுக்கே
அது தெரியாது என்று சொல்கிறார்கள். அங்கே
மாலையில் 6 மணியிலிருந்து 10 மணி வரையில்
3 தடவை போகும் 3 தடவை வரும். ஆக, நாங்கள் கேட்டுக்
கொள்வது என்னவென்றால், மாலையில் 6 மணியிலிருந்து 11 மணி
வரையில், பள்ளிக்கூடத்திற்கு போகும் பிள்ளைகள் தங்களுடைய
பாடங்களைப் படித்து, கல்வியறிவை வளர்த்துக் கொள்வதற்காக



அந்த நேரத்தில் தவறாமல் மின்சாரம் கொடுக்கக் கூடிய ஒரு
நிலையை ஏற்படுத்தினால் நல்லது. அது எங்களுடைய மாவட்
டத்திற்கு என்றல்ல, நமது மாநிலம் முழுவதும் அந்த தேவை
இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே அதற்கு வழி வகை
செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே நான் கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் குடி
யிருக்கும் பகுதிகளில் விளக்குகள் எரிவதில்லை என்று கூறினேன்.
அப்படி ஒரு சாபக்கேடு அவர்களுக்கு அங்கே இருக்கிறது என்று
சொன்னேன். ஆகவே அந்தப் பகுதிகளில் உள்ள அவல நிலை
யைப் போக்கி, அவர்களுக்கு மின்சார விளக்குகளும், மின்
இணைப்புகளும் கிடைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை
யிலே (மணியடிக்கப் பெற்றது) நாங்கள் சொன்ன அத்தனை
யோசனைகளையும் ஏற்றுப் பரிசீலிப்பதோடு, கூறப்பட்ட குறை
பாடுகளையும் நீக்குவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்
டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்தில் கடுமையான
மின் வெட்டு இருந்த போது கடுமையான குற்றச்சாட்டுக்கள்
வந்து சேரும் என்று முன்கூட்டியே அறிந்திருந்தும் மாண்புமிகு
மின் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையில்
இந்த மானியத்தை 3 நாள் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டது
மடியில் கனம் இல்லை, வழியில் பயம் இல்லை என்ற நிலைமையை
எடுத்துக் காட்டுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அவ்வாறு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டதற்காக மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய பாராட்டினைத்
தெரிவித்து என்னுடைய உரையினைத் துவங்குகிறேன். இன்றைய
தினம் கிடைத்திருக்கின்ற புள்ளி விவரத்தின்படி 1981–82-லே
நீர் மின் திட்டத்தின் மூலம் நமக்குக் கிடைத்த அளவு 4,936
மில்லியன் யூனிட்டுகள். ஆனால் இந்த ஆண்டு 1982–83-ல்
கிடைத்திருப்பது 2,649 மில்லியன் யூனிட்டுகள் என்று கொடுக்கப்
பட்டிருக்கின்றது. எனவே 46.3 சதவீதம் சென்ற ஆண்டைவிட
இந்த ஆண்டு நீர் மின் திட்டங்களின் மின் உற்பத்தி குறைந்
திருக்கின்றது. எனவே ஏறக்குறைய 50 சதவீதம் ஒட்டு
மொத்தமாக மின் வெட்டு வருவதற்கு இது ஒரு முக்கிய காரணம்.
மேலும் இதற்கு நம்முடைய அரசு காரணம் இல்லை என்பதை
அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் ஒத்துக்கொள்ள வேண்டும்.
ஏனென்றால் மழை தவறியதால் தண்ணீர் கிடைக்கவில்லை.
கர்நாடக அரசு தண்ணீர் கொடுக்காத காரணத்தாலும் நமக்கு
தண்ணீர் கிடைக்கவில்லை என்பதை நாம் ஒப்புக் கொண்டாக
வேண்டும். ஆனால் தற்போது மிக அதிக அளவில் மின் வெட்டு

அதிகரித்திருக்கிறது என்று குற்றச்சாட்டு சொல்கின்ற வகையிலே
எதிர்க் கட்சியினர் கூறி இருக்கிறார்கள். அதற்கு நான் ஒரு
புள்ளி விவரத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டத்தின் மூலமும், எண்ணூர்
அனல் மின் திட்டத்தின் மூலமும், தூத்துக்குடி அனல் மின்
திட்டத்தின் மூலமும் கடந்த ஆண்டு 1981—82-லே உற்பத்தி
செய்ததைவிட 1982—83-லே 37 சதவீதம் அதிக அளவில் மின்
உற்பத்தி செய்திருக்கிறோம். ஆகவே தான் அரசும், அதிகாரி
களும் ஒத்துழைத்து இன்றைய தினம் தீவிரமாகச் செயல்பட்ட
காரணத்தால் நாம் எதிர்பார்த்த அளவுக்கு மின்சாரக் கட்டுப்
பாடு வராமல் இப்போது தளர்த்திக் கொண்டு வருகிறோம்
என்பதையும் நாம் உணர்வது நமது கடமை என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

இந்த நிலைமையில் நமது அரசு கடந்த காலங்களில் தூர
திருஷ்ட கண்ணோட்டத்தோடு எதிர் காலத்திலே வரும் தட்டுப்
பாட்டினை எதிர் நோக்கி திட்டங்கள் தீட்டவில்லை என்ற
குற்றச் சாட்டும் இங்கே சொல்லப்பட்டது. ஆனால் நமது அரசு
சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்களின்படி வட
சென்னை அனல் மின் நிலையத்திற்கும், தூத்துக்குடி அனல்
மின் நிலை விரிவாக்கத்திற்கும், 6 எரிவாயு மின் நிலையங்
களுக்கும் மத்திய அரசிடத்தில் அனுமதி கேட்டு விண்ணப்பித்தும்
இதுவரையில் அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு இருக்
கின்றன. இதற்குப் பொறுப்பான மத்திய அரசினை ஆளுகின்ற
கட்சியைச் சேர்ந்த இங்கே உள்ள உறுப்பினர்கள் கூட இதை
உணராத வகையில் வெறும் குற்றச்சாட்டுகளை மட்டும் சொல்
லிக் கொண்டிருப்பது விந்தையாக இருக்கின்றது. இந்தத்
திட்டங்களுக்கு உடனடியாக மத்திய அரசு நமது மாநில அரசுக்கு
அனுமதி அளிக்க வேண்டியது அவசியம் என்பதை அத்தனை
பேரும் மத்திய அரசுக்கு உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.
எரி வாயு மின் நிலையங்களை ஏற்படுத்த எரி வாயு எண்ணெய்
வாங்குவதற்கு அன்னியச் செலாவணி தேவை என்ற காரணத்
தால் அந்தத் திட்டங்கள் இன்று தமிழக அரசுக்கு நிராகரிக்கப்
பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் மராட்டிய
மாநிலத்திலே எரி வாயு மின் நிலையங்கள் அமைத்துக் கொள்
வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரம் கொடுக்
கப்பட்டிருக்கின்றது. அப்படியானால் காங்கிரஸ் கட்சி ஆளும்
மாநிலத்திற்கு மட்டும் அன்னியச் செலாவணி கொடுத்தாவது
திட்டங்களைத் தருவோம். ஆனால் மாநிலக் கட்சி ஆளும்
மாநிலத்தைப் புறக்கணிப்போம் என்ற கொள்கையை
மத்திய அரசு கொண்டிருக்கின்றது என்பதை காங்கிரஸ் நண்பர்கள்
உணருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்தத் தருணத்திலே இன்னொன்றினை நான் சொல்ல விரும்
கிறேன். மாருதி கார் திட்டத்திற்கு அனைத்து உதிரிப் பொருட்
களையும் வெளி நாட்டிலே இருந்து இறக்குமதி செய்யப்படு
கின்றது. ஒரு தனியார் நிறுவனத்திற்கு, அப்படிப்பட்ட அந்த
உற்பத்திச்சாலைக்கு மத்திய அரசு அன்னியச் செலாவணியினைச்
செலவிடலாம். ஆனால் ஒரு மாநில அரசு மின்சாரத் தட்டுப்
பாட்டினைப் போக்க ஒரு திட்டத்தைக் கேட்டால் அதற்கு
வேண்டிய அனுமதி தர மாட்டார்களா ?

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளும் கட்சி உறுப்
பினர் அவர்கள் மின்சார நிதி நிலை அறிக்கையின் மீது விவாதிப்
பதை விட்டுவிட்டு வடக்கே வெகு தூரம் போய் மாருதி கார்
பற்றிச் சொல்கிறார்கள். மாருதி கார் நிறுவனம் யாருக்குச்
சொந்தமானது என்பதைச் சொன்னால் உதவிகரமாக இருக்கும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, சிலவற்றைச்
சுட்டிக் காட்டும் போது ஒப்பீட்டுக்கு கூற வேண்டியது பொறுப்பு
ஆகிவிடுகிறது. ஆகவே அதை சுட்டிக் காட்டுகிறேன். இந்த
அளவுக்கு கடன் தட்டுப்பாடு இருந்த போதிலும் பங்கீடு முறை
யில் சிறிதும் குறைவு இல்லாத வகையில் தமிழக அரசு இந்த
ஆண்டு மின் உற்பத்தி, குறைந்த அளவு உற்பத்தியானாலும்
மின் உற்பத்தியை சகலவிதமான தொழிற்சாலைகளுக்கும், குறிப்
பாக விவசாயிகளுக்கும் பங்கீடு முறையில் மிகவும் நல்ல முறையில்
செய்து கொடுத்திருக்கிறது. அதை பாராட்டக் கடமைப்பட்டு
இருக்கிறோம். அந்த வகையில் விவசாயத்திற்கு பயன்படும்
வகையில் விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவதில்
முன்னுரிமை அளித்ததற்கு விவசாயிகளின் சார்பில் மாண்புமிகு
மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும்
நான் என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே தருணத்தில் இன்றைய தினம் தமிழகத்தில் ஒரு
கருத்து நிலவுகிறது. மாநில கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு
சில இடர்பாடுகளை உண்டுபண்ணும் வகையில் மத்தியில் ஆளுபவ
ரோடு தொடர்பு கொண்டு இருப்பவர்கள், கட்சியைச் சேர்ந்த
வர்கள் சிலவற்றை எடுத்துச் சொல்லி இப்படிப்பட்ட இக்கட்டான
சூழ்நிலை வரும்போது வெளி மாநிலத்திலிருந்து தண்ணீர்
வருவதை தடுப்பதற்கும் மின்சாரத்திற்கு தேவையான நிலக்கரி
தரமான நிலக்கரி வேண்டும் என்று பலமுறை வற்புறுத்தியும்
இதனை தடுத்து நிறுத்தும் வகையில் செயல்படுவதாக மக்கள்
மத்தியில் பேசப்படுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
அரசு மக்கள் நன்மைக்காக செயல்பட வேண்டிய அரசு
அவர்களுடைய நடவடிக்கைகள் பல கோணங்களில்
தடுத்து நிறுத்தப்படுகிறது. அது யாரால், எங்கே
தடுத்து நிறுத்தப்படுகிறது என்பதை தெளிவுபட
உணர்த்துவது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கடமை ஆகும்.

சொல்லாமல் இருக்க முடியாது. ஜனவரி 1-ஆம் தேதி முதல் மின்வெட்டைப் பூரணமாக அறிவித்த நேரத்தில் அதற்குப் பிறகு பல பொருளாதார நிபுணர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே மின்வெட்டின் காரணமாக தொழில்களில் ஏறக் குறைய 700 கோடி அளவுக்கு புரடக்ஷன் லாஸ் வரும் என்று கூறியிருக்கிறார்கள், நிபுணர்கள். அதை எப்படி ஈடுகட்டப் போகிறார்கள்? தொழில்களை நடத்தக் கூடியவர்கள் பேங்கிற்கு எப்படிக் கட்டமுடியும்? பாங்கிலே வட்டியைத் தள்ளுவார்களா? அவர்கள் டெர்ம் லோனை வாங்காமல் விடுவார்களா?

இப்போது உங்களை நம்பித் தொழில்களை ஆரம்பித்தால் 700 கோடி ரூபாய் அளவுக்கு புரடக்ஷன் லாஸ் வரக்கூடிய மின் சார வாரியத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் எப்படி தொழில்கள் நடத்த மீண்டும் இங்கே வருவார்கள் என்று கேட்க விரும்புகிறேன். கேரளத்திலே இந்த ஆண்டு மின்சாரம் குறைந் திருக்கிறது. இருந்தாலும் ஸ்ட்ரைக் அடிக்கடி அங்கே வருகின்றது என்ற காரணத்தினால் தொழில் முனைவர்கள் ஆரம்பிக்க மறுக் கிறார்கள். தமிழ்நாடு ஓரளவுக்கு கட்டுப்பாட்டில் இருந்தாலும், மின்சாரம் கிடைக்காத காரணத்தினால் டாரிப் அதிக மாக்கப் படுவதினால் வேறு மாநிலங்களுக்கு அவர்கள் செல்லக் கூடிய காரணத்தினால் நம்முடைய மாநிலத்தின் பொருளாதாரம் சீர்குலையக்கூடிய நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஷார்ட் பால் இன் ரெவின்யூ என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜனவரி 1-ஆம் தேதி முதல் மின்சார வெட்டை அமல் நடத்தியிருக்கிறார் கள். அதனால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? நான் சொல்லவில்லை, முன்னாலே ஆளுங்கட்சி சார்பாகப் பேசியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மின் வெட்டை இன்னும் ஒரு மாதத்திற்கு முன்னாலே அமல்படுத்தியிருந்தால் விவசாயத்தைக் காப்பாற்றியிருக்கலாம் என்று. விவசாயிகளின் கரண்ட் தேவை என்ன என்பதை ஆராய்ந்து அதற்கான தேவையான கரண்ட் இருக்கிறதா என்பதை சரியாக அஸஸ் செய்யாத காரணத்தினால் தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்னதை ஒட்டியே நான் இங்கே சொல்ல விரும்பு கிறேன். 1–1–1983-ல் அறிவித்தீர்களே, அந்த அறிவிப்பை ஏன் இன்னும் ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு முன்னதாக அறிவித் திருக்க கூடாது? மின்சாரம் அதிகம் கிடைக்கும் என்று எதிர் பார்த்தீர்களா? எதற்கெடுத்தாலும் லோட் ஷெட்டிங், லோட் ஷெட்டிங் என்று சொல்லி, சிறு தொழில் வைத்திருப்பவனும் தொழிலை நடத்த முடியவில்லை. பெரிய தொழிலை வைத் திருப்பவனும் புரோடக்ஷனை கன்டினியுவசாக செய்ய முடிய வில்லை. மின்சார பம்ப் செட்டுகளை நம்பியிருக்கிற ஏறத்தாழ 10 லட்சம் விவசாயிகள் இரவு-பகல் என்று பார்க்காமல் மோட் டாருக்கு பக்கத்திலேயே நின்றுகொண்டு எப்போது வருமோ என்றும், ஒரு பேசிலே வருமா, இரண்டு பேசிலே வருமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்களே, அதெல்லாம் உங்களுக்கு தெரி

வில்லையா? என்ன காரணம்? மின் வாரியம் இந்த பொர்லசை செய்வதில் தாமதம் செய்ததா? அல்லது அரசு அதிலே முடிவு எடுப்பதிலே காலதாமதம் ஆயிற்றா? என்பதை இந்த மன்றத் திற்கு தெரிவிப்பதற்கு அமைச்சர் அவர்கள் கடமைப் பட்டிருக் கிறார்கள். இரண்டு மாதத்திற்கு முன்னதாகவே அறிவித்திருந் தால் விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்க மாட்டார்கள்.

சென்ற மாதத்தில் கடலூரில் நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது 'டிமாண்ட் பார் அக்ரிகல்ச்சர் லோட் இஸ் கமிங் டவுன்' என்று சொன்னார்கள். அது எதைக் காட்டுகிறது? அது மயானஅமைதியைத் தான் காட்டுகிறது. காரணம் மின் சாரத்தை நம்பி பம்ப் செட்டுகளை வைத்திருப்பவர்கள், வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், மற்ற மாவட்டங்களிலும் கிணற்றிலிருந்து சுரக்கக்கூடிய தண்ணீரை வைத்து விவசாயம் செய்கிறார்கள். அந்த கிணற்றிலிருந்து இரண்டு மணி நேரத்திற்கு தான் தண்ணீர் வரும். அதற்கு பிறகு தண்ணீர் வராது. இப்போது நீங்கள் ஒருமைப்படுத்தி ஐந்து மணி நேரம், ஆறு மணி நேரம் என்று கொடுத்திருக்கிறீர்கள், பாராட்டுகிறேன்; ஐந்து மணி நேரத்திற்கு தண்ணீரை கொண்டு போய் நீங்கள் அந்த கிணற்றிலே விட்டுவிடுவீர்களானால் அது பாராட்டப்பட வேண்டியது. தண்ணீரே இல்லை. கொள்வார் இல்லாமையினால் கொடுப்பார் இல்லை: தண்ணீர் இல்லா மையினால் இறைப்பார் இல்லை: இறைக்காத காரணத்தால் டிமாண்ட் குறைந்து வருகிறதே தவிர, விவசாயி மின்சாரத்தை வேண்டாம் என்று சொல்லிவிட வில்லை. இன்னும் சில மாதங் கள் போனால் மின்சாரம் விவசாயிக்கு தேவையில்லாமல் போய் விடும். நீர் நிலையங்கள் காய்ந்து விட்டது. எங்கள் தென் னாற்காடு மாவட்டத்தில் போர் வெல்கள் எல்லாம் அடிமட்டத் திற்கு போய்க் கொண்டே இருக்கின்றன. சென்டரிபியூகல் பம்ப் களை வைத்து எங்களால் லிப்ட் செய்ய முடியவில்லை. கோயம் புத்தூர், வடாற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் இருக்கிற கிணறுகள் எல்லாம் காய்ந்து விட்டது. அப்படி காய்ந்துவிட்ட காரணத்தால் கிட்டத்தட்ட 10 லட்சம் பம்ப் செட்டுகள் ஓடு கின்றதென்றால் அதில் இரண்டு, மூன்று லட்சம் பம்ப் செட்டுகள் ஓட்ட முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாக நீங்கள் சமாளிக்கலாம். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னதாக இப்போது செய்திருக்கிற அறிவிப்பை செய்திருந்தால் விவசாயிகளுக்கு உதவியவர்கள் ஆவீர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்ற கூட்டத்திலேயே ஒன்றைச் சொன்னேன். மின்சாரத் தை தொழிலுக்கு கொடுக்கிற சமயத்தில் நல்ல தொழிலாக பார்த்துக் கொடுங்கள்; யார் கேட்டாலும் கொடுத்து விடுவது என்ற நிலை வேண்டாம்; பவர் ஓரியண்டட் இன்டஸ்ட்ரீஸ்களை அனுமதிக்காதீர்கள் என்று சொன்னேன். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? மின்சாரத்தையே ரா-மெட்டீரியலாக

அந்த வகையில் நான் பணிவோடு கேட்டுக்கொள்வது, இந்த
அமைச்சரவை மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்தியில்
ஆள்பவர்களிடம் இங்கிருந்து தொடர்பு கொண்டு இந்த மாநிலத்
திற்கு வர இருக்கின்ற நன்மைகளை தடுக்கும் வேலையில் ஈடுபட்டி
ருப்பவர்கள் யார், யார், அவர்களுடைய நடவடிக்கை என்ன என்ன
என்பதை ரகசியமாக புலானய்வுத் துறை மூலமாக புலனாய்வு
செய்து இந்த தமிழக மக்களுக்கு தெளிவாக காட்ட வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று கேட்டால் கடந்த
சில மாதங்களாகவே மக்கள் மத்தியில் மிகத் தெளிவாக, பரவ
லாக பேசப்படுகிறது, வேண்டும் என்ற திட்டத்தினுடனே அதா
வது * * என்று சொல்வார்கள். அதைப்
போன்று மத்தியில் ஆளும் கட்சியை எதிர்த்து மாநில மக்கள்
உணர்வுகள் இருக்குமானால் அவர்கள் நன்மை பெற வாய்ப்பு
இருக்காது என்ற கருத்தை * * என்ற அடிப்படையில்
உணர்வுறுத்த வேண்டும் என்று இங்கே உள்ள சிலர் * *
மத்தியிலுள்ள ஆளும் அமைச்சர்களோடு தொடர்பு கொண்டு
தடுத்து நிறுத்துவதாக தெரிகிறது. அதை மக்களுக்கு உணர்த்த
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.
வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஐ ஆம் ஆன் எ பாயின்டு
ஆப் ஆர்டர். தமிழக அரசுக்கு மத்திய அரசாங்கம் நன்மை
செய்கின்ற நேரத்திலே இங்கே இருக்கின்ற * * ஏதோ
தடுத்து நிறுத்துவது போல் அல்லது * * செய்வது
போல் பிரச்சாரம் செய்து ஒரு தவறான கருத்தினை உருவாக்கு
கிற—இந்த நிதிநிலை அறிக்கையில் பேசட்டும். கவலை இல்லை.
வெளியிலே பேசிக்கொள்கிறார்கள், அப்படி பேசிக்கொள்கிறார்
கள், இப்படிப் பேசிக்கொள்கிறார்கள் என்று ஆரம்பித்தால்
நாங்கள் சொல்வதையும் வாங்கிக்கொள்ள தயாராக இருக்க
வேண்டும், ஒன்று, இரண்டு, யார் எந்த * * தடுத்து
நிறுத்தினார் என்று சொல்ல வேண்டும் அல்லது திரும்பப்பெற
வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. க. பாலசுப்பிர
மணியன்) : * * என்ற வார்த்தைகளை நீக்கிவிடும்படி
ஆணையிடுகிறேன்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப்
கிளாரிபிகேஷன், மத்திய அரசில் உள்ள இந்திரா காங்கிரஸ்
மாநில அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளை தடுத்துநிறுத்துகிறது
என்று சொன்னவுடன் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்
கோபப்படுகிறார்கள். மாநில அரசு எடுக்கிற நடவடிக்கை
களுக்கு மாநில இந்திரா காங்கிரஸ்காரர்கள், தமிழ்நாடு இந்திரா
காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன ஆதரவு அளித்து
டெல்லியிடம் பேசினார்கள் ?

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



திரு. என். எஸ். வி. சித்தன் ; மாண்புமிகு பேரவையின்
மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற எங்கள்
பேரியக்கத்தைப் பொறுத்த வரையில் அன்றும், இன்றும், என்றும்
தெளிவாக இருக்கிறோம். மாநிலத்திற்கு சேர வேண்டியது
மத்திய அரசிடமிருந்து வரவேண்டும் என்ற நியாயமான கோரிக்
கைகளுக்கு நாங்கள் என்றைக்கும் குரல் கொடுக்கத் தயாராக
இருக்கிறோம். நீங்களும் குரல் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 12—20)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, மின்சார
வாரியத்தின் ஆண்டறிக்கை சம்பந்தமாக கடந்த 3 நாட்களாக
நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பாக இறுதியாக நான் பேச விரும்புகிறேன்.
மின்சார உற்பத்தி, விநியோகம் ஆகியவைகளை தமிழ்நாட்டில்
ஆட்சி நடத்தக்கூடிய அரசாங்கம் சரியாகச் செய்திருக்கிறார்களா
என்று பார்த்தோமானால் அதனால் பாதிக்கப்படக் கூடியவர்
களை அணுகிக் கேட்போமானால் தொழிலை நடத்தக்
கூடியவர்களாக இருந்தாலும்சரி, விவசாயத்திலே ஈடுபட்டிருக்
கின்ற விவசாயிகளாக இருந்தாலும் சரி, இந்த நிர்வாகம், பை
அன்ட் லார்ஜ், சற்றேறக்குறைய தவறான முறையிலே சென்று
கொண்டிருக்கிறது, சென்றது என்கின்ற குற்றச்சாட்டை நான்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல விரும்பு
கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில்களை ஆரம்பிப்
பதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை
என்று நேற்றைய தினம் மத்திய அமைச்சர் மாண்புமிகு வெங்கட்
ராமன் அவர்கள் பேசிய கூட்டத்திலே பேசியதாக பத்திரிகையிலே
வந்திருக்கிறது. தொழில்கள் தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கப்படாத
நிலை ஒரு சூழ் நிலையின் காரணமாக தமிழ்நாடு பின்தங்கிய
நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்குப்
பதிலளிக்கிற வகையில் பேசினார்கள். தமிழ் நாட்டிலே தொழில்
நடத்தக் கூடியவர்கள் அதற்கு முன்வருவார்களா, அதற்கான
வாய்ப்புகள் இருக்கின்றதா என்றால் நிச்சயமாகச் சொல்ல முடி
யும். இல்லை, அவர்கள் வேறு மாநிலத்திற்குச் செல்லக் கூடிய
நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது, புதிதாகத் தொழில் முனைவர்
கள் இங்கே வருவதற்கு நிலைமை கடினமாக இருக்கும் என்ற
நிலை தான் இருக்கிறது. ஆண்டுதோறும் அளவிட முடியாத
அளவுக்குத் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டை அமல் நடத்து
கின்ற காரணத்தினால் அதற்கு இருக்கின்ற டாரிஃபை தொடர்ந்து
அதிகப்படுத்துகின்ற காரணத்தினால் ஆந்திரம் போன்ற மாநிலங்
களுக்கு தமிழ் நாட்டிலே இருக்கின்ற முதலாளிகள் சொல்லக்
கூடிய நிலைதான் இருக்கிறது என்ற குற்றச் சாட்டையும் அதற்கு
இந்த மாநில அரசுதான் பொறுப்பேற்க வேண்டும், இவர்களுடைய
மிஸ்மேனேஜ்மெண்ட் தான் அதற்குக் காரணம் என்பதை

சரவர்கள் இப்பொழுது எடுத்துக் காட்டியதைப்போல, அவர்கள்
கேட்டார்கள், உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரம் பூராவும்
நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்களா என்று கேட்ட நேரத்தில்,
தமிழ்நாட்டு அரசாங்கம், அன்று ஆட்சியிலிருந்த எங்கள்
அரசாங்கம், ஒரு கமிட்மென்டைக் கொடுத்தது. முழு மின்
சாரத்தையும் நாங்களே எடுத்துக் கொள்கிறோம் என்று அன்றைய
தினம் கமிட்மெண்ட் கொடுத்த காரணத்தினால்தான் இன்றைய
தினம் வாதாடுகின்ற உரிமைக்கு இடம் இருக்கிறது. முழு
உற்பத்தியையும் நாங்களே எடுத்துக்கொள்கிறோம் என்று
சொன்னதற்குப் பிறகுதான் இரண்டாவது மைன்கட்டையே
அன்றையதினம் தொடங்கினார்கள். இன்னும் சில நினங்களிலே
உற்பத்தி செய்ய இருக்கிறார்கள். அப்பொழுது, உற்பத்தி
செய்கிற முழு கரண்டும் நமக்கே வர வேண்டுமென்று உங்களோடு
சேர்ந்து கேட்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் கொஞ்சங்கூட
கூட தயங்காது என்பதை மீண்டும் நான் இங்கே சொல்ல
விரும்புகிறேன். அதே போலத்தான் மத்திய அரசாங்கத்திடம்
பல திட்டங்களைச் சமர்ப்பித்திருக்கிறோம், அவைகள் எல்லாம்
வர வேண்டுமென்று கேட்கிறீர்கள். அவைகள் எல்லாம் வரு
வதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தடங்கலாக இருக்காது.
எங்களுடைய சக்தி பூராவையும் ஒன்றாகச் சேர்த்து, அந்தத்
திட்டங்கள் எல்லாம் வருவதற்கு நாங்கள் பாடுபடுவோம்.

அதே போல, கேஸ் டர்பைன்ஸ் வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறார்கள். பம்பாயிலே கொடுத்து விட்டார்கள், நமக்குக்
கொடுக்க வில்லையென்றீர்கள். நம்முடைய அமைச்சரவர்கள்
டெல்லிக்குச் சென்று அது சம்பந்தமாக பேசுகின்ற சமயத்திலே
அவைகளை எடுத்து வாதாடுவதன் மூலமாகத்தான் அவைகள்
கிடைக்கும். அதற்கான ஒத்துழைப்பை இந்த மன்றத்திலே
இருக்கிற எல்லோரும் கொடுப்பார்கள் என்ற உறுதிமொழியினை
நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மின் உற்பத்தியில், மழை பெய்யவில்லையென்றால்
அதற்கு நாங்களா பொறுப்பு என்று சொல்லலாம். அது உங்கள்
பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால், அதே நேரத்
திலே, தெர்மல் யூனிட் பெயிலியூர் ஆகிறது என்றால்.

The is an error of h man being

அதை இயக்குகின்றவர்கள், அதற்காக ஏற்பாடு செய்யக்கூடிய
வர்கள், அதை நடத்தக் கூடியவர்கள் இதற்கெல்லாம் மூல
காரணம் மனிதர்களாக இருக்கிற காரணத்தால், நீங்கள்
பொறுப்பிலே இருக்கிற காரணத்தால், உங்களைத்தான்
நாங்கள் கேட்கமுடியும். வேறு யாரையும் கேட்க முடியாது.
இன்றையதினம் எண்ணூரை எடுத்துக் கொண்டாலும் சரி, அதே
போல், மெட்ராஸ் தெர்மல் பிளான்ட்டை எடுத்தாலும் சரி,
அல்லது தூத்துக்குடியிலே இருக்கக்கூடிய அனல் மின் நிலை



யத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, அவைகள் அடிக்கடி பழுது
பட்டு விடுகின்றன. நம்முடைய அமைச்சரைக் கேட்டால்,
ஜப்பானிலிருந்து வாங்கினால், சுவிட்சர்லாந்திலிருந்து வாங்கி
னால், லண்டனிலிருந்து வாங்கினால், அமெரிக்காவிலிருந்து
வாங்கினால், அவைகள் எல்லாம் கெடாது.

'Bhel Plant' is not functioning well

'பெல்' நிர்வாகத்
என்று சொல்கிறார்கள். அதே சமயத்திலே, இராமகுண்டத்திற்குக்
தினர் சொல்கின்றார்கள், நாங்கள் கொடுத்தோம். 97 சத
கொடுத்தோம். மகாராஷ்டிரத்திற்குக் வேலை செய்கிறார்கள்;
விகிதம் எஃபிஷியன்சிலே அங்கே இருக்கக்கூடிய
எப்படி இராமகுண்டத்திலே—விஜயவாடாவிலே நிறுவப்பட்டது
தெர்மல் பிளான்ட்—திருச்சி பெல் நிறுவனத்தால் செய்கிறது? இங்கே
97 சத விகிதம் எஃபிஷியன்சியிலே வேலை அவர்களாலே
இருக்கக்கூடிய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவை, எஃபிஷியன்
நிறுவப்பட்டவை, 38 சத விகிதம், 48 சதவிகிதம் காரணம் என்ன?
சியிலேதான் வேலை செய்கின்றன என்றால் அதை இயக்கு
அடிக்கடி கோளாறுகள் ஏன் ஏற்பட வேண்டும்? திறமைக் குறைவான
பவர்கள் சரியாக இல்லாத காரணத்தால், இப்படிப்பட்ட பழுதுகள்
வர்கள் இயக்குகின்ற காரணத்தால்
வருகின்றன.

சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்
இன்னொரு காரணத்தையும் சரியான கரி கிடைக்க
ஏற்றுக்கொள்கிறோம். அனுப்புகிறார்கள்,
நாங்கள் அதை மண்ணையும் கலந்து என்று சொல்
கல்லையும், விடுகிறது நல்ல கரியை
வில்லை. பாய்லர் கெட்டு
அதன்காரணமாகப் மண்ணையும் நீக்கி ஆட்சியிலே
அந்தக் கல்லையும் நீங்கள் என்று
கிறார்கள். அதற்காகத்தானே தவறியிருக்கிறீர்கள்
நீங்கள் வாங்குங்களேன், எதிர்க்கட்சியிலே இருக்கிறோம்
இருக்கிறீர்கள். அதைச் செய்வதற்குத் சரியான நடவடிக்கை
சொல்வதற்காகத்தானே நாங்கள் நீங்கள் தெர்மல் ஸ்டேஷன்
நல்ல கரியை வாங்குவதற்கு காரணத்தினால்தான் என்ற குற்றச்சாட்டை
கையை எடுக்காத வேலை செய்யவில்லை
எஃபிஷியன்டாக இருக்க முடியாது.
என்னால் சுமத்தாமல் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொன்னார்கள். கப்பல் வாங்கப்
பல மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வரப்போகிறோம், அந்த
போகிறோம், அதிலே கரியைக் மெட்ராஸ் தெர்மல் பிளான்
வைத்துக்கொண்டு எண்ணூரையும் ஓட்டப் போகிறோம் என்று சொல்
டையும், தூத்துக்குடியையும் காலமாக கப்பல் வாங்கப்
கிறார்கள். கடந்த ஐந்தாண்டுக் என்று கப்பல் வாங்கிக்
போகிறோம், கப்பல் வாங்கப் போகிறோம் மாண்புமிகு அமைச்சர்
கொண்டே இருக்கிறீர்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக
திரு. இராமச்சந்திரன் அவர்கள் இருந்தபொழுது ஜப்பானுக்குச்
ஆட்சிக்காலத்திலே அமைச்சராக எங்களுடைய கட்சியின்
சென்று கப்பல் வாங்கி வந்தார்கள்.

வைத்துக் கொண்டு வேலை ஆரம்பித்தால் அதில் என்ன இருக்
கிறது ? இன்றையதினம் மால்கோ இருக்கிறது : அதைப்போல
தாரங்கதாரா கெமிக்கல்ஸ் இருக்கிறது. இந்த இரண்டு யூனிட்டு
களும் சேர்ந்து எத்தனை யூனிட்டுகள் கன்சம்ப்ஷன் செய்கின்றன?
80 அல்லது 100 மெகா வாட் மின்சாரத்தை அவர்கள் பயன்
படுத்துகிறார்கள். இது போன்ற தொழிற்சாலைகளுக்கு,
மெட்டர்லஜிக் தொழிற்சாலைகளுக்கெல்லாம் அனுமதி கொடுத்
துக் கொண்டு போனால் இன்னும் பத்து ஆண்டுகளுக்கு இதே
நிலை தான் இருக்கும். நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு
அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பேசினார்கள். எலெக்ட்
ரானிக் இன்டஸ்ட்ரீஸ் தமிழகத்தில் வரவேண்டும் என்றார்கள்.
அப்படி குறைந்த அளவு மின்சாரத்தை உபயோகப்படுத்தக் கூடிய,
ஐந்து குதிரை வேக, பத்து குதிரை வேக மின்சாரத்தைப் பயன்
படுத்துகிற தொழிற்சாலைகளை வைத்து, 100 பேர்களுக்கு,
வேலை, 200 பேர்களுக்கு வேலை என்று வைத்து,
இப்பேற்பட்ட செலக்ட்டிங் இன்டஸ்ட்ரீஸ்களாக வைத்து அதற்கு
மின்சாரத்தைக் கொடுப்பதற்கு முன்னுரிமை தரவேண்டும். அப்
படி நீங்கள் கொடுத்தால் தமிழகத்தில் தொழிற்சாலைகள் உண்
டாக்குவதற்கும் அதன் காரணமாக வேலை வாய்ப்பு உண்டாவதற்
கும் உதவியவர்களாவீர்கள்.

(பிற்பகல் 12-30)

இப்போது ஷார்ட்-பால் ரெவின்யூ என்று சொல்கிறார்கள்.
224 கோடி எங்கேயிருந்து வருகிறது. தமிழகத்திலே நம்முடைய
பட்ஜெட்டிலே இருக்கிற நிதி வசூலிலிருந்து, ரெவின்யூ பட்ஜெட்டி
லிருந்து அப்படியே வருஷந்தோறும் கொடுத்துக் கொண்டிருக்கி
றோம். ஏறக்குறைய 50 சதவீதம் பட்ஜெட்டிலேயிருந்து
கொடுக்கிறோம் என்றால் அதற்கு மின் வாரியம் எதற்கு ? மின்
வாரியம் என்று வைத்துக் கொண்டு, இங்கேயிருந்து கொடுத்துக்
கொண்டே இருந்தால் அதற்கு பெயர் என்ன ? ஆகவே எங்கே
தவறு இருக்கிறது ? என்ன தவறு என்பதை கண்டுபிடித்து நிறை
செய்ய வேண்டும். இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். சென்ற ஆண்டிலே மால்கோ நிறுவனத்தைப்
பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முத
லமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த சமயத்தில் திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு பெரிய ஊழலை கண்டுபிடித்து
விட்டேன் கண்ணாடியை வைத்துக் கொண்டு, ஒன்பது கோடி ரூபாய்
மால்கோ ஊழல் என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன் அந்த 9 கோடி ரூபாயை ஏன் இன்னும் வசூல் செய்
யவில்லை? ஏன் இந்த நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் சொல்ல
வில்லை? சென்ற ஆண்டு சொன்னீர்களே, என்ன சொன்னீர்கள்
ரூ. 9·43 கோடி வசூல் செய்வது சம்பந்தமாக, ஹைகோர்ட்டிலே
6—1—1982-லே கேஸ் போட்டு அட்ஜொர்ன்மென்ட் ஆனது



என்று சொன்னீர்கள். 6—1—1982-லே அட்ஜொர்ன்மென்ட்
ஆனது ? என்ன செய்தீர்கள் ? மின்சார வாரியத்திற்கு வக்கீல்
கள் கிடைக்கவில்லையா ? வக்கீல்களிடம் கொடுத்து உடனடியாக
பைசல் செய்ய முடிவில்லையா ? ஏன் 5 ஆண்டுக்காலமாக
மால்கோவிலிருந்து ரூ. 9.43 கோடி வசூல் செய்ய முடியாமல்
நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? யார் அதற்குப்
பொறுப்பு? ஒன்று, அன்றையதினம் சொன்ன குற்றச்சாட்டு உண்
மைக்கு மாறுபட்டதாக இருக்கவேண்டும், அல்லது அது தேவை
அற்றதாக இருக்க வேண்டும். இல்லையென்றால், அந்தக்
குற்றத்தை நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள் என்று நான்
சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகையால்தான் இந்த
நிதிநிலை அறிக்கையில் பல குறைபாடுகளை என்னால் சுட்டிக்
காட்ட முடிகின்றது.

நெய்வேலியிலிருந்து இன்றையதினம் ரிலிப் என்று சொல்
கிறீர்கள். நெய்வேலியிலிருந்து ரிலிப்பா? அல்ல. நெய்வேலி
தான், இன்றையதினம் பூரணமாக நமக்கு உதவுகிறது. அதுவும்
இல்லையென்றால், தமிழ்நாடு இருண்ட ஒரு மாநிலமாக மாறி
விடும். நல்லவேளையாக, அந்த நிறுவனமாகிலும் சரியாக
வேலை செய்கிறது. அந்த நிறுவனம் சரியாக வேலை செய்ய
வேண்டும். நம்முடைய அமைச்சருடைய தொகுதிக்குப் பக்கத்
திலே இருக்கிற தொகுதி என்ற காரணத்தால், அது நன்கு வளர
வேண்டும்.

இரண்டாவது மைன்சிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்த
மின்சாரம் முழுவதுமாக நமக்குக் கிடைக்கவேண்டுமென்று நம்
முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே
திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணையாக இருக்கும் என்று
சென்ற ஆண்டிலே சொன்னேன். இப்பொழுதும் நான் சொல்ல
விரும்புகிறேன். தொடர்ந்து அவைகள் வரவேண்டும். அந்த
இரண்டாவது மைன்சிலே உற்பத்தியாகக்கூடிய அத்தனை மின்
சாரமும் நமக்கு வரவேண்டும். நீங்கள், இருப்பதைச் சரியாக
நிர்வாகம் செய்யுங்கள். தேர்ட் மைன்சுக்கு நாம் பாடுபடுகிறோம்
என்று சொல்கிறீர்கள். நம்மாலே கூரை மேலே ஏறவும் முடிய
வில்லை. கோபுரத்திற்கு மேலே போய் குரங்கு பிடிக்க வேண்டும்
என்றால் என்ன அர்த்தம் ? தேர்ட் மைன்ஸ் உண்டாக்க ரூ. 812
கோடி தேவைப்படும் என்று சொல்கிறார்கள். அதிலே முடியுமா?
கிட்டத்தட்ட ரூ. 2,000 கோடிக்குப் போகும். உங்களுக்கு
இருக்கக் கூடிய திறமையையெல்லாம் ஒன்றுதிரட்டி மத்திய
அரசாங்கத்திடம் சொல்லி, ஐயா, மூன்றாவது திட்டத்தை ஆரம்
பியுங்கள், அதற்கான நிலத்தை நாங்கள் தருகிறோம், அதை
ஆரம்பியுங்கள், அதற்கு நல்ல ஒத்துழைப்பு தருகிறோம்,
உற்பத்தி செய்யக்கூடிய கரண்டை எல்லாம் நாங்களே வாங்கிக்
கொள்கிறோம் என்று சொல்லுங்கள், ஏற்கனவே, சொன்னீர்களே
செக்கன்ட் மைன் கட், அது அப்பொழுதே வந்திருக்க வேண்டும்.
அப்படி வந்திருக்கக்கூடிய சமயத்திலே, நம்முடைய அமைச்

நமக்கோ கரி தேவை ; கரி வாங்க வேண்டும், கரி வரவில்லை என்றால் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் நல அமைச்சரவர்கள் லேபர் அன்ரெஸ்ட் இருக்கிறது என்று வேறு சொல்லிக்கொண்டிருப்பவர்கள். இப்படியெல்லாம் வருவதற்குக் காரணம் என்ன?

There has been bungling in the purchase of ship for bringing coal from various parts

ஆகவேதான் கப்பல் வாங்கத் தவறி விட்டீர்கள். கப்பல் கொடுக்க மாட்டேன் என்று ஸ்டீபன் சொல்லி விட்டாரே.

once and for all they have refused—turned down

அதற்காகப் போர்க்கொடி உயர்த்துங்களேன், ஜப்பான் கப்பல் பற்றி உடன்பாடு செய்ததில் தவறு இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் சொல்வது தவறு என்று சொல்லுங்களேன், சுப்ரீம் கோர்ட் நீதிபதியின் விசாரணைக்குத் தயார் என்று சொல்வதற்கு நீங்கள் தயாரா? நான் ரெலவன்டாகத்தான் சொல்கிறேன்.......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, அவர்கள் பங்கிலிங் என்றெல்லாம் சொல்கிறார்கள். பங்கிலிங் என்றால் எங்கே என்று சொல்வதற்கு முழு விவரங்கள் என்னிடத்திலே இல்லை. பங்கிலிங் இங்கேயா அல்லது ஷிப்பிங் டெவலப்மென்ட் ஃபண்டிலேயா, அல்லது ஷிப்பிங் மினிஸ்ட்ரியிலேயா என்று சொல்வதற்கான முழு விவரங்கள் என்னிடத்திலே இல்லையே. மின் வாரியத்தைப் பொறுத்தவரையிலே நாம் கப்பல் வாங்கியும் நிலக்கரி கொண்டு வரலாம். கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியும் நிலக்கரியைக் கொண்டு வரலாம். அதனாலே எப்படி இதை ரெலவன்ட் என்று சொல்லுகிறார்.

(பிற்பகல் 12-40)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கப்பல் நூற்றுக்கு நூறு நமக்கே கரி ஏற்றுவதற்குத்தான். அது மின்சார வாரியத்திற்குக் கரி ஏற்றுவதற்கு. மின்சார வாரியம் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனோடு செய்து கொண்ட அக்ரிமென்ட்—

The cost plus certain per-centage

இவை அத்தனையும் 100 சதவிகிதம் எங்களுக்குத்தான், பயன்பட வேண்டும் என்று சொன்ன கமிட்மென்டை வைத்து பூம்புகார் ஷிப்பிங் கர்ப்பரேஷன் வாங்கினால்தான் ; இதை வாங்கு

தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றையதினம் முதல
மைச்சராக இருந்த அவர்கள் தலைமையில் நாங்களெல்லாம்
விமான நிலையத்திற்குச் சென்று அவரை வரவேற்றோம். வால்
போஸ்டர்கள் எல்லாம் போட்டார்கள். கப்பலை வாங்கி வந்த
தமிழனே வா வா வா! என்று வரவேற்றோம். ஆனால் இப்
பொழுது பல்கேரியா கப்பல் என்றும், பால்டிகா கப்பல் என்றும்,
போலந்து கப்பல் என்றும் சொல்லி, கடைசியாக கொரியா
கப்பல் என்று சொல்லி, பிறகு ஜப்பான் கப்பல் என்று சொல்லி
வெஸ்ட் ஜெர்மனி என்று சொல்லி, அக்ரிமெண்டிலே 33.33
குரோர்ஸ் என்று போட்டார்கள். 33.33 குரோர்ஸ் என்றெல்
லாம் டென்டர்காரன் ஆஃபர் செய்கிறான். மூன்று கப்பல்களுக்கு
100 கோடி ரூபாய் என்று எவ்வளவு ரவுண்டாக வருகிறது
பாருங்கள். எதனால் நமக்குக் கப்பல் வரவில்லை? ஏன் கப்பல்
தரைதட்டி விட்டது? கப்பலைக் கோட்ட விட்ட தமிழனே என்று
சொல்லலாமா ? ஏன் அந்தக் கப்பலை வாங்கவில்லை ? மூன்று
கப்பல்களை ஏன் வாங்கவில்லை? நான்காவதாக, ஜப்பான் கப்பலை
வாங்குவதற்கு மறுத்தார்கள் என்றால் அவற்கு என்ன காரணம்?
எதற்காக மறுத்தார்கள் என்பதற்கான காரணங்களையெல்லாம்
சொல்லுங்கள். ஏற்கனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்
சொன்னார்கள், கப்பல் வாங்குவதிலே தவறு இல்லை.
ஊழல் இல்லை, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜை வைத்து விசாரிக்கவும்
நாங்கள் தயார் என்றெல்லாம் சொன்னார்களே, அன்றைய
பிரைம் மினிஸ்டர் சரன்சிங்கிற்கு எழுதினார்களே, அதைப்போல
இப்பொழுது பிரைம் மினிஸ்டருக்கு எழுதுவதற்குத் தயாராக
இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அனுபவ
மும், விவரமும் நன்கறிந்தவர்கள். அவர்கள் இப்பொழுது பேசு
கின்ற பொருள் பற்றி விடை தருகின்ற விவாதம் இப்பொழுது
நடைபெறவில்லை. விடையளிக்கக்கூடிய வாய்ப்பும் இப்
பொழுது எனக்கு இல்லை. ஆகவே, மின்சாரம் பற்றிப் பேசு
வதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்படியாகக்
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; மிக்க நன்றி, மின்சார வாரியத்
திற்குக் கரி வரவில்லை என்பதால்தான் நான் இதை சொல்
கிறேனே தவிர, வேறு ஏதாவது கமர்ஷியலுக்காகக் கரி வரவில்லை
என்றால் நான் இதைப்பற்றி இந்த நேரத்தில் சொல்லியிருக்கவே
மாட்டேன். ஆகவே, நான் சொல்வது மோர் ரெலவன்ட்தான்.
கப்பல் வாங்குவதை உங்கள் இலாக்காவிலேயேதான் வைத்திருக்க
வேண்டும். வேறு இலாக்காவிற்கு நீங்கள் விட்டிருக்கக்
கூடாது. பூம்புகார் கப்பலை நீங்களே வாங்கியிருந்தால் சரி
யாக இருக்குமோ என்று நான் நினைக்கிறேன். வேறு துறை
யிலே போனதால்தான் சரியாக வரவில்லையோ என்று சொல்ல
விரும்புகிறேன். ஏனென்றால் நான் உங்களோடு பழகிய
காரணத்தால் இந்தச் சந்தேகம் எனக்கு ஏற்படாமல் இருக்க
முடியவில்லை.

வதற்கு சரியான முறைகளைக் கையாளாத காரணத்தினால்தான் கப்பல் வராத காரணத்தினால்தான், மின்சார உற்பத்தி பாதிக்கப் படுகிறது என்று சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லையா? ஆகையினால் தான் அந்த நடைமுறையிலே இருக்கக் கூடிய கோளாறுகளின் காரணமாக வரவேண்டிய கப்பல், வாங்க வேண் டிய கப்பல் கடந்த 5 ஆண்டு காலமாக வரவில்லை. இன்றைய தினம் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். என்று நான் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டிலே நான் பேசும்போது சொன் னேன். இது சம்பந்தமாக வேறு விவாதங்கள் வருகிற சமயத் திலே பேசினேன், இதற்கான ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. நான் பேசுவது என்றால் எல்லா ஆதாரங்களை வைத்துக் கொண்டுதான் பேசுவேன். இன்றைய தினம் நம் முடைய அமைச்சரவர்கள் அதற்குப் பதில் சொல்ல முடியாத காரணத்தால், கப்பல் வரவில்லை என்ற அளவுக்கு அதனாலே பாதிப்பு என்கிற அளவுக்கு மட்டும்தான் நான் சொல்கிறேனே தவிர, அந்த விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை.

சென்ற ஆண்டே நான் குற்றச்சாட்டினைச் சொன்னேன். ஏனென்றால் இங்கே மின்சாரம் இல்லை என்று சொல்லக்கூடிய நிலை இல்லை. மின்சாரம் நிறைய இருக்கின்றதைப் போலத் தான் சென்னையும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலேயும், லாவிஷ் இல்லுமினேஷன் நிறைய இருக்கின்றது என்று நான் சொன் னேன். இங்கே பக்கத்திலே நம்முடைய மாற்றுத் தலைவர், சேர்மனாக இருக்கக் கூடிய அந்த டூரிசம் டிப்பார்ட்மென்டு நடத்துகிறார்களே பொருட்காட்சி, என்ன பெரிய எக்சிபிஷன், இதனாலே என்ன பெரிய வளர்ச்சி தமிழ்நாட்டிலே வந்துவிடப் போகிறது. எத்தனையோ லட்சக்கணக்கான யூனிட்டுகள் மின் சாரத்தை விணடிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி யில் இருந்து பார்த்தாலே அது ஜெகஜ்ஜோதியாக மின்னுகிறதே. எங்கே இருந்து வருகிறது? ஏதோ அங்கே இரண்டு ஜென ரேட்டர்கள் வைத்திருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் குற்றச்சாட்டு சொன்னால், நாங்கள் அதிலே இருந்து எடுக்கி றோம் என்று காட்டுவதற்காக அப்படி வைத்திருக்கிறார்களே தவிர,. . . . . . . . .

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை)

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 30 விழுக்காடு குறைத்துப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒப்புதலின் பேரில் தான் மின்வாரியத்திலே இருந்து நாங்கள் மின்சாரத்தைப் பெற் றிருக்கிறோம். அதோடு இந்த ஆண்டு 2 ஜெனரேட்டர்களை



வைத்து இந்த 30 விழுக்காட்டை விட 35 சத விகிதம் குறைத் திருக்கிறோம். இன்னும் குறைத்துக் கொண்டு நாங்கள் மின் சாரத்தை இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய பொருட் காட்சிக்குப் பயன்படுத்துகிறோம் என்பதை மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கு விளக்கமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :

I thank the Hon'ble Member for having clarified this. My desire is that the exhibition have been postponed.

மின்சாரம் இல்லாத காரணத்தினால், அடுத்த ஆண்டிற்கு நடத்தி னால் என்ன குடி முழுகிப் போய்விடும். ஆகையினால்தான் மின் சாரமே இல்லாத காரணத்தினால்தான் இப்போது அதிகமான அளவுக்கு நாம் மின்சாரத்தை வீணடிக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதே மணி 12/45 ஆகின்றது. பிறகு அமைச்சர் பதில் சொல்லியாக வேண்டும். எல்லோருக்கும் அவர் பதில் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் வேண்டுகோளுக்கு இணங்கி, உங்கள் கட்சியின் உறுப் பினர் புருஷோத்தமனுக்கும் வாய்ப்பு கொடுத்தேன். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி Have our co-operation. We are responsible people. We want to point out certain things.

MR. SPEAKER : But there are limitations.

THIRU V. KRISHNAMURTHI : Mr. Speaker Sir,

இப்படிப்பட்ட லாவிஷ் இல்லுமினேஷன் இன்னும் பல இடங்களில் தமிழ்நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். அந்தக் காரணத்தினால் தான் சொல்ல விரும்புகின்றேனே தவிர, இந்த எக்சிபிஷனே இப்போது நடத்தாமல் இருந்திருந்தால், அது பொது மக்களுக்கு மின்சாரத்தை வீணடிக்கிறார்களே, அவர்களுக்கு ஒரு பாடமாக இருக்காதா என்ற கேள்வியை என்னாலே கேட்காமல் இருக்க முடியவில்லை.

இங்கே இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.
(மணி அடிக்கப்பட்டது.) இவர்கள் பொருள்களை வாங்கி வைத்
திருக்கிறார்கள். 30–9–1982 நாள் பிரகாரம் 112 கோடி
ரூபாய்க்கு பொருள்கள் ஸ்டோரில் இருப்பதாக எங்களுக்குத்
தகவல் இருக்கின்றது. 112 கோடிக்கு இருக்கின்றது. என்னென்ன.
ஒயர்கள், டிரான்ஸ்பார்மர்கள், அதே போல மற்ற சாதனப்
பொருள்கள். இவைகளை எல்லாம் வாங்கி வைத்திருக்கிறார்
கள். வாங்கவேண்டியதுதான். வாங்க வேண்டியது இல்லை
என்று சொல்ல முடியாது. அப்படி வாங்கினால்தான் மின்
சாரத்தை கொடுக்க முடியும். ஆனால் 112.79 கோடிக்கு வாங்கி
வைத்திருக்கிறார்கள். அதை வைத்து என்ன செய்தீர்கள்? என்ன
செய்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் 26,209 பம்ப் செட்டு
களுக்குக் கனக்ஷன் கொடுத்திருக்கிறார்கள் சென்ற ஆண்டிலே.
இன்னும் 3 லட்சம் பம்ப் செட்டுகள் இருக்கின்றன. இவைகளுக்கு
எப்போது கொடுக்கப்போகிறீர்கள்? இந்த 3 லட்சத்திலே
ஒருலட்சம் பம்ப் செட்டுகளுக்குக் கொடுக்கப் போகிறீர்களா,
கொடுங்கள். அப்படிக் கொடுத்தால் நாங்கள் அதை ஆதரிக்
கிறோம். இல்லை என்றால் நீங்கள் டெட் லாசாக வாங்கி
வைத்திருக்கிறீர்கள். அதற்கு வட்டி என்ன ஆயிற்று? 112 கோடி
ரூபாய்க்கு வட்டி என்ன ஆச்சு? இன்றைக்கு 112 கோடிக்கு
யார் பொறுப்பு? அதை இன்றையதினம் பொறுப்பிலே
இருக்கின்ற சேர்மன் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று இந்த
மன்றத்தின் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து டியூப் லைட் பற்றி. நம்முடைய அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். ஸ்டேன்டர்ட் டியூப் லைட்,
நம்முடைய மின்சார வாரியத்திலே கிடையாது. அங்கே
யிருக்கிற டி. இ. க்கள் எல்லாம் ஸ்பாட் பில்லிங், ஸ்பாட்
பர்சேஸ் பண்ணுகிறார்கள். எங்கே பண்ணுகிறார்கள்? மதுரை
யிலே பல இடங்களிலே டியூப் லைட் உற்பத்தி பண்ணுகிறார்
கள். பழைய டியூப் லைட் எல்லாம் 1 ரூபாய்க்கு வாங்கிக்
கொண்டு போய் அதிலே காஸ் பில் அப் பண்ணி அதை 7
ரூபாய்க்கு விற்கிறார்கள். அதை ஒருவன் 12 ரூபாய்க்கு
வாங்கி வந்து, 15 ரூபாய்க்கு விற்றுவிட்டு, 25 ரூபாய்க்கு
பில்லைப் போடுகிறான். அடிக்கிறான் கொள்ளையாக. எல்லா
ஸ்டேஜிலேயும் இல்லை என்று சொல்ல முடியுமா? அது 3
நாளைக்கு மேலே எப்படி எரியும்? 2 நாளைக்குத்தான்
எரியும். சாதாரண பிலிப்ஸ், கிராம்டன் இன்னும் மற்ற
பல்புகளை வாங்கினால், 4 மாதம், 5 மாதம் எரியும்.
ஆனால் மதுரையிலே காஸ் பில்அப் பண்ணுகிறார்களே
அது தெரியாதா. அந்த வாரியத்திலே இருக்கக்கூடிய டி.இ.
களுக்குத் தெரியாதா? புள்ளிவிவரங்கள் வேண்டுமானால்,
நான் தனியாக அமைச்சர் அவர்களிடம் தெரிவிப்பதற்கும்,
அல்லது கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறேன். எவ்வளவு



லட்சக்கணக்கான ரூபாய் விரயம் ஆகிறது இதனாலே.
எங்கே கிராமத்திலே விளக்கு எரியும்? இப்படி டியூப் லைட்
வாங்குவதிலேயே மோசடிகள் நடக்கின்ற காரணத்தினாலே
கிராமப்புறத்திலே இருக்கின்ற மின் விளக்குகள் எரிவதில்லை.
அதைப் போக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள்
நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடைசியாக ஒன்று. இன்று 3,000 கேஷியர்கள் ஒரு
வருடமாக வேலை செய்யவில்லை. 3,000 கேஷியர்கள்
உட்கார்ந்து கொண்டே சம்பளம் வாங்குகிறார்கள். ஏன்
வாங்குகிறார்கள்? சம்பளம் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்,
வாங்குகிறார்கள். ஏன் வேலை செய்யவில்லை? நீங்கள்
அவர்கள் செய்யாத வேலையைச் செய்யச் சொன்னால்,
அவர்கள் வேலை செய்யவில்லை. அதற்கு நம்முடைய
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் கார்ட் பில்லிங்
கொடுத்திருக்கிறோம் என்று கார்ட் பில்லிங் நன்றாக நடந்தால்
நான் வரவேற்கிறேன். அதை பாராட்டுகிறேன். திராவிட
முன்னேற்றக் கழகம் குறுக்கே நிற்காது. கார்ட் பில்லிங்
மூலம் 6,000 அசெஸ்ஸர்களைப் போட்டிருக்கிறீர்கள். அந்த
6 ஆயிரம் அசெஸ்ஸர்கள் எல்லாம் யார் என்று பார்த்தால்.
8-வது படித்தவன் எல்லாம் அதிலே அசெஸ்ஸராக வந்திருக்
கிறான். ஆள் போட்டதினாலே தொழிற்சங்கத்தைச்
சேர்ந்தவர்கள், அதை நடத்துகிறவர்கள், ஒத்துழைப்பு தராத
தினாலே அவர்கள் எல்லாம் ஆதரவு கொடுக்காத காரணத்
தாலே இன்றையதினம், 8-வது படித்தவனை எல்லாம் அசெஸ்
ஸராக நியமித்து இருக்கிறீர்கள். அவர்கள் வேலை நேரம் என்ன?
24 மணி நேரத்தில் எப்போது வேண்டுமானாலும், வருவார்கள்
எப்போது வேண்டுமானாலும் போவார்கள். அவர்களுக்கு
அதாவது இந்த நேரம் என்று கிடையாது. அதாவது
ஆக்ஸிடென்ட் ஆகிவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள்,
ராத்திரி 12 மணிக்கு நான் பில் எடுக்கப்போனேன், ஆக்சி
டென்ட் ஆகிவிட்டது என்று, ஒர்க்மேன் காம்பன்சேசனிலே
அவர்கள் கேட்கலாம். ஆகையினாலே அந்த முறைகேடுகள்
(குறுக்கீடு). சீக்கிரம் முடித்துவிடுகிறேன். இந்த ஸ்பாட்
பில்லிங்கினால் இருக்கக்கூடிய ஊழலை, இருக்கக்கூடிய தவறு
களை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போதுகூட
நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. மின்சார வாரியத்தில்,
இப்போது வாட் ஈஸ் தி டிமான்ட்? நீங்கள் ஜனவரி மாதத்
திற்கு என்ன டிமான்ட் என்று மின்சார வாரியத்தினாலே
சொல்ல முடியாது. காரணம் இந்த அசெஸ்ஸர்கள்
ரிப்போர்ட் செய்தால்தான். இந்த அசெஸ்ஸர்கள் என்ன
ரிப்போர்ட் செய்கிறார்கள்? பச்சைக் கார்டிலே எழுதிவிடு
கிறார்கள். பச்சைக் கார்டிலே எழுதிக்கொண்டு ரெவின்யூ
யூனிட்டுக்கு வந்தால்தானே. அதைக் கம்பைல்
பண்ணி டிமான்டை செட்டில் பண்ணமுடியும். அது சரியாக

வருவதில்லை. அப்படி சரியாக வராத காரணத்தினாலே
வருமானம் சரியாக வருவதில்லை. ஏற்கனவே மாதத்திற்கு
35 கோடி வந்தது. இப்போது 25 கோடி வந்தால் போதுமா ?
டாரிப் ரிவிஷனாகியும் வருமானம் இல்லையா? ஆகையினாலே
வரக்கூடிய வருமானம் சரியாக வரவில்லை. நம்முடைய
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய
திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த சமயத்திலே
நம்முடைய தொ. மு. ச.-விலே பொதுச் செயலாளராக
இருந்தார்கள். ஏறக்குறைய பல ஆயிரக்கணக்கான தொழி
லாளர்களுக்கு அவர்கள் தலைவராக இருந்தார்கள். நல்ல
வேளையாக அவர் இந்த கட்சியைவிட்டு வந்து விட்டார்கள்.
அவர்கள் அப்போதே அவர்களை இணைத்துக்கொண்டிருந்தால்,
ஒரு தொல்லையும் வந்திருக்காது. அவர்கள்
வந்ததினால்தான் அவர்கள் ஒத்துழைப்புத் தனியாக
அவர்கள் ஒத்துழைப்புத் தராததினால், அசெஸ்ஸர்கள் என்று தரவில்லை.
சொல்லி அங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் படிக்காதவர்கள்.
இன்னும் சொல்லப் போனால் ஸ்காவெஞ்சர்கள் வேலையிலே
இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு மின்சார வாரியத்திலே
அசெஸ்ஸராக இருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல
முடியுமா? அதேபோல் வசூலில் எவ்வளவு ஊழல் நடை
பெறுகிறது? என்ன வசூல் பண்ணுகிறார்கள். ஏற்கனவே
காஷியர் கவுண்டரிலே வாங்கும்போதே தப்பு நடந்து
கொண்டிருக்கிறது. பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிவிடு
கிறான். 6 ஆயிரம் பேர்கள் இருக்கக்கூடிய, 25
ஆயிரம் கிராமங்களிலே எப்போது வசூல் பண்ணுகிறார்கள்
என்று யாருக்கும் தெரியாது. இப்படி வசூல்
பண்ணுவதிலே பல தவறுகள் நடக்கின்றன. திருநெல்வேலி
ஸிஸ்டத்திலே ஒரே ஒரு என்ஜினியர், ஒரே ஒரு நபர் ஏறத்
தாழ 50 ஆயிரம் ரூபாய்—ஒரு அஸெஸ்ஸர் மட்டும் 50
ஆயிரம் ரூபாய் கையாடல் செய்திருக்கிறார்கள். அவர்களை
செக்-அப் பண்ணுவதற்கு என்ன இருக்கிறது? அவர்கள் பில்
போடுகிறார்கள். ஒரிஜினல் பில்லிலே 2,500 ரூபாய்
என்று பில் போடுகிறார்கள் என்றால், எங்களுக்கு 2,500
ரூபாய்க்கு ரசீது கொடுத்துவிடுகிறார்கள். ஜேம வெள்ளைத்
தாளை வைத்துக்கொண்டு அதிலே வெறும் 500 ரூபாய் என்று
அவர்கள் போடுகிறார்கள். அப்படி டுப்பிளிகேட்டிலே போடு
கின்ற காரணத்தாலே அங்கே உள்ள ஏ.இ., ஜே. இ. க்கள்
அதை கம்பைல் செய்து கொடுக்கின்ற சமயத்திலே 500
ரூபாய்க்குத்தான் ரசீது இருக்கின்றது என்று ஏமாற்றுகின்ற
நிலை தமிழ்நாட்டிலே இருக்கின்றது. இதை எப்படித்
தீர்க்கப்போகிறார்கள்? ஏன் 3,000 பேர்களை காஷியர்
என்று உட்கார வைத்துக்கொண்டு நீங்கள் சம்பளத்தைக்
கொடுக்கவேண்டும். ஏன் ஒக்கனேக்கல் திட்டத்தைக் கொண்டு
வரவேண்டுமென்று நீங்கள் போராடக்கூடாது. கர்நாடகத்திலே
சரியான உறவு வைத்திருந்தீர்கள். குண்டுராவ் அவர்கள்



உங்களுக்கு வேண்டியவராக இருந்தார். 800 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு நீங்கள் ஏன் முயற்சிகளை எடுத்திருக்கக் கூடாது? கேரளாவிலே இப்போது ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்திலே..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கவேண்டிய நேரத்திற்குமேல் கொடுத்தாகிவிட்டது. நீங்கள் கேரளாவுக்கு போய், ஹைதராபாத்துக்குப் போய், இங்கே வருவதற்கு அதிகமான நேரம் ஆகும். சீக்கிரம் முடியுங்கள்.

(பிற்பகல் 12–50)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கேரளாவிலே ஒப்பந்தம் போட்டு இருக்கிறார்கள். வரவேற்கவேண்டியதுதான்.

35 பைசாவுக்கு மின்சாரம் எப்போது கொடுக்கப் போகிறார்கள். 3 வருஷம கழித்துக் கொடுப்பார்கள். அதுவும் அந்த சிமெண்ட் ஆலை உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்ட் பூராவும் கேராளவிற்குப் போகவேண்டும். அதோடு நின்று விட்டதா? சென்ற பிப்ரவரி மாதத்தில் இருந்து ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து அதற்காக 3 கோடி 4 கோடி ரூபாய் மின்சார வாரியத்தின் பணம் வாரிக்கொடுக்கப்பட வேண்டுமா? அதற்காக நீங்கள் ஏன் ஒத்துழைக்கவேண்டும்? இதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. (மணியடிக்கப்பட்டது).

கடைசியாக ஒன்றேஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணத்தை உயர்த்த நீங்கள் திட்டம் போட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். இன்றைக்கு மக்கள் எப்படி கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். 24 மணி நேரம் இன்றைக்கு மின்சாரம் கிடைக்கிறதா? 5 மணி நேரம்கூட சரியாக மின்சாரம் வரவில்லை. இரண்டு மணி நேரம் கூட மின்சாரம் சரியாக உற்பத்தி செய்யமுடியவில்லை. அந்த அளவிற்கு நீர் நிலை வற்றிவிட்டது. இந்தச் சமயத்தில் போய் மின்கட்டணத்தை அதிகப்படுத்தவேண்டும் என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் அதைக் கடுமையாக எதிர்க்கும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதத்திலே கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எழுப்பிய பல பிரச்சினைகளை மின் வாரியம் நிச்சயம் கூர்ந்து கவனித்து, தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உறுதியை நான் இந்த அவை முன் வைக்கிறேன்.

1983 பிப்ரவரி 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

மத்திய அரசு உயர்த்துகின்ற விலையைத் தடுப்பதற்கு நம்மாலே முடியாது. பிற மாநிலங்கள் நமக்குத் தருகின்ற மின்சாரத்தின் விலையை உயர்த்துகின்றபோது வேண்டாம், என்று கூறுகின்ற நிலையிலே நாம் இல்லை. பொருட்களின் விலைவாசி ஒருபக்கம் ஏறுகின்ற. நிலைமைகளை எண்ணிப் பார்க்கும்போது அதைக் கட்டுப்படுத்த எந்த மாநில அரசாலும் முடியாது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. அந்த வகையிலே பார்க்கும்போது சுமார் 225 கோடி ரூபாய் இந்த ஆண்டு இழப்பு வரும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது தொடருமானால் இன்னும் பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை மின்சார வாரியம் பெறுமா என்பதைக் கண்டிப்பாக நாம் சிந்திக்க வேண்டும்.

மத்திய அரசு கட்டணத்தை உயர்த்தும்போது, குறிப்பாக நிலக்கரி கட்டணத்தை உயர்த்தி, வாகன் கட்டணத்தை உயர்த்தி எரி எண்ணெய் விலையை உயர்த்தி மாநிலங்களிடமிருந்து மறைமுகமாக அதைப் பெற்றுக் கொள்கிறது. ஆகவே, அப்படிப் பெற்றுக் கொள்ளும்போது மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்து ஆலோசனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் மத்திய அரசிடம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலேயும் அது பேசப்பட்டது. அண்மையில் திட்டக் குழுவுடனும் விவரமாக இந்த நிலை விவாதிக்கப்பட்டது.

நாம் 5 கோடி ரூபாய்க்கு, 10 கோடி ரூபாய்க்கு மத்தியத் திட்டக் குழுவிடம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் நிலக்கரி கட்டணம், வாகன் கட்டணம், பொருட்களின் விலை உயர்வு என்ற பல்வேறு வகைகளிலே 30 கோடி, 40 கோடி ரூபாயை சுலபமாக நம்மிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். அதன் பிறகு மாநில அரசு நிதிப் பற்றாக்குறையினால் அவதிப்படுகிறது என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆகவே, கட்டணத்தை உயர்த்தும் பொழுது பெருமளவு மின்சாரத்தைப் பயன்படுத்தும் மாநிலங்களைக் கலந்தாலோசிக்க வேண்டும்; அதை ஒரு கொள்கையாக ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

இதர மாநிலங்களைப் பொறுத்தவரையில், நம்முடைய பற்றாக்குறை நீங்கவில்லை என்றால், நம்முடைய தேவையை நாமே நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை என்றால் இதர மாநிலங்கள் சொல்லுகின்ற மின்சார விலையைக் குறைக்கும் சக்தி நமக்குக் குறைவு என்பதையும் அதனால் சில நேரங்களில் அதிகக் கட்டணத்தைக் கொடுக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 7

இம் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் 3 முக்கிய ரச்சினைகளை அனைத்துக் கட்சியினரும் கூர்ந்து கவனிக்க வண்டும் என்று முதலிலே ப ரிவோடு நான் கேட்டுக் கொள்ள ரும்புகிறேன். ஏனென்றால் வேறு எந்த அமைச்சருக்கும் டைக்காத ஒரு வாய்ப்பு சுமார் 1959 ஆம் ஆண்டிலிருந்து ின் வாரியத்தோடு நெருங்கிய தொடர்பு கொள்கிற வாய்ப்பு னக்குக் கிடைத்து இருக்கிறது. அங்கே பணியாற்றியபோதும், தற்குப் பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் மதிப் ீட்டுக் குழுத் தலைவராக இருந்தபோதும், மின் வாரியத்தைப் ற்றி பரிசீலிக்கும் வாய்ப்பு பெற்றேன். அதற்குப் பிறகு தொடர்ந்து ஆளும் தரப்பிலே தொழிற்சங்கத் தலைவனாக இருந்து பணியாற்றி இருக்கிறேன்.

இந்த மூன்று மிகப் பெரிய பிரச்சினைகளையும் நாம் இப்போது கவனிக்கத் தவறுவோமேயானால், ஒரு நல்ல பொது நிறுவனத்தை, தமிழக மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒரு பொது நிறுவனத்தைப் பற்றி நாம் சரியாகக் கணக்கிடாமல் போய்விட்டோம் என்ற பெரும் குற்றச் சாட்டு வரும். ஆகவே, அதை முதலிலே நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போதெல்லாம் மின்சார வாரியம் எவ்வாறு இயங்க வேண்டும் என்று வெகுவாகப் பேசினார்கள். ஆனால் மின் வாரியத்தின் நிதிநிலை பற்றி ஒரு சிலரே தொட்டுப் பேசினார்கள். மின் வாரியத்தின் நிதிநிலைமை உண்மையிலேயே கவலை தரத் தக்கதாக இருக்கிறது என்பதை நாம் கட்டாயம் உணர்ந்தாக வேண்டும். மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகிற விவாதத்தின்போது இதைப்பற்றி நிறைய கருத்துக்களைப் பேச வேண்டிய நான் மின்சார வினியோகத்தைப்பற்றி பேசவே பெரும்பாலான நேரத்தைச் செலவழித்து விட்டோம்.

மின்சார நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே நாமே சிக்கனப்படுத்தி செலவைக் குறைப்பது என்பது ஒரு வகை. நமது சக்திக்கு அப்பாற்பட்டு செலவாகிறது என்பது ஒரு வகை. இப்படிப் பார்க்கிறபோது, வளர்ந்து வரும் விலைவாசி காரணமாகவும், அவ்வப்போது மத்திய அரசின் நிறுவனங்களிடமிருந்து நாம் பெற்று வருகின்ற பொருள்களின் விலையை உயர்த்துவதன் காரணமாகவும் குறிப்பாக நிலக்கரி விலை, ரயில்வே கட்டணம் உயர்வு, எரி எண்ணை விலை உயர்வு போன்றவைகளின் காரணமாகவும், மின் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கு அண்டை மாநிலங்களிலிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரத்தை நாம் வாங்க வேண்டிய நிலையிருப்பதாலும், பெரும் அளவிற்கு மின் சார வாரியம் நிதி இழப்புக்கு ஆளாகிறது.

அதே நேரத்தில் கட்டண விகிதத்தை உயர்த்த வேண்டு
மென்ற அடிப்படையிலே இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்
பிறகு எந்த எந்த தொழிற்சாலைக்கு சலுகைக் கட்டணம் இருந்
ததோ அது ரத்து செய்யப்பட்டது. ஓரளவுக்கு கட்டணத்தை
உயர்த்துவதற்கு, தொழில்களுக்கு எந்த எந்த அளவுக்கு கட்ட
ணத்தை நாம் உயர்த்த முடியுமோ அதற்கும் ஏற்பாடு செய்யப்
பட்டது. ஆனால் ஒரு இடத்திலே நாம் அனைவரும் சிந்திக்க
வேண்டியவர்களாக இருக்கிறோம்.

குறிப்பாக தொழில்களுக்கு அடுத்தபடியாக அதிக அளவுக்கு
மின்சாரத்தைப் பயன்படுத்தும் துறை வேளாண்மைத் துறை
என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இப்போது விதிக்கப்பட்டிருக்கிற கட்டணம் பல ஆண்டு
களுக்கு முன்னால் விதிக்கப்பட்டது. சிறு விவசாயிகளுக்கு 9.5
பைசா, பெரிய விவசாயிகளுக்கு 12 பைசா என்று விதிக்கப்பட்
டிருக்கிறது. சுமார் 9.5 இலட்சம் பம்பு செட்டுகள் தமிழ்
நாட்டிலே தான் இயங்குகின்றன. மற்ற மாநிலங்களில் எங்கும்
இந்த அளவுக்கு பம்பு செட்டுகள் இல்லை. ஆந்திர மாநிலத்தை
எடுத்துக் கொண்டால் 5 இலட்சம் பம்பு செட்டுகள்தான் இயங்கு
கின்றன. அங்கே 20 பைசா கட்டணத்தில் அவர்கள் வசூல்
செய்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால், நாம் 12
பைசா என்று நிர்ணயித்த காலத்தையும் இப்போதுள்ள
நிலைமைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த 12 பைசா
என்பது இப்போதுள்ள 5 பைசாவுக்குத்தான் சமம். ஆக,
சாதாரண அளவுக்குக் கூட நாம் ஓரளவுக்கு உயர்த்தி சரிக்கட்ட
வில்லை என்றால்—வேண்டுமென்றால் விவசாயத்திற்கு உதவி
செய்தோம் என்ற பெருமை இருக்குமே தவிர, அது நிச்சயமாக
மின்சார வாரியத்தின் நிதி நிலைமையை மிகவும் மோசமாக்கி
விடும்.

நான் இதைச் சொல்லக் காரணம், எதிர்க் கட்சியிலே
இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
சொன்னார்கள். விவசாயக் கட்டணத்தை உயர்த்தினால் எதிர்ப்
போம் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சி என்றால் எதிர்க்கத்
தான் செய்வார்கள். அதைப் போல அண்ணா தி.மு.க. எதிர்க்
கட்சியாக இருந்தாலும் அப்படித்தான் சொல்லியிருக்கும்.
இந்திரா காங்கிரசும் அப்படித்தான் சொல்லியிருக்கும்.

ஆனால் நான் குறிப்பிட விரும்புவது, உண்மை நிலைமையை
நாம் ஓரளவுக்கு உணர்ந்துக் கொள்ள வேண்டும். உண்மை
நிலையை உணர்ந்துக் கொண்டு, விவசாயிகள், அதிலும் குறிப்
பாக நிலம் உள்ள விவசாயிகள் தங்களுடைய சக்திக்கு ஏற்ப



கொஞ்சம் தாங்கிக் கொண்டு இந்த நிதிநிலையைச் சரிசெய்ய
அரசோடு ஒத்துழைக்க வேண்டாமா என்பதை தயவு செய்து
சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே நிலபுலம் இல்லாத மக்கள் தானே வறுமைக்
கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள். அவர்களுக்கு என்று நாம்
கொடுப்பது என்ன? அவர்களுடைய குடிசைக்கு ஒரு விளக்கு
என்று கொடுக்கப்படுகின்றதே தவிர வேறு எந்தத் திட்டத்தை
அவர்கள் பயன்படுத்துகிறார்கள்? நேர்முகமாகவும் எதுவும
இல்லை. மறைமுகமாக வேலை வாய்ப்பு கிடைக்கும். அது
வேறு. நேரடியாக மின்சாரத்தினால் பயன் கிடைப்பது உடை
மையாளர்களுக்குத்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

(பிற்பகல் 1·00)

ஆகவே, வறுமையாளர்கள் நிறைந்த நம்முடைய நாட்டைப்
போன்ற ஒரு நாட்டில், தாங்கக்கூடியவர்களுக்கு கட்டணத்தை
உயர்த்துகிறபோது, அரசியல் கட்சி வேறுபாடு இன்றி, தயவு
செய்து நாம் அத்தனைபேரும் ஒன்றுபட்டு, உயர்த்துவதன்
உண்மை நிலையை உணர்ந்து செயல்படுவோமேயானால்தான்,
மின்சார வாரியத்தின் நிதி நிலை சரியாக இருக்கும். அதைப்
பற்றி நான் பின்னர் குறிப்பிடுகிறேன். இந்த உண்மை நிலையை
தயவு செய்து உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதை நான்
இங்கே குறிப்பாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலையைப் பொறுத்தவரையில் ஏராளமான பொருள்கள்
இருப்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சிக்கனப்
படுத்தலாம் என்றுகூட உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்
டார்கள். அந்த விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்
றன. கேப்பிடல் புரோக்கிராம் என்கிற மூலதனத் திட்டம் அதிக
மாகிவிட்டது. மூலதனத் திட்டம் அதிகமாகிறபோது மின் உற்
பத்தி திட்டங்களுக்கு வேண்டிய பொருள்களும், மின்மாற்றிகளும்
அதுபோன்ற பொருட்களையும் நாம் வாங்கி வைத்திருக்கிறோம்.
அத்தோடு நாம் வாங்கி வைத்திருக்கிற எண்ணெய் எரிவாயு
போன்ற பொருள்களின் கூடுதல் விலை உயர்வின் காரணத்தி
னாலே, அந்த ஸ்டாக் பொசிஷன் அவ்வளவு வருகிறதே தவிர,
வேறு அல்ல.

அவைகள் எல்லாம் பயன்படுத்தப்பட்டால், இந்த நிலைமை
இராது என்பதை நான் இங்கே தெளிவாகத் தெரிவிக்க விரும்பு
கிறேன். இப்படிச் சொல்வதினாலே விவசாயக் கட்டணத்தை
உயர்த்துவதற்கு அரசு முடிவு எடுத்துவிட்டது என்று தயவுசெய்து
யாரும் கருதிவிட வேண்டாம். ஆனாலும், நான் நிலைமையைத்
தெளிவாக எடுத்துத் தெரிவிப்பதற்காகத்தான் இதை குறிப்பிட்
டேன். தொழில்களுக்கு அடுத்த படியாக ஒரு பெரும்பங்கு மின்
சாரத்தை, வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு

எடுத்துக் காட்டுகின்றது. நமது மின்வாரியப் பொறியாளர்களாக இருந்தாலும் சரி, பி.எச்.ஈ.எல். நிறுவனத்தின் பொறியாளர்களாக இருந்தாலும் சரி இந்த அனல் மின் நிலையங்களை உற்பத்தி செய்யவும், இயந்திரங்களை உருவாக்கவும், தரமாக நிர்வகிக்கவும் போதிய பயிற்சி பெற வேண்டும். நாம் இப்போது தான் வளர்ந்து வருகின்ற நாடு என்ற காரணத்தால் இந்தக் குறைபாடுகள் ஏற்படுகிறதே தவிர வேறல்ல. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது எப்படி நம்முடைய தூத்துக்குடி இயந்திரம் இயங்கி வருகின்றது என்று கேட்டார்கள். இது பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம். அவர்கள் தருகின்ற யூனிட்டுகள் எப்படி இயங்குகின்றன என்பதை அவர்கள் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள். இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களுக்கு அவர்கள்தான் இதைத் தருகிறார்கள். அவர்கள் அதைக் கண்காணித்து வருகிறார்கள். 210 மெகாவாட் செட்கள் மொத்தம் இந்தியாவில் 18 இருக்கின்றன. அந்த 18-ல் பரளி என்பது ஒன்றாவதாக இருக்கின்றது. நாசிக் 4-வது இயந்திரம் இரண்டாவதாக இருக்கின்றது. விஜயவாடா 3-வதாக, இருக்கின்றது. தூத்துக்குடி 1-ம், 2-ம், 4-வது, 5-வ ாக இருக்கின்றன. விஜயவாடா 3-வதாக இருக்கின்றதே, நம்முடையது மட்டும் 4-வது 5-வதுதாக இருக்கின்றதே என்று சிலபேர் கவலைப்படக்கூடும். நான் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சென்ற மாதம் 29-ஆம் தேதி இந்த 210 மெகாவாட் செட்டுகள் இந்தியா முழுவதும் சரியாக இயங்காததற்கு என்ன செய்வது என்று இந்திய அரசிலே உள்ள அதாவது பி.எச்.இ.எல். நிறுவனத்தினை நடத்துகின்ற துறை மற்றும் மின் சக்தித் துறை இரண்டும் சேர்ந்து பேசுவது என்று முடிவெடுத்துப் பேசினார்கள். அவ்வாறு பேசி அவற்றை எல்லாம் சீராக்க வேண்டும் என்று ஒரு கமிட்டி மத்திய மின்சக்தி துறை செயலாளர் தலைமையிலே போடப்பட்டு அது பத்திரிகையிலேஎல்லாம் கூட வந்திருக்கின்றது. அதை நீங்கள் பார்த்திருக்க முடியும். அதிலே பி.எச்.இ.எல். நிறுவனத்தின் சார்பிலே ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது.

It is conceded that earlier 200 M.W. units were based on the technology adopted on trial and error basis. However, as the performance of these units left much to be desired the Company worked out changes in the basic designs and incorporated them in the new units which have been supplied recently.

அதாவது ஆரம்பத்திலே நாம் போட்ட இயந்திரங்கள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை, குறைபாடுகள் இருந்தன. ஆனால் அனுபவத்தில் எதை எதை மாற்றியமைக்க வேண்டும், எதை எதை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்று செய்து இப்போது ஓரளவுக்கு முன்னேறி இருக்கிறோம் என்பதுதான் உண்மை. தூத்துக்குடியிலே நாம் நிறுவிய முதலாவது இயந்திரமும் இரண்டாவது இயந்திரமும் ஆரம்பத்திலே நிறுவப்பட்டவை. விஜயவாடாவில், இப்போது நிறுவப்பட்டது.





(பிற்பகல் 1—10)

நாம் இப்போது 3 ஆவது இயந்திரத்தை அங்கே உருவாக்கியிருக்கிறோம். அந்த இயந்திரம் நவீனமுறையில் வந்தது. இதை எல்லாம் அவர்கள் உணர்ந்து மாற்றி அமைத்து பிறகு கொண்டு வந்தது. இன்னொன்றை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். தமிழகத்தில் உள்ள அனல் மின்நிலையங்களில் கடல் நீர் பயன்படுத்தப்படுகிறது. அதனால் பல பிரச்சனைகள் உருவாகின்றன. விஜயவாடா அல்லது மற்ற அனல் மின் நிலையங்களை எடுத்துக்கொண்டால் அங்கே நல்ல நீர் பயன்படுத்தப்படுகிறது. எதையும் மேல் எழுந்த வாரியாக நாம் அதைப் பார்த்தால் உண்மைகள் நமக்குத் தெரியாது என்பதை நான் தெளிவாக எடுத்துச்சொல்லச் கடமைப்பட்டுள்ளேன். நான்கூட சில நேரங்களிலே சொன்னேன். அடிக்கடி இப்படி ரிப்பேர் ஆகிவிடுகிற காரணத்தினால் நமக்கு, சில இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வாங்க அனுமதிக்கவேண்டும் என்றும் கொஞ்சம் இயந்திரங்கள் 'பெல்' நிறுவனத்திடம் வாங்கலாம் கொஞ்சம் வெளிநாடுகளிலிருந்து வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்றும் சொன்னேன். ஏன் என்றால் முழுக்க முழுக்க இதையே நம்பினால் ஏதாவது ஆகிவிட்டால் கடினமாக இருக்கிறது என்ற கருத்தை நான் சொன்னேன். ஆனாலும் நம்மைப் பொறுத்தவரையில் இப்போது மேட்டூர் அனல் மின் திட்டத்திற்குகூட 'பெல்' நிறுவனத்திடமிருந்துதான் செட் கேட்டிருக்கிறோம் அதுவும் ரஷியா மேக் செட் கேட்டிருக்கிறோம். ஆனால் அதேநேரத்தில் என்ன நடக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

To those who have taken pride in the Country's success in establishing a heavy industrial base, few developments have been more disheartending than a spate of decisions taken in the last couple of years to award contracts for setting up new plants in this Country to foreign suppliers and engineering firms, despite the fact that these can be set up by Indian Companies often at a significantly lower cost.

இங்கேயே குறைந்த விலையில் இயந்திரங்களை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தும் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களுக்கு காண்டிராக்ட் கொடுக்கப்படுகிறது என்று சொல்லி

The most recent and in many ways the least defensible is the decision to allow the Soviet Union to supply four 210 MW Turbo Generators for the Golganj Super Power Station in Eastern Bihar.

தமிழகத்திலே நாம் இதற்காக பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆகவே, சாதாரண விலைவாசியின் உயரளவிற்காவது அந்தக் கட்டணத்தைக் கட்டிவந்தால்தான், மின்சாரம் அவர்களுக்கு தொடர்ந்து கிடைக்கவும், மின்சார வாரியம் இயங்குவதற்குமான வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேனே தவிர, மின்சார கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசு தீர்மானித்து இருக்கிறது என்று நான் சொல்வதாக தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருதிக் கொள்ள வேண்டாம்.

இருந்தாலும் தமிழகத்ினுடைய நன்மையிலே நாட்டம் கொண்டவர்கள் என்ற முறையிலேதான், அதனை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டேன். அடுத்து, நான் சொல்ல விரும்புவது தற்போது ஏற்பட்டிருக்கிற நெருக்கடியை, ஏற்படாமலே செய்திருக்கலாம், முன் கூட்டியே யோசனை செய்திருக்கலாம் என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது ஏற்பட்டுவிட்ட இந்த மின் நெருக்கடி—100-க்கு 100 சதவீதம் என்று போட்டோமே, அதைப் பற்றி நாம் பெரிதாக அச்சம் அடைய வேண்டியதும் இல்லை, கவலை அடைய வேண்டியதும் இல்லை.

உண்மையிலேயே நடந்தது என்னவென்றால், நெய்வேலியி பல இருந்த கொதி கலன் இயந்திரங்களை அவர்கள் ஓவர்-ஆலிங் பண்ணுவதற்கு என்று எடுத்துச் சென்று விட்டார்கள். தூத்துக் குடியிலே நமக்கு 3 இயந்திரங்கள் உள்ளன. அவைகளிலே ஒன்று ஓவர்-ஆலிங்கிலே இருக்கிறது. மற்ற இரண்டும் திடீர் என்று ரிப்பேர் ஆகிவிட்டது. ஆக, நெய்வேலியிலிருந்து வரவேண்டியதும் நமக்கு வரவில்லை. தூத்துக்குடியிலேயிருந்து கிடைக்க வேண்டிய உற்பத்தியும் கிடைக்கவில்லை. அந்த நிலைமையை உத்தேசித்து—அதிகாரிகள் என்ன நினைத்தார்கள் என்றால், அதை சரி செய்து கொண்டே, நாம் இந்த மின் உச்சத் தேவையை சமாளிப்போம் என்ற நிலைமையிலே யோசித்தார்கள். ஏனெனில் 100க்கு 100 மின் வெட்டு என்று சொல்லுகிறபோது, பொது மக்களிடத்திலே என்ன எண்ணத்தை ஏற்படுத்துமோ, என்று— பரவாயில்லை ஒரு வார காலம் அதை நிறுத்திவிட்டு, சரி செய்துவிட்டு, அதற்குப் பிறகு கொடுப்பதுதான் சரி என்று அரசினாலே, அதாவது நாங்கள்தான் முடிவு எடுத்தோம். குறிப்பாக நான் ஒரு வார காலம் போதும் என்று சொன்னேன். ஆனால், நிலைமையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னபோது, ஒரு வாரம் என்ன? இரண்டு வாரம் வைத்துக்கொள்ளுங்கள், அதற்குள்ளே முடியுமானால் அதைச் செப்பனிட்டு விடுங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆகவே, அது தற்காலிகமாக, திடீர் என்று ஏற்பட்ட ஒரு நிலைமையே தவிர, மின் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்ட நிலைமை அல்ல. புதிய கார் வாங்கினால் கூட இந்தக் காலத்



தில் போகிற போது திடீர் என்று எங்கேயாவது பிரேக்டவுன் ஆகிவிடுகிறது. 60 மைல் வேகத்திலே போன கார் இன்று திடீரென்று ஓடாமல் நின்றுவிட்டதே என்று யாரும் வருத்தப்படுவதே இல்லை. அந்த மாதிரி சில நேரங்களில் தவிர்க்கமுடியாத நிலைமைகளில் ஏற்படுகிற சூழ்நிலையே தவிர வேறு அல்ல. மற்றபடி தூத்துக்குடியிலே இருக்கிற நிறுவனம் ஆனாலும், எண்ணூரிலே இருக்கிற நிறுவனம் ஆனாலும் அவைகள் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. ஓரளவு, ஏன் நான் அதை குறிப்பிடுகிறேன் என்றால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற இயந்திரங்களின் அளவுக்கு, நம்மால் இன்னும் ஈடுகட்ட முடியவில்லை. அதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும், பி.எச்.ஈ.எல். நிறுவனமாக இருந்தாலும் சரி, நம்முடைய எந்த நிறுவனமாக இருந்தாலும் சரி.

இன்றைக்கு நெய்வேலியிலே முழு உற்பத்தியளவு நமக்குக் கிடைக்கின்றது என்றால் அவை ரஷ்யாவிலே இருந்து நாம் பெற்ற இயந்திரங்கள். அதேபோன்று மராட்டியம், குஜராத் போன்ற மாநிலங்களிலே உற்பத்தி அதிகம் கிடைக்கின்றது என்றால் அவை எல்லாம் வெளிநாட்டிலே இருந்து வாங்கிய இயந்திரங்கள். பேசின் ப்ரிட்ஜிலே கூட இன்று உற்பத்தி சரியாக இருக்கின்றது என்றால் அதுவும் வெளிநாட்டிலே இருந்து வாங்கப்பட்ட இயந்திரங்கள். ஆகவே, வெளிநாடுகளிலே இருந்து இறக்குமதி செய்து (குறுக்கிடு) பேசி முடித்ததற்குப் பிறகு கேட்கலாம். வரைமுறைகளுக்கு அப்பாற்பட்டவர்கள் எப்படி வேண்டுமானாலும் கேட்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் முடித்ததற்குப்பிறகு உறுப்பினர்கள் சில கேள்விகள் கேட்பதற்கு அனுமதிப்பது வழக்கம். ஆகவே, பேசி முடித்த பிறகு கேட்கலாம். எனவே, திரு. ரகுமான்கான் அவர்கள் இப்போது அமரலாம். இப்போது குறுக்கிட்டுப் பேச வேண்டும் என்று விரும்பினால் அது அவைக்குறிப்பிலே ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வெளிநாடுகளை நம்பி இருக்கக் கூடாது என்று நாமே நிறுவிய பி.எச்.ஈ.எல். தொழிற்சாலை மூலம் இப்போது இயந்திரங்களை உருவாக்கிப் பயன்படுத்துகிறோம். அதிலே குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். இல்லை என்று நான் சொல்லவில்லை. பி.எச்.ஈ.எல். நிறுவனம் சரியில்லை என்று சொல்வது போலவும், அந்நிறுவனம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்ற நிலையிலும் அதைப் பார்க்கக்கூடாது. வெளிநாடுகளிலே இருந்து வருகின்ற அளவுக்கு தொழில் நுட்ப ரீதியிலே நாம் உருவாக்கும் இயந்திரங்கள் இல்லை என்பதை அது

பீகாரிலே கிழக்கு பகுதியிலே அனல் மின்நிலையத்தை நிறுவு
வதற்கு சோவியத் நாட்டிலிருந்து 4 இயந்திரங்களை வாங்கிக்
கொள்ளலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறது இந்திய அரசு
இப்போது. நான் அந்த முடிவை தவறு என்று சொல்லவில்லை
ஆகையால் அந்த பீகாருக்குக் காட்டப்படுகிற தேசிய நீர் ஓட்டம்
இங்கே வந்து பாயக்கூடாதா என்று நான்தான் கேட்கிறேனே
தவிர வேறு அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒன்று நாட்டுப்பற்று உங்களுக்குத்தான் இருக்கிறது
என்றால் யாருக்குமே கொடுக்காமல் 'பெல்' செட்டை வாங்கிக்
கொள்ளுங்கள் என்று சொல்லுங்கள். அதுவும் சொல்லவில்லை.
ஒருவருக்கு கொடுத்து இன்னொருவருக்கு கொடுக்காதது என்ற
நிலைமைதான் பாதகமான நிலைமை என்பதை சுட்டிக்காட்டு
வதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர வேறு அல்ல.
ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் 'பெல்' நிறுவனத்திற்
குத்தான் நாம் தந்து இருக்கிறோம். அவர்கள்தான் நமக்கு
தர இருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் வைக்க தீர்மானித்து
இருக்கிறோம். ஆகவே இதனாலே உங்களை விட எங்களுக்கு
தேச பக்தி ரொம்ப அதிகமாகி விட்டது என்பதற்காக இதை
நான் சொன்னதாக நீங்கள் நினைக்கவேண்டாம். இருந்தாலும்
நாங்கள் தியாயத்திற்கு கட்டுபட்டவர்கள் என்பதையாவது
நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில்
குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகையால் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.
ஏதாவது ஒரு யூனிட் திடீர் என்று நின்றுவிட்டால் உடனே
'லோடு செட்டிங்' வந்துவிடுகிறது. ஆகையால்தான் ஒரு கேஸ்
டர்பைன் வாங்குவதற்கு நமக்கு அனுமதி வேண்டும் என்று
கேட்டிருக்கிறோம். ஒரு 210 மெகாவாட் திடீர் என்று ரிப்பேர்
ஆகிவிடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள் எப்படி ஒரு காரில்
ஒரு டயர் திடீர் என்று பழுது ஆனால் மாற்று டயர் இருந்தால்
உடனே போட்டுக்கொண்டு போகிறோம். அதேபோல் ஒரு
மிஷன் ரிப்பேர் ஆனால், உடனே நமக்கு பயன்படக்கூடியது
கேஸ் டர்பைன். அதற்கு அனுமதி வேண்டும் என்று நாம்
டிசம்பர் 1981-ல் கருத்துரு அனுப்பினோம். மாநில மின்துறை
அமைச்சர் மாநாட்டிலும் இதைப் பற்றி நான் எடுத்துச்
சொன்னேன். இதிலே ஒன்றும் அனுமதி தர கஷ்டம் இல்லை.
எங்கேயாவது இயந்திரம் பழுதுப்பட்டு லோடு செட்டிங் வந்து
விடுகிறது என்றால் இதை வைத்து பயன்படுத்தலாம். இந்த
100 சதவீதத்திற்கு மின்சார வெட்டுக்கு நாம் போய் இருக்க
வேண்டியது இல்லை. நாம் கேட்டபோது அவர்கள் கொடுத்து
இருந்தால் நிச்சயமாக இந்த 100 சதவீதத்திற்கு நாம் போக
வேண்டிய அவசியம் இருக்காது என்பதை நான் இங்கே சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், அதனால்தான் சொன்னேன்.





இப்போது ஏற்பட்ட 100 சதவீதம் மின் வெட்டு என்று சொல்வது
அவ்வளவு பெரிய அதிர்ச்சியானது அல்ல. நாம் சொன்னதை
கேட்டு இந்திய அரசு நமக்கு ஒத்துழைப்பு தந்து இருக்குமானால்
நாம் இந்த பிரச்சினையை சமாளித்து இருக்கலாம் என்பதற்காக
இதைச் சொல்கிறேன்.

இது ஏன் பெரிய பிரச்சினை இல்லை என்று சொல்கிறேன்
என்றால் சென்ற ஆண்டு பெய்த மழை இந்த ஆண்டு பெய்திருந்
தால் நமக்குப் பிரச்சினையே வந்திருக்காது. ஆகவே
இவ்வாண்டு ஏற்பட்டுவிட்டதைப் பெரிய பிரச்சினை
யாகக் கருதவேண்டியதில்லை. ஆனால் இந்த நிலைமையை
நாம் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். மின்
வெட்டைப்பற்றிச் சொல்கிறபோது இந்திரா காங்கிரஸ் கட்சிக்
காரர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஆத்திரப்
படக்கூடாது. உண்மை நிலையைத்தான் நான் சொல்லப்
போகிறேன். ஏதோ வேண்டுமென்றே நான் சொல்வதாகத்
தயவுசெய்து நினைத்துக்கொள்ளக்கூடாது.

1961 முதல் 1966 ஆம் ஆண்டு வரையில் மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஓரளவுக்கு முக்கியமான நீர்மின்
திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியாகிவிட்டது. ஒகேனக்கல்,
பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் இன்னும் சின்னஞ்சிறு நீர்மின்
திட்டங்கள், இவைகளைத் தவிர நிறைவேற்ற வேண்டிய நிலை
யில் இல்லை, குந்தா திட்டமும் நிறைவேற்றப்பட்டுக் கொண்
டிருந்தது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அந்த
நிலைமை. அந்தக் காலத்திலேயே—ஏன் அந்தக் காலத்திலேயே
என்று நான் சொல்கிறேன் என்றால்—அந்தக் காலத்திலே
இருந்த அரசு எந்த அரசு என்று உங்களுக்குத் தெரியும், அப்
போதே 40 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை மின் வெட்டு
இருந்தது. 1961 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையில்
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே மின்வெட்டு
இருந்தது. நாம் அப்போது முழுக்க முழுக்க புனல் மின்திட்டங்
களை நம்பியிருந்தோம். மழைபொய்த்துப் போவதற்கு முன்ன
ரேயே மின்வெட்டு இருந்தது, அந்தக் காலத்திலேயே நெய்வேலி
அனல் மின்நிலையத்திலே முழு உற்பத்தி தொடங்கவேண்டு
மென்று கேட்கப்பட்டது. நெய்வேலி இரண்டாவது சுரங்கம்
வெட்டப்படவேண்டுமென்று கேட்கப்பட்டது கல்பாக்கம் மின்
திட்டம் உருவாக்கப்பட்டது, அதனுடைய மின் உற்பத்தி
நமக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்கப்பட்டது.

நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டப்படவேண்டு
மென்று கேட்கப்பட்டது, கல்பாக்கம் திட்டம் ஆரம்பிக்கப்
பட்டது, எண்ணூர் மின் திட்டம் போடப்பட்டு இந்திய அரசிட
மிருந்து ஒப்புதலைக் கேட்டார்கள். 3 ஆவது ஐந்தாண்டுத்
திட்ட முடிவிலேயே தமிழ்நாட்டில் அனல் மின்நிலையங்களை
நம்பித்தான் எதிர்காலம் இருக்கிறது என்ற நிலைமை இருந்தது,

1966 ஆம் ஆண்டிலேயே அந்த நிலைமை ஏற்பட்டது. 1966 ஆம்
ஆண்டு முதல் 1969 ஆம் ஆண்டுவரை 3 ஆண்டுகள்
ஆண்டு திட்ட சாலங்கள். அப்போது சராசரி வளர்ச்சி விகிதப்
குறைவாக இருந்தது. தொடூல் தேக்கம் இருந்தது. அப்போது
கோயம்புத்தூரிலே மில்கள் பாதிக்கப்பட்டன. அப்போது அறிஞர்
அண்ணா அவர்கள் ஆட்சியிலே இருந்தார்கள். 3 ஆண்டுகளுக்கு
மின் வெட்டு இல்லை. தேவை குறைவு என்பதல்ல. அப்போது
கேரளம் உதவியது, கர்நாடகம் உதவியது ஆகவேதான் அந்த
மூன்று ஆண்டுகள் மின்வெட்டு இல்லை.

(பிற்பகல் 1–20)

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே 1969 முதல்
1974 ஆம் ஆண்டு வரையில் அந்த கால கட்டத்திலே ஏற்பட்ட
சங்கடங்களின் நிலைமைதான் தொடர்ந்து இந்த சிக்கலை உரு
வாக்கி இருக்கிறது. நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தை வெட்ட
வேண்டுமென்றும் அனல் மின் உற்பத்தியைத் தொடங்கவேண்டு
மென்றும். 3 ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே வற்
புறுத்தப்பட்டும், அது நான்காவது ஐந்தாண்டுக் காலத்திட்டம்
முடியும் வரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 1974 ஆம்
ஆண்டு வரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

எந்த கல்பாக்கம் அணுமின் நிலையம் நான்காவது ஐந்தாண்டுத்
திட்டக்காலத்திலே உற்பத்தியை தரும் என்று எதிர்பார்த்
தோமோ, 1973–74-ல் அது இன்றுவரையில் உற்பத்தியைதர
வில்லை. எண்ணூர் அனல்மின் திட்டம் அனுமதிக்கப்பட்டு
நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதை நிறைவேற்றுவதில் ஒரு
தாமதம். மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வருத்தப்பட
வேண்டியதில்லை. அப்போது போதுமான அளவிற்கு மின் உற்
பத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. என்ன
காரணம் என்பதை இப்போது நான் சொல்லத் தயாராக இல்லை.
அதற்கு பலபேர் காரணம். இந்த சட்டமன்றத்திலே கூட
சொன்னேன். இருக்கிற பணத்தை நாம் உற்பத்தித் திட்டங்
களுக்கு பயன்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.
ஆகவே எந்த எண்ணூர் அனல் மின்திட்டம் விரைவு படுத்தப்பட
வேண்டுமோ, அந்தத் திட்டம் விரைவுபடுத்தப்பட வில்லை.
ஆகவே 1969-லிருந்து 1974 வரையில் உள்ள நான்காவது ஐந்
தாண்டுத் திட்டக்காலத்தில் மத்திய அரசின் மூலம் கிடைக்க
வேண்டிய மின் உற்பத்தியும் நமக்கு கிடைக்கவில்லை. மாநில
அரசு விரைவுபடுத்த வேண்டிய திட்டத்தை விரைவுபடுத்துவதற்
கான நிதி ஒதுக்கமும் இல்லை. அதுவரையில் உதவி வந்த
கேரளமும், கர்நாடகமும் என்ன நிலையை எய்திற்று என்றால்
கர்நாடகம் பற்றாக்குறை மாநிலம் ஆனது. கேரளம்
தொடர்ந்து உதவி வந்தது. ஆக அந்த காலக்கட்டத்திலே





பார்ப்பீர்களேயானால் 100-க்கு 75 சதவீதம் மின்வெட்டு;
1973–74-ல் வந்தது ; 1974–75-ல் மின் வட்டு 100-ல் இருந்நது.
நான் கேட்கிறேன். ஏன் நெய்வேலி இரண்டாவது சுரங்க
அனல்மின் திட்டம் அனுமதிக்கப்படவில்லை ? தயவுசெய்து
நாம் சிந்திக்க வேண்டாமா ? நான் காங்கிரசை குறை சொல்வ
தாக கருதக்கூடாது. காங்கிரஸ் இருக்கும்போது மின்வெட்டு
இருந்தது. அவர்கள் போனால் மின்வெட்டு போய்விடும் என்று
திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் கொண்டு வந்தார்கள்.
அப்போதும் மின்வெட்டு வந்தது. சரி அவர்களை மாற்றி
பார்ப்போம் என்று மக்கள் எங்களைக் கொண்டு வந்தார்கள்.
இப்போதும் மின்வெட்டு இருக்கிறது. ஆகவே ஒருவொருக்
கொருவர் நம்மை குறை சொல்லிக் கொள்வதிலே பயன் இல்லை
தொடர்ந்து தமிழகம் கடந்த 25 ஆண்டுகளாக புறக்கணிக்
கப்பட்டு வருகிறது என்பதற்கு இதைவிட வேறு எடுததுக்
காட்டே தேவை இல்லை. உண்மை நிலை அதுதான். மூன்றா
வது ஐந்தாண்டுத் திட்டத்திலே கேட்கப்பட்டது கடைசியில்
எப்போது வந்தது என்றால் 1978—-ல் வந்தது ; 1961–66-ல்
கேட்கப்பட்ட திட்டம் திராவிட முன்னேற்றக் கழக அட்சிக்
காலத்தில் அனுமதிக்கப்படவில்லை. இங்கே மாண்புமிகு
உறுப்பினர்கள் சொன்னார்கள். சட்டசபையிலே ஒரு தீர்
மானத்தைப் போட்டு இப்போது நாம் அனுப்பியிருக்கிற
திட்டங்களுக்கு எல்லாம் அனுமதியை பெறவேண்டுமென்று
சொன்னார்கள். 1973-ம் ஆண்டு இதே சட்டமன்றம் தீர்
மானம் நிறைவேற்றியது. எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்
களும் ஏகமனதாக தீர்மானத்தை நிறைவேற்றி நெய்வேலி
இரண்டாவது சுரங்க அனல்மின் திட்டத்தை எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று இந்த பேரவை நி றவேற்றிய தீர்
மானம் எங்கே போய்ற்று ? எடுத்துக்கொள்ளப்படவிலை.
1978-ல் ஜனதா கட்சி ஆட்சிக்கு வநதபிறகு, அதுவும்
இன்றையதினம் கேரளத்திலே ஆளுநராக இருக்கிறாரே,
அவர் மத்திய மின்சாரத் துறையில் அமைச்சராகி அவர்
என்னென்ன பாடுபட்டார் என்பது எனக்குத் தெரியும்.
அவர் எப்படியாவது கொண்டு வரவேண்டுமெ. பதற்கு என்
னென்ன சிரமங்களை மேற்கொண்டார் என்பதும் எனக்குத்தெரியும்
அவருக்கும் தெரியும். அவர் இப்போது ஆளுநராக இருக்கிற
காரணத்தாலே வெளியே சொல்ல மாட்டார். ஆகவே
இவ்வளவும் செய்துவிட்டு இன்றைக்கு இங்கே தொழில்கள்
மூடப்படுகின்றன ; தொழிலாளர்கள் சங்கடப்படுகிறார்கள் ;
விவசாயிகளுக்கு வேதனை ; நீங்கள் என்ன செய்து கொண்டி
ருக்கிறீர்கள் ? என்பது எந்தவிதத்திலே நியாயம் என்பதற்
காகத்தான் இந்த விவரங்களை எடுத்துச் சொன்னேன்.

ஆனால் 1977-ல் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு-குறிப்
பாகச் சொல்கிறேன். 1969–74 இந்த ஐந்தாண்டுகளில் உற்
பத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது 75 கோடி ரூபாய்.

ஆனால் நாம் இன்றைக்கு இந்த ஐந்தாண்டுகளில் ஒதுக்கியிருப்பது 402 கோடி ரூபாய். திட்டங்களை விரைவு படுத்தினோம். தூத்துக்குடி அனல் மின் திட்டத்தை விரைவு படுத்தினோம்; தூத்துக்குடியிலே மேலும் ஒரு யூனிட் அனுமதிக்கப்பட்டு திட்டத்தை விரைவிலே நிறைவேற்றினோம். எண்ணூர் அதற்குள் முடிந்து இருந்தது. மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு அனுமதியைப் பெற்று நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். கடந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்த நிலைமைகளை எடுத்துச் சொன்னபோது மத்திய அரசு சொன்னார்கள்; சரி, கொஞ்சம் திட்டங்களை போட்டு அனுப்புங்கள் என்று சொன்னார்கள். வடசென்னை திட்டம் போட்டு அனுப்பி இருக்கிறோம்; மேட்டூர் விரிவாக்கம் திட்டம் போட்டு அனுப்பியிருக்றோம். அதேபோல தூத்துக்குடி விரிவாக்கம் திட்டம் இன்றையதினம் சேர்த்து அனுப்பியிருக்கிறோம். நெய்வேலியில் ஒரு திட்டத்தைப்போட்டு 1050 மெகாவாட் கிடைக்கும் அளவுக்கு தீட்ட மிட்டுள்ளோம்; வடசென்னை 1,050; நெய்வேலியில் 1,050; தூத்துக்குடியில் 710; மேட்டூரில் 420; இந்தத் திட்டங்களுக்கு இன்றைக்கு அனுமதி கிடைத்தால் கூட இவைகளை நிறைவேற்றுவதற்கு இன்னும் ஐந்தாண்டுகள் ஆகும், அதுவரையில் நாம் நிறைவேற்ற பெரிய திட்டங்கள் எதுவும் நம்மிடல்லை. ஏதாவது 20 மெகாவாட், 30 மெகாவாட் சிறுசிறு மின்திட்டங்கள் வேண்டுமானால் இருக்குமே தவிர பெரியத் திட்டங்கள் எதுவும் கையில் இல்லை. அந்தத் திட்டங்கள் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றினால்தான் நாம் மின்பற்றாக் குறையைச் சரி செய்ய முடியும் என்ற நிலைமையிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். அதனால்தான் நாம் மத்திய அரசைப் பார்த்து, இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றோமே தவிர, வேறு காரணத்தினாலே அல்ல என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அரசைப் பொறுத்த அளவிலே, எந்த அளவுக்கு நிதியை ஒதுக்கமுடியுமோ, அந்த அளவுக்கு நிதியை ஒதுக்குவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம், தமிழக அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்னைகள் வெறும் மாநில அரசே தீர்க்கக்கூடிய பிரச்னைகள் அல்ல. மத்திய அரசு முன்வந்து தீர்த்தாலொழிய இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. மத்திய அரசு இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முன் வரவேண்டு



மென்று திரும்பத் திரும்ப, நேரம் கிடைக்கும்போதெல்லாம் நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம். அதை அவர்கள் சீக்கிரம் செய்து தருவார்கள் என்று நிச்சயமாக நாம் நம்புகிறோம். 1969 அல்லது 1974-ல் எப்படி அன்றைக்கு இருந்த அரசைப் பட்டினி போட்டார்களோ, அதேபோல பட்டினி போட வேண்டுமென்று முடிவெடுத்தால், அதன்மூலம் பாதிக்கப்படுவது வெறும் அரசியல் கட்சி அல்ல, தமிழகத்து மக்கள் என்பதை மட்டும் நான் இங்கே கவனப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஓரளவுக்கு நிலைமைக் கட்டுக்கடங்கி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். விவசாயத்திற்கு 6 மணி நேரம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசின் சார்பிலே விவசாயிகளுக்கு இந்த 6 மணி நேரம் தரப்பட்டு வருகிறது. எங்கேனும் ஒருசில இடங்களிலே குறைகள் இருக்குமானால் நிச்சயமாக அவைகளை நிவர்த்திக்க இந்த அரசுத் தயாராக இருக்கிறது.

இங்கே சிறு தொழில்கள் மிகவும் கஷ்டத்திற்கு ஆளாகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். சிறு தொழில்களுக்கு ஓரளவு நிவாரணம் தந்தால், அதன் மூலம் சாதாரண மக்களின் வேலை வாய்ப்பு பாதிக்கப்படாது என்பதை இந்த அரசு நன்கு அறியும். ஆகையினாலே அரசு ஆராய்ந்து ஓரளவுக்குச் சிறு தொழில்களுக்கான மின் கட்டுப்பாடுகளைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைப்பதென முடிவு செய்திருக்கிறது என்பதை நான் பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இவ்வவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் பெருமளவிற்குச் சிறு தொழில்களைப் பாதித்துள்ளன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை அரசு அனுதாபத்துடன் கவனித்து கீழ்க்காணும் முடிவுகளை மேற்கொண்டுள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1. குறைவழுத்த மின் இணைப்புகள்.

1. மின் கட்டண விகிதம் 4-இன் கீழ் வருகின்ற 20 குதிரை சக்திகளுக்குக் குறைவாக உள்ள அனைத்து மும்முனை மின் இணைப்புகளுக்கும் மின் வெட்டிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்படுகிறது.

2. மின் கட்டண விகிதம் 8-இன் கீழ் வருகின்ற 15 கிலோ வாட் கீழுள்ள அனைத்து பொதுப் பணிகளுக்கான காரியங்களுக்கு வழங்கப்படும் மும்முனை இணைப்புகளுக்கு இம்மின் வெட்டிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்படுகிறது.

3. மின் கட்டண விகிதம் 7-இன் கீழ் வருகின்ற அனைத்து பொது நிறுவனங்களுக்கான இணைப்புகளுக்கு விதிக்கப் பட்டிருந்த மின் சக்தி முடக்கம் முழுமையாக நீக்கப்படுகிறது.

4. மின் கட்டண விகிதங்கள் 4, 7, 8 தொழில், பொதுப் பணிகள், பொது நிறுவனங்கள் ஆகிய அனைத்துக்கும் வழங்கப் பட்டுள்ள ஒரு முனை மின் இணைப்புகளுக்கு மின் வெட்டி லிருந்து முழுமையாக விலக்களிக்கப்படுகிறது.

2. உயர் அழுத்த மின் பயனீட்டாளர்கள்.

5. 300 கே.வி. ஏ.யும் அதற்குக் குறைவாகவும் தேவை யுள்ள உயர் அழுத்த தொழில்களுக்குக் குறைந்த பட்ச அடிப் படைத் தேவை 75 கே.வி.ஏ. அல்லது ஏற்கனவே பதிவு செய்யப் பட்ட தேவை இவற்றில் எது குறைவாக உள்ளதோ அது மின் தேவையாக அனுமதிக்கப்படும்.

6. புதிய உயர் அழுத்த தொழில்களுக்கு அதன் இணைக் கப்பட்ட சுமையில் 25 சதவீதம் மின் உச்ச தேவை அனுமதிக்கப் படும்.

இந்த மேற் கூறப்பட்ட சலுகைகளின் மூலம்ஏறத்தாழ மூன்று இலட்சம் சிறு தொழில், வணிக, பொது நிறுவனங்களும் மின்சாரம் பயன்படுத்துகிற பயனீட்டாளர்கள் அனைவரும் பயன் பெறுவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30.)

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். முக்கியமான ஒன்றைப் பற்றி அமைச்சரவர்களைக் கேட்க விரும்பு கிறேன். அது மகாஜனங்களுக்கெல்லாம் நன்மை பயக்கும் என்பதால்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. 8-2-1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

186. தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்தில் உள்ள சில கிராமங்களைத் தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது தொடர்பான, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 22-11-1982 ஆம் தேதியிட்ட 1797 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

## இணைப்பு.

(521ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 134-க்கான விடையைக் காண்க.)

மதுரை மாவட்டத்தில் புதிய நூற்பாலைகளை தொடங்க 1980—81 ஆம் ஆண்டில் மத்திய அரசினுடைய துணி நூல் ஆணையரால் வழங்கப்பட்டுள்ள அனுமதிகளின் விவரப் பட்டியல்.

| வரிசை எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | நூற்பாலைகளின் கதிர்த் திறனளவும்/ இடமும். | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| 1. | திரு. ஜி. வெங்கடராமன், 112, நல்லி ரோடு, உடுமலைப்பேட்டை ரோடு, கோயம்புத்தூர் மாவட்டம். | 25,000 கதிர்கள். | வேடசந்தூர், மதுரை மாவட்டம். |
| 2. | ஆர்.வி. எஸ். டெக்ஸ்டைல்ஸ், திருச்சி ரோடு, சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம். | ஷை | ஷை |
| 3. | திரு. ஓம் பிரகாஷ் ஷெராப்ட், 524, டாக்டர் கருணாநிதி நகர், மதுரை-625 020. | ஷை | நகரி, திலக்கோட்டைத் தாலுகா, மதுரை மாவட்டம். |
| 4. | ஸ்ரீ லக்ஷ்மி ஸ்பின்னிங் மில்ஸ், புதுசத்திரம், திண்டுக்கல் தாலுக்கா, மதுரை மாவட்டம். | ஷை | புது சத்திரம், திண்டுக்கல் தாலுக்கா, மதுரை மாவட்டம். |
| 5. | அண்ணாமலை மில்ஸ், (பி) லிமிடெட், தபால் பெட்டி எண். 2, பெகம்பூர் போஸ்ட், திண்டுக்கல்-624 002. | ஷை | திண்டுக்கல், மதுரை மாவட்டம். |
| 6. | ஸ்பின்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், 18, டவுன் எக்ஸ்டன்ஷன், 4-வது தெரு, திருப்பூர். | ஷை | ஷை |
| 7. | சேரன் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட், 14-பி. குமரன் நகர் (தெற்கு), திருப்பூர்-638 603. | ஷை | வேடசந்தூர், மதுரை மாவட்டம். |
| 8. | ஸ்ரீ வெங்கடேசா பேப்பர் & போர்டு (பி) லிட், சாமிநாதபுரம், மடத்துக்குளம்-642 113, பழனி தாலுகா, மதுரை மாவட்டம். | ஷை | திண்டுக்கல், வேடசந்தூர் தாலுகா, மதுரை மாவட்டம். |
| 9. | ஸ்ரீனிவாசா ஸ்பின்னர்ஸ், 15/11, மில் ரோடு, கோயம்புத்தூர். | ஷை | திண்டுக்கல், வேடசந்தூர், மதுரை மாவட்டம். |
| 10. | திரு. பி. எஸ். வேலுசாமி, பி.ஏ., பி.எல்., நெ. 1, மங்களம் ரோடு, திருப்பூர்-638 004. | ஷை | ஷை |
| 11. | பீலிம் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட், 55/1, சௌத் கார் தெரு, சிதம்பரம். | ஷை | ஷை |
| 12. | திரு. பி. கோபாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்., "கோகுலம்", ஒட்டன்சத்திரம்,-624 619. | ஷை | ஷை |

| வரிசை எண். (1) | மனுதாரரின் பெயரும், முகவரியும். (2) | நூற்பாலைகளின் கதிர்த் திறனளவும்/இடமும். (3) | |
|---|---|---|---|
| 13. | திரு. கே.வி.ஆர். கிருஷ்ணசாமி, 38/1, குமாரசுவாமி ராயர் தெரு, எம். ஆர். டி. நகர், தேனி, மதுரை மாவட்டம். | 25,000 கதிர்கள் | தேனி, மதுரை மாவட்டம். |
| 14. | ஸ்ரீ மங்கையர்க்கரசி மில்ஸ், புளியங்குளம், மதுரை மாவட்டம். | ஷை | புளியங்குளம், மதுரை மாவட்டம். |
| 15. | முத்துதரம் மில்ஸ் (பி) லிமிடெட், பிளாட் நெ. 32, 38, இன்டஸ்டிரியல் எஸ்டேட், கூத்தர்குடி போஸ்ட், திருமங்கலம் தாலுக்கா, மதுரை மாவட்டம். | ஷை | கப்பலூர், திருமங்கலம் தாலுக்கா, மதுரை மாவட்டம். |
| 16. | ஸ்ரீ முருகன் அண்டு கம்பெனி, காட்டன் மெர்ச்சன்ட், ஜெயலக்ஷ்மி விலாஸ் மில்ஸ், வேடசந்தூர். | ஷை | திண்டுக்கல், மதுரை மாவட்டம். |
| 17. | திரு. டி. என். பி. கே. பெருமாள்சாமி, 9, நாயக்கர் புதுத் தெரு, திண்டுக்கல், மதுரை மாவட்டம். | ஷை | ஷை |
| 18. | எல்.ஜி. பாலகிருஷ்ணன் & பிரதர்ஸ் லிமிடெட், இண்டியா ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 018. | ஷை | வேடசந்தூர், மதுரை மாவட்டம். |
| 19. | திரு. சரத் சந்திரன், 87, ஏ.டி.டி. ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர்-641 018. | ஷை | திண்டுக்கல், மதுரை மாவட்டம். |
| 20. | திரு. பி. செல்வராஜ், 85, பென்ஷனர் தெரு, திண்டுக்கல், மதுரை மாவட்டம். | ஷை | ஷை |
| 21. | திரு. எம். மெய்யப்பன், 106, சாந்தோம் ஹைரோடு, சென்னை-600 028. | ஷை | வேடசந்தூர், மதுரை மாவட்டம். |
| 22. | திரு. ஆர். ஜி. புராடியன், 39, வி.சி.வி. லே அவுட், கோயம்புத்தூர்-641 002. | ஷை | திண்டுக்கல். |
| 23. | திரு. எஸ். நடராஜன், பி.இ. டி.ஐ.இ., 91, போயஸ் கார்டன், சென்னை-600 086. | ஷை | ஷை |
| 24. | திரு. கே. எஸ். ஏ. பரந்தாமன், 111/சி, மூக்கன் ஆசாரி லேன், திண்டுக்கல்-624 001. | ஷை | ஷை |
| 25. | திரு. டி. ஆர். இராமகிருஷ்ணன், 38, ரேஸ் கோர்ஸ் ரோடு, திண்டுக்கல், மதுரை மாவட்டம். | ஷை | ஷை |
| 26. | திரு. கே. எம். மொகமது அப்துல் கனி, டேனர் எக்ஸ்போர்ட் ஆப் செமிடேன்டு பினிஷ்டு லெதர்ஸ், பெரம்பூர், திண்டுக்கல்-2. | ஷை | திண்டுக்கல். |
| 27. | திரு. ஆர். சுப்பிரமணியன், நெ. 1, கிருஷ்ணராவ் தெரு, திண்டுக்கல், மதுரை மாவட்டம். | ஷை | ஷை |

| வரிசை எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | நூற்பாலைகளின் கதிர்த் திறனளவும்/ இடமும். | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| 28. | திரு. கே. தக்ஷிணாமூர்த்தி, பண்ணைபுரம், மதுரை மாவட்டம், (ஆலீவ் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட்). | 25,000 கதிர்கள் | தேனி |
| 29. | திரு. என். எஸ். கே. பிரசாத், அமராவதி நகர் போஸ்ட், உடுமலைப்பேட்டை-642 102 (கமலம் ஸ்பின்னர்ஸ்). | டிை | திண்டுக்கல் |
| 30. | ஓம் முருகா டெக்ஸ்டைல்ஸ், ஏ. 16, காந்தி நகர், உடுமலைப்பேட்டை-642 126. | டிை | டிை |
| 31. | திரு. ஜி. கோவிந்தராஜன், 6, நாராணா நகர், திண்டுக்கல்-7, மதுரை மாவட்டம். | டிை | நாகர்பட்டி, மதுரை மாவட்டம். |
| 32. | திரு. எஸ்.வி.ஏ. அருணாசல செட்டியார், நெ. 10, கந்த தேவி ரோடு, தேவகோட்டை-623 302. | டிை | மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம். |

V211.31 N83
N83.40.4
135978

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS
IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5
6 The Universal Book House, Moore Market, Madras-3
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Penniamman Koil Street, Egmore Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street. Calcutta-12.

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS